# திருக்குறளும் நீதி இலக்கியங்களும்

முனைவர் மூ. இராசாராம் இஆப



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

1.5141

# திருக்குறளும் நீதி இலக்கியங்களும்

முனைவர் மு. இராசாராம் இஆப

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
*இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்*
*தரமணி, சென்னை - 600 113*

DEPARTMENT OF ... LIBRARY
Acc. No. 13141
Date

# நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | திருக்குறளும் நீதி இலக்கியங்களும் |
| ஆசிரியர் | : | முனைவர் மூ. இராசாராம் இஆப |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044/22542992 |
| ISBN No. | : | 978-93-85165-40-5 |
| வெளியீட்டு எண் | : | 928 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2016 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 11.5 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | vii+192 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | 110/– (ரூபாய் நூற்றுப்பத்து மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீ சரவணா அச்சகம்<br>சென்னை – 600 001 |
| பொருள் | : | நீதி இலக்கியம் |

முனைவர் கோ.விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,எம்.பி.ஏ.,பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அணிந்துரை

உலக மொழிகள் பலவற்றோடு ஒப்பிடும்போது தமிழுக்கென்று தனிச்சிறப்பு காணப்படுகிறது. அந்த வகையில் தமிழில் எத்தனையோ நூல்கள் காலந்தோறும் உருவாகிக் கொண்டே வருகின்றன. எனினும் தனக்கெனத் தனித்தன்மை கொண்ட நூலாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் திருக்குறள் சிறந்து விளங்குகிறது. உலக இலக்கியங்களோடு ஒப்பிடும்போது திருக்குறளுக்கு இணையான சிறப்புமிக்க ஒரு தத்துவ நூல், கோட்பாட்டு நூல் வேறு எந்த மொழிகளிலும் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதை அறிஞர் பலரும் கூறுகின்றனர்.

மனிதனுக்கான தனிப்பட்ட ஒழுக்க முறைகளையும் சமூகம் சார்ந்த ஒழுக்கமுறைகளையும் வாழ்க்கைக்குத் தேவையான முறைகளில் எடுத்துக்கூறும் ஒரு நூலாக திருக்குறள் விளங்குகிறது. ஒரு தனி மனிதனுக்காகவோ குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்காகவோ மட்டுமன்றி மனித இனத்தவர் அனைவருக்கும் அனைத்துச் சமயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளும் ஒரு நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

திருவள்ளுவர் இயற்றிய இந்நூலானது அனைத்து வெண்பாக்களும் நீதிக் கருத்துகளை சமூகத்திற்கு எடுத்துறைக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளன. 'செம்புல பெயல் நீர்' என்பதுபோல திருக்குறளை எந்த அடிப்படையிலும் எந்தக் கருத்துகளோடும் ஒப்பிட்டு பார்த்தாலும் அதற்கேற்ற வகையில் இந்நூலின் கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வகையிலே நூலாசிரியர் சீன சிந்தனையாளர்கள் இயற்றிய நூல்களோடு ஒப்பிட்டுக் கூறும்போது அம் மொழியில் உருவான நீதி இலக்கியங்களோடு பொருந்தி விளக்குகிறார். கன்பூசியஸ், லவோ-ட்ஸீ போன்ற சிந்தனையாளர்களின் கருத்துகளோடு திருவள்ளுவரின் திருக்குறள் ஒத்த தன்மை கொண்டதாக அமைகிறது என ஒப்பிடுகிறார். மேலை நாடுகளில் பல அறிஞர்களின் கருத்துகளோடும் தத்துவங்களோடும்

ஒப்பிட்டுக்கூறும் போதும் திருவள்ளுவரின் சிந்தனைகள் எத்தகைய ஒரு பரந்துபட்ட சிந்தனைகளாகக் காணப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இவர் நூலின் வழி வடமொழியில் உருவான சாத்திர நூல்கள் தத்துவ நூல்களின் கருத்துகளும் திருக்குறக்கு ஒத்த அமைப்பு முறைகளைக் கொண்டதாக அமைகின்றன என்பதையும் விளக்கியுள்ளார்.

மேலும் திருக்குறளின் செல்வாக்கு சங்க இலக்கியங்களில் எவ்வாறு காணப்படுகிறது என்பதைப் பற்றியும் நூலாசிரியர் இந்நூலில் எடுத்துக்கூறுகிறார். உரையாசிரியர்களின் உரைச்சிறப்பையும் நூல் அமைப்பு முறைகளையும் நூலாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். பல நூல்களின் கருத்துகளோடும் சிந்தனைவாதிகளின் கோட்பாடுகளோடும் திருக்குறளையும் திருவள்ளுவரையும் ஒப்பிட்டுக் கூறும்போது நூலாசிரியரின் பரந்துபட்ட ஆளுமைத்தன்மையினை அறிந்து கொள்ளமுடிகிறது.

இந்நூலாசிரியர் பல்வேறு மேனாட்டறிஞர்களின் தத்துவங்களுடன் திருக்குறள் தத்துவத்தையும் திருவள்ளுவரையும் ஒப்பிட்டுக் கூறியிருப்பது அவரின் ஆழ்ந்த அறிவுத் திறத்தையும் பிறமொழி இலக்கியப் புலமையையும் பெற்றிருக்கிறார் என்பது புலப்படுகிறது. இவர் திருக்குறளுக்கென ஆற்றிவரும் கல்வித் தொண்டு அளவிடற்கரியது.

ஆசிரியரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு, திருக்குறள் மேற்கோள் திருக்குறளைப் பிறமொழி நீதி இலக்கியங்களுடன் ஒப்பிடல் எனும் நூல்கள் ஆசிரியரின் ஆழ்ந்த திருக்குறள் புலமையை வெளிப்படுத்துகிறது. பன்முகை ஆளுமையாளரான இந்நூலாசிரியர் எண்ணற்ற நல் நூல்கள் பல படைத்து எட்டுத்திக்கும் தமிழ், தமிழர் இலக்கியத்தைப் பரப்பிட வேண்டும் எனப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தமிழ்மீதும் தமிழர்மீதும் தமிழ்ப் பண்பாட்டின்மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன். தமிழின் மேம்பாட்டிற்கெனக் கோடிக்கணக்கான மதிப்பீட்டில் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். இவ்வாறு ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தன் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சரும் இந்நிறுவனத் தலைவருமான திரு.கே.சி.வீரமணி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.த.உதயசந்திரன், இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூல் தொடர்பான பணிகளைச் செய்துவரும் திருக்குறள் காட்சிக்கூடப் பொறுப்பாளர் முனைவர் து.ஜானகி அவர்களுக்கும் **தமிழ்த்தாய் 68 - பெருவிழா** தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்துவரும் நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# முன்னுரை

உலக வரலாற்றில் கி.மு. 6 முதல் கி.பி. 2 வரை அரசியல், பண்பாடு, சமூகக் கட்டமைப்பு ஆகிய தளங்களில் மிகப்பெரும் மாற்றங்களை மனிதசமூகம் ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாகச் சீனாவில் கான்பூசியசும் இந்தியாவில் திருவள்ளுவரும் பிளாட்டோ அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ அறிஞர்களும் தோன்றித் தங்களது மிகப்பெரும் படைப்புகளைத் தந்து மனித வரலாற்றில் நீங்காத இடம்பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் திருவள்ளுவர் இந்தியத் தத்துவ மரபுக்குப் புதிய கொடையைத் திருக்குறளின் வழி வழங்கியுள்ளார்.

இவரது திருக்குறள் உலக அறநூல், வாழ்வியல் நூல், அரசியல் நூல், பொருளியல் நூல், உலகியல் நூல், ஞானப்பெட்டகம் போன்ற தனித்தன்மைகளைப் பெற்றுள்ள நூலாகும். இந்நூல் வாழ்வியல் நெறிகளை அறக் கோட்பாடுகளாக எடுத்தியம்புகின்றது. 1330 பாக்களால் உலக உள்ளங்களை அழகுற அளக்க முயன்ற வள்ளுவரின் பாங்கு போற்றுதற்குரியது.

அறம் சார்ந்த வாழ்க்கை, தனி மனித ஒழுக்கம், அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல், பிறருக்கு உதவுதல், துன்பம் பொறுத்தல், துன்பம் துடைத்தல், மனம் மாசு நீக்குதல் - போன்ற வாழ்வியல் அறங்களை நீதிநூல்கள் எதிரொலிக்கின்றன. அவற்றுள் தமக்கு நிகர் தாமே என நிமிர்ந்து நிற்கும் திருக்குறளே இத்தகைய கருத்துகளைச் செறிவாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. இவ்வறக் கருத்துகள் படித்து, சிந்தித்து, மகிழ்ந்து, மனநிறைவை அடைந்து பின்பற்றத்தக்கனவாய் உள்ளன. இத்தகைய இன்ப ஊற்றான திருக்குறளில் இருந்து யான் பெற்ற பேரின்பச் சிந்தனைகளைத் **திருக்குறளும் நீதி இலக்கியங்களும்** என்ற இந்நூல் வழி உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மூ. இராசாராம்

# பொருளடக்கம்

பக்கம்


1. திருக்குறளும் சீனமொழி நீதி இலக்கியங்களும் 1
2. திருக்குறளும் வடமொழி நீதி இலக்கியங்களும் 31
3. திருக்குறளும் பகவத்கீதையும் 60
4. திருக்குறளும் அர்த்த சாத்திரமும் 139
5. வள்ளுவரும் சாணக்கியரும் 148
6. திருக்குறளும் திருவிவிலியமும் 156
7. திருக்குறளும் திருக்குரானும் 172
8. திருக்குறளும் ஜைனமும் பௌத்தமும் 185
9. திருக்குறளும் பிளேட்டோவும் சாக்ரடீஸும் 191

# 1. திருக்குறளும் சீனமொழி நீதி இலக்கியங்களும் ஒப்பீடு

திருவள்ளுவர் தெளிவான கடவுட்கொள்கையுடையவர். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பினையும், இருள்சேர் இருவினையையும், பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்குரிய வழியையும் எளிய முறையில் யாவரும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் அவர் விளக்கியுள்ளார். இப்பிறப்பிற்குப் பிறகு வேறு பிறவிகள் உண்டு என்பதை,

*மனநலத்தின் ஆகும் மறுமை* (குறள் 459)

*எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்* (குறள் 107)

என்று அவர் குறிப்பிடுவதால் நாம் அறியலாம். பிறவியற வேண்டுமானால் 'ஆரா இயற்கை அவாவினை' மனிதன் நீக்கவேண்டும் என்று அவர் அறிவிக்கிறார். இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்களே பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர் என்று வள்ளுவர் கூறுகிறார். இக்கருததுக்கள் அனைத்தும் அவருடைய கடவுள் கொள்கையைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

தீமையை நேர்மையால்தான் வெல்லவேண்டுமே ஒழிய, அன்புகாட்டுவதன் மூலம் அதைப் போக்கிவிடலாம் என்று கருதுவது தவறு என்று கன்பூசியஸ் குறிப்பிட்டுள்ளார். இக்கொள்கையைத் தனி மனிதனுடைய வாழ்க்கையில் கடைப்பிடிப்பதோடு அமையாது, நாட்டு ஆட்சியிலும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்பது அவருடைய தெளிவுரையாகும். 56

குடிமக்கள் நலன் கருதி நாடாளும் அரசர்கள்,

***குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்*** (குறள் 549)
***கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல்*** (குறள் 550)

ஆகிய செயல்களை மேற்கொள்ளுதல் அரச நீதியாகும் என்று போற்றுகின்ற வள்ளுவர், தனிமனிதருடைய வாழ்க்கையில், தீமை செய்தவரைப் பழிவாங்காமல், அன்புடன் அவருக்கு நன்மை செய்யவேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
*செய்யாமை மாசற்றார் கோள்* (குறள் 312)

*இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்* (குறள் 314)

இக்கருத்துக்களைச் சீனநாட்டின் மூதறிஞர் கன்பூசியஸ் எள்ளி நகையாடியதை நாம் எளிதில் மறக்க வியலாது.

` மேற்கண்ட சில கருத்து வேற்றுமைகளைத் தவிர, கன்பூசியஸினுடைய அறவுரைகளுள் பல திருவள்ளுவருடைய கருத்துக்கள் பலவற்றோடு ஒப்புமையுடையனவாகக் காணப்பெறுகின்றன. அவற்றுள் சிறப்பு மிக்க சிலவற்றைப் பின்வரும் அட்டவணையில் நாம் காணலாம்.

| கன்பூசியஸ் | திருவள்ளுவர் |
|---|---|
| 1. உள்ளத்தை ஊற்றுக் கண்ணாகக் கொண்டு வெளிப்படுவதே வாய்மை (நடு. 13) | அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் (குறள் 298) |
| 2. பட்டினியால் வாடும் மாண்புமிகு மனிதன், ஒருவேளை உணவு கிடைக்கிறது என்றால்கூட அதற்காக அவன் அறநெறியிலிருந்து பிறழ மாட்டான். (முது. 4:5) | ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை. (குறள் 656) |

| கன்பூசியஸ் | திருவள்ளுவர் |
|---|---|
| 3. நாவடக்கம் இல்லாமையால் உண்டாகும் நன்மை யாது ? அதனால் அவர்கள் அடைவது வெறுப்பும் மனச்சோர்வும் அல்லாமல் வேறு ஒன்றும் இல்லை! (முது. 5:4) | யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (குறள் 127) |
| 4. சிறந்தவை என்று அறிந்தவற்றை உடனடியாகச் செயலில் கடைப்பிடிக்க வேண்டும். (முது. 5:4) | புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் (குறள் 538) |
| 5. அறநெறி பிறழாது ஆட்சி புரிய அரசனுக்கு உதவி செய்பவனே சிறந்த அமைச்சனாவான்; அவ்வாறு உதவி புரிய முடியாமல் போனால் பதவியிலிருந்து விலகிவிடுகின்றவனே மிகச் சிறந்த அமைச்சனாவான். (முது. 11:23) | அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந் திறனறிந்தான் தேர்ச்சித் துணை. (குறள் 635) |
| 6. உணவுப் பொருள்களில் தன்னிறைவும், போதிய படைபலமும், மக்களுடைய நம்பிக்கையும் உடைய அரசு (நாடு) சிறந்து விளங்கும். (முது. 12:7) | தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு. (குறள் 731) |

| கன்பூசியஸ் | திருவள்ளுவர் |
|---|---|
| 7. நல்லாட்சி நடத்த விரும்புகின்றவர்கள் கொலைத் தண்டனையே விதித்தல் கூடாது. நற்பழக்கமாகிய காற்று வீசத் தொடங்கினால் தீயவராகிய புற்கள் தாமாகவே தலைவணங்கி நிற்பர். தீமை செய்தவனுடைய உள்ளத்தைத் திருத்துவதன் மூலமே நாடு நலம்பெற முடியும். (முது. 12: 19) | தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (குறள் 561)<br>கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம் நீங்காமை வேண்டு பவர் (குறள் 562) |
| 8. அறச்செயல் விருப்பம் என்பது யாது ? மனிதர்கள் அனைவரிடத்தும் அன்பு செலுத்துவதே அறச் செயல் விருப்பமாகும். (முது. 12: 22) | நல்லாற்றால் நாடி அருளாள்க ! (குறள் 242) அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு. (குறள் 73) |
| 9. உயர்ந்த மனிதன் தேவை உண்டாகின்ற பொழுதும் மனச்சான்றிற்கு மாறான வழியில் அதை அடைவதற்கு முயல மாட்டான். ஆனால், கயவனோ எப்படியாகிலும் அதை அடைய முயலுவான். (முது. 15: 1) | எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால் விற்றற்கு உரியர் விரைந்து (குறள் 1080) |

| கன்பூசியஸ் | திருவள்ளுவர் |
| --- | --- |
| 10. எதைப் பிறர் நமக்குக் செய்யக்கூடாது என்று நினைக்கின்றோமோ, அதை நாம் பிறருக்குச் செய்யாமல் இருப்பதே எல்லா நிலைகளிலும் நாம் பின்பற்றத்தக்க சிறந்த அறமாகும். (முது. 15: 23) | இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை வேண்டும் பிறன்கண் செயல் (குறள் 316) |
| 11. உயர்ந்த மனிதன் சிறப்பு மிக்க செயல்களைச் செய்வதன் மூலம் உலகிற்கு அறிமுகமாகிறான். கயமகன் இழிந்த செயல்களைச் செய்வதன் மூலம், உலகிற்குத் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றான். (முது. 15: 33) | செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர் செயற்கரிய செய்கலா தார். (குறள் 26) |
| 12. இயற்கை அமைப்பில் மனிதர்கள் பெரிதும் ஒப்புமையுடையவர்களாகக் காணப்பெறுகின்றனர். ஆனால், பழக்கவழக்கத்தில் அவர்களிடையே பெருத்த வேற்றுமை உண்டாகி விகிறது. (முது. 17: 2) | உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க பணபொத்தல் ஒப்பதாம் ஒப்பு (குறள் 993) |

| கன்பூசியஸ் | திருவள்ளுவர் |
|---|---|
| 13. உலகில் எங்கிருந்தாலும் அமைதி வாய்ந்த நடை, பெருந்தகைமை, வாய்மை, மெய்யார்வம், அன்புடைமை என்ற ஐந்தையும் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் முழுநிறைப் பண்பாகிய அறத்தை (சான்றாண்மையை) அடைய முடியும். (முது. 17: 7) | அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால் பூன்றிய தூண் (குறள்983) |
| 14. ஒரு மனிதனுடைய செயல்களைக் கூர்ந்து நோக்குக. அவற்றால் விளைவன யாவை என்பதைக் என்பதைக் கருதுக! பின்னர் அவன் எத்தகையவன் என்பதை முடிவு செய்க! (முது. 2:10) | பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் (குறள் 505) |
| 15. கடவுளால் மனிதனுக்குப் பரிசாகக் கொடுக்கப் பட்டுள்ள பணிபினை, நாம் 'மனித இயற்கை' என்று அழைக்கிறோம். நம்முடைய மனித இயற்கையை முழுமையுறச் செய்வதே அறநெறிச் சட்டமாகும். அவ்வறநெறிச் சட்டத்தை நாம் போற்றி வளர்ப்பதால் பெறும் பயனே பண்பாடு. அத்தகைய பண்பாடு உடையோரை உலகம் போற்றுகிறது. (நடு. 1:1) | நயனோடு நன்றி புரிந்த பயனுடையார் பண்புபா ராட்டு முலகு (குறள் 994) |

இக்கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்க்கின்றபொழுது, கன்பூசியஸ் அறநெறியைப் போதிக்க வந்த அறவோராகத் தோன்றுகிறார். அவரைச் சமயத் தலைவர் என்று கூறுவது நம் நாட்டு வழக்கிற்குப் பொருந்தாத ஒன்றாகும். இக்காலச் சீனர்களுள் சிலர், “கன்பூசியக் கோட்பாடுகளைச் சமயச் சார்பான தத்துவங்கள் என்று நாம் வரையறுத்துக்கூற இயலா. அவற்றில் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்ட சில உணர்வுகளைக் காணுகின்றோம். அவ்வாறே சமய உணர்வின் எல்லையைச் சேர்ந்த பேரண்டத்தைப்பற்றிய எண்ணங்கள் சில அதில் இடம் பெற்றுள்ளன. ஆனால், அவை சமயக் கோட்பாடுகளாகா. எனவே, அவற்றை நாம் ஒரு சமயமாகப் போற்றி வருவது முற்றிலும் பொருந்தாது” 57 என்று கருதுகின்றனர்.

சீனாவில் முதன்முதலாக ஆசிரியத் தொழில்புரிந்த அறிஞர் கன்பூசியஸ். அவர் பண்பாட்டையும் கல்வியையும் மக்களிடையே பரப்பி வந்தார். பிற்காலத்தில் நடமாடும் கல்வி நிலையங்களாக விளங்கிய அறிஞர்களுக்கும், மென்யுணர்வாளர்களுக்கும் அவர் நல்லதொரு வழிகாட்டியாக அமைந்தார். கி.மு. ஆறாம் நூற்றாண்டுவரை சீனாவில் வாழ்ந்த அறிஞர்கள் உழவர்களாகவோ, கைத்தொழில் வினைஞர்களாகவோ, வாணிகர்களாகவோ, அதிகாரிகளாகவோ தொழில் புரிந்தனர். ஆசிரியப் பணியைத் தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்தமுடியும் என்பதைச் சீனமக்கள் உணருமாறு கன்பூசியஸ் செய்தார். அவருக்குப் பிறகு, அவரைப் பின்பற்றி ஏராளமான இளைஞர்கள் அத்தொழிலில் ஈடுபட்டனர்.

கன்பூசியஸின் அறநெறிக் கருத்துக்கள் காலத்தால் பழமையானவை; அனுபவத்தின் வாயிலாகக் கனிந்த முதுமொழிகள்; மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வாய்மொழிகள் எனலாம்.

கன்பூசியஸின் மொழிநடை பொதுவாகச் சிறப்புடையது. ஆயினும், அது அணிநலனும் சொல்லாட்சிச் சிறப்பும் வாய்ந்த அழகிய நடையாக அமையவில்லை. ‘நடுவழிக் கோட்பாடு’ என்ற

நூல்தான் பாடல்களைக் கொண்ட நூலாகும். மற்றவை எல்லாம் உரைநடை நூல்களே. அவற்றில் கலையழகு இல்லை. கருத்துக்களும் கொட்டப்பட்ட செங்கற்களாக உள்ளன; கட்டப்பட்ட மாளிகையாகத் தோன்றவில்லை. அவருடைய கருத்துக்களிலும், அறவுரைகளிலும் மெய்ம்மை நிகழ்ச்சிகளோடு கூடிய ஏராளமான செய்திகளும், சூழ்நிலைக்கேற்ற வரலாற்று நிகழ்ச்சிக் கதைகளும் நிறைந்து காணப்பெறுகின்றன. ஆனால், ஆழ்ந்த சிந்தனையின் உலகளாவிய முத்திரைகளாக மூன்றைத்தான் நாம் அவற்றில் காண முடிகிறது. படைப்புத்திறன் வாய்ந்த உள்ளத்தைக் காட்டிலும், அவரிடத்துக் கருத்துக்களை வாங்கி ஏற்றுக் கொள்ளும் திறமையே மிகுந்திருந்தது எனலாம். அவரிடத்துப் பரந்துபட்ட நூலறிவு நிறைந்திருந்தது. ஆனால், மதிநுட்பத்தோடு கூடிய அகத்தூண்டுதல் அவரிடத்தில் இல்லை அவரிடத்து நுட்பமான அறிவாற்றல் இருந்தது. அவருடைய அறிவாராய்ச்சி முறை சிக்கலான கருத்துக்களைப் புரிந்துகொள்ள முயலும் இயல்புடையதாகத் தோன்றுகிறதே ஒழிய, மயக்கத்தைப் போக்கும் சுடரொளியாக அமையவில்லை. தமக்குக் கிடைத்த வாய்ப்புக்கள் ஒவ்வொன்றையும் அவர் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டார். அதனால் தம்முடைய அறிவை அவர் வளர்த்துக் கொண்டார். அதன்மூலம் உலகத்தையும், அதன் பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள அவர் வாழ்நாள் முழுவதும் முயன்றார் என்று நாம் கூறினால, அது தவறாகாது.

கன்பூசியஸ் உலகிற்கு வழங்கியுள்ள செய்திகள் மூன்று. அவற்றுள்''எப்பொழுதும் மனிதன் இரண்டு எல்லைகளுக்கும் செல்லாமல், நடுவழியில் வாழ முயல வேண்டும்'' என்பது முதலாவதாகும். இக்கருத்து எக்காலத்திற்கும், எந்நாட்டினருக்கும் பொருந்திவரக் கூடியதாகும் “அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்'' என்பது நம்முடைய சான்றோர்கள் கண்ட அனுபவ உண்மையாகும். எதிலும் அளவாக இருத்தலும், உணர்ச்சி வயப்படாமல் நடுவழியில் ஒழுகுதலும் மனிதன் மன நலத்தோடு வாழ்வதற்குரிய சிறந்த நெறிமுறையாகும். இதை நன்குணர்ந்த சீனப்பேரறிஞர் அதைப்பற்றி விரிவாக மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.

இனி, இரண்டாவதாக 'உண்மை என்பது என்ன?' என்பதைப் பற்றி அவர் தந்துள்ள விளக்கம் விழுமியது; என்றும் பயன் தரத்தக்கது. "மனித இயல்புக்கு உண்மை மாறுபட்டதன்று. நாம் உண்மையென்று கருதியுள்ளது எதுவும் மனித இயல்புக்கு மாறுபட்டதாக இருக்குமானால், அவை நாம் உண்மையென்று கொள்ளத் தேவை இல்லை"58 கருத்து அவர் ஒரு பயன்பழி உண்மைக் கொள்கை (Pragmatist) யாளர் என்பதை நமக்கு அறிவிக்கும்.

கல்வி கற்பிப்பதில் எத்தகைய வேறுபாடும் காட்டக்கூடாது என்பது கன்பூசியஸ் உலகத்திற்கு வழங்கிய மூன்றாவது செய்தியாகும். மனித இனத்தின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக அண்மைக் காலத்தில்தான் இதை உலகம் உணர்ந்து போற்றத் தொடங்கியிருக்கிறது.

இத்தகைய அறநெறிக் கருத்துக்களை உலகிற்கு உணர்த்திய காரணத்தினால்தான் கன்பூசியஸ் பொன்றாப் புகழ்பெற்று விளங்குகிறார். "உலகத்தின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் சீனா வழங்கக்கூடியது யாதாகிலும் இருக்குமானால், அதில் சிறப்புமிக்க பெரும்பகுதியாகக் கன்பூசியஸின் கொள்கைகளும் கோட்பாடுகளுமே இடம்பெறும்" 59 என்று சீன நாட்டு நல்லறிஞர் ஒருவர் மொழிந்துள்ள கருத்து என்றும் பொய்யா மொழியாகப் பொலிவுற்று விளங்கும்.

## லவோ – ட் ஸு (Lao-Tzu)

கன்பூசியஸின் காலத்திய சீனாவில் வாழ்ந்த சித்தல் லவோ–ட்ஸு என்பவராவார். அவருடைய வாழ்க்கை வரலாறு இருள்செறிந்ததாக இருக்கிறது. அவர் ஓர் அநுபூதிமானாக விளங்கியவர் என்பது அவருடைய பாடல்களால் தெரியவருகிறது. அவர் முற்றும் துறந்த முனிவராவர். காடுகளிலும் மலைகளிலும் சுற்றித்திரிந்த ஒரு யோகியாக அவர் வாழ்ந்தார். அவர் கி.மு. 604இல் பிறந்ததாக மரபுவழிச்செய்தி ஒன்று வழங்கிவருகிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அவரைப்பற்றிப் பல பழங்கதைகள் நாட்டில் வழங்கியதை 'சூசு–மா–சி' என்பார். தம்முடைய

'வரலாற்றுப் பதிவேடுகள்' என்ற நூலில் தொகுத்துரைத்துள்ளார். அவற்றுள், கன்பூசியஸ் இச் சித்திரைச் சந்தித்த நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றுள்ளது.

தற்பெருமையையும், பல்வகை விருப்பங்களையும் பேரறிவாளன் என்ற கல்விச் செருக்கையும் கைவிடுமாறு கன்பூசியஸிற்கு, லவோ–ட்ஸு அறிவுரை கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதைக்கேட்டுச் சென்ற கன்பூசியஸ் தம் சீடர்களிடத்து சித்தர் லவோ–ட்ஸு வைப் பற்றி

> பறவைகளால் பறக்க முடியும்; மீன்களால் நீந்த முடியும்; விலங்குகளால் ஓடமுடியும் என்பதை நான் அறிவேன். ஓடுகின்ற விலங்குகளை வீழ்த்த கண்ணியும், நீந்துவனவற்றை பிடிக்க வலைகளையும், பறக்கின்றனவற்றை வீழ்த்த அம்புகளையும் பயன்படுத்தலாம். டிரேகனை (விலங்கு, பறவை, பாம்பு ஆகிய மூன்றும் சேர்ந்த வடிவுடைய கற்பனை விலங்கு) எவ்வாறு வீழ்த்துவது? அவை எவ்வாறு காற்றிலும் மேகத்திலும் ஊர்ந்து செல்லக் கற்றனவோ தெரியவில்லையே! நான் இன்று லவோ–ட்ஸுவைச் சந்தித்தேன். அவன் ஒரு டிரேகன் (Dragon)60

என்று குறிப்பிட்டாராம். இக்கதையில் முற்றிலும் உண்மை இருக்கமுடியாது. எனினும், இதிலிருந்து ஒரு சில உண்மைகள் புலனாகின்றன. சீனாவின் சிறப்பிற்குரிய இருபெரும் சான்றோர்களும் சமகாலத்தில் வாழ்ந்தவர்களாக இருத்தல்கூடும் என்பதும், அவர்களுடைய கொள்கைகளுக்கு இடையே பெருத்த முரண்பாடு இருந்திருக்கிறது என்பதும் தெரியவருகின்றன.

கன்பூசியக் கொள்கையால் சீன மக்களுடைய உள்ளப் பசியை முற்றிலும் போக்கமுடியவில்லை. அதனுடைய நடுவழிக் கோட்பாட்டின் ஒழுக்கநெறி, சிந்தனையாற்றல் பெறாத பொதுமக்களுக்கு முழுநிறைவை அளித்துள்ளது. ஆனால், தன்னைத்தான் உணரவேண்டும் என்ற துடிப்புடைய பெரியோர்களுக்குக் கன்பூசியக் கொள்கை மன நிறைவை

அளிக்கவில்லை. அதனால், இதற்கு நேர்மாறான கொள்கைகளைக் கொண்ட லவோ–ட்ஸூவை அவர்கள் போற்றிப் பின்பற்றத் தொடங்கினர்.

சமூகத்தில் பெருந்தன்மை யுடையவர்களாக வாழ வேண்டும்; ஒழுக்க நெறிமுறைகளைப் போற்றிப் பின்பற்ற வேண்டும் என்ற கோட்பாட்டின்மூலம் கன்பூசியக் கொள்கை மனிதப் பண்பாட்டையும், அடக்கத்தையும் எடுத்து ஓதுகிறது. இயற்கையோடு உறவு கொள்ளவதில் நாட்டம் செலுத்திய லவோ–ட்ஸூ மனிதப் பண்பாட்டிலும், வெறும் சடங்குகளாகிப்போன ஒழுக்கநெறிகளிலும் நம்பிக்கையற்றவராக இருந்தார். கன்பூசியக் கோட்பாட்டில் நற்பண்பு என்பது முதன்மையிடம் பெறுகிறது. அதனுடைய இருகண்களாக ஒப்புரவும், நேர்மையும் விளங்குகின்றன. இவற்றை மிக எளிதில் பயனற்றவை என்று கூறிவிடுகிறார் சித்தர் லவோ–ட்ஸூ. "நடத்தையில் உறுதிப்பாடு இல்லை; அதனால் ஒப்புரவு உண்டாகிறது. உலகில் ஒப்புரவு இல்லை; அதனால் திருட்டு உண்டாகிறது" என்று அவர் எள்ளி நகையாடுகிறார்.

கன்பூசியக் கொள்கையில் கண்கண்ட மெய்ப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கே முதன்மையிடம் தரப்பெற்றதை நாம் பார்த்தோம். கற்பனைக்கும், உள்ள உணர்ச்சிகளுக்கும் அதில் அளிக்கப்பெற்றுள்ள இடம் மிகக் குறைவாகும். லவோ–ட்ஸூ அக்குறையைப் போக்கும் வகையில் மாய மந்திரங்கள், சாகாக்கலை போன்றவற்றைப் பற்றியும் அறிவித்துள்ளார். சீனருடைய சிந்தனை வளர்ச்சி முறையில் லவோ–ட்ஸூவினுடைய கொள்கை புதுமை மோகம் பற்றியது; கன்பூசியக் கொள்கை பண்டைச் சிறப்பைப் பற்றி நிற்பது. இவ்வாறு அவை வேறுபட்ட இயல்புகளைக் கொண்டனவாக உள்ளன.

கன்பூசியக் கொள்கை மனிதன் அறநெறிகளைப் போற்றிப் பின்பற்றுவதன் மூலம் மண்ணுலகில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வழிகாட்டுகிறது. பற்றுக்களைத் துறந்து இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கையை வாழ்வதற்கும், 'நான் யார்? என் உள்ளம்

யார் ? என் ஞானங்கள் யார் ?' என்ற ஆன்ம விசாரணையில் ஈடுபடுவதன் மூலம் வீடுபேற்றை அடைவதற்குமுரிய வழியைக் காட்டுவது லவோ–ட்ஸ-ூவின் கொள்கைகள் எனலாம். கன்பூசியக் கோட்பாட்டை 'இல்லறநெறி' என்று கூறினால், லவோ–ட்ஸ-ூவின் கோட்பாட்டைத் 'துறவற நெறி' என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

லவோ–ட்ஸ-ூ இயற்றியதாகக் கருதப்பெறும் நூல் ஒன்று சீனமொழியில் சிறப்புற்று விளங்குகிறது. அது ஐயாயிரம் சொற்களால் ஆனது. அதற்குத் 'தாவோ–தே–கிங்' (கூயடி கூந – ஊறாவைபே) என்பது பெயராகும். "நெறியும் அதன் சிறப்பும்" என்பது அதன் பொருளாகும்.61 ஆனால், நெறி என்பதற்கு லவோ–ட்ஸ-ூ 'வாழ்க்கை நெறி' என்றே பொருள் கொண்டுள்ளார். மனித வாழ்க்கைக்குப் பொதுவாகத் தேவைப்படும் பல அறநெறிக் கருத்துக்களை எளிய நடையில் தெளிவாக அவர் எடுத்துரைத்துள்ளார். எண்பத்தொரு பாடல்களைக் கொண்ட இந்நூல், நூற்றுக்கு மேற்பட்ட உலகமொழிகளுள் மொழிபெயர்க்கப் பெற்றிருக்கிறது.

லவோ–ட்ஸ-ூவின் கோட்பாட்டிற்குத் 'தாவோயியம்' (Taoism) என்ற பெயர் வழங்கி வருகிறது. சீனப் பண்பாட்டினை உருவாக்குவதில் இதற்கும் சிறந்த பங்குண்டு. கி.மு. முதல் நூற்றாண்டு அளவில் இக்கோட்பாடு ஒரு சமயமாக வடிவம் பெறலாயிற்று. எனினும், கன்பூசிய சமயமும், பௌத்த சமயமும் இதன் செல்வாக்கைக் குறைத்து விட்டன.

'நெறி (Tao) என்பது என்ன ?' என்ற வினாவை எழுப்பும் ஆசிரியர், "அதை அறிவால் அறிய முடியாது; சொல்லால் குறிப்பிட முடியாது" என்று முதலில் கூறுகிறார். பின்னர் "அது என்றும் அழியாதது; எங்கும் இருப்பது; எல்லாமாய் இருப்பது. மண்ணும் விண்ணும் தோன்றுவதற்கு முன்பே அது தோன்றிவிட்டது; அமைதியானது; தனித்து நிற்பது; அது மாறுவதில்லை; சீர்குலைவதில்லை. ஆனால், அது உலகத்தில் உள்ளவை அனைத்தையும் கட்டிக்காக்கிறது. எனவே, அதை உலகத்தின் தாய் என்றும் கூறலாம்" என்று அவர் அறிவிக்கின்றார். பிறகு அவர்,

*நான் அதன் பெயரை அறியேன்!*
*பெயர் கூறவேண்டு மென்றால்*
*'நெறி' யென நான் புகல்வேன்*
*அது மாண்பு மிக்கது!*
*எவ்வாறு மாண்பு மிக்கது ?*
*வடிவத்தால், வண்ணத்தால் வரம்பற்றது!*
*அறிவால், ஆற்றலால், பண்பால் அளவிடற்கரியது!*
*'நெறி' மாண்பு மிக்கது!*
*வானம் மாண்பு மிக்கது!*
*மண்ணுலகம் மாண்பு மிக்கது!*
*மன்னனும் மாண்பு மிக்கோன்!*
*அவனுடைய ஆட்சிப் பரப்பில்*
*இவை நான்கும் மாண்புடையன!*
*அவற்றுள் ஒன்றின் பிரதிநிதியாகவே*
*மன்னன் விளங்குகின்றான்!*
*மனிதன் மண்ணுலகிற்கு ஒத்தியங்குகிறான்;*
*மண்ணுலகம் வானத்திற்கு ஒத்தியங்குகிறது!*
*வானம் நெறிக்கு ஒத்தியங்குகிறது!*
*நெறி அதனுடைய இயல்பிற்கு ஒத்தியங்குகிறது!* 62

என்று கூறுவதன் மூலம் 'நெறி' என்பது என்னவென்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

அறம் எனப்படுவது யாதென்பதை அவர் ஓரளவிற்குத் தெளிவு படுத்தியுள்ளார்.

*அனைத்தாற்றல் உடையது அறம்!*
*நெறியின் போக்கிற்கேற்ப அது வடிவம் பெறும்.*
*கனவில் காணும் காட்சியைப் போல*
*எளிதில் நினைவிலிருந்து நழுவி விடுவது நெறி!*
*அதில் படிமங்கள் தோன்றும்;*
*ஆனால் உடனே மறைந்து விடும்;*
*அதில் பொருள்கள் உள்ளன!*
*அவை அந்திப்போதில் தோன்றும்*

*நிழல்களைப் போன்று விரைவில் மறைந்துவிடும்!*
*அதில் பிழப்புகள் உள்ளன!*
*அது மெய்யானது; நுட்பமானது;*
*அது உண்மையில் பதிந்துக் கிடக்கிறது!* 63

இதனால் அறம் என்பது தெய்விக ஆணை என்பதும், அது 'நெறி' எனப்படும் தெய்வத்தின் கட்டளையாக நின்று உலகத்தை இயக்குகிறது என்பதும், அதைக் கண்களால் கண்டறிய முடியாது என்பதும், உள்ளத்து உணர்வு கொண்டே அதை உணரவேண்டும் என்பதும் புலனாகின்றன.

மனிதனுக்க அறிவும் தெளிவும் வேண்டும் என்பதை லவோ–ட்ஸூ நயமாக எடுத்துரைக்கிறார். அவர்,

*பிறரை அறிவதே பட்டறிவாம்*
*தன்னைத்தான் அறிவதே மெய்யறிவாம்;*
*மனிதரை வெல்பவன் ஆற்றல் மிக்கோன்*
*தன்னையே வெல்பவன் தவநெறியில் நிற்போன்!*
*சிந்தையின் நிறைவே செல்வம் எனலாம்;*
*தன் கருத்தைத் திணிக்க முயலுவது*
*வெறிச்செயலாம்;*
*தன்னிலையில் தளராது நிற்றலே பொறுமையென்பர்;*
*பன்னெடுங் காலம் வாழ்தல் என்பது*
*இறத்தலன்றி அழிவதன்றே* 64

என்று சித்தர் நிலையில் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார். மற்றோரிடத்தில் அவர்,

*தன்னறி யாமையை அறிபவனே அறிவாளி*
*தானறியாததை அறிந்ததைப்*
*போலறைபவனே நோயாளி!* 65

என்று அறிவுறுத்துகின்றார். உண்மையான அறிவைப் பெற மனிதன் முயலவேண்டும் என்பதையும், அப்பொழுதுதான் அவன் தெளிவு உடையவனாக விளங்க முடியும் என்பதையும் அவர் இப்பாடல்களின் மூலம் உலகிற்கு உணர்த்துகிறார்.

தாவோவிய தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லுவதென்றால் 'தன்னைத் தான் அறிதலே மெய்யுணர்வு' என்று நாம் கூறலாம். இதை ஒவ்வொரு பாடலிலும் மறைக்குறிப்பாக வைத்து அசிரியர் பாடியுள்ளார்.

லவோ–ட்ஸு 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்ற கருத்துடையவராகக் காணப்படுகின்றார். மனிதன் மனவமைதியுடன் வாழ்வதற்கு விருப்பங்களையும் தேவைகளையும் குறைத்துக் கொள்ளவேண்டும். அதற்குரிய வழிகளுள் ஒன்று அறிவை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது என்று அவர் குறிப்பிடுகின்றார். "அறிவு மனிதனுடைய துன்பத்திற்கு எவ்வாறு காரணமாகும் ?" என்ற வினாவிற்கு அவரே விடையும் கூறியுள்ளார்:

> முதலாவதாக மனிதனுடைய ஆசையை வளர்க்கும் பொருள்களுள் அறிவு ஒன்றாக இருக்கிறது. மேலும், அது விருப்பத்தை வளர்க்கும் பொருள்களைத் தெரிந்து கொள்ளுமாறு நம்மைத் தூண்டுகிறது. அதனால், மன நிறைவு அடைவதற்குரிய வழியை அறிவதற்கு ஆவல் உண்டாவது இல்லை. அறிவு மேன்மேலும் விரும்பிய பொருள்களை அடைவதற்குரிய வழிவகைகளைக் காட்டுகிறது. அதனால நம் அறிவு பெருகப் பெருக, விருப்பு வெறுப்புக்களும் வளர்ந்து கொண்டே போகின்றன. அதற்கு ஒரு முடிவு இல்லாமல் போய்விடுகிறது.66
> எனவே, "கற்பதை நிறுத்துங்கள்; நம் துன்பத்திற்கு முடிவு பிறக்கும்"67

என்று அவர் அறிவுறுத்துகிறார்.

அறிவுக்குத் தடை விதிக்குமாறு சொல்லும் அநுபூதிமானாகிய லவோ–ட்ஸு,

***அறிஞர்களை நாடுகடத்துக!***
***பேராசிரியர்களை ஒழித்துக்கட்டுக!***

***மக்கள் நலனடைவதற் குரியவழி இது!***
***அன்புடையோரை விட்டு நீங்குக!***
***அறவோரை அனுகாது அகலுக!***
***அப்பொழுதுதான்***
***வஞ்சனையும் சூழ்ச்சியுமற்ற எளிய வாழ்வினை***
***மனநிறைவுடன் நாம் வாழமுடியும்*** 68

என்று திட்டம் வகுத்துத் தருகிறார். இக்கருத்துக்களின் எதிரொலியை

***கல்லாத பேர்களே நல்லவர்கள்! நல்லவர்கள்!***
***கற்றும்அறி வில்லாதஎன்***
***கன்மத்தை என்சொல்லுகேன்***
***மதியைஎன் சொல்லுகேன்*** 69

என்ற தாயுமானவர் பாடலில் கேட்கிறோம். அப்பாலைத் தத்துவத்தில் மூழ்கிவிட்ட சித்தர்களின் மனப்போக்கு எந்நாட்டிலும் ஒன்றாகத்தானிருக்கும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

லவோ – ட்ஸ௵ மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதையும், மனித சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்பதையும் பற்றிக் கனவு கண்டுள்ளார்.

> குழந்தையின் அறிவும், விருப்பங்களும் மிகவும் எளிமையானவை. எனவே, பண்பாட்டில் சிறந்து விளங்கும் மனிதன் குழந்தையைப் போன்று இருக்க வேண்டும். 70

என்பதை அவர் நான்கு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். சான்றோர்களைக் குழந்தை உள்ளம் படைத்தவர்கள் என்று கூறுவது நம் நாட்டிலும் இருந்துவரும் வழக்கமாகும்.

“அறிவையும் ஆசைகளையும் மனிதன் நாள்தோறும் குறைத்துக் கொண்டே போனால், இறுதியில் ‘சும்மா இருக்கும்’ சுக நிலையை அடைவான். அந்நிலையே உயர்ந்தது; சிறந்தது; விரும்பத்தக்கது. அந்நிலையை ஓர் ஊரைச் சேர்ந்தவர்கள்

எல்லோரும் அடைந்துவிட்டால், இலட்சிய சமுதாயம் ஒன்றை நாம் அமைத்து விடலாம்'' 71 என்று ஆசிரியர் கூறுகிறார். அந்த இலட்சிய சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் அவர் ஒரு பாடலில் அழகுற அமைத்துக் காட்டுகிறார். அதன் பொருள் பின் வருமாறு:

> இலட்சிய நாடு சிறிதாக இருக்கும்; அதில் வாழுகின்ற மக்கள் மிகச்சிலராக இருப்பர். அங்குக் கருவிகள் பல இருக்கும். அவற்றை மிகக் குறைவாகவே அவர்கள் பயன்படுத்துவர். மக்கள் இறப்பைப்பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்; நாட்டைவிட்டு வெளியேறவும் மாட்டார்கள். அங்குப் படகுகளும் வண்டிகளும் பல இருக்கும். ஆனால், அவற்றில் யாரும் ஊர்ந்து செல்லமாட்டார்கள். அந்நாட்டில் போர்க் கருவிகள் பல இருக்கும். ஆனால், அவை பயன்படுத்தப்படுவது இல்லை. மக்கள் மீண்டும் முடிச்சுகளையுடைய ஓலைச் சுருள்களைப் பயன்படுத்த முன்வருவர். அவர்களுடைய உணவுப் பொருள்கள் இனிமை வாய்ந்தனவாக இருக்கும்; ஆடைகள் அழகுடன் விளங்கும்; இல்லங்களில் அமைதி நிலவும்; பழக்க வழக்கங்கள் மனத்தைக் கவரும்.
>
> பக்கத்திலுள்ள நாடு அவர்களுக்கு மிக அருகிலேயே இருக்கும். அயல் நாட்டில் நாய் குரைத்தலையும், கோழி கூவுதலையும் அவர்கள் கேட்டு மகிழ்வர். அவர்கள் வயது முதிர்ந்து கிழவர்களாவர்; பின்னர் இறந்துபடுவர். ஆனால், ஒரு நாட்டைச் சேர்ந்தவர் மற்றொருவர் நாட்டிற்குள் எப்பொழுதும் நுழையமாட்டார்கள். 72

இத்தகைய சிறப்பினையுடையது லவோ–ட்ஸூ கண்ட இலட்சிய நாடு. அது பழங்குடி மக்களின் நாகரிகமற்ற நாடு அன்று. ஆனால், ஆதிகால பழக்கவழக்கங்களைக் கொண்ட ஒருவகை நாகரிக நாடு என்றே நாம் அதைச் சொல்ல வேண்டும். அது

படகுகளும் வண்டிகளும் அறியாத நாடன்று; அவற்றை மக்கள் பயன்படுத்திக்கொள்ள மாட்டார்கள். அது போர்க் கருவிகளை அறியாத சமுதாயத்தையுடைய நாடு அன்று; யாரும் அவற்றைப் பயன்படுத்த விரும்புவதில்லை. லவோ–ட்ஸு கண்ட இலட்சிய நாடு நாகரிகமற்றதாக இருந்தால், எவ்வாறு அந்நாட்டு மக்கள் 'இன்சுவை உணவுகளை'யும், 'அழகிய ஆடைகளை'யும் பெறமுடியும் ?

எனவே, லவோ–ட்ஸு நாகரிகத்தைப் பற்றிக் கொண்ட கருத்து என்னவென்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். "சிறந்த நாகரிகம் என்பது முதிர்ச்சியுறாத பழைய பண்பாட்டைப் பெரிதும் ஒத்திருக்கும்"73 என்பது லவோ–ட்ஸுவின் கருத்து. அத்தகைய நாரிகமே நன்கு நிலைத்து நிற்கக்கூடிய ஆற்றலுடையதாக விளங்கும் என்பது அவருடைய நம்பிக்கை.

இத்தகைய நாட்டில்தான் மக்கள் நலமாகவும் வளமாகவும் வாழ்வதோடு அல்லாமல், மனநிறைவுடனும் வாழமுடியும் என்று லவோ–ட்ஸு கருதியதில் வியப்பில்லை. உள்ளப் பண்பாட்டைப் பெற்ற மக்கள் அமைதியாக வாழ்வதற்கும் ஆன்மிக வளர்ச்சியில் கருத்தைச் செலுத்துவதற்கும் தகுதி வாய்ந்த புறச்சூழ்நிலைகளையுடையதாகத் தம்முடைய கற்பனை உலகை ஆசிரியர் படைத்திருக்கிறார். ஆன்மிகக் கடைத்தேற்றத்தையே மனித வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளாக லவோ–ட்ஸு கொண்டிருந்தார். ஆடம்பர ஆரவாரமற்ற, வஞ்சனையும் சூழ்ச்சியுமற்ற, போட்டியும் பொறாமையுமற்ற, பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் மற்றதோர் இலட்சிய சமுதாயத்தைக் காண்பதற்குரிய நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி அவர் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் கனவு கண்டார். அந்த இலட்சியம் பொதுவாக இன்றைய உலகிற்கும், சிறப்பாகக் கீழைநாடுகளுக்கும் தேவைப்படுகின்ற ஒன்றாகவே இருந்து வருகிறது.

இவ்விருபதாம் நூற்றாண்டில் அண்ணல் காந்தியடிகள் காண விரும்பிய 'சர்வோதய சமுதாயம்' பெரிதும் லவோ–ட்ஸு

கண்ட இலட்சிய நாட்டின் சமுதாயத்தை ஒத்திருக்கிறது என்று நாம் கூறலாம்.

உலகிற்கு வழங்க விரும்பிய செய்தியைச் சுருக்கமாக 'வாழ்க்கை நெறி' என்னும் தம் நூலின் இறுதிப் பாட்டில் மிகத் தெளிவாக லவோ-ட்ஸ-ூ எடுத்தியம்பியுள்ளார். அச் செய்திகளாவன:

> உண்மையான சொற்கள் இனிமையாக ஒலிக்காது; இனிய சொற்கள் உண்மையைப் பெரிதும் மறைப்பதாகும். நல்ல மனிதன் வீணாக வழக்காடமாட்டான்: எடுத்ததற்கெல்லாம் வழக்காடுபவன் நல்லியல்பு உடைய மனிதனாகப் பெரிதும் இருக்கமாட்டான். அனைத்தையும் அறிந்தவர்கள் கல்வியில் சிறந்த அறிஞரல்லர். கல்வியிற் சிறந்த அறிஞர் எப்பொழுதுமே அனைத்தையும் அறிந்தவருமல்லர்.
>
> அறிவுடைய மனிதன் தன்னுடைய உடைமைகளைச் சேர்த்து வைக்க மாட்டான். பிறருக்குத் தொண்டு செய்யும் தூய உள்ளம் படைத்தவன் அவன். அவனிடத்தில் போதிய பொருள்கள் உள்ளன. அதனால், அவன் பிறருக்குக் கொடுத்துதவ முன்வருவான். ஆனால், தன்னிடம் உள்ளவற்றை யெல்லாம் பிறருக்குக் கொடுத்துதவிய பின்னரே உண்மையின் பெருஞ்செல்வனாக அவன் விளங்குவான்.
>
> வாழ்க்கை நெறியே பயனுடையதாகும். அதை அடைவதற்கு உழைப்பு என்றும் தடையாக இருப்பதில்லை. போட்டியின்றி எல்லாரும் தம்முடைய கடமைகளைச் செம்மையாகச் செய்வதே அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறியாகும். 74

லவோ-ட்ஸ-ூவின் நற்செய்தி வாழ்க்கையினை இயக்கும் ஒழுகலாற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அது ஆழமான

அருங்கருத்துக்களைத் தெளிவுறுத்துகிறது. தெளிவுறுத்தும் முறை மெய்ப்பாட்டு நெறியியல்பும் இறைமை இணைவுப் பண்பும் கலந்த ஒன்றாகக் காட்சி தருகிறது.

## வாழ்க்கை நெறியும் திருக்குறளும்

சீனாவின் றிப்புமிக்க சித்தர் லவோ–ட்ஸு. அவர் இயற்றிய 'வாழ்க்கை நெறியும்', தமிழகத்தின் மெய்யுணர்வாளர்களுள் தலைசிறந்தவரான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும் வடிவத்தால் பெரிதும் ஒத்த இயல்புடையன. திருக்குறள் நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டதேனும், அளவால் சிறிய நூலேயாகும். 'வாழ்க்கை நெறி' என்ற சீன மொழி நூல் எண்பத்தொரு பாடல்களைக் கொண்ட மிகச் சிறிய நூலாகும். திருக்குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுதுது அளவிலும், கருத்து வகையிலும் அதைக்காட்டிலும் சிறிய நூலாக 'வாழ்க்கை நெறி' விளங்குகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பேறுகளுள், ஆன்மிக விடுதலையாகிய வீடுபேற்றைப் பற்றியே 'வாழ்கை நெறி' யெனும் சீன நூல் பெரிதும் பேசுகிறது. ஆனால், அதில் மருநூதிற்குக்கூடக் காதல் வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் இடம்பெறவில்லை.

ஆயினும், மக்கள் மாண்புடன் வாழ்வதற்கு வழிகாட்டுவதையே திருக்குறளும், வாழ்க்கை நெறியும் குறிக்கோளாகக் கொண்டுள்ளனன 'வாழ்க்கை வாழ்வதற்கே என்பதில் அவை இரண்டும் கருத்தொற்றுமையுடையனவாகும். சிறப்பாக வாழ்வது எப்படி ?' என்று மக்களுக்கு வழிகாட்டுவதிலேயே அவை இரண்டும் வேறுபடுகின்றன.

லவோ–ட்ஸுவின் நூல் உலகப் பற்றுக்களைத் துறந்து காட்டில் சென்று அல்லது சிற்றூர்களில் தங்கி இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழும் துறவற வாழ்க்கை நெறியைப் பெரிதும் வற்புறுத்துகிறது. தனிமனிதன் தனித்து வாழ்வதே ஆன்மிகக் கடைத்தேற்றத்திற்கு உரிய வழி என்று அது அறிவிக்கிறது. திருக்குறள் மக்களிடையே அன்புடன் கலந்து உறவாடி,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய இல்லறத்தின் ஏற்றத்தையே பெரிதும் வலியுறுத்துகிறது.

திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறி பெரிதும் நடைமுறைக்குப் பொருந்திவரக் கூடியது; சீனாவின் சிறப்புமிக்க நூல் காட்டும் வாழ்க்கைநெறி பெரிதும் குறிக்கோளியல்பு வாய்ந்தது. அதில் ஆன்மிகவண்ணம் அதிகமாகக் கலந்து காணப்பெறுகிறது. எனவே, யாரோ ஒரு சிலரால் மட்டும் கடைப்பிடிக்கக்கூடிய வாழ்க்கை நெறியாக அது தோன்றுகிறது.

சமய உண்மைகளையும் வாழ்க்கையின் அடிப்படைப் பொருளையும் மறந்து, வெற்றுச் சடங்குகளக்கு முக்கியத்துவம் கொடுத்தும், போலிக் கொள்கைகளே உண்மையானவை என்று மக்கள் நம்பியும் வாழ்ந்த காலத்தில் தோன்றியவர் லவோ–ட்ஸூ. அவர் வாழ்ந்த காலம் சீனாவில் உள்நாட்டுப் போர்களும் பூசல்களும் நிறைந்திருந்த காலம். இத்தகைய இன்னல் நிறைந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தனர். இவற்றைக் கண்டு மனம் நடுக்குற்ற லவோ–ட்ஸூ உள்ளத்திலே அமைதி பெறுவதற்குரிய வழியை நாடினார். மனமெனும் பேய்க்குரங்கின் குறும்புகளை அடக்கியொடுக்கத் தனித்திருந்து யோகநெறியில் அவர் ஈடுபட்டார். அதன் விளைவாக அவர் அன்றைய சமுதாயப் பழக்க வழக்கங்களையும், போலிக் கொள்கைகளையும், பொய்யான அறிவாராய்ச்சிகளையும் சாடுகிறார். அதனால், அவர் வகுத்த வாழ்க்கை நெறி ஒரு சிலரால்–யோகியராலும் துறவிகளாலும்–மட்டும் பின்பற்றக்கூடிய அறநெறியாக அமைந்தது. அத்துடன் மனிதனுடைய முயற்சிக்கு இடம் அளிக்காது, 'எல்லாம் வினையின்' என்பதைப் போன்றதொரு கொள்கையை அது வலியுறுத்தலாயிற்று. இவ்வாறு லவோ–ட்ஸூவின் கொள்கை ஒருவகையான 'வாழ்க்கை மறுப்புக்' கோட்பாடாக வடிவம் பெற்றதை நாம் காணுகின்றோம்.

லவோ–ட்ஸூ வாழ்க்கையைத் துன்பவியல் நோக்குடன் பார்த்தார். வள்ளுவரோ வாழ்க்கையை இன்பவியல் நோக்கோடு அணுகினார். அதனால்தான் லவோ–ட்ஸூவின் கொள்கை அவர்

காலத்திலேயே பழிக்கப்பட்டது. சீனநாட்டு அறிஞர்களுள் சிலர் "அறவே வெறுத்தொதுக்கத்தக்க மூடக்கருத்து" என்று அதைக் குறைகூறினர். இச்செய்தியை அவரே தம்முடைய நூலின் அறுபத்தேழாம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். வைதிகப் பழக்க வழக்கங்களுள் மூழ்கிக்கிடக்கும் மக்களால் சிறிதளவுகூட தம்முடைய கொள்கையைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று அவர் வருத்தப்படுகிறார் (வா.நெறி. 67:1–5).

இதற்கு நேர்மாறானது வள்ளுவருடைய நெறி. இவ்வையத்துள் மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நெறிமுறைகளை வகுத்துத் தருவதிலேயே அவர் பெரிதும் கருத்தைச் செலுத்தியுள்ளார். மண்ணகத்தில் விண்ணக வாழ்க்கையை வாழ்வதற்கு வள்ளுவர் வழிகாட்டினார் என்று நாம் கூறலாம்.

மற்றொரு வகையிலும் வாழ்க்கை நெறியும், திருக்குறளும் வேறுபடுகின்றன. வாழ்க்கை நெறி உள்ளுணர்வுக் கொள்கையை (Intuitionism) அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். திருக்குறள் பெரிதும் அறிவு முதற் கொள்கையை (Rationalism) அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பெற்றதாகும். இதனால், திருவள்ளுவர் மெய்ப் பொருள் கண்ட மெய்யுணர்வாளர் அல்லர் என்பது கருத்து அன்று. தமிழகத்தின் சிறப்புமிக்க மெய்யுணர்வாளரான வள்ளுவர் அறிவு முதற் கொள்கைக்கே தம் நூலில் முதன்மையிடம் கொடுத்துள்ளார் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

திருவள்ளுவர் அறத்தின் சிறப்பையும், அதன் அதிர்வலையும் நன்குணர்ந்த அறவோராவர். அதை எடுத்துரைக்கும்பொழுது மனித வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியுரைப்பதையே அவர் நோக்கமாகக் கொண்டிருக்கிறார். அறத்தாறு எதுவென்பதை வள்ளுவர் நன்கு வரையறுத்துக் காட்டுகிறார். அறநெறியில் ஒழுகுவதே இன்பம்.

அவ்வாறு வாழ்வதனால் வேறொரு பயனை எதிர்பார்க்க வேண்டாம். அப்படி எதிர்பார்ப்பது கருவிப்பயனாகும். அதைவிட உள்ளுறுபயனே சாலவும் சிறந்தது என்பதை அறிவிக்கும் வகையில்,

*அறத்தான் வருவதே இன்பம்* (குறள் 39)

என்று அவர் தெளிவுறுத்துகிறார். அறநெறியில் ஒழுகுவதனால் ஒருவன் பெறக்கூடிய முடிந்த பயன் இதைவிட வேறொன்றும் இருக்க முடியாது என்பது அவர் கருத்து.

அறத்தின் நிலைக்களனாக இருப்பவன் இறைவன் என்றும், அவனை 'அறவாழி அந்தணன்' (குறள் 8) என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். மனத்துக்கண் மாசற்றவனாகி அறநெறியில் ஒழுகும் மனிதன் இறுதியில் இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தால்தான் பிறவியாகிய பெருங்கடலைக கடக்கமுடியும் (குறள் 10) என்று அவர் அறிவுறுத்துகிறார். இவ்வாறு மனிதன் அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் படிப்படியாக உள்ளப் பண்பாட்டைப் பெற்று இறைவனை அடைவதற்குரிய வழியைப் பல இடங்களில் குறிப்பாகவும், சில விடங்களில் வெளிப்படையாகவும் வள்ளுவர் சுட்டிச் செல்லுகிறார்.

லவோ–ட்ஸு காட்டும் வாழ்க்கை நெறி மனிதனைப் 'பேச்சிறந்து, சுட்டிறந்து, பின்னிறந்து, முன்னிறந்து, நீச்சிறந்து நிற்பதிலே நேசமுறத்' தூண்டுகிறது; 'விண்ணிறந்து, மண்ணிறந்து, வெளியிறந்து, ஒளியிறந்து, எண்ணிறந்து நிற்கின்ற பொருளை நாடுமாறு' நவில்கிறது இத்துடன் செயலற்றுச் 'சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே' என்ற யோக நெறியின் கோட்பாட்டைப் (வா. நெறி. 43,52) போற்றிப் பின்பற்றுமாறு அனைவரையும் லவோ–ட்ஸு அழைக்கின்றார். மேலும், அவர் 'நெறி' (Way) என்பதையே கடவுளாகக் கருதுவதுபோல் தோன்றுகிறது. 'நெறி என்பது எது ?' என்ற வினாவைப் பல பாடல்களில் (வா.நெறி. 25, 32, 41, 37) அவர் எழுப்புகின்றார். அதற்கு அவர் தரும் விளக்கம்.

*முப்பாழும் பாழாய் முதற்பாழும் சூனியமாய்*
*அப்பாழும் பாழாய் அமைந்தது ஒன்றெனலாம்*
*அந்த ஒன்றே அழியாப் பெரு நெறியாம்*

(வா.நெறி. 39, 41)

என்பதேயாகும். ஏனெனில், அதைக் 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' (வா. நெறி. 56). எனவே, நாம் அதன் இருப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ளவேண்டுமே யொழிய, 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்று' மற்ற அதன் இயல்புகளைப் பற்றி ஆராய்வது அறிவுடைமையாகாது என்பது அவருடைய கருத்தாகும்.

இத்தகைய அநுபூதிமானாகிய லவோ–ட்ஸ்ஊவின் கருத்துக்களைக் கொண்ட 'வாழ்க்கை நெறி' என்ற நூலில் அறநெறிக் கருத்துக்களைக் காட்டிலும், இறைமை இணைவுப் பண்பாகிய சித்தியல் கொள்கைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. ஆகவே, அதை நாம் நீதிநூல் என்று கொள்ளுவதற்கு இல்லை. எனினும், அந்நூலில் காணப்பெறும் அறநெறிக் கருத்துக்கள் திருக்குறளின் கருத்துக்கள் சிலவற்றோடு ஒப்புமையுடையனவாகக் காணப்பெறுகின்றன.

லவோ–ட்ஸ்ஊ 'தீமைக்கு மாறாக நன்மையே செய்' (வா.நெறி. 72) என்ற அறவுரையைச் சீனாவிற்கு வழங்கிய பெரியாராவார். இதனைக் கன்பூசியஸ் மிக வன்மையாகக் கண்டித்தார். "தீமைக்குத் தக்க மாற்று நன்மையாயின், நன்மைக்கு மாற்று யாது?" என்று அவர் லவோ–ட்ஸ்ஊவை நையாண்டி செய்தார். திருவள்ளுவர் 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு?' (குறள் 987) என்று கேட்ட கேள்வியை உலகம் மறக்க முடியாது. 'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை' என்றார் (குறள் 247) வள்ளுவர். அஞ்சாநெஞ்சம் படைத்தோருக்கும் அருளுணர்ச்சி இன்றியமையாதது என்பது லவோ–ட்ஸ்ஊவின் கருத்து. "போரில் உண்மையான வெற்றிபெறுவது அருளுணர்ச்சியே! அருளுணர்ச்சி மக்களுக்குச் சிறந்த தற்காப்புக்கருவி

அவ்வருளுணர்ச்சி உடையோரைக் கடவுள் காப்பாற்றுவார்'' (வா.நெறி. 67) என்று அருளறத்தின் சிறப்பை, சீனநாட்டு அருளாளர் லவோ–ட்ஸூ எடுத்துரைக்கிறார். அக்கருத்துக்கள் யாவும் திருக்குறளில் 'அருளுடைமை' என்ற அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களின் எதிரொலிபோல் தோன்றுகின்றன.

இவ்விரு நூல்களுக்கு இடையே காணப்பெறும் ஒத்த கருத்துக்கள் சிலவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் நாம் காணலாம்.

| வாழ்க்கை நெறி | திருக்குறள் |
|---|---|
| 1. அதிகமாகப் பேசினால் சிந்தனை செம்மையாக அமையாது. எனவே சிந்தனையைச் சிதறவிடாமல் சில சொற்களைப் பேசுவதே சிறந்தது. (5) | பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சிலசொல்லல் தேற்றா தவர் (649) |
| 2. தன்னைப் பெரியவன் என்று பிறர் மதிக்க வேண்டும் என்பதற்காகச் சான்றோன் வாழ்வதில்லை. இதனால் தான் அவன் பெருமைக்குரிய மனிதனாகி விடுகின்றான். (34) | பெருமை பெருமிதம் இன்மை (979) |
| 3. சீற்றத்தைத் தூண்டும் பொறாமை ஒரு கொடிய பண்பாகும் (46) | அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் (168) |
| 4. மனநிறைவின்மையைப் போன்ற கொடிய துன்பம் வேறொன்றும் இல்லை. (46) | அவாவென்னும், துன்பத்துள் துன்பம் (369) |

| | |
|---|---|
| 5. அறிவுடைய சான்றோன் விருப்பு வெறுப்பற்ற வனாகவும் நடுவு நிலைமையாகிய நெறி நிற்பவனாகவும் விளங்குவான். (49) | . . . . . . . . . . . . . ஒருபால் கோடமை சான்றோர்க் கணி. (118) |
| 6. மென்மையான பொருள்களை எளிதில் நாம் உருக்கி விடலாம். அதைப்போன்று எதையும் தொடக்கநிலையில் கையாளுவது எளிய செயலாகும். (64) | இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து (879) |

சீனநாட்டு சித்தர் லவோ–ட்ஸூ காட்டிய வாழ்க்கை நெறிக்கும், வான்மறை தந்த வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறிக்கும் இடையே அதிக வேற்றுமைகள் இருந்தாலும், மனித வாழ்க்கையின் உட்பொருளைப்பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் ஒன்றாகவே உள்ளன. எனவே, அவர்களுடைய குறிக்கோள் ஒத்த இயல்புடையதாக இருக்கிறது. ஆனால், அக்குறிக்கோளை அடைவதற்கு அவர்கள் வகுத்த வழிகள் வேறுபட்டனவாக அமைந்துள்ளன. அவற்றினிடையே சிற்சில ஒப்புமைப் பண்புகள் இடம்பெற்றுள்ளதை மேற்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

இவ்விருபெரும் சான்றோர்களுக்குப் பின்னர் சீனநாட்டில் தோன்றிய புலவர்கள் பல அரிய இலககியங்களைப் படைத்துள்ளனர். ஹான் அரச மரபினரின் ஆட்சிக் காலம் (கி.மு. 206–கி.பி. 220) சீன இலக்கியத்தின் பொற்காலமென்று போற்றப் பெறுகின்றது. அக்காலத்தில் சீன இலக்கியம் பல்வேறு துறைகளில் செழித்தோங்கியது. தன்னுணர்ச்சிப் பாடல்களும், கதைப்பாடல்களும், ஆடலிசைப்பாக்களும், நாடகங்களும் அக்காலத்திய சீனமொழியில் வளர்ச்சியுற்றன. எனினும், நீதி

இலக்கியங்கள் என்று சொல்லத்தக்க வகையில் புதிதாக ஒன்றும் அக்காலத்தில் இயற்றப்படவில்லை. இதற்கு மாறாகக் கன்பூசியஸின் முதுமொழிகள், அறிவுரைகைள் போன்றவற்றிற்குப் புதிய உரை விளக்கங்களும், ஆராய்ச்சி உரைகளுமே அக்காலத்தில் எழுந்தன. அவை பெரிதும் தத்துவ ஆராய்ச்சி முறைகளையும், அறிவாராய்ச்சி முறைகளையும் அளவையியல் நெறி முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டனவாக உள்ளன.

சீனாவின் வரலாற்றுக்காலம் நெடுக, கன்பூசியஸின் கொள்கைகளும் கோட்பாடுகளும், லவோ–ட்ஸூவின் கொள்கைகளும் கோட்பாடுகளும் சமய அடிப்படையிலும், தத்துவ நோக்கிலும் ஆராயப்பட்டு, மாபாடியங்கள் எழுதப்பெற்றன. கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவிற்குள் புகுந்து, செல்வாக்குற்ற பௌத்த சமயமும் தத்துவ ஆராய்ச்சினையே பெரிதும் மேற்கொண்டது. இக்காரணங்களால் சீனாவில் புதிய நீதி நூல்கள் தோன்றாமல் போயின. இவற்றின் விளைவாகக் காலந்தோறும் கன்பூசியஸின் நீதிக் கருத்துக்களுக்குக் காலத்தையொட்டித் தேவைப்பட்ட புதிய விளக்கவுரை நூல்கள் பல எழுதப்பட்டன.

எனவே, ‘சீனமொழியில் நீதி இலக்கியம்’ என்று நாம் கூறுகின்றபொழுது, கன்பூசியஸ் காலத்தில் எழுந்த நூல்கள் சிலவற்றையே நீதி இலக்கியங்களாகக் குறிப்பிடலாம்.

## சீன இலக்கியத்துள் நீதி இலக்கியம் பெறுமிடம்

பண்டைக் காலத்தில் சீனமொழி நூல்களை (1) பண்டைய நூல்கள், (2) வரலாறு, (3)தத்துவம், (4) இலக்கியத் தொகுதிகள் என்று பாகுபடுத்துவது மரபாக இருந்துவந்தது. பண்டைய நூல்களிலே பழைய இலக்கியங்களும், அவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்குரிய மொழிநூல்களும் இடம் பெற்றுள்ளன. பண்டைய நூல்களில் பழம்பாடல் தொகுதியோடு, அறநெறிக் கருத்துக்களைக் கொண்டு அறநூல்களும், கால வழிச் செய்திக் கோவைகளும் சேர்க்கப் பெற்றுள்ளன. பழமைச்

சிறப்புடையனவாகக் கருதப் பெற்ற நூல்கள் அனைத்தும் இலக்கியங்களாகப் போற்றப் பெற்றன. இதனால், பாவடிவில் இயற்றப்பட்ட நூல்களே அல்லாமல், உரைநடையில் எழுதப் பெற்ற நூல்களும் இலக்கியங்களாகப் போற்றப் பெறும் நிலை உண்டாயிற்று. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கன்பூசியஸ் தொகுத்த நான்கு நூல்களுள், 'பழம் பாடல் தொகுதி' என்பதே பாவடிவில் அமைந்தது; சொல் நயம், பொருள் நயம் வாய்ந்த இலக்கியமாகத் திகழ்வது. மற்ற மூன்று நூல்களும் உரைநடையில் எழுதப்பெற்றவை; இலக்கியச் சுவை நலம் குறைந்தவை. கன்பூசியஸ் எழுதிய 'இளவேனிலும் இலையுதிர் காலமும்' என்ற நூல் உரைநடையில் விளங்குவது. இதில் ஓரளவிற்கு இலக்கியத்தின் மணம் கமழ்கிறது.

ஆனால், கன்பூசியஸின் கருத்துக்கள் அல்லது பொன்மொழிகள் என்று அவருடைய சீடர்கள் தொகுத்துள்ள 'முதுமொழிகள்'. 'நெடுவழிக்கோட்பாடு,' 'சிறப்புமிக்க கல்வி' என்னும் நூல்களுள் 'நெடுவழிக்கோட்பாடு' மட்டும் பாவடிவில் இயற்றப்பெற்றது. மற்றவை இரண்டும் பேச்சு மொழியில் அமைந்த உரைநடை நூல்களாகும். அவற்றில் இலக்கியத்தின் இயல்புகளைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆனால், உரையாடல் முறையில் கருத்துக்கள் விளக்கப்பெற்றும், இடையிடையே பழமொழிகளும், பழைய வரலாற்று நிகழ்ச்சிகளும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்பெற்றும் இருப்பதால் ஓரளவிற்குச் சுவையுடையனவாக அவை தோன்றுகின்றன. அம்மூன்று நூல்களுள்ளும் கன்பூசியஸின் 'முதுமொழிகள்' என்னும் நூலே ஓரளவிற்குச் சொற்சுவையும், பொருட்சுவையும் வாய்ந்தது. 'நடுவழிக் கோட்பாட்டில்' இலைமறை காய்போல் செஞ்சொற் கவியின்பம் காணப்படுகிறது. 'சிறப்பு மிக்க கல்வி' என்ற நூல் கருத்துச் செறிவுமிக்க உரைநடையால் அமைந்தது. அதில் கலையழகிற்கே இடமில்லை. எனவே, கன்பூசியஸின் நீதி நூல்களை 'மூதுரை' வகையைச் சேர்ந்த நீதி இலக்கியங்களாகவே நாம் கருத நேரிடுகிறது.

ஆனால், லவோ–ட்ஸ-வின் 'வாழ்க்கை நெறி' இலக்கியப் பண்புகள் நிறைந்த படைப்பாகும். அதில் சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை வளமும், கருத்தாழமும் தீக்க அளவிற்கு இணைந்தும் இழைந்தும் காணப்படுகின்றன. அவற்றிடையே சமய வெழுச்சிமிக்க உணர்ச்சியும், புதிரான பொருள்நயமும் பொருந்தியுள்ளன. அதனால், அது வெறும் இலக்கியமாக அல்லது நீதி இலக்கியமாக விளங்காமல், இறைமை இணைவுப் பண்புடைய சமய இலக்கியமாகத் தோன்றுகிறது.

பிற்காலத்தில் கன்பூசிய சமயம், தாவோயிய சமயம் என்ற இருவகைச் சமயங்களின் வேதங்களாக இவ்விரு ஆசிரியர்களுடைய நூல்களைப் போற்றும் நிலை சீனாவில் உண்டாயிற்று. அக்காலத்தில் கன்பூசியஸின் நூல்கள் பண்டைய இலக்கிய மரபுவழி வந்த நீதி நூல்கள் என்பதைச் சீனர்கள் மறந்துவிட்டனர். கன்பூசிய சமயத் தத்துவக் கோட்பாடுகளின் நிலைக்களனாக அந்நூல்கள் விளங்குகின்றன என்பதை நிலைநாட்டுவதற்கே அறிஞர் பலர் முயன்றனர். அதனால், அவர்கள் எழுதிய விளக்கங்கள் அனைத்தும் அவற்றைச் சமயத்தத்துவ நூல்களாகவே உலகிற்கு உணர்த்தின.

ஏறக்குறைய இதே நிலைதான் லவோ–ட்ஸ-வின் 'வாழ்க்கை நெறிக்கும்' உண்டாயிற்று. அந்நூலின் அடிப்படை சமயச் சார்புடையது என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. எனினும், அதில் அறநெறிக் கருத்துக்கள் பல இலைமறை காய்போல் இடம் பெற்றுள்ளன. அந்த காலத்தையும், இடத்தையும் கடந்து மனிதனை, மனிதனாக வாழத்தூண்டும் இயல்புடையன.

சீனமொழியின் நீதி இலக்கியங்களைத் திருக்குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது ஓர் உண்மை புலனாகின்றது. சீனமொழியில் இலக்கியம் முழு வளர்ச்சியடையாத காலத்தில் நீதி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அதனால்தான், அவற்றுள் வழக்காற்று ஒழுக்கநெறிக் கருத்துக்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன. செவிவழிச் செய்திகளும், நாட்டுப்பாடல்களும் இணைந்து இலக்கியமாக வடிவம் பெற்ற காலத்தில் அந்நூல்கள்

இயற்றப்பட்டனவாகும். பல்வேறு குலங்களும் குடிகளும் தத்தம் வீரதீரச்செயல்களையே பெரிதும் போற்றிய 'வீர இலக்கிய காலத்தை' (Age of Heroic Poetry) ஒட்டித் தோன்றிய நூல்களே சீனமொழியின் நீதி இலக்கியங்களாகும். எனவே, அவற்றில் பழைய பழக்கவழக்கங்களையும், வழக்காற்று ஒழுக்க நெறிகளையும் அழிந்தொழியாமல் போற்றிக் காக்கப்பட வேண்டும் என்ற கருத்து பின்னணியாக அமைந்திருப்பதை நாம் காணுகின்றோம். இதற்கு ஓரளவிற்கு விதிவிலக்காகக் காணப்பெறுவத லவோ–ட்ஸூவின் 'வாழ்க்கை நெறி.' இதை நீதி இலக்கியம் என்று கூறுவது ஓரளவிற்குத்தான் பொருத்தமுடையதாகும். எனவே, சீனமொழியில் கன்பூசியஸின் படைப்புகளே நீதி நூல்களாகச் சிறப்புற்று விளங்குகின்றன. எனினும், அவற்றை நவில்தொறும் நூல்நயம் பயக்கும் இலக்கிய வகையாக நாம் கொள்ளுவதற்கில்லை. அவை 'மூதுரை' வகையைச் சேர்ந்தவை என்றும், ஓரளவிற்குத் தரும சாத்திரச் சார்புடையன என்றும் நாம் கூறலாம்.

## 2. திருக்குறளும் வடமொழியில் நீதி இலக்கியம்

இந்திய நாடு பழம்பெரு நாடு. வரலாற்றின் ஒளிக்கதிர்கள் சென்று ஒளிவீச முடியாத தொல் பழங்காலத்திலேயே இது தனிப்பட்டதோர் நாகரிகச் சிறப்புடையதாய் விளங்கத் தொடங்கியது. அந்நாகரிகத்தை உருவாக்கிய மக்கள் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்; பல்வேறு மொழியைப் பேசி வருபவர்களாவர். அதனால் பல்வகைப்பட்ட பண்புகளையுடைய மக்களைக் கொண்ட ஒரு துணைக்கண்டமாக இது சிறப்புற்று விளங்குகிறது.

பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் இந்நாட்டில், வேற்றுமைக்கிடையே ஒற்றுமையைக் காணும் பண்பு பன்னெடுங்காலமாக நின்று நிலவுகிறது. மலைகளாலும், ஆறுகளாலும், இன்னபிற இயற்கை அரண்களாலும் பல பகுதிகளாகப் பிரிந்து பல வகையான பண்பாட்டு வளர்ச்சியைப் பெற்றிருக்கும் இந்நாட்டில், விந்தியத்திற்கு வடக்கே பண்டைக்காலத்தில் சிந்து முதல் கங்கைவரை சிறப்புற்று விளங்கிய மொழி சமஸ்கிருதமாகும்.

'உயர்தனிச் செம்மொழிகள்' (Classical Languages) என்று போற்றப்பெறும் ஒரு சில மொழிகளுள் சமஸ்கிரதமும் ஒன்றாகும். 'சமஸ்கிருதம்' என்பதற்குச் "செம்மையாகச் செய்யப்பட்டது" என்று அறிஞர்கள் பொருளுரைப்பர். தமிழ்மக்கள், அதை 'வடமொழி' என்ற பெயரால் அழைத்து வருகின்றனர். பண்டைய இந்திய மொழிகளில் தமிழோடு நெருங்கிய தொடர்புடையதாகவும், இலக்கிய வளமும், கலைச்சிறப்பும், சிந்தனைச் செறிவும் உடைய செம்மொழியாகவும் வடமொழி விளங்குகிறது. அதில் அறத்தைப் பற்றிய நூல்கள் பல உள்ளன. உலகிலேயே அறத்தைப் பற்றிய நூல்கள் தமிழிலும்

வடமொழியிலும் மிகுதியாக உள்ளன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், அறக்கொள்கையை அவனிக்கு எடுத்துரைத்துப் பொன்றாப் புகழ்பெற்ற நாடு நம் இந்தியா. இதை டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றார்:

> இறைவன் உலகத்திலுள்ள பல்வேறு நாட்டமக்களை ஒருவர் பின் ஒருவராக உலகிற்கு அனுப்பி வைத்தார். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும், அவர் ஓர் அழகிய சொல்லைத் 'தாரக மந்திரமாக' ஓதி அனுப்பினார். அவர்கள் ஒவ்வொருவரும் உலகிற்கு வழங்கும் நற்செய்தியாக அதை எடுத்தியம்ப வேண்டும் என்று இறைவன் அவர்களுக்கு அறிவித்தார். அவர் எகிப்து நாட்டிற்குச் 'சமயம்' என்ற சொல்லை வழங்கினார்; ஈரானுக்குத் 'தூய்மை' என்ற சொல்லைக் கொடுத்தார்; சால்டியாவிற்கு 'அறிவியல்' என்ற சொல்லை அளித்தார்; கிரேக்க நாட்டிற்கு 'அழகு' என்ற சொல்லைத் தந்தார்; ரோமாபுரிக்குச் 'சட்டம்' என்ற சொல்லைக் கொடுத்தார். தம்முடைய குழந்தைகளுள் மூத்த குழந்தையாகிய இந்தியாவிற்குத் தாம் முன்னர் பிற நாடுகளுக்கு வழங்கிய சொற்கள் அனைத்திற்கும் உரிய பொருளையெல்லாம் ஒன்றாக இணைத்துத் 'தருமம்' என்ற சொல்லை இறைவன் அளித்தார். 75

முதிர்ந்த அறிவும் கனிந்த அனுபவமும் பெற்று, அறிவுச் சுடராக விளங்கிய அன்னிபெசண்ட் அம்மையார் உலக வரலாற்றை ஒரு சில சொற்களின் மூலம் நம் மனக்கண் முன்னால் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டிவிட்டார். நாகரிகத்தின் கொடுமுடியில் சிறப்புற்று விளங்கிய நாடுகள் அனைத்தும், மனித இனத்திற்கு வழங்கிய நற்செய்திகளை அம்மையார் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

பிறநாடுகள் வழங்கிய நற்செய்திகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு சொல்லால் கூறுவதைப் போன்று 'தருமம்'

என்ற சொல்லைப் பாரதநாடு உலகிற்கு வழங்கி இருக்கிறது. அதை உலகிற்கு உணர்த்த முன்வந்த அம்மையார், 'தருமம்' என்ற சொல்லிற்குரிய பல்வேறு பொருள்களையும் முதலில் கூறிய நற்செய்திகளாகிய சிறப்புச் சொற்களின் மூலம் விளக்கியுள்ளார். அம்மையாரின் கருத்து உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. 'தருமத்திற்கு' வழங்கப்பெறும் விளக்கத்தைக் கொண்டு இதை நாம் நன்குணரலாம்.

தருமம் என்றால் என்ன? நாம் முன்பு அறத்தைப் பற்றி விளக்க முயன்றபொழுது உண்டான இடர்ப்பாடுகளே இச்சொல்லின் பொருளை வரையறுத்துக் கூறுவதிலும் உண்டாகின்றன. எனினும், அதன் பொருளைச் சான்றோர்கள் தந்துள்ள விளக்கங்களிலிருந்து நாம் ஓரளவிற்கு எளிதில் உணரலாம்.

> தருமம் என்று வழங்கப்பெறும் சொல் மிகவும் சிக்கல் பொருந்திக் காணப்படும் சொல்லே. ஒருமனிதன் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும் அல்லது தனியே நின்று ஒரு தனித்த பிறவியாக இருக்கச் செய்வதற்கும், அத்தகைய மனிதனுடைய குணத்தை உருவாக்கி வைக்கும் எல்லா இலட்சியங்களுக்கும், நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், நிறுவனங்களுக்கும் அப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. நேர்மை பொருந்திய வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டம்தான் அது. அதை வாழ்க்கையில் கடைப்பிடித்த விடத்து, இந்த உலகத்திலேயே இன்பம், பேரின்பம் அதாவது மோஷம் ஆகிய இரண்டு நன்மைகளையும் பெறக்கூடும். அது ஒழுக்க இயல், மதம் ஆகிய இரண்டும் பிணைந்து காணப்படுவதாகும். தருமம் என்ற கோட்பாட்டின் காரணமாக, ஒரு இந்துவின் வாழ்க்கை மிகவும் தெளிவாக விளக்கப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் நிற்கிறது. 76

இதனால், 'அறம்' என்ற சொல்லிற்கு நாம் வழங்கும் பொருளிலேயே 'தருமம்' என்ற சொல் வடமொழிவாணர்களால்

போற்றப்பட்டு வருவது புலனாகின்றது. ஆனால், காலந்தோறும் இதனுடைய பொருள், இடம் பொருள் ஏவல்களால் சுருங்கியும், விரிந்தும் வழங்கப்பெற்றுள்ளதை வடமொழியிலுள்ள தரும சாத்திரங்களும், புராணங்களும் எடுத்துரைக்கின்றன. 'ஒழுக்கம், வழக்கு, தண்டம்' என்று தருமம் மூவகையாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றைப் பற்றித் தனிப்பட்ட சாத்திரங்களும் நீதி நூல்களும் வடமொழியில் எழுதப்பெற்றுள்ளன.

இவ்வாறு எழுதப்பெற்ற தரும சாத்திரங்களையும் நீதி நூல்களையும் இலக்கியங்களாக நாம் கருதுவதற்கில்லை. அவை சாத்திரங்களாக அல்லது தத்துவ ஆராய்ச்சி நூல்களாக உள்ளன.

வடமொழியில் 'நீதி' என்னும் சொல்லிற்குரிய பொருளையும், அச்சொல் சிறப்பாக இராச நீதியையே குறிப்பிடுகிறது என்பதையும் 'நீதியும் அறமும்' என்ற பகுதியில் நாம் விரிவாகக் கண்டோம். 'நீதி' என்ற சொல் 'நடத்தை அல்லது ஒழுக்கம்' என்ற பொருளைக் கி.பி. ஏழாம் நூற்றாண்டு அளவிலேயே வடமொழியில் குறிப்பிடத் தொடங்கியது என்பதை நாம் இங்கு நினைவுகூர்தல் வேண்டும். அதற்குப் பின்னர்தான் 'நீதிநூல்கள்' வடமொழியில் தோன்றியுள்ளன. இதனால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பு வடமொழியில் நீதி நூல்கள் இயற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஆனால், வேதகாலம் முதற்கொண்டு அறநெறிக்கருத்துக்கள் பல வடிவங்களிலே எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் பெருவழக்காக இருந்துவருவது 'தரும சாத்திரங்கள்' எனப்படும் சட்டவியல் நூல்களாகும்.

அறநெறிக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துரைக்கும் சில பாடல்கள் இருக்கு வேதத்தில் உள்ளன. ஐதரேயப் பிராமணத்தில் அதன் எண்ணிக்கை மிகுதிப்பட்டுத் தோன்றுகிறது. உபநிடதங்களிலும், மகாபாரதத்திலும் அறநெறிக் கருத்துக்களை விளக்கும் பழமொழிகளும் மூதுரைகளும் மிகுதியாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. கீதை முழுவதிலும் அறநெறிக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆயினும், அவற்றைத் 'தத்துவ

நூல்கள்' என்று கூறலாமே யொழிய, நீதி இலக்கியங்கள் என்று நாம் போற்றுவதற்கில்லை.

## மூதுரைகள்

வடமொழியில் பழமொழிகளும் மூதுரைகளும் சிறப்பிடம் பெற்றுள்ளன. தொன்மை வடிவில் போற்றிக் காக்கப்பட்ட பழமொழிகளைக் கவிஞர்கள் முழுநிறைவுடைய கலைப்பொருள்களாக மாற்றி, அவற்றை மூதுரைகளாக உலகிற்கு வழங்கியுள்ளனர். நாட்டில் வழங்கும் பழமொழிகளைத் திரட்டி அவற்றிற்குப் புதுமெருகு கொடுத்தவர்களே, அவற்றின் ஆசிரியர்கள் என்று கருதப் பெறும் நிலையும் உண்டாயிற்று. இத்தகைய 'திரட்டுக்கள்' பதினேழு வடமொழியில் இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவற்றுள் இங்குக் குறிப்பிடத்தக்கன இராஜ நீதி சமுச்சயம், சாணக்கிய நீதி, சாணக்கிய இராஜ நீதி, விருத்த சாணக்கியம், லகு சாணக்கியம் என்பனவாகும். நாட்டிலே வழங்கிவந்த மூதுரைகளைத் தொகுத்தவர்கள் சாணக்கியன் பெயரைச் சேர்த்து அந் நூல்களுக்குப் பெயரிட்டனர் போலும். 77

இந்நூல்களில் உள்ள மூதுரைகள் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க அனுபவ உண்மைகளைச் சிறிது சொல்நயமும் பொருள்நயமும் பொருந்திய நடையில் எடுத்துரைக்கின்றன.

> வாழ்க்கையைப் பறிப்பன ஆறுபொருள்கள். அவை உலர்ந்து போன இறைச்சி, வயதில் மூத்த பெண், உதயசூரியன், திரிந்துபோன பால், தாமதம், காலையில் உறங்குதல் என்பன.
>
> மானம் கெட்டு வாழ்வதினும் இறப்பதுமேல். இறப்பது சில மணித்துளிகளே துன்பமாக இருக்கும். மானக்கேடு என்றும் நிலைத்து நிற்கும். 78

இத்தகைய மூதுரைகள் எல்லாம் 'சுலோக' யாப்பில் பெரிதும் இயற்றப்பட்டுள்ளன. வரருசி என்பவரும் இத்தகைய மூதுரைகளை இயற்றியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

## நீதி நூல்கள்

பலவகையான யாப்பு முறையில் அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைக்கும் நூல்களை 'நீதி நூல்கள்' என்று வடமொழியாளர்கள் வழங்குகின்றனர். நீதி என்ற சொல் மிக விரிந்த பொருளில் செயல்முறை அறிவுக் கூர்மையைக் குறிப்பதோடு, மனித முயற்சியின் ஆற்றலின்மையை உணருமாறு செய்யும் வைராக்கிய மனப்பான்மையையும் குறிக்கிறது. இதனால், வாழ்க்கைத் தொல்லைகளையும் துன்பங்களையும் சிந்திக்கத் தூண்டும் பாடல்களும் நீதிப் பாடல்களாகவே கருதப்பெறுகின்றன. இவ்வகையில் 'சிந்தனைப் பாடல்களும்' வடமொழியில் நீதிப்பாடல்களாகக் கருதப்பெறுவதுண்டு. இப்பாடல்களில் நீதி புகட்டுவது குறிப்பாக அமையாமல் வெளிப்படையாகவே இடம் பெறுகிறது. அற உணர்வு இலக்கிய வெளிப்பாடாக நீதிப் பாடல்களில் காட்சி தருகின்றன. கருத்துக்களைக் கவிதையில் முழுமையாக எடுத்தியம்புவது எளிதாக இருப்பதால் மனித இனம் அதை விரும்பிப் போற்றுகிறது எனலாம்.

சமஸ்கிருத நீதிப்பாடல்கள் அதனுடைய அறவியல் நோக்கில் பெரிதும் பக்திப் பாடல்களைச் சார்ந்தனவாகத் தோன்றுகின்றன. 79 நீதி நூல்களை வடமொழியில் நூறு பாடல்களைக் கொண்ட சதகங்களாக இயற்றுவது வழக்கமாக இருந்திருக்கிறது.

### பர்த்ருஹரி

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரென்று நம்பப்படும் பர்த்ருஹரி என்ற புலவர் நீதி சதகம், வைராக்கிய சதகம், சிருங்கார சதகம் என்ற மூன்று நீதி நூல்களை இயற்றியுள்ளார். ஒவ்வொன்றிலும் நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவருடைய வாழ்க்கையைப்பற்றி நாம் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை.

பர்த்ருஹரி என்ற பெயர் 'பத்திரகிரி' என்று தமிழில் திரிந்து வழங்குவதுண்டு. பர்த்ருஹரியின் படைப்புகளில் சமஸ்கிருத

மொழி நேர்த்தியும் சீர்த்தியும் பெற்று விளங்குகிறது. அவருடைய பாட்டு ஒவ்வொன்றும் தனித்துநின்று ஒரேவொரு கருத்தைத் தெளிவுறுத்தும் இயல்புடையது. காதல், துறவு, அரசியல் போன்ற எப்பொருள்பற்றிப் பாடப்பட்டாலும் அவை நேர்த்தி மிகு முழுநிறைவடிவம், பெற்றுத் திகழ்கின்றன. வடமொழியில் கருத்துக்களை இவ்வளவு செறிவாக வேறுயாரும் எடுத்துரைக்கவில்லை என்று அறிஞர்கள் கூறகின்றனர்.

## நீதி சதகம்

நீதிகளை விளக்கும் நூறு சுலோகங்களைக்கொண்ட நூலை 'நீதி சதகம்' என்று கூறுவர். இந்நூலில் பத்து அதிகாரங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துப் பாடல்கள் உள்ளன.

மூர்க்கருடைய இயல்பினைப் பர்த்ருஹரி,

அனைத்துமறி வான்போ லகங்கரிப்பா னென்று
மனக்குவந்த செய்வான் மகரந்–தனைப்போலத்
தீயகொள்கை யொன்றுவிடான் செம்மையுரைப்
பார்த்தெறுவான் ஆயதிது மூர்க்கநெறி யாம் 80

என்று எடுத்தியம்புகின்றார்.

இப்பாடல் புல்லறிவாளர் இயல்புகளை எளிய நடையில் சுட்டிக்காட்டுகிறது. மூர்க்கனது உள்ளத்தை மாற்றுவது மிகவும் கடினம். இதை இலக்கிய நயம் தோன்ற ஆசிரியர்,

மென்மையான தாமரை நூலினால் மதங்கொண்ட யானையைக் கட்டலாம்; மிகமெல்லிய வாகைப்பூவின் நுனியால் கடிய வைரக்கல்லையும் உடைக்கலாம்; தேன் துளியால் உவர்க் கடலைத் தீஞ்சுவை பெறச் செய்யலாம்; அமுத வெள்ளத்தின் நடுவில் அள்ளிய இனிமையும் நயமும் நிறைந்த சொற்களால் மூர்க்கனது உள்ளத்தின் முரண் கெடுத்தல் முடியாத செயல். (நீதி. 13:7)

என்று கூறுகிறார்.

புலமையின் சிறப்பைப் புலவராகிய பர்த்ருஹரி போற்ற மறந்துவிடவில்லை:

***தாவாக் கலைத்திருவால் தாம்பிறரோ(டு) இன்புறுவர்***
***நாவா லுலகை நடாத்துவர்—பூவாழ்வி***
***னேயும் அரசரும்ஒப் பெய்தாரே ஈதறிஞர்***
***ஆயும் புலவர்நெறி யாம்.*** (நீதி. 2:11)

நாவால் உலகை நடத்தும் நாவலராகிய புலவர் பெருமக்களின் புலமைச் சிறப்பினைச் சுட்டிக்காட்டிய ஆசிரியர், பாலவர்கள் இலக்கிய உலகக் காவலராவர் என்றும் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு ஒப்பாக நாடாளும் வேந்தனையும் கூற இயலாது என்கிறார்.

அடுத்து அவர் 'பொருளின் மாட்சியை'ப் பத்துப் பாடல்களால் அறிவுறுத்துகிறார். அவற்றுள் பொருளின் பயனைப்பற்றிக் கூறும் செய்யுளின் பொருள் சிறப்பு மிக்கதாகும்.

> பொருளுக்கு அதனது நிகழ்ச்சியால் தானம், போகம், அழிவு என்ற மூன்று நிலையுண்டு. தானமானது தக்கார்க்கு ஈதல்; போகமாவது உண்டுடுத்துப்பூசி முடித்துத் துய்த்தல்; அழிவென்பது அறத்திற்கு உதவாமலும், அனுபவத்திற்கு உதவாமலும் போதல். செல்வத்திற்கு நான்குபேர் பங்காளிகள் உள்ளனர். அவர்கள் அறக்கடவுள், தீக்கடவுள், கள்வன், அரசன் என்பவராவர். இந்நால்வருள் முதன்மை பெற்ற அறத்தை இகழின் ஏனைய மூவரும் சீற்றமுறுவர். அதன் விளைவாக அப்பொருள் அவனிடத்து நிற்காது போய்விடும். (நீதி. 2:16)

இப்பகுதி சிந்தனையைத் தூண்டுவதாகும்.

சான்றோர்கள் யார் ? என்பதை பர்த்ருஹரி இனிமையும் கற்பனை வளமுமிக்க நடையில் நமக்கு அறிவிக்கிறார்:

> நல்லொழுக்கம் கொண்ட அறிவுடையார்க்கு இடருற்ற பொழுது உள்ள உரமும், செல்வம்

வந்தகாலை பொறுமையும், வேந்தரவைக்கண் பேசும் திறமும், போரிற் புறங்கொடாமையும், புகழில் நாட்டமும், கல்வி கேள்விகளில் ஊற்றமும் இயல்பாக அமைந்த குணங்களாகும். அவர்களுடைய கைகளுக்கு ஈகையும் தலைக்குக் கருநாதரின் திருவடிகளை வணங்குதலும், முகத்துக்கு வாய்மையும், மனத்துக்குத் தூய்மையும், தோள்களுக்கு வீரமும், செவிகளுக்குக் கேள்வியும் அணிகளாக அமைந்து அழகு செய்கின்றமையால் அவருக்கு வேறோர் அணி வேண்டுவது இல்லை. (நீதி. 3:4)

மனிதவாழ்க்கை துன்பங்கள் நிறைந்த ஒன்று. அவற்றைக்கண்டு மனிதன் மனம் தளர்ந்துவிடாது உள்ள உரத்துடனும், முயற்சியுடனும் கடமையைச் செய்வானாகில் அவன் இறுதியில் வாழ்க்கையில் வெற்றிபெறுவான் என்பதைக் கவி 'ஊக்க நெறி' என்ற அதிகாரத்தில் அறிவிக்கிறார்:

மனிதனுக்கு உள்ளவுரம் மட்டும் இருக்குமானால் போதும். அவனுக்கு கனலும் புனலாகும்; பெருங்கடலும் சிறு குட்டமாகும்; மேருவும் பரலாகும்; சிங்கமும் சிறு மானாகும்; நல்ல பாம்பும் மென்மைமிகு மாலையாகும்; நஞ்சும் நல்லமுதமாகும்; துன்பமும் இன்பமாகும். (நீதி.4:8)

என்று கூறும் கருத்து இலக்கிய நயமும் கருத்தாழமும் உடையதாகும்.

மனவுறுதியைப் போன்ற சிறந்த அணி மனிதனுக்கு வேறொன்றும் கிடையாது என்பதை ஆசிரியர்,

யாவருக்கும் இனியராதல் செல்வர்க்கு அணியாம்; நாவடமுழுகம் வீரத்திற்கு அணியாம்; கருத்துக்களில் விருப்பின்மை அழுமுழுமுற்கு அணியாம்; வணக்கம் நூல் கேள்விக்கு அணியாம்; பொறையுடைமை

திறமைமிக்கோனுக்கு அணியாம்; மனவுறுதியோ
இவ்வணிகள் எல்லாவற்றையும் விட சிறந்ததோர்
அணியாகும். (நீதி. 4:9)

என்று அறிவுறுத்துகிறார்

இறுதியாக உள்ள இரண்டு இயல்களுள் ஒன்றில் ஊழின் ஆற்றலையும், மற்றொன்றில் 'கன்மத்தி'னால் (நல்வினையினால்) உண்டாகும் பயனையும் பார்த்ருஹரி சிறந்த உவகைளின் வாயிலாகக் கற்பவர் கருத்தில் பதியும் வண்ணம் தெரிவிக்கிறார்.

*ஆடல் பருந்து மடல்சிலைகொள் வேடுமிணை*
*மாடப் புறவைவவ்வ வந்திறந்த வீடுமுயல்*
*யோகியர்க ளானாலும் ஊழின் படியனைத்து*
*மாகுமிது தெய்வநெறி யாம்.* (நீதி. 9:7)

இப்பாடல்,

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினுந் தான்முந் துறும்.* (குறள் 380)

என்ற திருக்குறளை நினைவுபடுத்துகிறது.

இந்திய சமயங்கள் அனைத்தும் மனிதப் பிறவியை மாண்புறச் செய்வதும், மாண்பற்று மங்கச்செய்வதும் ஊழ்வினையே என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவிக்கின்றன. அவ்வூழ்வினையும் அவரவர் செய்யும் நல்வினைக்கும் தீவினைக்குமேற்பப் பயனளித்தலான் அந்நெறியோடு இயைபுபற்றிய கன்மநெறியை அடுத்து விளக்குகிறார் ஆசிரியர்,

*விதியும் வினையடியே வேண்டுபயன் ஈயும்*
*நிதியும் புகழு நிலத்திற்—பதியுநல*
*போகமு மெல்லாந்தான் புரிகின்ற நல்வினையா*
*னாகுமிகு கன்மநெறி யாம்.* (நீதி. 10.8)

ஒருவன் செய்த நல்வினையின் பயன் எவ்வாறு அவனைப் பின்தொடர்ந்து சென்று பயனளிக்கிறது என்பதனை,

> நீரினுள் குளிப்பினும், மேருவைக் கடப்பினும், போரினில் வாகை சூடினும், கைத்தொழில் வாணிகம் கற்பினும் விரிவுற்ற விசும்பிடைப் பறவைபோல் பறப்பினும் ஒருவனுடையப் பழைய கன்மத்தால் வரக்கடவன வாராதொழியாமுழுமுழுமுழு வாராதன வந்தெய்தா. (நீதி. 10:10)

என்னும் ஒரு பாடலின் கருத்த தெளிவுறுத்தும்.

## வைராக்கிய சதகம்

'பல்லாற்றானும் நில்லா உலகத்'தின் இயல்பினை உணர்ந்த பர்த்ருஹரி, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய நிலையாமைகளால் மனிதனுக்கு உண்டாகும் துன்பத்தை இந்நூலில் சுட்டிக் காட்டுகிறார். நிலையில்லாத பொருள்களை நிலையானவை என்று நினைப்பதனாலேயே மனிதன் துன்பப்பட நேருகிறது. எனவே, அவற்றின் நிலையாமையை உணர்ந்து வாழ்க்கையில் பற்றற்று, துறவு பூண்டு வீடுபேறு அடைய முயலும் ரைாக்கியத்தை அவன் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் நூறு பாடல்களில் எடுத்துரைக்கின்றார்.

பண்டைத்தமிழ் இலக்கிய மரபில் காஞ்சித்திணையைச் சேர்ந்த பாடல்களைப் போன்று பர்த்ருஹரியின் வைராக்கிய சதகப்பாடல்கள் காணப்படுகின்றன. சித்தர் ஞானக் கோவையில் உள்ள 'பத்திரகிரியாரின் மெய்ஞ்ஞானப் புலம்பல்' இவற்றுடன் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

'இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை' பற்றிய வைராக்கிய சதகப்பாடல்கள் கற்பனை வளமும், கவிதைச் சிறப்பும் மிக்குடையனவாகும்.

> மனிதர்தம் பிராயம் நூறு; அதில் பாதியும் உறங்கிப் போகும். எஞ்சிய காலத்தின் காற்பகுதி இளமையும் முதுமையுமாய்க் கழிந்துபோகும். மிஞ்சிய நாட்களோடு பிணி, பசி, மூப்புத் துன்பம் உடனுறை தோழராகும்.

> வாழ்க்கையோ கடல் அலையின் நுரை போன்றதாகும். இத்தகைய வாழ்க்கை தன்னில் மனிதன் எவ்வாறு இன்புற்று வாழமுடியும்? (வை. ச. 49)

என்ற 49ஆம் பாடலின் கருத்து வாழ்க்கை துன்பமயமானது என்பதை வலியுறுத்துவதோடு, யாக்கை நிலையாமையையும் அறிவுறுத்துகிறது. இனி, 'இளமை நிலையாமையை' அவர்,

> ஒரு கணப்பொழுதே மனிதன் குழந்தையாகத் தோன்றுகிறான். ஒரு கணப்பொழுதே அவன் காமுறு இளைஞனாகக் காட்சியளிக்கிறான். ஒரு கணப்பொழுதே அவன் பொளின்றி வாடுகிறான். ஒரு கணப்பொழுதே அவன் செல்வத்தில் புரளுகிறான். பின்னர் 'புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறி மயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி' நடிகனைப் போன்று இறப்பென்னும் திரைக்குப் பின்னால் மறைந்து போகிறான். (வை. ச. 50)

என்று குறிப்பிடுகிறார். இதில் 'நாடகமே உலகம்; அதில் மனிதரெல்லாம் நடிகராவர்' என்னும் கருத்து நயமுற நவிலப் பெற்றுள்ளதைக் காணலாம்.

ஆற்றல் மிகு அரக்கனாகிய காலனென்னும் கொடியோன்,

> அழகிய நகரங்களையும், மாண்புமிகு மன்னரையும், அவரைச் சூழ்ந்திருந்த குறுநிலத் தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும், மதிபோன்ற முகமுடைய மங்கையரையும், செருக்குமிகு இளவரசர்களையும், மோகனப் பண்ணிசைக்கும் பாணர்களையும், அவர்களுடைய பாடல்களையும் இரையாக விழுங்கி விட்டான். இன்று அவையெல்லாம் இனிக்கம் நினைவுகளாகி விட்டன. இவ்வரிய பணியைத் தொடர்ந்து செய்துவரும் காலதேவனை நாம் போற்றி வணங்குவோம் (வை. ச. 41)

என்று நம்மையெல்லாம் கவிஞர் அழைக்கின்றார். இதனால் உலகில் சிறப்புற்று விளங்கும் பொருள்கள் எல்லாம்

காலவெள்ளத்தால் அழிந்து போகும் என்ற கருத்தை ஆசிரியர் நம்முள்ளத்தில் ஆழப்பதிய வைக்கின்றார்.

மனிதன் நாள்தோறும் செத்துக் கொண்டிருக்கிறான்; அவனுடைய வாழ்நாள் குறைந்துகொண்டு வருகிறது. இதனை அவன் உணர்வதில்லை. உணர்ந்தால் உலகில் இத்தனை கேடுகள் இருக்குமா ? என்ற கேள்வியைக் கவிஞர் கேட்கிறார். பின்னர் அவரே அதற்கு விடையும் அளிக்கின்றார்:

> கதிரவன் நாளும் தோன்றி மறைவதோடு மனிதனுடைய வாழ்நாளும் தேய்ந்துகொண்டு போகின்றன. நாம் ஏன் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறோம் ? கடுமையான உழைப்பின் பாரத்தால் நாம் அதை உணருவதில்லை. பிறப்பு, மூப்பு, துரதிருஷ்டம், இறப்பு ஆகியவற்றை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எனினும், அவற்றைக்கண்டு நாம் நடுங்குவதில்லை. கலையற்ற போக்கு, குழப்பம் ஆகிய இரண்டிலும் உலகம் மூழ்கிப் போயுள்ளமையால் அது பைத்தியம் பிடித்து அலைகிறது. (வை. ச. 43)

இத்தகைய அரிய கருத்துக்களை உணர்த்தும் வைராக்கிய சதகம் சித்தர் பாடல்களைப் போன்று வாழ்க்கை மறுப்புக் கோட்பாட்டை அறிவிப்பதாகக் காணப்படுகின்றது.

## சிருங்கார சதகம்

வைராக்கிய சதகத்திற்கு முற்றிலும் நேர்மாறான முறையில் 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்ற கொள்கையுடையவராகவும் 'இன்பத்தைத் துய்ப்பதற்கே மனிதன் பிறந்திருக்கிறான்' என்ற கருத்துடையவராகவும் 'சிருங்கார சதகத்தில்' பர்த்ருஹரி நமக்குக் காட்சித் தருகிறார்.

> காதலியைக் காணாதபொழுது அவளைக் கண்டால் போதுமென்று நாம் ஏங்குகிறோம்; கண்டாலோ

அவளைக் கட்டியணைக்க துடிக்கிறோம்; கட்டியணைத்தவுடனே என்றும் ஈருடலும் ஒருயிருமாகக்கூடி இன்புற்றிருக்க விரும்புகிறோம்.
(சிருங். ச. 22)

ஆசிரியர் இங்கே மனித மனத்தின் உள்ளார்ந்த இயல்புகளை ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்கின்றார்.

பெண்கள் ஆண்களின் உள்ளத்தைக் கவருவதற்குப் பயன்படுத்தும் கருவிகளை ஒரு பாட்டில் கவிஞர் சுட்டிக் காட்டுகின்றார்:

*கால்சிலம்பால் கைவளையால் காஞ்சியால் கல்லென்று*
*மேல்கிளம்பும் ஓசை வெருட்டியமான்– போல்கண்*
*கடைப்பார்வை யால்மாதர் கட்டிப் பிடிப்பர்*
*தடைப்படா(து) ஆடவரைத் தாம்* (சிருங். ச. 8 )

'மகளிரை மெல்லியலார் (அபலை) என்று அழைப்பது பொருந்துமா ?' என்ற ஐயம் பர்த்ருஹரிக்கு உண்டாகி விட்டது.

*மெல்லியலார் பெண்களெல்லாம்; மெய்வலியில்*
*லாரென்று*
*சொல்லுவார் பாவாணர்; சும்மாதாம்–வல்லசுரர்*
*தம்மைவென்ற இந்திரனைத் தாம்வென்றார்*
*மாதரெனில்*
*அம்மஅவர் போல்வலியார் யார் ?* (சிருங். ச. 10)

என்று தம்முடைய அனுபவத்தை ஆசிரியர் தெரிவிக்கிறார்.

நாணமென்னும் நாணுடைய புருவமென்னும் வில்லைக் கொண்டு, நோக்கென்னும் நல்லம்பால ஆடவர்தம் இதயத்தின் உள்ளே பாய்ந்து சென்று, காதலென்னும் வேதனையைக் கிளர்ந்தெழச் செய்யும் காரிகையர் இறைவனுடைய ஏற்றமிகு படைப்பாவார்.
(சிருங். ச. 2)

என்பது பாடலின்பொருள். இது இறைவன் படைப்பில் வற்றாத இன்ப ஊற்றாய் விளங்கும் மகளிர் செய்யும் கொடுஞ் செயல்

எத்தகையது என்பதை அறிவிக்கிறது. மகளிர் மனித வாழ்க்கைக்கு இன்பம் பயப்பதைப் போன்றே, துன்பம் தருபவர்களாகவும் உள்ளனர் என்றவொரு கருத்தையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

***குடும்பக் கடலிற் குளிக்குமாண் மக்கள்***
***நெடும்பெரிய மீன்கள் நிசமாய்த் – துடியிடையார்***
***ஆந்தூண்டி லின்கண் அழகா மிரையைநச்சிச்***
***சாந்திறத்தா லாமெனநீ சாற்று*** (சிருங். ச. 52)

என்று பெண்களின் கூட்டுறவைப் புகழ்ந்து போற்றும் கவிஞர்,

> அலையும் மனமே! மகளிரின் அழகிய உடலாகிய காட்டில் அலைந்து திரியாதே! கொங்கைகளெனும் நெடிய குன்றுகளின் மீது ஏறிக் களைப்புறாதே! அங்கெல்லாம் மன்மதன் என்ற வழிப்பறிக் கொள்ளைக்காரன் பதுங்கிக் கிடக்கிறான் என்பதை நீ மறந்து விடாதே! (சிருங். ச. 53)

என்று எச்சரிக்கையும் செய்கிறார்.

சிருங்கார சதகத்தின் முதல் அறுபது பாடல்களில் பர்த்ருஹரி மகளிரின் மாட்சியையும், அவர்களுடைய உடலழகையும், அவர்கள் அளிக்கும் இன்பத்தின் ஏற்றத்தையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆனால், அறுபத்தோராவது பாடல்முதல் எண்பதாவது பாடல்வரை "பெண்களை நம்பாதே மனமே! பெண்களை நம்பாதே!" என்று அவர்களை இழித்துப் பேசுவதோடு பேரின்ப வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பதால், அவர்களை வெறுத்து ஒதுக்கவேண்டும் என்றும் கவிஞர் கூறுகிறார்:

> காமவெறியால் உண்டான காரிருளால் என்னுள்ளத்தில் அறியாமை குடிகொண்டிருந்த பொழுது, அறிவை மயக்கும் அழகுமிக்க மங்கையரே உலகம் முழுவதும் நிறைந்துள்ளதாகத் தோன்றியது. பின்னர், மெய்ஞ்ஞான மெனும் மை தீட்டி நான் பார்க்கின்ற பொழுது என் கண்கள் அவற்றிற்குரிய

உண்மைப் பார்வையைப் பெற்றுவிட்டன. அதனால், அவற்றிற்கு உலகெங்கும் 'பிரமமே' நிறைந்து இருப்பதாகத் தோன்றுகிறது. (சிருங். ச. 69)

என்று பேசும் மெய்யுணர்வு பெற்ற மெய்யறிவாளராகப் பர்த்ருஹரி மாறிவிடுகிறார்.

எண்பத்தோராவது பாடல் முதல் நூறாவது பாடல் வரை அறுவகைப் பருவங்களை அவர் அழகுற வருணித்துள்ளார். இப்பகுதியில் கற்பனை வளமும், இலக்கியச் சுவை நலமும் செறிந்த பாடல்கள் சிலவற்றை நாம் காண முடிகிறது. இளவேனில் பருவம் வந்துவிட்டது என்பதை ஆசிரியர் அறிவிக்குந்திறன் படித்து இன்புறத்தக்கது.

*மாவின் இளந்தளிரால் மந்தஇள மாருதத்தால்*
*கூவு குயிலின் குரலாலே மேவுமிள*
*வேனில் விரகரை வீட்டுமகா லத்திலமு*
*தேனும் விடமாம் இழிந்து.* (சிருங். ச. 82)

இனி, இதற்கு நேர்மாறான காட்சிகளைக் கார்காலச் சிறப்பினைப் புனைந்துரைக்கும் பகுதியில் ஆசிரியர் சித்தரித்துள்ளார். கார்காலம் பெண்களைப் போன்று இன்பமளிக்கிறது என்பதைக் கூறவந்த ஆசிரியர், மகளிரைப் போன்று கார்காலம் மனங்கனிந்த மகிழ்ச்சியைத் தராது என்று தெரிவிக்கும் திறன் நம் சிந்தனைக்குச் சிறந்த விருந்தாகும்.

***மல்லிகையின் பூமணக்கும் மன்மதற்கு வாழ்வுதரும்***
***சொல்லும் பயோதரங்கள் தோயுமிக நல்ல***
***தெனினுங்கார் காலம் இலங்கிழையார் போல்***
***கனிவாய்த் தராது களிப்பு.*** (சிருங். ச. 90)

## பர்த்ருஹரியின் கவித்திறன்

நீதி நூல் ஆசிரியராகிய பர்த்ருஹரியின் நீதி சதகமும் வைராக்கிய சதகமும், சிருங்கார சதகமும் வடமொழி நீதி இலக்கியத் துறையில் தலைசிறந்த படைப்புகளாகப் போற்றப் பெறுகின்றன. சிறப்பாக 'நீதி சதகம்' கவித் திறனும், கற்பனை

வளமும் உடைய இலக்கியமாகத் திகழ்கிறது. அதில் கருத்துச் செறிவும் கலைநயமும் சரிசமமான நிலையில் கலந்து காணப்பெறுவதால், அது சுவையற்ற நீதி நூலாகத் தோன்றாமல் கற்பனைச் சிறப்பும், கருத்தாழமும், நடையழகும் வாய்ந்த இலக்கியமாக இலங்குகிறது. அதில் அழகிய சொல்படிமங்களும், ஆழ்ந்த பொருளை உணர்த்தும் அணிகளும் கற்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் கவினுற்று விளங்குகின்றன. இவ்வாசிரியருடைய நடையில் எளிமையும், இனிமையும், தெளிவும், ஒலிநயமும், இசைச் சிறப்பும் இணைந்துள்ளன.

வைராக்கிய சதகத்தில் உலக வாழ்க்கையின் நிலையின்மையும் சிறப்பின்மையும் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. அதன் மூலம் மனிதனை ஆன்மிக விடுதலையைப் பெற முயலுமாறு ஆசிரியர் அறிவுறுத்துகிறார். நீதி சதகத்திலும் வைராக்கிய சதகத்திலும், உணர்ச்சித்துடிப்புமிக்க வாழ்க்கையும், உலகத் துன்பங்களிலிருந்தும் ஆரவாரங்களிலிருந்தும் விலகி நிற்கும் துறவு வாழ்க்கையும் இடம் பெற்றுள்ளன. இவ்விருவகை வாழ்க்கை இயல்புகளையும் பர்த்ருஹரி சிறந்த கவிதைகளின் மூலம் சித்திரித்துக் காட்டுகிறார்.

சிருங்கார சதகத்தின் முற்பகுதியில் சொல் நயமும், பொருள் நயமும், கவிதைச்சுவையும் கற்பனையழகும் நிறைந்த நேர்த்திமிகு கவிதைகளை நாம் காண முடிகிறது. ஆனால், 'சென்று தேய்ந்திறுதல்' என்ற குற்றத்திற்கு இடம் தரும்வகையில் பிற்பகுதிப் பாடல்கள் பையப் பைய சுவையற்றுப் போகின்றன.81 இதனால், வயது முதிர, முதிர ஆசிரியரின் அறிவுநலமும் கவித்திறனும் ஆற்றல் குன்றிப் போய்விட்டதாக அறிஞர்கள் கூறுவர்.

சமஸ்கிருத மொழியில் தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாடிய கவிஞர்களுள், பர்த்ருஹரி நீதி நூல் ஆசிரியராகவும், மெய்ப்பொருள் காணும் வேட்கையுடைய மனிதராகவும் சிறப்புற்று விளங்குகிறார். அவர் கவிதைக் கலையின் மூலம் மக்களுக்கு இன்பம் நல்க முயன்றதைப் போன்றே, மனித வாழ்க்கை மாண்புற்று

இலங்குவதற்குத் தேவையான கருத்துக்களைக் கற்பிக்கும் கலைஞராகவும் காட்சி தருகிறார்.

> உலகின் மயக்கத்திலே சிக்கியமையால் நான் மங்கையர் இன்பத்தை நாடி அவர்களிடத்திற்குத் திரும்பிச் சென்றேன். இப்பொழுது புலனுகர் இன்பத்தின் முழுநிறைவைப் பெற்று விட்டமையால் நான் துறவுக்கோலம் பூணுகின்றேன். 82

என்று தம்மைப் பற்றி அவர் கூறியுள்ள கருத்து, அவருடைய மனநிலையையும், கலையுணர்வையும் தெளிவுறுத்துகின்றன.

## பர்த்ருஹரியும் வள்ளுவரும்

மனித இனம் நலமாக வாழவேண்டும் என்ற மனித நலக் கோட்பாட்டினராக இருவரும் விளங்குகின்றனர். இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளும் இருள் செறிந்து காணப்படுகின்றன. பர்த்ருஹரியும் வள்ளுவரும் சிறந்த சிந்தனையாளர்களாக விளங்குவதைப் போன்றே, கவித்திறன் மிக்க கவிஞர்களாகவும் திகழுகின்றனர். வள்ளுவர் தாம் உலகிற்கு வழங்க முன்வந்த செய்திகளை மூவகையாகப் பாகுபாடு செய்து 'முப்பாலாக' இயற்றியுள்ளார். சற்றேறக் குறைய பார்த்ருஹரியும் வள்ளுவரைப் போன்றே முப்பெரும் சதகங்களின் மூலம், தம்முடைய கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். இதில் இருவரிடத்திலும் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. வள்ளுவர் அறம், பொருள், இனபம் என்ற மூன்றைப் பற்றிப் பாடியுள்ளார். வள்ளுவர் அறத்துப்பாலில் பாயிரத்திற்கு அடுத்து இல்வாழ்க்கையின் ஏற்றத்தை இல்லற இயலிலும் இளமை, யாக்கை, செல்வம், உலகம் ஆகியவற்றின் நிலையாமைகளைச் சுட்டி 'யான், எனது' என்னும் பற்றறுத்து, 'பேரா இயற்கைப் பெருநிலை' யாகிய வீடுபேற்றை அடைவதற்குரிய ஒழுகலாற்றைத் துறவற இயலிலும், அதற்கடுத்து ஊழின் ஆற்றலை ஊழியலிலும் உணர்த்துகின்றார். பொருட்பாலில் தனிமனிதன் சமுதாயத்தில் ஒழுகவேண்டிய ஒழுக்க நெறிகளையும், இராச நீதியையும் அவர் எடுத்துரைக்கின்றார்.

தனி மனிதனுடைய ஒழுகலாற்றை வள்ளுவர் அறத்துப் பாலின் இல்லற வியலில் விளக்கியுள்ளார். அப்பாலின் இறுதியில் ஊழைப் பற்றியும் அவர் பேசுகிறார். அக்கருத்துக்களையெல்லாம் பர்த்ருஹரி, தம்முடைய 'நீதி சதகத்தில்' முறைப்படுத்திக் கூறுகின்றார். மேலும், பொருட்பாலில் வள்ளுவர் வகுத்துரைக்கும் இராச நீதியையும் பர்த்ருஹரி 'நீதி சதகத்' திலேயே இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சுட்டிச் செல்லுகிறார். ஆனால், வள்ளுவர் அறத்துப்பாலின் துறவறவியலில் கூறியுள்ள கருத்துக்களுள் பெரும்பாலானவற்றைப் பர்த்ருஹரி வைராக்கிய சதகத்தில் விளக்கியுள்ளார்.

மேற்போக்காக நோக்குகின்றவர்களுக்குப் பர்த்ருஹரியின் சிருங்கார சதகமும், வள்ளுவரின் காமத்துப் பாலும் ஒற்றுமை உடையனவாகத் தோன்றும். ஆனால், இரண்டு நூல்களையும் ஆழ்ந்து படித்தால், இரண்டிற்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளதை நாம் அறியலாம். வள்ளுவருடைய காமத்துப்பால் ஒருவனும், ஒருத்தியும் கண்டு, காதலித்துக்கூடி இன்புற்று வாழும் சிறந்ததோர் இன்பஅன்பு வாழ்க்கையைப் பண்டைத் தமிழிலக்கண (அகப்பொருள்) மரபிற்கேற்பப் படம்பிடித்துக் காட்டுகிறது. அதில் வரும் தலைவனும் தலைவியும் நல்ல பண்பாடு வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஒழுக்கத்தை உயிரெனப் போற்றுகின்றவர்கள். வள்ளுவரின் தலைவி குடும்ப விளக்காக ஒளிர்கிறாள்.

மேலும், காமத்துப்பாலில் நுட்பமான உள்ளத்துணர்வே சிறப்பிடம் பெறுகிறது. தலைவன் தலைவியைப் பாராட்டும் 'நலம் புனைந்துரைத்தல்', 'காதற் சிறப்புரைத்தல்' என்ற அதிகாரங்களில் தலைவியின் புற அழகைப் புனைந்துரைக்கும் பொழுது நயமிக்க பண்பாடு இழையோடிச் செல்லுகிறது. அங்கும் நுட்பமான உள்ளத்து உணர்ச்சிகளுக்கே சிறப்பிடம் தரப்பெற்றுள்ளதை நாம் பார்க்கிறோம்.

பர்த்ருஹரியின் 'சிருங்கார சதகம்' எண்வகைச் சுவைகளுள் ஒன்றான'உவகைச் சுவையை' அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பெற்றது. 'மனிதன் நுகர்கின்ற இன்பங்களுள்

சிறந்தது மகளிரிடத்தில் பெறும் இன்பம்' என்று தொடங்கும் சிருங்கார சதகம் அழகிய பெண்களின் தோற்றத்தைச் சில பாடல்களில் கவர்ச்சியூட்டும் வகையில் விளக்குகிறது. பின்னர், பொதுமகளிருடைய ஒப்பனை அலங்காரங்களும், கவர்ச்சிக் கருவிகளும் ஆடவரை எவ்வாறு அறிவிழக்கச் செய்கின்றன என்பதைப் பற்றி அது விரிவாக எடுத்துச் சொல்லுகிறது. மேலும், அவர்களிடம் மிகுதியான இன்பத்தைப் பெறுவதற்குரிய வழிவகைகளை இந்நூல் காட்டுகிறது. அறுபத்தோராவது பாடல் முதல் "பெண்கள் ஒரு மாயை; அவர்களிடம் சிக்கினால் மனிதன் கடைத்தேற முடியாது. எனவே, விழித்தெழு! வீடுபேற்றை அடைய முயல்க!" என்று பர்த்ருஹரி அறிவிக்கிறார்.

வள்ளுவர் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாட்டை நாடகப் பாங்கிலே காமத்துப்பாலில் விளக்கியுள்ளார். அவர் 'பெண்ணின் பெருமையை'ப் பாடிய பாவலர். பர்த்ருஹரி பெண்களுக்கு மதிப்புக் கொடுக்கத் தயங்குகிறார். மேலும், நெறிகெட்டு வாழும் ஆடவர்களைத் திருத்தி நெறிப்படுத்துவதற்காக 'சிருங்கார சதகத்தை' அவர் இயற்றினார் என்று நாம் சொல்லலாம். இதற்குப் பொதுமகளிருடைய வாழ்க்கையை இழித்துப் பேசும் பகுதிகள் சிறந்த சான்றுகளாகும்.

இனி, பர்த்ருஹரியும் வள்ளுவரும் அறிவுறுத்திய அறநெறிக் கருத்துக்களில் காணப்பெறும் ஒற்றுமைப் பண்புகள் சிறப்பான சிலவற்றை இங்கு நாம் காணலாம்.

| பர்த்ருஹரி | வள்ளுவர் |
|---|---|
| 1. அறிவில் முதிர்ந்தோரது அவைக்கண்ணே அறிவிலார் மௌனமே கொண்டிருப்பாராயின், அம்மௌனமே அவருக்கு அணிகலனாகும். (நீதி. ச. 7) | கல்லாதவரும் நனிநல்லர் கற்றார் முன் சொல்லா திருக்கப் பெறின் (குறள் 403) |

| பர்த்ருஹரி | வள்ளுவர் |
|---|---|
| 2. தாவாக் கலைத்திருவால் தாம், பிறரோடின் புறுவர் நாவால் உலகை நடாத்துவர். (நீதி. ச. 10) | உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில் (குறள் 394) |
| 3. கல்வி கற்றோர் விலை மதிக்க முடியாத மாணிக்கமாகப் போற்றப்படுவர். (நீதி. ச. 11) | கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை. (குறள் 400) |
| 4. புலவரைப் போற்றாது பகைத்துக் கொண்டால் அல்லல் உண்டாகும். (நீதி. ச. 12) | வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க சொல்லேருழவர் பகை. (குறள் 872) |
| 5. அறனின்பங் கல்வி யழகு குலனாண்மை யறிவுண்டாம் செல்வமுளதேல் (நீதி. ச. 22) | பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள் 247) அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள் (குறள் 754) |
| 6. கல்விகுரு நல்லார் கடவுளிவர் பாலன்பும், புல்வினைஞர் தீமை பொறுத்தியலுஞ் செல்வமுறின் ஏமுறலிலாமை யின்மைக் கின்னலுரு தேயமைதலாமிவைமேலோர் நெறியேயாம். (நீதி. ச. 33) | அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால்பு ஊன்றிய தூண் (குறள் 983) |

| பர்த்ருஹரி | வள்ளுவர் |
|---|---|
| 7. தன்னோடு தோழமை கொண்டவனிடத்து, இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு கொள்பவனே நண்பனாவான். (நீதி. ச. 39) | அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு. (குறள் 786) உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு. (குறள் 786) |
| 8. மேலோர் பொருளை ஈட்டுதல் பிறர் திறத்துப் பயன்படுத்தற் பொருட்டாகும். (நீதி. ச. 41) | தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள் 212) |
| 9. பிறவிப்பயனாகிய புகழைத் தேட முயலும் பெரியோர் அமுதொக்கும் அறச் செயலுடையராய்ப் பிறருக்கு உதவி வாழ்வதையே பெரிதாகப் போற்றுவர். (நீதி. ச. 46) | ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் 231) |
| 10. வெங்கனலும் தண்புனலாம் வேலைவிடந் தெள்ளமுதாம் சிங்கமுமோர் நல்லசிறுமானாம் தங்கருமத்து ஊக்கமுடையாருக்கு – அவ்வூக்கமே நன்மையெலாம்; ஆக்குமிது தைரிய நெறியாம். (நீதி. ச. 37) | ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை. (குறள் 594) |

| பர்த்ருஹரி | வள்ளுவர் |
|---|---|
| 11. மேலான செயலையே இடையீடின்றி முயன்று செய்தால் ஆக்கம் பெருகும். (நீதி. ச. 49) | முயற்சி திருவினை யாக்கும் (குறள் 616) |
| 12. உலகமெலாம் முயற்சிக் கண் ஊக்கமுடைய பெரியாரது குறிப்பின் கீழ்ப்பட்டனவாகும். இத்தகைய பெருமை அன்னார்க்கு அவர்தம் முயற்சியினானே எய்துகின்றது. (நீதி. ச. 50) | பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல். (குறள் 505) |
| 13. ஒருவனுக்குத் தன் பகைவரினும் மிக்க உடல் வலிமை உள்ளதெனினும், ஊக்கமொன்றிலனாயின் அவ்வூக்கத்தையுடைய ஒன்னலரையஞ்சி இன்னலுறுவான். (நீதி. ச. 51) | பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை வெரூஉம் புலிதாக் குறின். (குறள்599) |
| 14. 'ஊழின்படியனைத்துமாகும் இது தெய்வநெறியாம்' (நீதி. ச. 52) | ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும். (குறள் 380) |
| 15. விதியும் வினைபடியே வேண்டுபயன் ஈயும் (நீதி. ச. 58) | வகுத்தான் வகுத்தவகை யல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (குறள் 377) |
| 16. கதிரவன் நாளும் தோன்றி மறைவதோடு, மனிதனின் வாழ்நாளும் தேய்ந்து கொண்டு போகின்றது. (வை.ச. 42) | நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும் வாளது உணர்வார்ப் பெறின். (குறள் 334) |

கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு நாட்டுமக்கள் நன்கறிந்த உவமைகளையும், பழமொழிகளையும், உருவகக் கதைகளையும் இடையிடையே பர்த்ருஹரி பயன்படுத்துவதால் அவருடைய நூல்கள் மூன்றிலுமே பொதுவாக இலக்கிய மணம் கமழுகின்றது.

## பிற நீதி நூல்கள்

பார்த்ருஹரியின் சதகங்களையடுத்து, வடமொழியில் சிறப்புற்று விளங்கும் நீதி நூல்களுள் சிலவற்றை இங்கு நாம் காணலாம்.

தமிழகத்து மதுரையைச் சேர்ந்த சுந்தரபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் இயற்றியதாகக் கூறப் பெறும்'நீதி திவிசாஷ்டிகம்' மிகவும் பழமையான நூலாகப் போற்றப்பெறுகிறது. கி.பி.750 அளவில் பாண்டிய நாட்டை ஆண்ட அரிகேசரியின் மூதாதையாக இந்நூலாசிரியன் குறிப்பிடப் பெறுகிறான். பிற நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற பல நீதிப்பாடல்கள் இந்நூலில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இந்நூலில் நூற்றைம்பது பாடல்கள் ஆரிய சந்தத்தில் இயற்றப்பட்டுள்ளன. பல திறப்பட்ட நீதிக்கருத்துக்களைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்களாக அவை உள்ளன. அவற்றில் இலக்கிய நயத்தைக் காண்பது அரிது. 83

காஷ்மீரை ஆண்ட சங்கர வர்மனுடைய (883–902) அவையிலிருந்த பல்லட கவி இயற்றிய 'பல்லட சதகம்' நம்முடைய கருத்தைக் கவருவதாகும். எளிய நடையில் கவிநயத்துடன் கருத்தை எடுததுரைப்பதில் இக்கவிஞர் வல்லவராக விளங்குகிறார்.

> தாமரை மலரின் அகத்தே பரந்த இடமும் புறத்தே பல முட்களும் உள்ளன; தாமரையின் தண்டுமட்டும் உறுதியுடையதாக இருந்தால் அதனுடைய மதிப்பு வியக்கத்தக்ககாக இருந்திருக்கும்.

என்று தாமரை மலரின் அருமைபெருமைகளை உணர்த்துவதன் மூலம், எத்துணைப் பெரிய மனிதராக இருந்தாலும், நல்லவராக இருந்தாலும் அவரிடத்து ஒரு சிறு குறையாகிலும்

இருக்கத்தான் செய்யும் என்பதைக் கவிஞர் அறிவுறுத்துகிறார். 'பூ வெனப்படுவது பொறிவாழ் பூவே' என்று சிறப்பிக்கப் பெறும் தாமரை மலரின் தண்டு உறுதியானதாக இருந்திருக்குமானால் எத்துணைப் பயனுடையதாக அது இருக்கும். அதனால், அதன் சிறப்பு எத்துணை அளவிற்கு முகுதிப்பட்டிருக்கும் என்றெல்லாம் எண்ணிப் பார்க்குமாறு கவி நம்மைத் தூண்டுகிறார்.

தூசைப்பற்றிய உருவகக் கதையொன்றின் மூலம் ஒப்பற்றதோர் உண்மையை அவர் உணர்த்த முயலுகிறார்.

> தூசு இயல்பாகவே இலேசாக இருப்பது; இல் பொருளாகக் கருதப்பெறுவது அன்று; நாள்தோறும் நம்முடைய கால்களினால் மிதிக்கப்பட்டு நிலத்திலே உழலுவது. ஆனால், நிலையற்ற காற்று அதை மிக உயரத்திற்குக் கொண்டுசென்று மிக உயர்ந்த மலைகளின் கொடுமுடியில் நிலைக்கும்படி செய்வதைப்பார் நண்பனே! 84

என்ற பகுதியில் ஏழை எளிய மக்களை இழிவாகக் கருதுவது தவறு என்றும், அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்குமானால் உலகில் தலைசிறந்த மக்களாக அவர்கள் விளங்குவர் என்றும், அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்குமானால் உலகில் தலைசிறந்த மக்களாக அவர்கள் விளங்குவர் என்றும் பல்லட கவி தெரிவிக்கிறார்.

இப்பொழுது அச்சாகியுள்ள நூலில் நூற்றெட்டுச் செய்யுட்கள் உள்ளன. அவை பலவகை யாப்புகளில் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுட் இடைச்செருகலாகச் சில பாடல்கள் இருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சில்ஹணர் என்ற கவிஞர் காஷ்மீரில் வாழ்ந்தார். பர்த்ருஹரியின் நூல்களைப் பின்பற்றி, வடமொழியில் 'சாந்தி சதகம்' என்ற நூலை அவர் இயற்றியுள்ளார். அவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும்

என்று தோன்றுகிறது. அவருடைய கவிதைகளில் ஒருவகையான ஏக்கத்தின் எதிரொலியை நாம் கேட்கிறோம்.

> ஓ வயிறே! வெறும் காய்கறிகளோடு நீ நிறைவு அடைந்து விடுகிறாய்! எனவே, நீயே அறிவில் சிறந்தவன் என்று நான் கருதுகிறேன். ஆயிரக்கணக்கான ஆசைகளைக் கொண்ட மனம் இருக்கிறதே அதை எப்படியும் நிறைவுறச் செய்ய என்னால் இயலவில்லை. மேலும், அது குறைகளை வளர்த்துக் கொண்டே போகிறது. எனவே, அது அறிவில்லா மடையனாக எனக்குத் தோன்றுகிறது.

என்ற பாடலின் கருத்து, உள்ளத்தின் இயல்பினை ஆசிரியர் தெளிவுறுத்தியுள்ள முறை இன்பம் பயப்பதாகும். மேலும் அவர் உள்ளத்தின் இயல்பினை,

> குற்றங்கள் உள்ளத்தில் நிறைந்து இருக்கின்றவரையில் பலனுகர்ச்சி நம்மை மகிழ்விக்கின்றது. ஆனால், மெய்ப்பொருள் கண்டவர் உள்ளமே உண்மையான மகிழ்ச்சியை அடைகிறது. அப்பொழுது ஈட்டும் ஆர்வம் ஒன்றும் இல்லாமல் போய் விடுகிறது.

என்று கூறுகிறார். 'ஏழைகள் ஏன் பிச்சை எடுக்க வேண்டும் ?' என்ற கேள்வியைக் கவிஞர் உலகை நோக்கி வினவுகிறார்.

> ஆடையாக மரப் பட்டைகள் உள்ளன. படுக்கையாகச் சுள்ளிகள் உள்ளன. வீடாக மரத்தின் நிழல்கள் உள்ளன. உணவாகக் கிழங்குகள் உள்ளன. நீராக மலையருவிகள் பயன்படுகின்றன. விளையாட்டிற்கு மான்கள் உள்ளன. நண்பர்களாக பறவைகள் உள்ளன. விளக்காக இரவில் நிலவொளி பயன்படுகிறது. இச்செல்வங்களைத் தங்கள் விருப்பத்திற்கேற்பப் பெற்றிருந்தும், ஏழைகள் ஏன் பிச்சை எடுக்கின்றனர் ? 85

என்ற கேள்வி கற்பவர் சிந்தனையைத் தூண்டுகிறது.

சில்ஹணரின் கவிதைகளில் இத்தகைய நோக்கும் போக்கும் சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. அவர் சமுதாயத்தின் சீர்கேடுகளை எல்லாம் கூர்ந்து நோக்குகிறார். அக்கேடுகளுக்கெல்லாம் காரணம் மனிதன் அறநெறியில் ஒழுகத் தவறியமையே என்பதை அவர் குறிப்பாகக் காட்டுகிறார்.

பதினோராம் நூற்றாண்டில், க்ஷேமேந்திரர் வாழ்ந்தார். நாகங்கள், கதைகள், கவிதைகள், நீதிப்பாடல்கள், எள்ளல் கவிதைகள் போன்ற பலவற்றை அவர் இயற்றியுள்ளார். அவருடைய 'நீதி கல்பம்' பெயரளவில் நீதி நூலாகத் தோன்றினாலும் அதனுடைய உட்பொருள் யாப்பு, பேச்சுக்கலை, காதல் போன்றவற்றைப் பற்றியனவாக உள்ளன. எனினும், அவருடைய 'கலாவிலாசம்' அறவியல் சார்புடையதாகத் தோன்றுகிறது. அதில் ஒரு பாட்டின் கருத்தை நாம் பார்ப்போம்.

> நிலவுலகத்திற்கு நெடுந்தொலைவிற்கு அப்பால் மேரு (பொன்) மலை இருப்பதற்குக் காரணம் என்ன? பொற்கொல்லர்களாகிய திருடர்கள் எங்கே தன்னைத் திருடிக்கொண்டு போய் விடுவார்களோ? என்ற அச்சத்தால் மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் மேருமலை இருக்கிறது! எனவே, திருடர்களும் கொள்ளைக்காரர்களும் நாட்டில் அருகிப்போனவுடன், அரசர்கள் தங்கள் அதிகாரத்தைக் கொண்டு பொற்கொல்லர்களை அடக்கியொடுக்க முயலவேண்டும் 86

என்று நயமாகப் பொற்கொல்லர்களின் நயவஞ்சகச் செயல்களை அவர் அம்பலப்படுத்துகிறார்.

பர்த்ருஹரியினுடைய சதகங்களின் முறையைப் பெரிதும் பின்பற்றி, ஜகந்நாத பண்டிதர் என்பவர் அறுநூறு ஆண்டுகட்கு முனபு 'பாமனி விலாசம்' என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். அவர் நம்முடைய கருத்தைக் கவரத்தக்க கவிதைகளைப் பாடியுள்ளார். அவர் மொகலாயப் பேரரசன் ஷாஜகானுடைய அவைக்களப் புலவராக விளங்கியவராவர். ஷாஜகானுடைய அவைக்களப்

புலவராக விளங்கியவராவர். ஷாஜகானுடைய மக்களுள் ஒருவரான தாரா–ஷீகோ சிறந்த சமஸ்கிருதப் புலவனும் ஜகந்நாதப் பண்டிதரின் நண்பனுமாவான். அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஜகந்நாதர் 'பாமனி விலாசத்தை' இயற்றினர் என்பர்.

பாமனி விலாசத்தில் நான்கு பகுதிகள் உள்ளன. அவை அந்யோக்தி, சிருங்காரம், கருணை, சாந்தம் என்ற பெயர்களுடன் விளங்குகின்றன. அந்யோக்திப் பகுதியில் ஒரு கருத்து வெளிப்படையாகச் சொல்லப்படுகின்ற பொழுது அதிலிருந்து நாம் குறிப்பாகப் பெறக் கூடிய வேறொரு பொருளைப்பற்றி விளக்கப் பெற்றிருக்கிறது. 'சிருங்காரம்' என்ற தலைப்பில் காதலைப்பற்றிய கருத்துக்களும் உணர்ச்சிகளும் மிகவும் நேர்த்தியுடன் வருணிக்கப் பெற்றுள்ளன. 'கருணை' என்ற பகுதியில் அருளுணர்ச்சி, கழிவிரக்கம் ஆகிய உணர்ச்சிகளும் அவற்றிற் குரிய மெய்ப்பாடுகளும் பேசப்படுகின்றன. சாந்தம் என்ற பகுதியில் மனவமைதிக்குரிய வழிகள் சுட்டிக்காட்டப் பெறுகின்றன.

'அந்யோபதேசம்' என்ற மற்றொரு வகையான நீதி நூல்கள் வடமொழியில் இயற்றப்பெற்றுள்ளன. அவை மனிதனுடைய நல்லொழுக்கத்தையே கருப்பொருளாகக் கொண்டுள்ளன. ஒரு கருத்தை வெளியிடுவதற்கு, வேறு ஏதோ ஒன்றை வெளிப்படையாகச் சொல்லுவது என்பது இதற்குப் பொருளாகும். இதனை நாம் உள்ளுறை எனலாம். இந்நூல்கள் சமுதாய வாழ்க்கையில் ஒருவன் நடந்து கொள்ளவேண்டிய நெறி முறைகளைக் கொள்கைகளாக வரையறுத்துக் கூறுகின்றன. பல புலவர்கள் இத்தகைய நூல்களை வடமொழியில் இயற்றியுள்ளனர். கவர்ச்சிமிக்க சொல் படிமங்களின் மூலம், அழகிய மொழிநடையில் நீதிக்கருத்துக்களைத் திறம்பட இக்கவிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர். வாழ்க்கைக்குரிய அறநெறிக் கொள்கைகளை விளக்குவதற்கு இயற்கையிலுள்ள உண்மைகளை ஏராளமாகப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், வடமொழியில் நீதிக் கருத்துக்களை உணர்த்தும் நீதிக்கதை இலக்கியங்கள் நிறைய உள்ளன. அவற்றுள்

பஞ்சதந்திரக் கதைகளும், இதோபதேசக் கதைகளும் சிறப்புடையன. இவற்றைத் தவிர சிறப்பாகப் போற்றத்தக்க நீதி நூல்கள் வடமொழியில் இல்லை.

## வடமொழியில் நீதி நூல்கள் பெறுமிடம்

இலக்கியத்தின் களஞ்சியமாக விளங்கும் வடமொழியில் நீதி நூல்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டைபொட்டித் தோன்றின. அதற்கு முன்பு தோன்றிய அறத்தைப் போதிக்கும் நூல்கள் 'தரும சாத்திரங்கள்' என்று அழைக்கப் பெற்றன. எனவே, தொன்மைச் சிறப்புடையன என்று குறிப்பிடத்தக்க நீதி இலக்கியம் வடமொழியில் இல்லை என்று பர்த்ருஹரியின் இலக்கியப் படைப்புகளில் 'நீதி சதகம்' ஒன்றே ஏற்றமிகு இலக்கியச் சிறப்புகளைக் கொண்டு ஒளிர்கிறது. மற்ற இரண்டு சதகங்களும் கருத்துக்களின் கருவூலமாக உள்ளனவே யொழிய, சிறப்புமிக்க இலக்கியப் பெட்டகங்களாக அமையவில்லை.

இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு நாம் வடமொழி இலக்கியத்தை ஆராய்கின்ற பொழுது, நீதி நூல்கள் தமிழ்மொழியில் பெற்றுள்ள சிறப்பிடத்தை வடமொழியில் பெறவில்லை என்பது புலனாகின்றது.

# 3. திருக்குறளும் பகவத்கீதையும்

இந்திய அரங்கில் மிகப் பெரும் மதிப்பிற்குரிய இருபெரும் நூல்கள் பகவத் கீதையும் திருக்குறளும் ஆகும். பகவத்கீதை, மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்குவது என்பர்; திருக்குறள் தனி நூல்; இரண்டு நூல்கம் இரு இந்தியாவின் இரு செம்மொழிகளில் தோன்றிய நூல்கள்; முன்னது சமஸ்கிருதத்தில் தோன்றியது; பின்னது, தமிழில் தோன்றியது.

இரண்டு நூல்களும் எப்போது எழுதப்பட்டன என்பதில் பெருத்த கருத்து வேறுபாடுகள் உள்ளன. இரு நூல்களின் கால ஆய்வுகளைப் பார்க்கும் போது, இரண்டு நூல்களும் சம காலத்தனவாகக் கொள்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

உலக அரங்கில் மிகுதியான உரைகளையும் ஆய்வுகளையும் மொழி பெயர்வுகளையும் பெற்ற நூல்கள் என்னும் பெருமிதத்திற்கு உரியனவாகவும் இந்த இரு நூல்களும் விளங்குகின்றன.

இறைவன் மனிதனுக்குச் சொல்லியதாகக் கருதப்படும் நூல் பகவத்கீதை; மனிதன் மனிதனுக்குச் சொல்லிய நூல் திருக்குறள்.

பகவத்கீதை வைதிக சமயச் சார்புடைய நூல்; திருக்குறள் சமயச் சார்பற்ற நூல்.

பகவத்கீதை 18 அத்தியாயங்களில் 700 ஈரடிச் சுலோகங்களால் ஆகிய நூல் (ஒரு சுலோகம் ஓரடியாகவும், மற்றொரு சுலோகம் மூன்றடியாகவும் உள்ளன என்பர்): திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 ஈரடி வெண்பாக்களால் ஆகிய நூல்.

பகவத்கீதை பக்தியோடு இணைந்து அறத்தைக் கூறும் நூல்.

திருக்குறள் மனிதத்தோடு இணைந்த அறத்தைக் கூறும் நூல். முன்னது, இறைவனே எல்லாம் என்னும் நூல்; இறைமை ஆற்றலுக்கு முதுன்மை தரும் நூல். பின்னது, மனிதனே எல்லாம் என்னும் நூல்; மனித ஆற்றலுக்கு முதன்மை தரும் நூல்.

பகவத் கீதை வருணாசிரமத்தை ஏற்கும் நூல்; திருக்குறள் வருணாசிரமத்தை எதிர்க்கும் நூல். பகவத்கீதை போரை ஏற்கும் நூல்; திருக்குறள் போரை எதிக்கும் நூல். பகவத்கீதையில் காமத்திற்கு இடம் இல்லை; திருக்குறளில் காமத்திற்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. இவை போன்று, இரு நூல்களுக்கும் ஒற்றுமைகளும் உண்டு; வேற்றுமைகளும் உண்டு.

இந்த இரு நுல்களுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு, அவற்றிற்கான காரணங்களை முன்வைத்து, இவ்விரு நூல்களும் ஒன்றைவிட மற்றொன்று எவ்வெவ் வகைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து தெளிவுபடுத்தி, இந்திய அரங்கிலும் உலக அரங்கிலும் இந்த இரண்டு நூல்களுக்குமான இடத்தை வரையறுப்பதுதான் இந்த ஆய்வின் நோக்கம்.

இந்திய அரங்கில் – உலக அரங்கில் வரலாறு படைத்த இரண்டு நூல்கள் என்னும் பெருமிதம் பகவத் கீதைக்கும் உண்டு, திருக்குறளுக்கும் உண்டு.

இரண்டும் உயர்ந்த தத்துவங்களை உள்ளடக்கமாகக் கொண்ட நூல்கள்; இந்திய மக்கள் பலரும் அறிந்த நூல்கள்; மக்கள் சமுதாயத்திற்குத் தத்தம் நோக்குகளில் வழிகாட்டி வரும் நூல்கள், இனியும் வழிகாட்ட உள்ள நூல்கள்.

இவற்றுள், பகவத்கீதை சமயம் சார்ந்த நூல்; திருக்குறள் சமயம் சாரா நூல். இந்த இரண்டு நூல்களுக்குமே

இந்திய தேசிய நூல்கள் எனக் கருதப்படும் நிலையைப் பெற்றுள்ளன. இந்திய தேசிய நூல்கள் எனக் கருதத்தக்க நூல்களுள் தலைமையான இடங்களைப் பெற்றுள்ளன. இந்த இரண்டு நூல்களுள், தேசிய நூல் என்னும் தகுதி எந்த நூலுக்குக் கூடுதலாக அமைந்துள்ளது என்பது இன்றுள் புதிரான வினா, இந்த வினாவிற்கு விடை காணும் முயற்சியில் உருவாக்கம் பெற்ற நூல், அருள் திரு திருக்குறள் மாமுனிவர் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் படைத்துள்ள 'பகவத்கீதையும் திருக்குறளும்' என்னும் இந்த நூலாகும்.

இந்த நூலில், பகவத்கீதையின் முதல் அத்தியாயமும்திருக்குறளும் ஒப்பீட்டுக்குக் கொள்ளப் பட்டுள்ளன. அவ்வாறான ஒப்பாய்வில், பகவத்கீதைக்கும் திருக்குறளுக்கும் இடையே உள்ள ஒப்புமைகளும் வேற்றுமைகளும் மிக ஆழமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

> ***சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்அமைந்து ஒருபால்***
> ***கோடாமை சான்றோர்க்கு அணி*** (குறள். 118)

என்னும் திருவள்ளுவர் காட்டிய நடுநிலை மன உணர்வை உள்ளத்தில் ஏந்தி,

> ***எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
> ***மெய்ப்பொருள் காண்பது அறிவு*** (குறள். 423)

என்னும் அறிவு வேட்கையோடு ஆராய முற்பட்டுள்ளேன்.

பகவத்கீதையின் ஒவ்வோர் அதிகாரத்தையும் முதன்மைப்படுத்தி, அந்தந்த அதிகாரக் கருத்துகளோடு திருக்குறள் கருத்துகளை ஒப்பிட்டுக் காண்பதால், பகவத்கீதை முன்னாகவும் திருக்குறள் பின்னாகவும் இவ்வாய்வின் தலைப்பு அமைகின்றது.

## பாயிரங்கள்

பகவத்கீதை திருதராட்டிரன் கேட்க, சஞ்சயன் தான் பெற்றுள்ள ஆற்றலால், அரண்மனைக்கு வெளியே நிகழும் போர்க்கள நிகழ்வுகளை அரண்மனைக்கு உள்ளே

இருந்துகொண்டே விளக்குவதாக அமைந்துள்ளது. அவற்றுள், முதல் அதிகார அளவில், சஞ்சயன் கூறும் போர்க்கள நிகழ்வுகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

துரியோதனன் தன் குரு துரோணாசாரியரிடம், பாண்டவர் படைகளின் நிலைகளை விளக்குதல், பின்னர், தன் படையின் நிலைகளை விளக்கித் தன் படையின் சிறப்பெனத் தான் கருதுவதைக் கூறுதல்.

பீஷ்மர் போரில் தொடக்கத்திற்கான சங்கொலியை எழுப்ப, இரு பக்கப் படைகளும் தத்தமக்குரிய சங்கொலிகளை முழங்குதல், படைத்தலைவர்களும் படை வீரர்களும் தத்தமக்குரிய படைக்கருவிகளை ஏந்திப் போருக்குத் தயாராதல்.

கவுரவர்கள் படையில் இருப்பவர்களைக் காண்பதற்காக – தான் யாரோடு போரிடப் போகிறான் என்பதை அறிந்து கொள்வதற்காக அர்ச்சுனன் தன் தேரைத் துரியோதனன் படைக்கு முன் கொண்டு நிறுத்துமாறு கிருஷ்ணனிடம் வேண்டுதல்

அர்ச்சுனனின் வேண்டுகோளை ஏற்றுப் பீஷ்மர், துரோணாச்சாரியார் ஆகியோருக்கு முன் கிருஷ்ணன் தேரைக் கொண்டு வந்து நிறுத்துதல்.

அர்ச்சுனன் தனக்குமுன் இருக்கும் தன் உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றோரைக் காணுதல்; மனம் கலங்குதல்; தனக்குப் போர் செய்ய விருப்பம் இல்லை என அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் கூறுதல்– அதற்கான காரணங்களை முன்வைத்தல்; முதலில், உறவின் அடிப்படையிலான பாச உணர்வை வெளிப்படுத்துதல்; பின்னர், குல தர்மத்தையும் வருணாசிரம தர்மத்தையும் இணைத்துக் கூறுதல்.

அர்ச்சுனன் தன் கையில் இருந்த காண்டீபத்தை எறிந்துவிட்டுத் தேர்த்தட்டில் அமர்ந்து விடுதல்.

# முதல் அத்தியாயம் / அதிகாரம்

பகவத் கீதையின் முதல் அத்தியாயம், 'அர்ஜுன விஷாத யோகம்' என்பது. இது அர்ச்சுனனின் மனக்கலக்கத்தைச் சுட்டுவது.

பகவத்கீதை தோன்றுவதற்கு – இறைவன் தர்மத்தை அறிவுறுத்துவதற்கு – இந்த முதல் அத்தியாய நிகழ்வுகள் அடிப்படையாக அமைவதால், இந்த அதிகாரத்தைப் பகவத் கீதையின் பாயிரம் என்றும் முகவுரை என்றும் கொள்வர்.

இந்த அத்தியாயத்தில் வரும் இறைவர், மனித உருவினர்; அடியவர்க்குத் தொண்டாற்றும் தொண்டர்; அடியவர், மனக்கலக்கத் தோடு உரைப்பனவற்றைப் பொறுமையாகக் கேட்பவர்.

திருக்குறள் முதல் அதிகாரம் 'கடவுள் வாழ்த்து' என்னும் பெயரில் வருவது; இறைமையின் நெறியில் நிற்றல் என்னும் பொருள் தரும் 'இறைமை வழிபாடு' என்னும் தலைப்பிற்கு உரியது.

இதில் வரும் இறைவன், பண்பு உருவினன்; மனிதர்கள் அடைய வேண்டிய அடிப்படையான எட்டு வகைப் பண்புகளின் நிறைநிலைப் பண்பினன்; இறைவன் என்னும் நம்பிக்கையை ஏற்றுத் திருவள்ளுவர் உருவாக்கம் செய்த படைப்பிற்கு உரியது. திருவள்ளுவரின் கற்பனையில் உருவானது.

திருவள்ளுவர் உருவாக்கம் செய்த இந்தக் கடவுள், ஆத்திகர்க்கும் உரியது; நாத்திகர்க்கும் உரியது. இது பற்றித் தனியொரு தலைப்பில் பின்னர் விரிவாக விளக்கப்பட உள்ளது.

பாயிரம் என்ற அடிப்படையில் பார்ப்பின், திருக்குறளில் நான்கு அதிகாரங்கள் பாயிரமாகக் கருதப்படுகின்றன. அவை,

இறைமை வழிபாடு (கடவுள் வாழ்த்து)

வான்சிறப்பு

நீத்தார் பெருமை

அறன் வலியுறுத்தல்

இந்த நான்கு அதிகாரங்களும் அறத்துப்பாலில் வருகின்றன; இந்த நான்கு அதிகாரங்களைப் பற்றியும் வேறுபாடான மற்றும் மாறுபாடான பல்வேறு கருத்துகள் ஆய்வுலகில் நிலவுகின்றன.

இவை நான்கும் திருவள்ளுவர் இயற்றியவைதாம்; அறத்தோடு தொடர்புடையவை எனச் சுருங்கச் சொல்லலாம். அந்தத் தொடர்பைப் பின்வருமாறு கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கடவுள் வாழ்த்து | – | இறைவன் அறத்தின் நிலை வடிவினன் 'அறவாழி அந்தணன்' (குறள்.8) |
| வான் சிறப்பு | – | அறம் தழைக்க அடிப்படையானது 'வான்இன்று அமையாது ஒழுக்கு' (குறள்.20) |
| நீத்தார் பெருமை | – | துறவிகள், அறத்தின்வழி நின்று, அறத்தைப் பரப்ப் வந்தவர்கள் 'அறம் பூண்டார்' (குறள்.23) 'அறவோர்' (குறள். 30) |
| அறன் வலியுறுத்தல் | – | அறத்தின் சாரம் உரைப்பது |

ஆக, நான்கு அதிகாரங்களும் அறத்தோடு தொடர்புடையனவாக அமைதலைக் காண முடிகின்றது. அதனால்தான் இவற்றை அறத்துப்பாலில் பாயிரமாக அமைத்துள்ளனர் எனக் கொள்ளலாம்.

இவற்றை நோக்கின், பகவத்கீதையின் பாயிரம் (முதல் அத்தியாயம்) பகவத்கீதை தோன்றுவதற்கான அடிப்படைச் சூழலை – பின்னணியை – மையமிட்டு அமைகின்றது; திருக்குறள் பாயிரம் அறத்தின் நிறைநிலையான இறைவன், அறத்திற்கு அடிப்படையாகும் மழை அறத்தைப் பரப்பும்

அறவோரான நீத்தார், அறத்தின் சிறப்பு என்னும் அறத்தின் பரிமாணங்கள் நான்கினை மையமிட்டு அமைகின்றது.

இரண்டு நூல்களிலும் பாயிரங்கள் அறத்தொடு தொடர்பு பட்டனவாக அமைகின்றன; பகவத்கீதையின் பாயிரம் அறத்தின் தோற்றத்திற்கான – அறநூலின் தோற்றத்திற்குக் காரணமாக களனைச் சுட்டுகின்றது. திருக்குறளின் பாயிரம் அறத்தின் அடித்தளங்களைச் சுட்டுகின்றது.

## முதல் தொடக்கம்

ஒரு நூலின் தொடக்கம் என்பது, குறிப்பிடத்தக்க ஒன்று என அறிஞர்கள் கருதுவர்; சில வேளைகளில், ஒரு நூலின் அடிப்படைப் பதிவுகள் கூட அந்த நூலின் முதல் தொடக்கத்தில் அமைவதற்கான வாய்ப்புகள் உண்டு.

பகவத்கீதையின் முதல் சுலோகத்தின் தொடக்கம்,

*'தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே'*

எனத் தொடங்குகிறது.

*'தர்ம பூமியாகிய குருசேத்திரம்'*

என்பது, இத்தொடரின் பொருள். பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் நடைபெறும் போர் குருக்ஷேத்திரத்தில் நடைபெறுகின்றது. இந்த இடம், முன்னரே அறவோர்கள் பலர் வாழ்ந்த/ வந்து சென்ற திருத்தலமாகக் கருதப்படுவதாலும், பாண்வர்களுக்கும் கவுரவர்களுக்கும் நடைபெறும் போர் அறப்போர் எனக் கொள்ளப்படுவதாலும், அறத்தின் தலைவனான இறைவனே முன்னின்று போரை நடத்துவதாலும் குருக்ஷேத்திரம் அறநிலமாகக் குறிக்கப்பட்டுள்ளது எனலாம்.

பகவத்கீதை என்னும் தர்ம நூல் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்த களம் என்பதாலும் குருசேத்திரம் கருமசேத்திரம் என வழங்கப்பட்டது என்று கொள்ளலாம்.

மேலும், பகவத்கீதை பக்தி உணர்வோடு கூடிய அறச் சிந்தனைகளை முன்வைப்பது ஆதலின், அந்த அறவுணர்வின்

வெளிப்பாடாக 'தர்மம்' என்னும் சொல் முதல் சொல்லாக வெளிப்பட்டுள்ளது/ அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

அடுத்ததாக, வருண தருமம், குலதருமம் ஆகியன போற்றும் நூலாகப் பகவத்கீதை அமைவதால், அவற்றைக் குறிக்கும் நோக்கில் 'தர்மம்' என்னும் சொல் முதல் சொல் ஆயிற்று என்றும் கொள்ளலாம்.

ஆக, பகவத் கீதை 'தர்மம்' எனத் தொடங்குவதில் ஒரு பொருத்தம் இருப்பதைக் காணமுடிகின்றது.

திருக்குறளின் முதல் சொல் 'அகரம்' எனத் தொடங்குகின்றது. இது குறித்து அறிஞர் உலகம் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றது.

அவற்றுள் ஒன்று, திருவள்ளுவர் தம் தமிழ் உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் தம் நூலை அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிக்க எண்ணித் திட்டமிட்டு, முதற்குறளை அகரத்தில் தொடங்குகிறார், இறுதிக் குறளை னகரத்தில் முடிக்கின்றார் என்பர். இஃது பொருந்தாக் கூற்று ஆகும்.

திருவள்ளுவர் தமிழர்; தமிழில் நூல் எழுதியவர்; ஆனால், உலக மாந்தர் அனைவருக்குமான பொதுமறைதான் வழங்கியவர்; தாம் படைக்கும் வாழ்க்கைத் தத்துவங்கள் உலக மக்கள் அனைவருக்குமாக அமைய வேண்டும் எனத் திட்டமிட்டே பொதுமைப்படுத்தி நூல் உருவாக்கம் செய்தவர். சாதி, சமயம், மொழி, இனம், நாடு என்னும் எல்லைகள் அனைத்தும் கடந்து நூலை உருவாக்கம் செய்தவர். அவர் தம் தமிர் மொழி உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடித்தார் என்பது எவ்வகையில் பொருந்தும்?

மேலும், அகரத்தில் தொடங்குவது என்பது, எல்லா உரையாசிரியர்களின் வைப்பு முறைகளிலும் பொருந்தி வருகின்றது; ஆனால், னகரத்தில் முடிதல் என்பது எல்லா உரைகளிலும் பொருந்தி வரவில்லை; பரிமேலழகர் அவர்கள்

வைப்பு முறையில் மட்டுமே இத்தகைய போக்குக் காணப்படுகின்றது.

ஒவ்வோர் உரையாசிரியரும் தமக்குச் சரி எனத் தோன்றும் போக்கில் குறள் முறை வைப்புகளை முறைப்படுத்த முயன்றுள்ளனர். அவ்வாறு முறைப்படுத்தியதில், பரிமேலழகர் அவர்கள உரையில் மட்டுமே

*ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்குஇன்பம்*
*கூடி முயங்கப் பெறின்*

என்பது இறுதிக் குறளாக அமைகின்றது. இந்தக் குறள் பரிமேலழகர் அவர்களுக்கு முற்பட்ட உரையாசிரியர்களின் உரைகளில், யார் ஒருவர் உரையிலும் கடைசிக் குறளாக அமையவில்லை; மணக்குடவர் அவர்கள் உரையில் இந்தக் குறள் 1323 ஆவது குறளாகத்தான் அமைகின்றது.

பரிப்பெருமாள், காலிங்கர் ஆகியோர் உரையில் காணும் குறள் முறை வைப்பிலும் 1324 ஆம் குறளாகவே இக்குறள் அமைகின்றது.

மணக்குடவர், பரிப்பெருமாள், கலிங்கர் ஆகியோர் உரைகளில்

*புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு*
*நீர்இயைந்து அன்னார் அகத்து*

என்னும் குறளே – பரிமேலழகர் வைப்பு முறையில் 1323 ஆவது குறளாக அமைவதே – கடைசிக் குறளாக உள்ளது. இக்குறள், னகரத்தில் முடியவில்லை.

ஆக, பரிமேலழகர் மட்டும் கொண்ட வைப்பு முறையை வைத்து – அது பரிமேலழகர் வைப்பு முறைதான் என்பதைக் கூட அறியாமல் ஒரு பிழையான கருத்தைத் தமிழ் உலகம் – தமிழ் அறிஞர்கள் உலகம் – பல காலம் தொடர்ந்து சொல்லி வந்துள்ளது; தொடர்ந்து சொல்லியும் வருகின்றது.

குறள் வைப்பு முறைகள் அனைத்தும், உரையாசிரியர்கள் கண்ட வைப்பு முறைகளே; திருவள்ளுவர் வைத்த வைப்பு

முறை என்ன என்பது தற்போது அறிய முடியாததாகவே உள்ளது.

ஆகவே, திருவள்ளுவர் தம் தமிழ் உணர்வை வெளிப்படுத்த, அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடித்தார் எனக் கொள்ள முடியாது.

இவ்வகையில், தொல்காப்பியர் அவர்கள்

***'அகர முதல னகர இறுவாய்'***

எனக் கொண்டதற்கு ஏற்பத் தாமும் தொல்காப்பியரைப் பின்பற்றி அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடித்தார் எனக் கொள்வதும் பொருந்தாது.

அகரம் என்பது உயிரினத்தின் முதல் ஒலி; மனித இன ஒருமைப்பாட்டையும் உயிரின உணர்வையும் உருவாக்கம் செய்ய நூல் படைத்த திருவள்ளுவர், எல்லா உயிர்களுக்கும் முதல் ஒலியாக அமையும் அகரத்தை முன்வைத்துத் தம் நூலைத் தொடங்கியுள்ளார் என்றும் கொள்ளலாம்.

எழுத்துகளில் அகரம் ஒன்றுதான் என்பதால், தாம் படைக்கும் இறைவன் ஒருவன்தான் என்பதை நிலைநாட்டும் நோக்கில் அகரத்தை முன்வைத்தார் என்றும் கொள்ளலாம். வேறு சமய நோக்குகளில் அகரத்தை முன்வைத்தார் என்பனவெல்லாம் பொருந்தாது.

***அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு***

என்னும் முதற் குறள்,

***எழுத்துகள் அகரத்தை முதலாக உடையன; உலகம் ஆதிபகவனை முதலாக உடையது***

என்னும் பொருள் கொண்டதாகும். எழுத்துகள் என்னும் இணைப்பும் பிணைப்பும் உறவும் அகரத்தை முதலாகக் கொண்டு அமைகின்றன; அதுபோல, உலக உயிர்கள் என்னம் இணைப்பும் பிணைப்பும் உறவும் ஆதிபகவனை முதலாகக்

கொண்டு அமைகின்றன. முதல் என்பது படைப்பு நிலையில் அன்று; உயிரினத் தோற்ற நிலையில் என்று கொள்ளலாம்.

பொதுவாக உவம அமைப்புகளில் உவமையை முன்னர்க் கூறி உவமேயத்தை – பொருளைப் பின்னர்க் கூறல் என்பதுதான் பெருவழக்கு; மேற்சுட்டிய குறளில்,

*'அகர முதல எழுத்தெல்லாம்'*

என்பது உவமை;

*'ஆதி பகவன் முதற்றே உலகு'*

என்பது உவமேயம். உவமத்தை முன்னர்க் கூற வேண்டியதால், அகரம் முன்னதாக இடம் பெற்றது என்றும் கொள்ளலாம்.

மேலும், ஆதிபகவன் என்பது, கருத்துப் பொருள்; திருவள்ளுவரின் கற்பனைப் பொருள். அகரம் என்பது, ஒலி நிலையில் நுண்பொருளாக அமைந்தாலும், வரிவடிவ நிலையில் காட்சிப் பொருளாக அமைவது. ஆகவே, காட்சிப் பொருளாகவும் நுண்பொருளாகவும் இருக்கும் அகரத்தை முன்வைத்துக் கருத்துப் பொருளை விளக்க முனைந்துள்ளார். அந்த வகையில் அகரம் முன்னதாக இடம் பெற்றுள்ளது என்றும் கொள்ளலாம்.

## பெயர் இடப் பதிவுகள்

குருசேத்திரம் என்பதை அறம் நிலைபெறும் ஓர் இடமாகப் பதிவு செய்யும் போக்குக் கீதையில் உள்ளது; அதனால்தான், குருசேத்திரம் எனச் சுட்டாமல் தர்மசேத்திரம் குருசேரத்திரம் என அடை தந்து வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அறத்தின் இணைவோடு ஊரையும் நாட்டையும் இணைத்துப் பார்க்கும் பார்வை சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்:

***அறங்கெழு நல்லவை உறந்தை*** (அகம்.93:5)

***அறத்திற் திரியாப் பதி*** (பரி.திரட்டு, 1:21)

*அறத்துறை அம்பி* (புறம்.381:24)

*அறந்துஞ்சு உறந்தை* (புறம்.58:9)

*மறப்போர் பாண்டியர் அறத்திற் காக்கும்*
*கொற்கையம் பெருந்துறை* (அகம்.27: 8–9)

அப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சிறப்பிக்கும் போக்குத் திருக்குறளில் இல்லை. நாட்டில் அறம் தழைக்க வேண்டும் என்று கருதுபவர்தாம் திருவள்ளுவர்; ஆனால், எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் அறத்தோடு இணைத்துக் காணும் போக்கு அவரிடம் காணப்படவில்லை; அறம் தழைக்கும் இடமேயாயினும், ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டும் நிலை உருவானால், அது, தம் பொதுமை நோக்கின் பாதைக்குத் தடையாக அமையுமாதலின், அவ்வாறு செய்யவில்லை.

மேலும், மகாபாரதக் கதையின் தொடர்ச்சியாகப் போர் பற்றிய நிகழ்வுகள் பதிவு செய்யப் பெற்றுள்ள காரணத்தால், அந்தக் காப்பியத்தில் வரும் பெயர்கள் நிகழ்வுகள் சிந்தனைகள் சிலவும் பகவத்கீதையில் பதிவுகளாகி உள்ளன. திருக்குறள் போர் பற்றிய சிந்தனைகளைப் பொதுவாகப் முன்வைக்கும் காரணத்தால் இத்தகைய பெயர்ப்பதிவுகள் ஏதும் திருக்குறளில் இடம்பெறவில்லை.

இவற்றை நோக்கின், ஒரு குறிப்பிட்ட பெயர். இடச் சூழல்களைக் கருவாகக் கொண்டு பகவத்கீதையின் தத்துவங்கள் உருவாக்கம் பெறுகின்றன; பெயர், இடச் சூழல்களைக் கடந்து திருக்குறள் தத்துவங்கள் உருவாக்கம் பெறுகின்றன.

## ஒலி ஒளிக் காட்சி

போர்க்களத்தில் நடப்பதைப் போர்க்களத்திற்குச் செல்லாமலேயே ஓர் அறையில் இருந்து கொண்டு, ஒளியையும் ஒலியையும் அறிய முடியும் என்னும் எண்ணத்தில் எதிரொலி – ஒரு நம்பிக்கை

இந்த நம்பிக்கை திருவள்ளுவர் காலத்திலும் அவர் வாழ்ந்த சமுதாய அரங்கிலும் ஓரளவேனும் இருந்துள்ளது என்பதைப் பின்வரும் குறள்வழி நுட்பமாகத் திருவள்ளுவர் பதிவு செய்துள்ளார் என அறிய முடிகின்றது:

*விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்*
*படாஅதி வாழி மதி* (குறள். 1210)

என்பது காமத்துப்பாலில் வரும் குறள்.

'நிலவே வாழ்வாயாக, உள்ளத்தால் என்னை நீங்காமல் பிரிந்து சென்றவரைக் கண்ணினால் நான் காண வேண்டும். ஆகவே, நிலவே நீ மறையாமல் ஒளி வீசுவாயாக'

என்பது இதன் பொருள். வெகு தொலைவு பிரிந்து சென்றவரை நிலவின் வழிக் காண வேண்டும் என்று தலைமகள் விரும்புகின்றாள் என்பதை அறிய முடிகின்றது.

இதில், ஒளிப்பதிவு பற்றிய நம்பிக்கை மட்டும் உள்ளது; ஒலிப் பதிவு பற்றிய நம்பிக்கை இல்லை; கீதையில் இரண்டும் உண்டு.

## போர்க்களக் காட்சிகள்

பகவத்கீதை, போர்க்களத்தில் உருவாக்கம் பெறும் – போர்க்களத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெறும் மெய்ப்பொருள் சிந்தனைக்ள் ஆகலின், அதன்கண் முதல் அத்தியாயத்தில், போர்க்களக் காட்சிகள் விரிவாகவே இடம்பெற்றுள்ளன.

துரியோதனன், தன் குருவான துரோணாச்சாரியார் அவர்களிடம், பாண்டவர் படையில் இடம் பெற்றுள்ளவர்கள் பற்றியும் தன் படையில் இடம் பெற்றுள்ளவர்கள் பற்றியும் அவரவர் ஆற்றல்கள் பற்றியும் எடுத்துரைத்து, பாண்டவர் படையைவிடத் தன் படை ஆற்றல் மிக்கது எனப் பெருமிதம் கொள்வதைக் காண முடிகின்றது.

அந்தப் பேச்சில், இரு தரப்பிலும் உள்ள போர் ஆற்றலாளர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. பின்னர்,

பீஷ்மரை எல்லா நிலையிலும் படை வீரர்கள் பாதுகாப்பாக இருந்து காக்க வேண்டும் எனத் துரியோதனன் ஆணையிடுகின்றான். இச்செய்திகள், 2ஆவது பாடல் முதல் 11 ஆவது பாடல் வரை, 10 பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

தன்னைப் பாதுகாக்குமாறு கூறிய துரியோதனனை மகிழ்விக்கும் வகையில், முதலில் பீஷ்மர் அவர்கள் போர்க்குரிய சங்கொலியை எழுப்ப, இரு தரப்பிலும் சங்கொலிகள் ஒலிக்கும் செய்திகள் தொடர்ச்சியாக 8 பாடல்களில் (கீதை 1: 12? 19) இடம் பெற்றுள்ளன. இதில், ஒவ்வொருவரும் தத்தமக்குரிய சிறப்பிற்குரிய சங்குகளைக் கொண்ட போர் ஒலியை எழுப்புவது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர், காண்டீப வில்லைக் கையில் ஏந்திய அர்ச்சுனன், தன்னோடு போரிட உள்ளவர்களைக் காண வேண்டும் எனக் கிருஷ்ணனிடம் கூறித் தன் தேரை இரு படைகளுக்கும் இடையில் சென்று நிறுத்தி வைக்குமாறு வேண்ட, கிருஷ்ணனும் அர்ச்சுனனின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்றார்.

தன்னோடு போரிட உள்ளவர்களைக் காணும் அர்ச்சுனனின் உள்ள தடுமாறுகின்றது. போரிடுவது நல்லதன்று என்ற எண்ணத்திற்கு வரும் அர்ச்சுனன், அதற்கான காரணங்களை எடுத்துரைத்து, முடிவில், வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு, தேரில் அமர்ந்து விடுகின்றான்.

இவ்வாறு போர்க்களத்தின் தொடக்கக் காட்சிகள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

திருக்குறள் போர்க்களத்தில் எழுந்த போதனை நூல் அன்று; போரைப் போற்றி வரவேற்கும் நூலும் அன்று; அதனால், அதில் போர்க்கள நிகழ்வுகள் பெரிதும் இடம்பெறவில்லை.

அதனால், போர் பற்றிய செய்திகளே திருக்குறளில் இடம் பெறவில்லை என்பதில்லை.

**அரண்** (அதி.75)

**படைமாட்சி** (அதி. 77)

**படைச் செருக்கு** (அதி. 78)

**பகைமாட்சி** (அதி. 87)

**பகைத்திறம் தெரிதல்** (அதி.88)

**உட்பகை** (அதி.89)

ஆகிய அதிகாரங்களில் பகை, போர் பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. ஆங்காங்கே 30-க்கு மேற்பட்ட குறள்களில் பகை / போர் சார்ந்த செய்திகள் சிந்தனைகளாகவும் உவமை உருவகங்களாகவும் இடம் பெற்றுள்ளன.

மேற்குறித்த குறள்களுள், இரண்டு குறள்களில் மட்டும் போர்க்களக் காட்சிகளை நேரடியாகக் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

***என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர், பலர்என்ஐ***
***முன்நின்று கல்நின் றவர்*** (குறள். 771)

என்பது அவற்றுள் ஒரு குறள்.

பகை வீரர்களைப் பார்த்து ஒரு போர் வீரன் பேசுவதாக இக்குறள் அமைகின்றது. இதில், தன் தலைவனின் பெருமிதம் பற்றிப் போர் வீரன் பேசுகின்றான்:

**என் தலைவன் முன் நின்று போரிட்டு நடுகல்லாகி விட்டவர் பலராவர்: ஆகவே, பகை வீரர்களே, என் தலைவன் – முன் நிற்காதீர்கள்**

என்பது அவன் பெருமிதக் கூற்று. இதனை இரக்கம் கலந்த பெருமிதம் என்றும் கொள்ளலாம் அடுத்த காட்சி,

***கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்***
***மெய்வேல் பறியா நகும்*** (குறள்.774)

என்பதாகும்.

கையிலிருந்த வேலைப் போர் யானையின்மேல் வீசிய வீரன், தன் மார்பில் தைத்த வேலைப் பிடுங்கியபடி நகுவன்'

என்பது இக்குறளின் பொருள். இதனைப் போர்க்களக் காட்சியாகவும் கொள்ளலாம். இப்படி நடந்து கொள்வான் என ஆசிரியர் கூறுவதாகவும் கொள்ளலாம்.

போர்க்காட்சிகள் நேரடியாக பெரிதும் இடம் பெறவில்லையென்றாலும், போர்க் காட்சிகள் தொடர்பான குறிப்புகள் சில குறளில் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:

***'சிறுபடையான் செல்லிடம் சேறின்'*** (குறள்.499)

***'இடன் அறிந்து துன்னியார் துன்னிச் செயின்'*** (குறள். 494)

***'முனைமுகத்து மாற்றலர் சாய'*** (குறள்.749)

***'விழித்தகண்வேல்கொண்டு எறிய அழித்திமைப்பின்'*** (குறள்.775)

## உவமைகளில் போர்க்களக் காட்சிகள்

வீரமும் காதலும் இரு கண்களாகக் கொண்ட வாழ்ந்த தமிழகத்தில், போர் வீரர்களுக்கு மதிப்பு இருந்தது; மக்களும் போர்க்களக் காட்சிகளைக் கண்டிருப்பர், கேட்டிருப்பர்.

மக்கள் பெரிதும் அறிந்த போர்க்களக் காட்சிகளை உவமை களாக்குவதன் வழி ஒரு சில போர்க்களக் காட்சிகளை முன்வைத்துள்ளார் திருவள்ளுவர்.

***'படை கொண்டார்'*** (குறள்.253)

***'வில்வணக்கம்'*** (குறள்.827)

***'அமரகத்து வன்கண்ணர்'*** (குறள்.1027)

***'தானை கொண்டன்னது'*** (குறள்.1082)

– இவை, ஆற்றலாளர்/ படைக்கருவியின் இயக்க வெளிப்பாடுகள்.

*'பேடிகை வாளாண்மை'* (குறள்.614)

*'வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு'*
(குறள்.72)

– இவை, ஆற்றலற்றார் வெளிப்பாடுகள்.

*'புதை அம்பில் பட்டுப்பாடு ஊன்றும் களிறு'*
(குறள். 597)

*'அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா'*
(குறள்.814)

– இவை போர்க்களத்தில் இடம் பெறும் யானை, குதிரை போன்றவற்றின் செயற்பாடுகள்; முன்னதில், யானை தன் உடம்பு முழுவதும் அம்புகளால் புண்பட்டும் தன் பெருமித நிலையை இழக்காத பாங்கை வெளிப்படுத்துகின்றது; பின்னது, குதிரை தன் மேல் இருக்கும் வீரனைக் கீழே தள்ளிவிட்டு ஓடும் காட்சி வெளிப்பாடு.

போர்க்களத்தில் உயிரினங்களைப் பற்றி மட்டும் அல்லாமல், போரிட்டு நிற்கும் உயிரினங்கள் பற்றிய காட்சிக் குறிப்புகளும் சில திருக்குறள் உவமைகளில் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:

*'பகல்வெல்லும் கூகையைக் காக்கை'*
(குறள்.481)

*'பொருநகர் தாக்கற்குப் பேரும் தகைத்து'*
(குறள்.486)

*'யானைப் போர்'* (குறள்.758)

இவையெல்லாம் போர் வெளி உருவாக்கத்திற்கான கருத்துவழியிலான காட்சி வெளிப்பாடுகள் அல்ல; மக்கள் கண்ட/ கேட்ட காட்சிகளைக் கொண்டு, தம் கருத்தை எளிமையாக்கம் செய்ய வேண்டும் என்று திருவள்ளுவர் கருதிய கருத்தாக்கத்தின் வெளிப்பாடுகளே.

இவற்றைப் போன்றே, பிறிது மொழிதல் அணிவழி, இயற்கையில் காணும் உயிரினப் போராட்டங்களையும் திருவள்ளுவர் வெளிப்படுத்தி உள்ளதைப் பின்வரும் குறள்கள்வழி அறிய முடிகின்றது:

*நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்*
*நீங்கின் அதனைப் பிற* (குறள். 495)

*கால்ஆழ் களரில் நரியடும் கண்அஞ்சா*
*வேல்ஆள் முகத்த களிறு* (குறள். 500)

*பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை*
*வெரூஉம் புலிதாகக் குறின்* (குறள்.599)

*ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்* (குறள்.763)

பகவத்கீதை, போரை ஏற்கும் நூல்; போர்க்களத்தில் எழுந்த நூல்; தன் உருவாக்கத்திற்குப் போர்களத்தையே அடிப்படையாகக் கொண்ட நூல்;அதனால், கீதையின் பாயிரமாக விளங்கும் முதல் அத்தியாயத்தில், போர்க்கள வருணனைகள் முதன்மை இடம் பெற்றுள்ளன.

திருக்குறள், போரை எதிர்க்கும் நூல்; போர்க்களத்தை வெறுக்கும் நூல்; அதனால் அதில் போர்க்களக் காட்சிகள் சிறப்பிடம் பெறவில்லை என்றாலும், ஒரு சில காட்சிகள் இடம் பெற்றுள்ளன; அவை போர் என்னும் உணர்வைத் தூண்டும் வகையல் அமையவில்லை. பலவும் இயற்கைக் காட்சி வெளிப்பாடுகளாகவும், போர்க்களத்தில் நடைபெறும் நிகவுகள் இவை எனவும் சுட்டுவனவாகவும் அமைந்துள்ளன. ஒரு சில குறள்களில், நாட்டில் பாதுகாப்பு கருதி வீரர்கள் மேற்கொள்ள போர்ச் செயற்பாடுகள் – உறுதிப்பாடுகள் பற்றிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

## அணிவகுப்பும் தலைமையும்

போர் பற்றிய நோக்கில் இரு நூல்களும் வேறுபடினும், இரு நூல்களிலும் போர் சார்ந்த சில சிந்தனைகள் ஒத்தனவாக அமைகின்றன. சான்றுக்குச் சில வருவாறு:

படை பெருமை பெற வேண்டுமானால், அதன் அணிவகுப்புச் செம்மையாக அமைய வேண்டும் என்பதை,

*'பாண்டவானீகம் வ்யூடம்'*

– வியூகமாய் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்த பாண்டவர் படை (கீதை,1:2)

*'சமூம் வ்யூடாம்'*

– மிகத் திறமையாக அணிவகுக்கப்பட்ட படை (கீதை, 1:3)

என வரும் பகவத்கீதையின் கருத்தாக்கங்கள் வழி அறிய முடிகின்றது. முதல் அத்தியாயத்தின் பிற சுலோகங்களிலுங்கூட இக்கருத்துகள் வருகின்றன.

திருவள்ளுவரும் இக்கருத்தினர் என்பதை,

*'தானை படைத்தகையால்பாடு பெறும்'* (குறள். 768)

*'தார்தாங்கிச் செல்வது தானை'* (குறள். 767)

என வரும் தொடர்கள் வழி அறிய முடிகின்றது. இவற்றுள் முதல் தொடர், படை, அதன் அணிவகுப்பால் பெருமை பெறும்' என்னும் பொருளையும், இரண்டாவது தொடர், '(வந்த படையைத் தடுக்கும் வகையில்) அணிவகுத்துப் போரிட்டு முன்னேறிச் செல்வது படை' என்னும் பொருளையும் தந்துள்ளன.

ஆக, இரண்டு நூல்களிலும், படைகளின் அணிவகுப்புகள் செம்மையாக அமைய வேண்டும், அந்த அணிவகுப்பின் சிறப்பால் படைகள் பெருமை பெறும் என்னும் கருத்து ஒத்தமையக் காண்கின்றோம். இந்த அணிவகுப்பு என்பது, படையின் கட்டுப்பாட்டிற்கு அடிப்படை என்பதால், போர் பற்றிய சிந்தனைகளில் இக்கருத்தாக்கம் இடம் பெற்றுள்ளது எனலாம்.

தன் ஆசானும் சிறந்த அந்தணத் தளபதியுமாகிய துரோணாச்சாரியாரிடம் பாண்டவர் படையைப் பற்றிக் கூறும் துரியோதனன்,

> ‘ஆசிரியரே, துருபத குமாரனான உங்கள் அறிவு சான்ற சீடனால் மிகத் திறமையாக அணி வகுக்கப்பட்ட பாண்டு புத்திரரின் சிறந்த படையைப் பாருங்கள்’ (கீதை, 1:3)

என்கிறாள். துரியோதனின் இந்தக் கூற்றில், படையின் அணிவகுப்புச் சிறந்திருந்தால் மட்டும் போதாது; படையும் படைத்தலைமையும் ஆற்றல் மிக்கனவாக அமைய வேண்டும் என்னும் கருத்தைப் பகவத் கீதை நுட்பமாக வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது. போர்த் திறமையும் அறிவும் பயிற்சியும் மிக்கவர்களால்தான் சிறந்த அணிவகுப்பை உருவாக்கம் செய்ய முடியும் என்பதையும் இப்பாடல் காட்டுகின்றது.

பாண்டவர் படைகளுக்குத் தலைமை தாங்கி இருப்பவர்களைப் பற்றித் துரியோதனன் கூறும்போது,

> *அர்ச்சுனன் பீமனுக்கு நிகரான போர்வல்ல வீரர்கள்* (கீதை, 1:4)
>
> *பலமுள்ள வில்லாளிகள்* (கீதை, 1:4)

எனக் கூறும் செய்திகளும் மேற்படிக் கருத்தை அரண் செய்வனவாக அமைகின்றன.

இதே கருத்து, துரியோதனன் தன் படைகளைப் பற்றியும் அதனைத் தலைமையேற்று நடத்துபவர்களைப் பற்றியும் துரோணாச்சாரியாரிடம் கூறும் கூற்றுகளிலும் பொதிந்துள்ளதைக் காண முடிகின்றது. (கீதை, 1:7–10)

வல்லாண்மை படைத்த படை வீரர்களை ‘நிலைமக்கள்’ என்றும், படைக்கும் தலைமை தாங்கும் தலைவர்களைத் ‘தலைமக்கள்’ என்றும் வழங்கும் திருவள்ளுவப் பெருந்தகை, ‘போர்க்களத்தில் வெற்றி கொள்ளும் வீரர்கள் பலரை உடையதாக இருந்தாலும், தக்க தலைவன் இல்லாத படை சிறப்படையாது’ என்னும் கருத்தை,

*நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
*தலைமக்கள் இல்வழி இல்* (குறள். 770)

என்னும் குறள்வழி வெளிப்படுத்தியுள்ளார். இக்கருத்து, பகவத்கீதையில் வரும் தலைமக்கள், படைகள் தொடர்பான கருத்துகளினூடே பொருந்தியுள்ள உணர்வுகளோடு பொருந்தி வருவதைக் காண முடிகின்றது.

## வில்லேர் உழவர்

போர்க்களத்தில் வில்லிற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு; பகவத்கீதை வில்லேந்திய வீரர்களை,

*'மஹேஷ்வாஸா'* (கீதை, 1:4)

என்றும்,

*'சர்வ ஏவ மஹாரதா'* (கீதை, 1:6)

என்றும் குறிப்பிடுகின்றது.

திருவள்ளுவரும் வில்லைச் சிறப்பாக வைத்து,

*'வில் ஏர் உழவர்'* (குறள்.872)

என அவர்களை வழங்குவதைக் காண முடிகின்றது. போர்க்களத்தை விட ஏர்க்களத்தை உயர்த்திப் பார்க்கும் திருவள்ளுவர், அந்த ஏர்க்களத்தின் சிறப்பினைப் போர்க்களத்தில் ஏற்றிப் பொருத்திப் பார்ப்பதை இதன்வழி அறிய முடிகின்றது. இத்தகைய போக்குக் கீதையில் இருக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில், கீதை போர்க்களத்தைப் போற்றும் நூல், ஏர்க்களத்தைப் போற்றும் நூல் அன்று.

## தலைவனுக்காக உயிர் கொடுத்தல்

தன் படையின் சிறப்புகளைப் பற்றிக் கூறும் துரியோதனன், அந்தச் சிறப்புகளுள் ஒன்றாக 'எனக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய எண்ணற்ற வீரர்கள் பிறரும் உள்ளனர்' எனக் கூறுவதை,

'அன்யே ச பஹவ: ஶூரா மதர்த்தே த்யக்ஜீவிதா:'
(கீதை, 1:9)

என்னும் கூற்றுவழி அறிய முடிகின்றது.

படையில் வீரர்கள், தன் தலைவனுக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவர்களாக அமைவதுண்டு என்பதை,

*புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*
*இரந்துகோள் தக்கது உடைத்து* (குறள்.780)

என்னும் குறள் வழி உய்த்துணர முடிகின்றது.

போர்க்களத்தில் சாதல் என்பது, தலைவனுக்காக மட்டும் என்றில்லாமல், தன் புகழை நிலைநாட்டுவதற்காகவும், சொன்ன சபதத்தை நிலைநாட்டுவதற்காகவும் நிகழ்வது உண்டு எனத் திருக்குறள் வரையறுத்துக் கூறுவதை,

*'சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்'*
(குறள்.777)

*'இழைத்தது இகவாமை சாவார்'* (குறள்.779)

என வரும் குறள் தொடர்கள்வழி அறிய முடிகின்றது.

நாட்டிற்காகப் போர்க்களத்தில் போராடி உயிர் விடுதல் என்பது போர் வீரர்களின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகின்றது எனலாம். ஆனால், தலைவனுக்காக உயிர்விடுதல் என்பது, போரை முதன்மையாகக் கொண்ட வீரயுக காலத்தின் எச்சங்கள் எனலாம். தலைவனுக்காகப் போர்க்களத்தில் உயிர்விட்டால் மோட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கை, இதற்குரிய காரணங்களுள் ஒன்று எனலாம்.

## அடிப்படை வேறுபாடு

போர் தொடர்பான சிந்தனைகளில் ஒரு சில ஒப்புமைக் கூறுகள் காணப்படினும், இரு நூல்களிலும் அடிப்படையான வேறுபாடு ஒன்று உண்டு; பகவத்கீதையின் முதல் அத்தியாயம், தம் நாட்டை இழந்தவர்கள் கொள்ளும் போர்நிலைச் செய்திகளை/ சிந்தனைகளைச் சுட்டுகின்றது; திருக்குறள்,

பகைவர்கள் போர் தொடுத்துவரின், அவர்களிடமிருந்து நாட்டைக் காக்க வேண்டிய படை நிலைகளைப் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கின்றது. இந்த அடிப்படை வேறுபாட்டாலும் இரு நூல்களிலும் போர் பற்றிய சிந்தனைகளில் வேறுபாடுகள் உருவாக்கம் பெற்றுள்ளன எனலாம்.

## போருக்கான எழுச்சி

போருக்கான சங்கங்கள் முழங்கியதும், துரியோதனனின் படைகளும் பாண்டவர் படைகளும் அவரவர் படைக் கருவிகளோடு போரிடத் தயார் நிலைக்கு வந்தனர். அர்ச்சுனனும் தன் காண்டீபத்தைக் கையில் ஏந்திப் போருக்குத் தயார் ஆயினன். தான் யார்யாரோடு போரிட வேண்டும், தன்னோடு வேறு யார் யார் உள்ளார்கள் என்பதை அறிய விரும்பிய அர்ச்சுனன், தன் தேரை இரு படைகளுக்கும் நடுவில், தனக்கு எதிரானவர்களைக் காணும் வகையில் நிறுத்துமாறு வேண்டினான்.

*'கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல்'* (குறள்.765)

பெற்ற எழுச்சியாளனாகவும்,

*'அமரகத்து வன்கண்ணர்'* (குறள்.1027)

என்னும் திருக்குறள் காட்டும் காட்சிக்கு எடுத்துக்காட்டாகவும் அர்ச்சுனன் நிமிர்ந்து நின்றான்.

அர்ச்சுனன் வேண்டியவாறே கண்ணனும் செய்தார்; அங்கே ஓர் உத்தியைக் கையாண்டார். பீஷ்மர், துரோணர் மற்றும் போரிடக் காத்திருந்த அரசர்கள் ஆகியோர் முன் இரு படைகளுக்கும் நடுவில் தேரை நிறுத்திப் 'பார்த்தா!, கூடியுள்ள இந்தக் கவுரவர்களைப் பார்' எனக் கூறினார்.

அர்ச்சுனனின் இந்தப் போர் எழுச்சிக் காட்சி 20 முதல் 25 வரையிலான சுலோகங்களில் இடம் பெற்றுள்ளது. கண்ணனிடம் தன் வேண்டுகோளை முன்வைக்கும் அர்ச்சுனன்,

'தீய அறிவினனான துரியோதனின் விருப்பத்தை நிறைவேற்று வதற்காகப் போர் புரிய இங்கு வந்திருப்பவர்களை நான் காண வேண்டும்'

என்கிறான். இதில், மாறுபட்ட உணர்வோடு எப்போதும் பாண்டவர்களைப் பார்க்கும் துரியோதனனைத் 'தீய அறிவினன்' எனச் சுட்டும் மன உணர்வு திருவள்ளுவர் கூறும்,

***'இகல்மேவல் இன்னா அறிவி னவர்'*** (குறள்.857)

என்னும் கருத்தோடு ஒத்தமைவதைக் காண முடிகின்றது. இந்தத் தொடரில், மாறுபட்ட உணர்வை விரும்பி வாழ நினைப்பவர்கள் தீய அறிவினர் எனத் திருவள்ளுவர் வரையறுக்கின்றார்.

துரியோதனன் தீய அறிவினன் என்பதை நன்றாக அறிந்தும், அவனோடு நட்புக் கொண்டு, அவனுக்காகப் போரிட்டு உயிர் துறக்க வந்திருக்கும் பிற நாட்டு அரசர்களைக் காணும் அர்ச்சுனனுக்கு, சேர்ந்த இனத்தின் தன்மைக்கு ஏற்ப அறிவு திரிபுபட்டிருக்கும் அவர்களின் அறியாமையைக் கண்டு அனுதாபம் கொள்வதை மேற்சுட்டிய கூற்றின் வழி உய்த்துணர முடிகின்றது.

இந்த உணர்வு,

***நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றுஆகும்; மாந்தர்க்கு***
***இனத்தியல்பது ஆகும் அறிவு*** (குறள்.452)

என்னும் திருக்குறள் கருத்தொடு ஒத்து அமைகின்றது எனலாம்.

***ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை***
***தான்சாம் துயரம் தரும்*** (குறள்.792)

என்னும் நட்பியல் கருத்தும் இங்கு எண்ணத்தக்கதாகும். இது, போர்க்கான முயற்சி நிலையில் அர்ச்சுனனின் மனநிலைக்குப் பொருந்தும் கருத்தாகக் கொள்ளலாம்.

## இரக்க உள்ளம்

போக்களத்தில் இரு படைகளுக்கும் நடுவில் தேரில் வந்து நின்ற அர்ச்சுனன், தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பார்த்தான். அங்கே இருப்பவர்கள், வேற்று நாட்டு மன்னர்கள் அல்லர்; முன்பின் அறியாத மனிதர்கள் அல்லர்; எல்லாரும் தன் உறவினர்கள், நண்பர்கள், தனக்குக் கல்வி கற்பித்த ஆசான்கள் என அவன் காணும் காட்சிகள் விரைகின்றன. இதனைப் பின்வரும் பாடல் கருத்து வெளிப்படுத்துகின்றது:

> இருதரப்புப் படைகளிடையே அங்குத் தந்தையரும் பாட்டனார்களும் ஆசிரியர்களும் மாமாக்களும் சகோதரர்களும் மகன்களும் பேரன்களும் நண்பர்களும் மாமனார்களும் மற்றும் பல நன்மை விரும்பிகளையும் போர்க்களத்தில் கூடியிருக்கக் கண்டான் அர்ச்சுனன் (கீதை, 1:27)

போர் நடைபெற்றால், இவர்களுள் இருப்பவர்கள்தான் இறக்கப் போகிறார்கள்; இரு தரப்பிலும் இழப்பு ஏற்படும். இந்த இழப்பு நியாயமானதா? தேவையானதா? ஆழ்மனத்தில் உறங்கிக் கிடந்த பாச உணர்வு அவனை அரவணைத்துக் கொளகிறது; இரக்கம் அவன் இதயத்தைப் பிசையத் தொடங்கியது. உள்ளத்திலும் நடுக்கம், உடலிலும் நடுக்கம். போர்க்களச் சூழலிலும் போர் என்பது தவறான பாதை என அவனுக்குப் புரியத் தொடங்கியது. இதனைக் கண்ணனை நோக்கி அர்ச்சுனன் கூறும் கூற்றுகளாக அமைந்த பின்வரும் சுலோகக் கருத்துகள் தெளிவாக்குகின்றன:

> குந்தி மகனான அர்ச்சுனன் அந்த நண்பர்களையும் உறவினர்களையும் கண்டபின், இரக்கத்தால் நிறைந்து இவ்வாறு கூறலானான் (கீதை. 1:27)

> அர்ச்சுனன் கூறினான்: என் அன்புக்குரிய கண்ணா, போரிடும் உணர்வோடு என்முன் கூடியுள்ள என் நண்பர்களையும்

> உறவினர்களையும் கண்டு என் உறுப்புகள் சோர்வு அடைகின்றன; உடல் நடுங்குகிறது; வாய் உலர்கிறது; மயிர்ச் சிலிர்ப்பும் ஏற்படுகிறது
> (கீதை, 1:28. 29)

> கையிலிருந்து காண்டீப வில் நழுவிக் கொண்டிருக்கிறது; உடலில் எரிச்சல் உண்டாகின்றது; என்மனம் குழம்புகிறது; நான் என்னையே மறக்கிறேன்; நிற்பதற்குக்கூட இயலாதவனாக இருக்கிறேன் (கீதை,1:30)

போரிடுவதுதான் அரசர் இயல்பு என்ற நிலையில், அந்த இயல்புக்கு மாறான ஒரு மன உணர்வு – போரிடுவது தவறு என்ற மன உணர்வு – அதிலும் குறிப்பாக, உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் போரிடுவது தவறு என்னும் மன உணர்வு – அர்ச்சுனன் உள்ளத்தில் ஒரு போராட்டக் களத்தை உருவாக்கிப் போர் நிகழ்த்துவதைக் காண முடிகின்றது. அர்ச்சுனனின் இந்தப் போராட்ட மனநிலைவழி ஓரளவான போர் மறுப்புக் கோட்பாடு வெளிப்படுவதை உணர முடிகின்றது. ஆனால் அந்த உணர்வு, உற்றார் உறவினர் ஆசான் உதவியோர் என்ற அளவில்தான் வெளிப்பட்டுள்ளது.

இந்தப் போர் மறுப்புக் கோட்பாடு, அன்று நிலவிய சமண, பௌத்த சமயங்களின் தாக்கங்கள் எனலாம். பௌத்தத்தைத் தழுவிய பேரரசன் அசோகனின் போர் மறுப்புப் பாதையும் பகவத் கீதையின் தத்துவப் பாதையில் ஒரு சிறிதளவான தாக்கத்தை ஏற்படுத்தியும் இருக்கலாம் என்பது அறிஞர்கள் பார்வை.

பகவத்கீதையில் முனையாகி இருக்கும் இந்தப் போர் மறுப்பு உணர்வு, திருக்குறளில் போர் மறுப்புக் கோட்பாடாக – கனிந்த கனியாகி இருப்பதைக் காண முடிகின்றது.

எந்த வகையில் யார் ஆயுதங்களை ஏந்தினாலும் அது கொடிய செயல்தான் என்பது வள்ளுவம். இதனை,

***‘கணை கொடிது’*** (குறள்.279)

*'வில்வணக்கம் தீங்கு'* (குறள்.827)

என்னும் வள்ளுவத் தொடர்கள் தெளிவு செய்கின்றன.

அரசர்க்குரிய இயல்புகளுள் ஒன்று போர்புரிதல், போரில் வெற்றி பெறுதல் என்ற எண்ணங்களுக்கு மாறாக,

*'வேல்அன்று வென்றி தருவது'* குறள்.546)

என மன்னர்களுக்கு அறிவுரை சொன்னவர் திருவள்ளுவர். அரசனின் கையில் வெம்மையான வேல் இருப்பதைவிடச் செம்மையான கோல் இருப்பது உயரிய நெறி எனக் கருதியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவரின் இந்தப் போர் மறுப்புப் பார்வை, உறவுகள் அளவினதாக அமையாமல், மனிதம் தழுவிய அளவினதாக அமைவதுதான் அதன் தனிச் சிறப்பு. மனித இன வரலாறுகள் போரில் அமைவதுதான் அதன் தனிச் சிறப்பு. மனித இன வரலாறுகள் போரில் பெறும் வெற்றிகளால் உருவாக்கம் பெறுவதாக அமையக் கூடாது, மனிதம் வெற்றி பெற்றதாக அமைய வேண்டும் எனக் கருதியவர் திருவள்ளுவர் என்பதனால், அவர் போரை மிகக் கடுமையாகவே சாடுகின்றார்.

*'படைகொண்டார் நெஞ்சம் (போல்) நன்றூக்காது'*
(குறள்.253)

என்பது அவர் துணிவு.

ஆனால், அதே வேளையில் நாடு சேர்ப்பதற்காகப் போர் தொடுத்து வருபவர்களிடமிருந்து நாட்டை – நாட்டு மக்களைக் காப்பது ஆட்சியாளன் கடமை என்பதால், நாடு காப்பதற்கான அளவினதான படை வேண்டும் என்ற அளவில்தான், போர் பற்றிய சிந்தனைகளைத் திருவள்ளுவர் தம் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

***என் வில்லான காண்டீபம்***
***கைகளிலிருந்து நழுவுகிறது*** (கீதை,1:29)

என்னும் அர்ச்சுனனின் கூற்று, அரசர்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய போர் செய்தல் என்னும் உணர்வு கைநழுவிச் செல்வதை நயமாக உணர்த்துவதாக அமைகின்றது.

போர்க்களத்தில் அர்ச்சுனனிடம் தோன்றும் இரக்க உணர்வு, போர் உணர்வைவிட மனித உறவுகள் மேலானவை என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அந்த உணர்வு, பகைவர்களாகத் தன் முன் இருப்பவர்களையும் நண்பர்களாகப் பார்க்கும் பார்வையை அருச்சுனருக்கு வழங்கியுள்ளது. இதனை,

*போரிடும் உணர்வோடு என்முன் கூடியுள்ள என்*
*நண்பர்களையும் உறவினர்களையும்* (கீதை, 1:28)

என அர்ச்சுனனின் கூற்றுவழி அறிய முடிகின்றது. அந்த இரக்க உணர்வு,

*பகை என்னும் பண்பிலதனை ஒருவன்*
*நகையேயும் வேண்டற்பாற் றன்று* (குறள்.871)

என்னும் உயர்நிலை உணர்வுக்கு அர்ச்சுனனைக் கொண்டு செல்லவில்லை என்றாலும்,

*'பகைநட்பாக் கொண்டு ஒழுகும்*
*பண்புடையாளன்'* (குறள்.874)

என்னும் நிலைக்கு அவனை மாற்றியுள்ளது;

*ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்*
*பொறுத்தாற்றும் பண்பே தலை* (குறள்.579)

என்னும் உணர்விற்கு ஆற்றுப்படுத்தியுள்ளது என அறிய முடிகின்றது.

ஆனால்,

*'பகையையும் உறவாக்கிக் கொள்'*

என்பது குறளின் குரல்

*'உறவைப் பகையாக்கிக் கொள்ளாதே'*

என்பது அர்ச்சுனனின் மனக் குரல். அந்த வகையில், பகை நட்பாகக் கொள்ளலிலும் ஒரு நுட்ப வேறுபாடு காணப்படுகின்றது.

*'படைகொண்டார் நெஞ்சம் (போல்) நன்றூக்காது'*

என்னும் தொடரில், படைக் கருவிகளைக் கையில் ஏந்துவாரால் பல தீய நிகழ்வுகள் நடைபெற வாய்ப்புகள் உள என்பதை மிக நுட்பமாக உணர்த்துகின்றார் திருவள்ளுவர். அர்ச்சுனன், தன் உறவுகளோடும் நண்பர்களோடும் போர் செய்தால், பல தீய நிகழ்வுகள் ஏற்பட உள்ளதை உணர்வதாகக் கூறுகின்றான். இதனை,

*கேசவா, கெடுதல்களை விளைவிக்கக் கூடிய சகுனங்களைக் காண்கின்றேன்* (கீதை, 1:30)

என அர்ச்சுனன் கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது. போருக்குப் பின் அசோகருக்குத் தோன்றிய அறிவுத் தெளிவு, போர்க்களத்தில் அர்ச்சுனனுக்குப் புலப்படத் தொடங்கியுள்ளது எனக் கொள்ளலாம்; இதனை, அசோகனுக்கு ஏற்பட்ட மன மாறுபாட்டின் ஓரளவான தாக்கம் என்றும் கொள்ளலாம்.

ஆனால், அசோகன் கண்ட போரில் விளைவுகளும், திருவள்ளுவர் கண்ட போரில் தீங்குகளும் ஆகிய இவற்றிலிருந்து வேறுபட்டது அர்ச்சுனன் கண்ட தீமைகள் என்பதைப் பின்னால் அர்ச்சுனன் கூறும் கூற்றுகளிலிருந்து அறிய முடிகின்றது. அது உறவு அளவினதாக மட்டுமல்லாமல், வருணச் சார்பினதாகவும் அமைவதைக் காண முடிகின்றது. மேலும் அர்ச்சுனனின் போர் மறுப்புச் சிந்தனை தற்காலிகமானதே.

## உறவும் துறவும்

அர்ச்சுனன் நின்றிருக்கும் போர்க்களம் என்பது, இது வேறு வருணத்தவர் இடையே போர் நடக்கும் போர்க்களம் அன்று; இருவேறு மதத்தவர் இடையே போர் நடக்கும் போர்க்களம் அன்று; இருவேறு இனத்தவர் இடையே போர் நடக்கும் போர்க்களம் அன்று; இருவேறு மொழியாளர் இடையே போர் நடக்கும்ம போர்க்களம் அன்று. ஒரே வருணத்தில் – குடியில் பிறந்த உறவுகளுக்கிடையே போர் நடைபெறும்

போர்க்களம். அதுவும், துரியோதனன் உள்ளிட்டோரின் பேராசையினால் உருவாக்கம் பெற்ற போர் நடைபெறும் போர்க்களம். இந்தப் போர்க்களத்தில் அழியப் போவது, இருதிறத்து உறவுகள். இதுதான் அர்ச்சுனனைப் பெரிதும் கலக்கமடைய வைக்கின்றது. அந்தக் கலக்கத்தின் ஊடேயும் அர்ச்சுனன் உள்ளத்தில் ஒரு தெளிவு இருந்ததையும் காணமுடிகின்றது.

உறவுகளையும் நண்பர்களையும் ஆசிரியப் பெருமக்களையும் கொல்வதால், வெற்றி பெற்றபோதும் பெரும் பழியே வந்து சேரும் என்பதை

அர்ச்சுனன் உறுதியாக நம்பினான். அந்த உறுதியின் அடிப்படையில் பின்வரும் கருத்துகளை முன்வைக்கக் காண்கின்றோம்:

> ***போரில் சுற்றத்தாரைக் கொல்வதால் எந்த நன்மையும் காணமுடியாது;*** (கீதை,1:30)
>
> ***எவர் பொருட்டு நாடும் போகங்களும் இன்பங்களும் விரும்பப்பட உள்ளனவோ, அவர்களே இல்லாது போகப் போகிறார்கள்;*** (கீதை, 1:34)
>
> ***திருதராட்டிர மக்களாகிய பாதகரைக் கொல்வதால், பாவமே வந்து சேரும்; அதனால் அவர்களைக் கொல்வது தகாது*** (கீதை, 1:36–37)

எனக் கூறும் அர்ச்சுனனின் கூற்றுகளைக் காணும்போது,

> ***'அறிவுடையார் ஆவது அறிவார்'*** (குறள்.427)
>
> ***'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்'*** (குறள்.428)
>
> ***'எதிரதாக் காக்கும் அறிவினார்'*** (குறள்.429)

என்னும் குறள்கள் நினைவுக்கு வருகின்றன. நாளை என்ன நடக்கும் என்பதை அர்ச்சுனன் கணக்கிட்டுக் கூறுவதைக் காணமுடிகின்றது.

தான் போரிட் உறவுகளை அழிப்பதால் வரும் விளைவுகளை எண்ணிப் பார்த்து நடுங்கும் அர்ச்சுனன், தன் நிலையைப் பின்வருமாறு தெளிவாக்குகின்றான்:

*வெற்றியையும் அரசையும் இன்பங்களையும் விரும்பவில்லை* (கீதை, 1:31)

*உறவுகளைக் கொன்றபின் வாழ்வதால் பயன் இல்லை* (கீதை, 1:34)

*இவர்கள் என்னைக் கொல்ல வந்தாலும் இவர்களை நான் கொல்ல விரும்பவில்லை* (கீதை, 1:35)

*மூவுலங்கள் கிடைப்பதானாலும், அதையும் விரும்பவில்லை* (கீதை, 1:35)

*உற்றாரைக் கொன்றுவிட்டு இன்புற்று இருப்பது முடியாது* (கீதை, 1:37)

இவை, கலக்க உரைகள் அல்ல: போர்க்களத்தில்கூட, போர் உணர்வை வென்று, எதிர்காலத்தைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்கும் உறவுப் பறவையின் தெளிவான உணர்வு உரைகள் எனலாம். உறவுகளுக்குள் எந்தச் சூழலிலும் பகைமை உணர்வோ போர் உணர்வோ உருவாக்கம் பெறுதல் கூடாது என அன்று நிலவிய எண்ணங்களின் எதிரொலிகள் இவை என்றும் கொள்ளலாம்.

இந்தக் கூற்றுகள், அர்ச்சுனன் உயர்த்திப் பார்க்க வைக்கின்றன.

உறவுகளைத் தழுவி வாழும் முறைமைகள் குறித்தும், அந்த உறவுகளுக்குள் நிகழும் உட்பகை உணர்வுகள் பற்றியும் தம் சிந்தனைகளை முன்வைக்கும் திருவள்ளுவர், உறவுகளுக்குள் நிகழும் போர் பற்றியும் அது தொடர்பான சிந்தனைகளையும் தனியே எடுத்துரைக்கவில்லை.

எனினும், போர்க்களத்தில் அர்ச்சுனன் கூறும் மேற்சுட்டிய கருத்துகள், திருக்குறளில் பிற களங்களில் ஓரளவு ஒத்தனவாக அமைவதைக் காணமுடிகின்றது.

தற்போது பகை கொண்டு போர் நிகழக் காரணமாக உறவுக்ள அமைந்தாலும், பழைய உறவை எண்ணிப் பார்த்துப் பாராட்டுவது சுற்றத்தின் தனிச் சிறப்பு எனத் திருவள்ளுவர்,

*பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்*
*சுற்றத்தார் கண்ணே உள* (குறள். 521)

என்னும் குறளில் கூறும் கருத்து, அர்ச்சுனனின் மன உணர்வுக்குப் பொருந்தி வருவதைக் காண முடிகின்றது. அதுவும் போர்க்களத்திலும் பாராட்டுதல் என்பது ஒரு தனிப்பெரும் சிறப்பு எனக் கொள்ளலாம்.

*இவர்கள் என்னைக் கொல்ல வந்தாலும் நான்*
*இவர்களைக் கொல்ல விரும்பவில்லை* (கீதை, 1:35)

என அர்ச்சுனன் கூறும் கூற்று,

*தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது*
*இன்னுயிர் நீக்கும் வினை* (குறள். 327)

எனக் கொல்லாமை அதிகாரத்தில் வரும் கருத்தோடு ஓரளவு ஒத்தமைகின்றது என்றாலும் வேறுபாடு உண்டு; பகவத்கீதையின் கருத்து குல உணர்வின் அடிப்படையிலானது; திருக்குறளில் வரும் கருத்து, உயிரின உணர்வின் அடிப்படையிலானது.

வெற்றி, இன்பங்கள் போன்றனவற்றை அர்ச்சுனன் வெறுத்துக் கூறும் போக்கு, திருக்குறளில் வ'ரும் 'அவா அறுத்தல்' என்னும் அதிகாரத்தில் வரும் கருத்துகளோடு ஓரளவு ஒத்தமைவனவாகக் கொள்ளலாம். ஆனால், திருக்குறளில் அவா அறுத்தல் என்பது துறவுக்குரியது; மெய்யுணர்வு நிலையில் வேண்டடப்படுவது.

பாதகதைக் கொல்வதால் பாதகமே வந்து சேரும் எனப் பகவத்கீதையில் அர்ச்சுனன் கூறுவதாக வரும் கருத்து,

திருக்குறளில் இடம் பெறாத கருத்து எனக் கொள்ளலாம்; இக்கருத்துக்கு மாறாக,

*கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்* (குறள்.550)

எனக் குறள் வரையறுக்கின்றது. கொலைப் பாதகர்களைக் கொல்ல வேண்டும் எனக் குறள் கூறவில்லையாயினும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்னும் கருத்து இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

*செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்*
*உய்யா விழுமம் தரும்* (குறள்.313)

என வரும் குறளின் கருத்து இங்கு ஓரளவு பொருந்துவதைக் காண முடிகின்றது. திருவள்ளுவர் பொதுவாகச் சொல்லும் இக்கருத்து பகவத் கீதையில் சுற்றத்தாரோடு தொடர்புபட்டதாக அமைகின்றது.

பொதுவாக, போர்க்களத்தில் உறவு அடிப்படையில் அர்ச்சுனனிடம் ஏற்படும் மனப் போராட்டங்கள் திருக்குறளில் இடம் பெறாதவை எனக் கொள்ளலாம். இப்படி ஒரு சூழலைத் திருக்குறள் தனக்குரிய சிந்தனைக் களமாகக் கொள்ளவில்லை என்றே கொள்ளலாம்.

ஒரு சத்திரியனின் மனப் போராட்டத்தையும் அதற்கிடையே உறவுகள் அளவிலான போர் மறுப்புச் சிந்தனைகளையும் பகவத்கீதை, உளவியல் பாங்கோடு மிக நயமாகவே விவரிக்கின்றது எனலாம்.

## வருணாசிரம / குல தருமம்

போர்க்களத்தில்கூட, இரக்க உணர்வு உள்ளவனாகவும், உறவு அளவிலான போர் மறுப்புச் சிந்தனையாளனாகவும், உறவுகளுக்காகத் தன் நுகர்வு இன்பங்களைக் கூடத் துறக்கத் தயாராக இருக்கும் நல்ல மனிதனாக அர்ச்சுனன் விளங்குவதைக் கண்டு, அவனை உயர்த்திப் பார்க்கும் பார்வை நம்மிடம் மேலும் தொடர வாய்ப்பில்லாமல் செய்து விடுகின்றது

அவனது அடுத்து வரும் கூற்றுகள்; அந்தக் கூற்றுகள், அர்ச்சுனன் முன்னர்க் கூறிய கூற்றுகள் எல்லாம், அடிப்படையான ஓர் உணர்வை மையமிட்டதாகத்தான் அமைந்திருந்தனவோ என ஐயுறவைக்கின்றன. அதுதான் அர்ச்சுனன் உள்ளத்தில் ஆழமாக வேரோடி இருந்த வருணாசிரமத் தரும – குல தரும உணர்வு ஆகும்.

திருதராட்டிரன் மக்களைக் கொல்லுதல் தகாது எனக் கூறும் அர்ச்சுனன், அதற்கான அடிப்படைக் காரணங்களாகக் கூறுவனவற்றை 38ஆம் சுலோகம் முதல் 47ஆம் சுலோகம் வரையில் காணமுடிகின்றது. இந்தப் பத்துச் சுலோகங்கள்தாம், அர்ச்சுனனின் போர் மறுப்புக்கான அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன எனக் கொள்ளலாம்.

> பேராசையால் அறிவிழந்த இவர்கள் (திருதராட்டிரன் குமாரர்கள்), குல அழிவால் ஏற்படும் குற்றத்தையும், நண்பர்களுக்குக் கேடு செய்வதால் ஏற்படும் பாவத்தையும் அறிவதில்லை (கீதை, 1:38)
>
> குல அழிவால் உண்டாகும் பாவங்களை நன்றாக அறிந்த நாம், இப்பாவத்திலிருந்து விலகுவது பற்றி ஏன் ஆலோசிக்கக் கூடாது? (கீதை, 1:39)
>
> எனக் கண்ணனைக் கேட்கும் அர்ச்சுனன், குல அழிவால் ஏற்படும் அழிவுகளைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறுகிறான்: குலம் அழிந்தால், என்றும் நிலையான குல தர்மங்கள் அழிந்து விடும்; (கீதை, 1:40)
>
> குல தர்மங்கள் அழிந்தால், குலம் முழுமையும் அதர்மம் சூழ்ந்து விடும்; (கீதை, 1:40)
>
> அதர்மம் சூழ்ந்தால், குலப் பெண்கள் கெட்டுப் போவர்; (கீதை, 1:41)
>
> குலப் பெண்கள் கெட்டால், வர்ணக் கலப்பு (சாதிக் கலப்பு) ஏற்படும்; (கீதை, 1:41)

> வர்ணக் கலப்பு ஏற்பட்டால், அந்தக் குலத்தார்க்கும் குலத்தை அழித்தவர்க்கும் நரகமே வாய்க்கும்; (கீதை, 1:42)
>
> வர்ணக் கலப்பால் பிறப்பவர்களுடைய முன்னோர்கள் உணவுக்கடன் (பிண்டம்), நீர்க்கடன் ஆகியவற்றைப் பெற முடியாமல் வீழ்ச்சி அடைவர்; (கீதை, 1:42)
>
> வர்ணக் கலப்பால் வரும் குற்றங்களால், என்றும் உள்ள குல தர்மம், வருண தர்மம் ஆகியன அழியும்; (கீதை, 1:43)
>
> குல தர்மத்தை இழந்தவர் நீண்ட காலம் நரகத்தில் உழல்வர் (கீதை, 1:44)

அர்ச்சுனனின் இந்தக் கூற்றுகளைக் காணும்போது, அவன் உள்ளத்தில் எழுந்த, உறவுகள் அளவிலான போர் எதிர்ப்புச் சிந்தனைகள் என்பன, குல தர்மமும் வருண தர்மமும் காப்பாற்றப்பட வேண்டும் என்னும் அடிப்படை நோக்கத்தை மையமிட்டவனாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. உறவுகளைவிடக் குல தருமமும் வருணாசிரம தருமமும் அவனுக்கு முக்கியமாகத் தோன்றியுள்ளதையும் உணர முடிகின்றது.

குல தருமத்தையும் வருணாசிரம தருமத்தையும் அழிப்பதை மிகப் பெரும் பாவமாகக் கருதும் அர்ச்சுனன்,

> 'ஐயகோ, அரச இன்பத்திற்கு ஆசைப்பட்டு, நம் உறவினர்களையே கொல்லும் பெரும் பாவத்தைச் செய்ய முற்பட்டு விட்டோமே' (கீதை, 1:46)
>
> 'கையில் போர்க்கருவிகள் இன்றியும் எதிர்க்காமலும் இருக்கும் என்னை, போர்க்கருவிகளை ஏந்திய திருதராட்டினரின் மக்கள் போரில் கொன்றாலும், அதுவும் எனக்கு நன்மையாகவே அமையும்' (கீதை, 1:47)

என்று புலம்புகின்றான். புலம்பியவன், அம்புகளுடன் வில்லையும் எறிந்துவிட்டு, மனத்தில் துயரங்கள் நிறைந்தவனாகத் தேர்த் தட்டில் அமர்ந்துவிட்டான் என்கிறது பகவத்கீதை. அர்ச்சுனனின் இந்தக் கூற்றுகளும் செயல்களுமே, கண்ணன் பகவத்கீதை என்னும் அரிய நூலை வழங்குவதற்குக் காரணமாயிற்று.

அர்ச்சுனனின் போர் மறுப்பு உணர்வு, உறவுகள் அளவினதாகவாவது அமைகின்றதே என எண்ணிய எண்ணத்திற்கு மாறாக, குல தர்மத்தையும் வருணாசிரம தர்மத்தையும் காக்கும் பொருட்டே அந்தப் போர் மறுப்பு உணர்வு வெளிப்பட்டுள்ளது எனக் காணமுடிகின்றது.

குல தர்மத்தையும் வருணாசிரம தர்மத்தையும் காப்பதற்காக க்ஷத்திரியன் தன் உயிரையும் விடத் தயாராக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தின் எதிரொலியையும் அர்ச்சுனனின் இறுதிப் பேச்சுகள் வெளிப்படுத்துகின்றன.

போரின் காரணமாகக் குலதர்மம் அழியும்போது, கலப்பு மணம் ஏற்பட்டுவிடுமே என்றும் அர்ச்சுனன் அஞ்சுவதைக் காணமுடிகின்றது; கலப்பு மணம் என்பது வருணாசிரம நோக்கை அழித்துவிடும் என்ற எண்ணத்தில் அப்படி ஓர் அச்சம் வெளிப்படுவதை உணர முடிகின்றது.

குலம் என்பது, வருணப் பாகுபாட்டிற்குள் அமையும் பிரிவுகள். ஒரே வருணத்திற்குள் பல குலங்கள் அமையும்; இந்தக் குலங்கள், பண்பாட்டால், பழக்க வழக்கங்களால், சடங்குகள் போன்றன மேற்கொள்வதால் வேறுபட்டவர்களாக அமைந்தாலும் வருணம் என்று வரும்போது ஒன்றுக்குள் அடக்கமாகி விடுகின்றார்கள். குலங்களுக்குள் வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் இருந்தாலும் அந்த வருணத்திற்குள்தான் அந்த உயர்வு தாழ்வுகள் அமையும்.

ஒரு வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்களை முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற

மாணவர்கள், தேர்வில் தோல்வி கண்ட மாணவர்கள் என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம்.

முதல் வகுப்பு மாணவர்களுள், ஒருவர் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம்; மற்றொருவர், நூற்றுக்கு எண்பது மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம்; அடுத்தவர், நூற்றுக்கு எழுபது மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம்; அவர்களுள், கடைசியாக வருபவர் நூற்றுக்கு அறுபது மதிப்பெண்கள் பெற்றிருக்கலாம். நூற்றுக்கு நூறு பெற்றவர் உயர்ந்தவராகவும் நூற்றுக்கு அறுபது பெற்றவர் முதல் வகுப்பு மாணவர்களுக்குள் தாழ்ந்தவராகவும் கருதப்படலாம். ஆனால், அந்த உயர்வு தாழ்வுகள் முதல் வகுப்பு மாணவர்கள் என்பதற்குள்தான்.

அதுபோன்றதே, பிற வகுப்பு மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், இது போன்றதுதான், வருண பாகுபாட்டிற்குள் அமையும் குலங்கள் வகையிலான உயர்வு தாழ்வுகளும்.

பிராமணர்களுக்குள் பல குலங்களும் அவற்றுள் உயர்வு தாழ்வுகள் இருந்தாலும் அந்த உயர்வு தாழ்வுகள் அந்த வருணத்திற்குள் தான் அமையும்; அதுபோன்றே க்ஷத்திரியர்களுக்குள் பல குலங்களும் அவர்களுக்குள் உயர்வு தாழ்வுகள் இருந்தாலும், அந்த உயர்வுகளும் தாழ்வுகளம் அந்த க்ஷத்திரிய வருணத்திற்குள்தான். க்ஷத்திரியர்களுள் உயர்ந்தவர்கள், பிராமணர்களுள் உயர்ந்தவர்களைவிட மேம்பட்டிருந்தாலும், அவர்கள் பிராமணர்களுக்குள் தாழ்ந்தவர்களாக இருப்பவர்களைவிடவும் கூட உயர்ந்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்; அப்படியே பிற வருணத்தாருள்ளும். இதுவே, வருணாசிரமத்தின் அடிப்படை.

மனு முதலிய வருணத்தை அடிப்படையாகக் கொண்ட அற நூல்கள் கூறுகின்ற குல தர்மம் வருணாசிரம தர்மம் என்னும் இந்த அடிப்படையிலிருந்து கீதை வேறுபடுகிறதா?

மாறுபடுகின்றதா? என்பதை அடுத்து வரும் அத்தியாயங்களைக் கொண்டுதான் காணமுடியும். முதல் அத்தியாயத்தில் குல தருமம், வருணாசிரம தருமம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளனவே தவிர, விரிவான விளக்கங்கள் இடம் பெறவில்லை. அந்த குறிப்புகளைக் கொண்டு பகவத் கிதையின் நோக்கைக் கணக்கிட முடியாது; கணக்கிடுவதும் சரியாக அமையாது.

ஏனெனின், பகவத்கீதைக்கு முற்பட்ட தரும சாத்திரங்களிலிருந்து சற்றுச் செம்மை செய்யப்பட்ட நூலாகப் பகவத்கீதை அமைந்துள்ளது என்பது அறிஞர்கள் முடிவு என்பதை மறந்துவிடவும் கூடாது.

## திருவள்ளுவரின் பார்வை

இனி குல தர்மம், வருணாசிரம தர்மம், கலப்பு மணம் இவை பற்றிய திருவள்ளுவரின் பார்வைகள் என்ன எனக் காண்போம்.

திருவள்ளுவர், குலம் என்பதைச் சுட்ட,

இல்

குடி

குடும்பம்

குலம்

என்னும் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. திருக்குறளில் வரும் ‘குடிமை’ என்னும் அதிகாரத்திற்குள்ளேயே இந்தச் சொல்லாட்சிகள் வருகின்றன; உரையாசிரியர்களும் இச்சொல்லாட்சிகளை ஒரு பொருள் குறித்தனவாகவே வழங்கியுள்ளனர்; இவை, மேற்குறித்த கருத்தை வலியுறுத்துவனவாய் அமைகின்றன.

இவற்றைப் பார்க்கும்போது, குலம் என்னும் சொல், குடும்பம் என்பதோடு தொடர்புடையதாக அமைகின்றது எனலாம்.

திருக்குறளில் குடி என்னும் சொல், இரு நிலைகளில் தொடர்புபட்டதாக அமைகின்றது. ஒன்று, அரசோடு தொடர்புபட்டதாக அமைகின்றது; மற்றொன்று, குடும்பத்தோடு தொடர்புடையதாக அமைகின்றது. குடி என்னும் சொல் அரசோடு தொடர்புடையதாக வரும் குறள்கள்/ குறள் தொடர்கள் வருமாறு:

***படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்***
***உடையானாம் அரசருள் ஏறு*** (குறள்.381)

***கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்***
***உடையானாம் வேந்தார்க்கு ஒளி*** (குறள்.390)

***வானோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்***
***கோல்நோக்கி வாழும் குடி*** (குறள்.542)

***'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்'*** (குறள்.544)

***'குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்வேந்தன்***
***வடுவன்று தொழில்'*** (குறள்.549)

***'கூழும் குடியும் ஒருங்குஇழக்கும்'*** (குறள். 554)

***'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல்'*** (குறள்.632)

இவற்றை நோக்கும்போது, குடி என்பது, அரசனின் ஆறு உறுப்புகளுள் ஒன்றாக அமைவது; அரசால் காக்கப்படுதற்குரியது; அரசுக்குக் கட்டுப்பட்டது என்பன பெறப்படுகின்றன.

பொதுவாக நோக்கின், ஓர் அரசனுக்குக் கட்டுப்பட்டு, அவன் கட்டுப்பாட்டில் வாழ்கின்ற மக்கள் கூட்டம் என்பதைக் 'குடி' என்னும் பெயர் சுட்டுவதாகக் கொள்ள இடம் உளது. இவ்வாறு வாழும் குடிகளைக் குடிமக்கள் என்பர்.

அரசு என்பது பெரியது; குடும்பம் என்பது சிறியது. அரசு என்பதனோடு தொடர்புபட்ட நிலையில் வரும் குடி என்னும் சொல்லோடு, குடும்பம் என்பதனோடு தொடர்புபட்டு வரும் குடி

என்னும் சொல்லைப் பொருத்திப் பார்ப்பின், குடும்பம் என்பதனோடு தொடர்புடைய குடி என்னும் சொல்லுக்கு, ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டு வாழும் உறவுடைய மக்கள் கூட்டம் என்று பொருள் கொள்ளலாம்.

*'அடுத்துஊன்றும்*
*நல்லாள் இல்லாத குடி'* (குறள்.1030)
*'குடியாண்மை'* (குறள்.609)
*'இல்லாண்மை'* (குறள்.1026)

என வரும் தொடர்கள், ஒரு தலைமையின்கீழ் / ஆள்மையின்கீழ்க் கட்டுப்படுதல் என்னும் கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இந்தக் குடி என்பது வழிவழியாக – தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து அமைவது என்பதை,

*'குடிஎன்னும் குன்றா விளக்கம்'* (குறள்.601)
*'வாய்மைக்குடி'* (குறள்.953)
*'பழங்குடி'* (குறள்.955)
*'நீள்வினையான் நீளும் குடி'* (குறள்.1022)
*'அடுத்துஊன்றும் நல்லாள் இலாத குடி'* (குறள்.1030)

என்னும் தொடர்கள் வழி அறிய முடிகின்றது. அதாவது, குடி என்பது, வழிவழியாகத் தொடர்வது; ஒருவருக்கு அடுத்து இன்னொருவர் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்துவது என்னும் பொருள்கள் கிடைக்கின்றன.

அதாவது, குடி என்பது, ஒரு தலைமையின்கீழ், வழிவழியாக வரும் ஒரு குடும்பத்தின் தலைமுறைகள் எனக் கொள்ளலாம். அந்தக் குடியில் வழிவழியாகப் பிறப்பதைக் 'குடிப்பிறத்தல்' (குறள்கள் 681, 992) என்றும், ஒரு கடியில் பிறப்பாரை 'இற்பிறந்தார்', (குறள் 951, 1044) 'குடிப்பிறந்தார்'

(குறள்கள் 952, 954,957) 'குலத்திற் பிறந்தார்' (குறள். 959) என்றும் திருவள்ளுவர் வழங்குகின்றார்.

## குடிப்பிறப்பும் மதிப்பும்

குடிப் பிறப்பு என்பதற்கு ஒரு பெரும் மதிப்பு எல்லா நிலையிலும் இருக்க வேண்டும் எனத் திருவள்ளுவர் எதிர்பார்ப்பதைத் திருக்குறளில் காணமுடிகின்றது.

ஒரு பணியில் ஒருவரைச் சேர்க்க வேண்டுமானால், அல்லது, ஒரு பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டுமானால், அவர் எந்தக் குடியில் பிறந்தவர் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை,

***குடிப்பிறந்த குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்***
***நாண்உடையான் கட்டே தெளிவு*** (குறள். 502)

என்னும் குறள் தெளிவு செய்கின்றது.

தூது உரைப்பார்க்குரியவராகத் தேர்வு செய்வதற்குரிய தகுதிகளுள் ஒன்றாகக் குடிப்பிறப்பும் கருத வேண்டும் எனத் திருவள்ளவர் வரையறுத்துக் கூறுவதை,

***அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்***
***பண்புடைமை தூதுரைப்பான் பண்பு*** (குறள்.681)

என்னும் குறள் தெளிவு செய்கின்றது.

அரசியல் அளவில் மட்டும் என்று இல்லாமல், சமுதாய அளவிலும் அதற்கு ஓர் இன்றியமையா இடம் இருப்பதைத் திருவள்ளுவம் உணர்த்துகின்றது. ஒருவரோடு நட்புக் கொள்வதற்கு முன் அவர் எந்தக் குடியில் பிறந்தவர் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும் எனத் திருவள்ளுவர் கருதுவதை,

***குணனும் குடிமையும் குற்றமும் குன்றா***
***இனனும் அறிந்துயாக் நட்பு*** (குறள்.793)

*குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்*
*கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு*
(குறள்.794)

என வரும் குறள்கள் தெளிவு செய்கின்றன.

ஆக, பலநிலைகளில் குடிப்பிறப்பு என்பது, ஒரு பெரும் தகுதியாகக் கருதப்படுவதை – கருதப்படவேண்டும் எனத் திருவள்ளவர் வரையறுப்பதைக் காணமுடிகின்றது. அந்த அளவிற்குக் குடிப்பிறப்பு என்பது ஓர் அடிப்படையானதாக அமைகின்றது. பலவற்றிற்கும் குடிப்பிறப்பு என்பதை ஏன் அடிப்படையானதாகக் கருதுகின்றார் என்பதற்கு விடை காண வேண்டுமானால், முதற்கண், அவர் கடிமை என்பதற்கு என்ன பொருள் கொண்டுள்ளார் எனக் காண்பது ஒருவகையில் துணை செய்வதாக அமையலாம்.

## குடிமை

திருக்குறளில் 'குடிமை' என்னும் சொல்லாட்சி, அதிகாரத் தலைப்பாக ஓரிடத்திலும், குறட்பாக்களுக்குள் மூன்று இடங்களிலும் இடம் பெற்றுள்ளது.

*'ஒழுக்கம் உடைமை குடிமை'* (குறள்.133)

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்** (குறள்.608)

**குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு** (குறள்.793)

இக்குறள்களில் 'குடிமை' என்னும் சொல், குடியின் இயல்பு, குடியில் பிறந்தாரது இயல்பு என்னும் பொருள்களைத் தந்துள்ளதைக் காணமுடிகின்றது. பொதுவாக, குடி என்றாலே உயர்ந்த குடி என்னும் பொருளில்தான் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

என்றும் உயர்ந்த குடியில் பிறந்தாரது இயல்பு என்றும் பொருள் தருவதாகத் திருக்குறளில் அமைகின்றது.

## உயர்ந்த குடியில் பிறந்தவர் இயல்புகள்

ஒருவர் உயர்ந்த குடியில் பிறந்தவர் என்றால், அவரிடம் அந்த உயர்ந்த குடிக்குரிய பண்புகள் இயல்பாகவே வந்தமையும் எனத் திருவள்ளுவர் கருதுவதை,

*ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்* (குறள்.133)

*இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல*
*குலன்உடையான கண்ணே உள* (குறள்.223)

*இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு* (குறள்.951)

*ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்*
*இழுக்கார் குடிப்பிறந் தார்* (குறள்.952)

*நகைஈகை இன்சொல்இல இகழாமை நான்கும்*
*வகைஎன்ப வாய்மைக் குடிக்கு* (குறள்.953)

*நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்*
*குலத்தின்கண் ஐயப் படும்* (குறள்.958)

*நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்* (குறள்.959)

என்னும் குறள்கள் உணர்த்துகின்றன.

குலத்தின் வாழ்வும் தாழ்வும் அந்தக் குலம் எந்த வருணத்திற்குள் அமைகின்றதோ அந்த வருணத்திற் குள்ளாகவே அமையும் என்பது பொதுவான வருணாசிரமப் பார்வை. குலம் என்பதை அந்தந்தக் குலத்திற்குரிய பண்புகளோடு பழக்க வழக்கங்களும் வரையறுக்கின்றன என்பது வருணாசிரிமம். இதில் கீதையின் பார்வை என்ன என்பதை முதல் அத்தியாயத்திலிருந்து அறிய முடியவில்லை.

திருவள்ளுவர் குலம் என்பதை, மனிதன், உலக மனிதர்கள் என்னும் பொதுப்பார்வையில் பார்க்கின்றார். உலக மாந்தர்களுக்கிடையே அமையும் பல கோடி குடும்பத் தலைமுறைகளையும் அவர் குலம் என்ற பார்வையில்தான் பார்க்கின்றார்; அவருடைய பார்வையில் வருணாசிரமத்திற்கு இடம் இல்லை; குலத்திற்குக் குலம் பண்புகள் மாறுபட அமையும் எனவும் அவர் உரைக்கவில்லை; எல்லா மாந்தர்க்கும் வேண்டிய உயர்நிலைப் பண்புகளையே குலப் பண்புகளாகக் கொள்கின்றார்.

ஆகவே, வருணாசிரம தர்மத்தின் அடிப்படையிலான குல தர்மத்தைத் திருவள்ளுவர் ஏற்கவில்லை என்பது தெளிவு.

## வருணாசிரம தர்மம்

அடுத்து அறிய வேண்டியது, வருணாசிரம தர்மம் பற்றிய திருவள்ளுவரின் பார்வை என்ன என்பது. இந்தியாவில் வருணாசிரமத்தின் திரண்ட வெளிப்பாடாக விளங்குவது சாதியம் ஆகும். அந்தச் சாதியத்தைத் திருவள்ளுவர் ஏற்கின்றாரா? எதிர்க்கின்றாரா? என்பதை அறிவதன்வழி அவருடைய வருணாசிர தர்மம் பற்றிய சிந்தனையை அறிய முடியும்.

ஆகையினால், அத்தகைய போக்கில் பின்வருமாறு அவருடைய சிந்தனைகளுக்கு விடை காணலாம்;

1. தம் சாதியச் சார்பு இன்னதென வெளிப்படுத்தல்
2. சாதிய ஏற்பு அல்லது எதிர்ப்பு
3. சாதியப் பொதுப் பார்வை

தம் சாதியச் சார்பை வெளிப்படுத்தல் என்னும் அடிப்படையில் பார்த்தால், பின்வரும் முடிவுகள் கிடைக்கின்றன:

1. திருவள்ளுவர் தம் சாதி இன்னது என வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்தவில்லை;

2. தம் சாதியம் சார்ந்த அளவிலான பெருமித உணர்வை அணுவளவும் வெளிப்படுத்தவில்லை;

3. தம் சாதியை உயர்த்திக் கூறவில்லை; அந்த நோக்கில் பிற சாதியினரைத் தாழ்த்தவும் இல்லை;

4. தம் உற்றார் உறவினர்களின் சாதியச் சார்புகளையோ அவர்களின் சாதியப் பெருமித உணர்வுகளையோ தம் நூலில் வெளிப்படுத்த வில்லை;

5. தம் சாதிய முன்னேற்றம் பற்றிய கருத்துகளைக் கூறவில்லை;

6. தம் சாதியைச் சார்ந்தவர்களுக்குத் தம் நூலில் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ முன்னுரிமை தரவில்லை;

7. தம் சாதியச் சார்புடைய தெய்வங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றிற்குத் தம் நூலில் இடம் தரவில்லை;

8. சாதியப் பெயர்களைச் சுட்ட நேர்ந்தால், காரணம் இல்லாமல், தம் சாதியப் பெயரை முன்வைத்து ஏனைய சாதியப் பெயர்களைச் சுட்டவில்லை

போன்ற சிறப்பு நிலைகளைத் திருக்குறளில் காணுகின்றோம். திருவள்ளுவர் மறந்தும் கூடத் தம் சாதி இன்னது எனச் சுட்டவும் இல்லை, சுட்ட விரும்பவும் இல்லை என்பதையே திருக்குறளைப் படிப்பார் நன்கு உணர்வர்.

அதனால்தான், திருவள்ளுவரின் சாதி எது எனக் காணமுனைந்தவர்கள் பலரும், தத்தமக்குத் தோன்றி வகைகளில் எல்லாம் எவ்வித ஆதாரங்களும் இல்லாமல், திருவள்ளுவர் இன்ன சாதியினர் எனச் சுட்டும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்; சுட்டியும் உள்ளனர். அவை எல்லாம் மறுக்கப்படுவனவாகவும் மாற்றத்திற்கு உரியனவாகவுமே உள்ளன.

திருவள்ளுவர் இன்ன சாதியினர் என ஒவ்வொரு ஆய்வாளரும் ஒவ்வொரு சாதியைச் சுட்டியிருப்பதிலிருந்தே அவர் தம் சாதியை எள்ளளவும் சுட்டவில்லை எனத் துணியலாம்.

சாதிய ஏற்பு அல்லது எதிர்ப்பு என்ற அடிப்படையில் பார்ப்போமானால், வருணாசிரமம் சார்ந்த கருத்துகள் யாவும் குறளில் இடம் பெறவில்லை என அறிய முடிகின்றது:

1. கடவுள் படைப்பாளர் என்னும் கருத்தும் அதன் அடிப்படையில் வருணங்களையும் / சாதிகளையும் கடவுளே படைத்தார் என்னும் கருத்து உருவாக்கமும் திருக்குறளில் இல்லை;

2. கடவுளே சாதிகளைப் படைத்தார் என்பதனாலும் அவற்றை மாமுனிவர்களும் அறிஞர்களும் இதிகாசங்களும் புராணங்களம் ஏற்று உரைத்திருப்பதோடு பிறரும் ஏற்கவும் வேண்டும் எனவும் உரைத்திருப்பதால், மனிதராகப் பிறந்த அனைவரும் அதனை ஏற்க வேண்டும் என்னும் கருத்து திருக்குறளில் இல்லை;

3. சாதியம் சார்ந்த நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், விழாக்கள், சடங்குகள் போன்றனவற்றைப் பெரிதும் சுட்டவில்லை; அப்படிச் சுட்டினாலும் பொதுவான கண்ணோட்டத்தில் அல்லாமல், சாதியக் கண்ணோட்டத்தில் சுட்டவில்லை;

4. ஒவ்வொரு மனிதரும் இன்ன சாதியில் பிறக்க வேண்டும் எனக் கடவுள் வரையறுக்கின்றார் என்னும் கருத்தைத் திருவள்ளுவர் ஏற்கவில்லை;

5. வருணங்கள் நான்கு என்பதையோ நான்கு வருணப் பெயர்களை முறைப்படுத்தி உரைப்பதையோ தேவை கருதியோ தம் நூலில் பதிவு செய்யவில்லை; அப்படியே ஏதேனும் ஒரு பெயரைச் சுட்ட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், சாதியம் சார்ந்த தவறான சிந்தனைக்கு

எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில் குறிப்பிட்ட சாதியப் பெயரைச் சுட்டியதைக் காணமுடிகின்றது;

6. பிறப்பால் உயர்வு தாழ்வுகள் அமைகின்றன என்னும் வருணாசிரமக் கருத்தாக்கத்தை ஏற்காமல், ‘ பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்’ எனத் தெளிவுபடக் கூறியுள்ளார்;

7. தொழிலால் வேறுபாடுகள் உண்டு என்பதையும் அதன் அடிப்படையிலேயே ஏற்றத் தாழ்வுகள் அமைகின்றன என்பதையும் ஏற்காமல், எந்தத் தொழிலாயினும் அந்தத் தொழிலைச் செய்யும் திறன், அதனை முடிக்கும் திறன் போன்றனவற்றால்தான் வேறுபாடுகள் உண்டு எனவும் அதன் அடிப்படையில் தான் உயர்வு தாழ்வுள் அமைகின்றன எனவும் காட்டியுள்ளார்;

8. ஒரு குறிப்பிட்ட வருணத்தார் தம்மை உயர்த்திக் கொண்டு, பிற வருணத்தாரைத் தாழ்த்தும் நோக்கில் முன்வைத்த கருத்து உருவாக்கங்களை ஏற்காததோடு, அவற்றிற்கு எல்லார்க்கும் பொதுவான நோக்கில் மாற்றுக் கருத்துகள் தந்துள்ளார்; சான்றுகளாக, வேள்வி, அந்தணர், அமிழ்தம் போன்றனவற்றிற்குத் திருவள்ளுவர் தந்துள்ள விளக்கங்களைக் கொள்ளலாம்.

9. தொழிலாளர்களின் பெயர்களை வருணநோக்கில் முன்வைக்காமல், குறிப்பிட்ட தொழில் செய்பவர்கள் என்னும் நோக்கில் வெளிப்படுத்தியுள்ளார்;

10. அந்தணரினும் அரசனைத் தாழ்ந்தவனாகக் கருதும் வருணாசிரமக் கருத்து உருவாக்கத்தை ஏற்காமல், அரசனே அரசாட்சியில் மேலானவன் எனக் கருத்துரைத்துள்ளார்;

11. குடி, குலம் என்னும் பெயர்களை வருணா சிரமத்திற்குள் உள்ளடக்கமாக அமைபவை எனக் கொள்ளாமல், மனித குலத்தின் தலைமுறைகள் எனப் பொதுநிலையில் கொண்டுள்ளார்;

12. மனித சமுதாயத்தை ஏதேனும் ஒரு வகையில் பிரித்துப் பார்க்கும் பிரிவினை உணர்வுகளைச் சாடியுள்ளார்;

13. வருணாசிரமத்தில் இழிவாகக் கருதப்பட்ட உழவை உயர்த்தியும் உயர்வாகக் கருதப்பட்ட பிச்சை எடுத்தலை தாழ்த்தியும் கருத்தாக்கங்களை முன்வைத்துள்ளார்;

14. தெய்வமாதல் என்னும் நிலையில், எந்தச் சாதியினரும் வாழும் முறைப்படி வாழ்ந்தால் தெய்வமாகலாம் என வரையறுத்து உரைத்துள்ளார்;

15. வருணங்களைப் படைத்த வேதங்களின் தத்தவங்களில் ஐயப்பாடுகள் கொள்ளுதல் கூடாது என்றும், அவற்றைப் பற்றிய வினாக்களை எழுப்பக் கூடாது என்றும் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் முன்வைக்கப்பட்ட கருத்து உருவாக்கங்களை மறுத்து, எப்பொருள் எப்படிப்பட்டதாயினும் யார்யார்வாய்க் கேட்பினும் அப்படியே ஏற்காமல், அவற்றின் மெய்ம்மையைக் காணவேண்டும் என ஆற்றுப்படுத்தியுள்ளார்;

16. கடவுள், தெய்வங்கள் போன்றனவற்றை வழிபடும் தகுதியும் அவற்றின் பயனை நேரடியாகப் பெறும் தகுதியும் எல்லாச் சாதியினருக்கும் பொது எனக் காட்டியுள்ளர், கடவுள் வழிபாட்டில் இடைத்தரகர்கள் இல்லா நிலையை உருவாக்கம் செய்துள்ளார்;

17. ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்னும் கருத்து உருவாக்கத்தை மறுத்து, மனித குலத்துக்கே ஒரு நீதி என்னும் சமன்மைக் கருத்தை முன்வைத்துள்ளர்;

என வரும் இக்கருத்து ஆக்கங்கள் அனைத்தும், வருணாசிரம தர்மத்திற்கு மாறுபட்ட கருத்துகளாக அமைவதால், திருவள்ளுவர், வருணாசிரம தர்மத்தை ஏற்கதாவர் மட்டும் அல்லர், அதனை எதிர்க்கும் வகையில், வருணாசிரம தர்மத்தில் வரும் மனித நேயத்திற்கு மாறான கருத்துகளுக்குப் பக்குவமான நிலையில் மாற்றுக் கருத்துகளை முன்வைப்பதைக் காண முடிகின்றது.

## கலப்பு மணம்

திருவள்ளுவர் சாதி கருதாதவர்; மதம் கருதாதவர்; இனம் கருதாதவர்; மொழி கருதாதவர்; நாடு கருதாதவர். இந்தப் பிரிவினை உணர்வுகளை எல்லாம் கடந்து நின்ற அப்பெருந்தகை, இந்தப் பிரிவினை உணர்வுகளை எல்லாம் கடந்து நிற்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்க நினைத்துள்ளார். அந்த உணர்வை வளர்ப்பதற்கான பல்வேறு வழிகளில் ஒன்று காதல் திருமணம்.

உலகு தழுவிய புதிய அகப்பொருள் நெறியை உருவாக்கம் செய்த திருவள்ளுவப் பெருந்தகை, அந்த அகப்பொருள் நெறியில் காதல் திருமணத்தையே போற்றியுள்ளார். ஏற்பாட்டு மணம் பற்றிய ஒரு குறிப்பும் திருக்குறளில் இடம் பெறவில்லை என்பது பெரிதும் கருதத்தக்க ஒன்றாகும்.

தலைமகளைக் 'கொண்கன்' என ஐந்து குறள்களில் (1186,1265, 1266, 1283, 1285) சுட்டுகின்றார் திருவள்ளுவர். கொண்கள் என்பது நெய்தல் நிலத் தலைவன் என்பது தமிழ் மரபு. அந்தணர் என்பதைப் பொதுமை செய்தது போல, இந்தக் கொண்கன் என்பதையும் பொதுமைசெய்ய நினைத்துள்ளாரோ என ஐயுறத் தோன்றுகின்றது. என்றாலும், தலைமகள் தலைமகனைத் 'துறைவன்' என்றும், 'தண்ணம் துறைவன்' என்றும் அழைப்பதனால், தலைமகன் நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன் ஆதல் வேண்டும் என்பது ஓரளவு உறுதிப்படுகின்றது. ஆனால், தலைமகள் எந்த நிலத்தவள் என்பதை அவர் எங்கும் கட்டியதாகக் காண முடியவில்லை. எனினும், தலைமகள் சொல்லும் உவமைகளிலிருந்து அவள் எந்த நிலத்திற்கு உரியவள் எனக் காண வாய்ப்புண்டு.

தலைமகள் உவமை சொல்ல வேண்டுமானால், அவள் வாழும் நிலத்தில் உள்ள பொருள்களைக் கொண்டுதான் உவமை சொல்ல வேண்டும் என்பது தொல்காப்பியர் தரும் உவம மரபு. இத்தகைய கோணத்தில் திருக்குறளில் வரும்

தலைமகள் சொல்லும் உவமைகளைக் காண்போம். அவள் உரைக்கும் உவமைகள் வருமாறு;

*ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்*
*நீராக நீளும்இந் நோய்* (குறள்.1147)

*'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால்'* (குறள்.1148)

*'இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல்'* (குறள்.1158)

*'ஊற்றுநீர் போல மிகும்'* (குறள்.1161)

*'காவாத் தூங்கும்'* (குறள்.1163)

*'காமக் கடல்'* (குறள்.1164)

*'காமக் கடும்புனல்'* (குறள்.1167)

*'அறைபறை கண்ணார்'* (குறள்.1180)

*'விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல்'* (குறள்.1186)

*'காழ்இல் கனி'* (குறள்.1191)

*'காப்போல'* (குறள்.1196)

*'கடலைச் செறாஅஅய்'* (குறள்.1200)

*'கள்'* (குறள்.1201)

*'மணந்தார் உயிர் உண்ணும் வேல்'* (குறள்.1221)

*'கொலைக் களத்து ஏதிலர்'* (குறள்.1224)

*காலை அரும்பி பகலெல்லாம் போதாகி*
*மாலை மலரும்இந் நோய்* (குறள்.1227)

*'ஆயன் குழல் போலும்'* (குறள்.1228)

*'காமக் கணிச்சி'* (குறள்.1251)

*'நாணுத்தாழ்'* (குறள்.1251)

*'தும்மல்போல் தோன்றி விடும்'* (குறள்.1253)

*'பெண்மை உடைக்கும் படை'* (குறள்.1258)

*'நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்'* (குறள்.1260)

*'கண்அன்ன கேளிர்'* (குறள்.1267)

*'தினை.... பனை'* (குறள்.1282)

*'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்'* (குறள்.1285)

*'களித்தார்க்குக் கள் அற்றே'* (குறள்.1288)

*'மலரினும் மெல்லிது காமம்'* (குறள்.1289)

*'உப்புஅமைந் தற்றால் புலவி'* (குறள்.1302)

*'வாடிய வள்ளி முதல்அரிந் தற்று'* (குறள்.1304)

*'புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ'* (குறள்.1323)

தலைமகள் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த உவமைகளைக் காணும்போது, அவள் எல்லா நிலத்துப் கருப்பொருள்களையும் உவமைகளாகச் சொல்வதை அறிய முடிகின்றது.

பெண் என்பவள், தான் வாழும் நிலத்திற்கு உரிய உவமைகளைத் தான் சொல்ல வேண்டும், அவளுடைய அறிவு அந்த எல்லைக்குள்தான் இருக்க வேண்டும் என்னும் வரையறையைத் தகர்த்து, அவள் எல்லா நிலத்திற்கும் உரிய அறிவினைப் பெற்றவளாக விளங்க வேண்டும் என எண்ணிய திருவள்ளுவரின் உள்ள வெளிப்பாட்டைத் தலைமகள் வழி

அவர் சொல்ல வைத்துள்ள உவமைகளைக் கொண்டு அறிய முடிகின்றது.

அதனால், தலைமகள் கூறும் உவமைகளை வைத்து, அவளை இன்ன நிலத்திற்கு உரியவள் என வரையறுக்க முடியவில்லை.

எனினும், தலைமகளை முதன்முதல் சந்திக்கும் சூழலில், தலைமகனின் உள்ள உணர்வுகளில் ஒரு குறிப்பிட்ட நிலத்திற்குரிய பொருள்கள் இடம் பெற்றுள்ளனவா எனக் கண்டால், ஓரளவு தலைமகளின் நிலம் பற்றிய எண்ணத்தைப் பெறவும் வாய்ப்புகள் உள.

தலைமகன், தலைமகளைச் சந்திக்கும் முதுல் சந்திப்பில், அவன்வழி வெளிப்படும் கருப்பொருள்கள் பின்வருமாறு

*'அணங்கு'* (குறள்.1081)

*'ஆய்மயில்'* (குறள்.1081)

*'தாக்கணங்கு தானை கொண்டன்னது'* (குறள்.1082)

*'கூற்றம்'* (குறள்.1085)

*'பிணை'* (குறள்.1085)

*'கடாஅக் களிறு'* (குறள்.1087)

*'பிணையேர் மடநோக்கு'* (குறள்.1089)

*'அடுநறா'* (குறள்.1090)

*'யாப்பினுள் அட்டிய நீர்'* (குறள்.1093)

*'தாமரைக் கண்ணான் உலகு'* (குறள்.1103)

தலைமகளின் இந்த உவமைகளை வைத்தும் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியாத நிலையே உள்ளது. ஏனெனின், அவனுடைய உவமைகளில் வரும் கருப்பொருள்கள் பெரிதும் குறிஞ்சி நிலத்திற்கும் மருத நிலத்திற்கும் உரிய கருப்பொருள்களாக அமைகின்றன.

காதலர்களின் முதல் சந்திப்பில், நெய்தல் நிலக் கருப்பொருள்கள் பெரிதும் இடம் பெறாத காரணத்தினால், தலைமகள் நெய்தல் நிலத்தலைமகள் அல்லள் என்று வேண்டுமானால் கொள்ள வாய்ப்புண்டு. ஆனால், தலைமகள் நெய்தல் நிலத் தலைமகள் என்பது இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

காதல் என்பது, சாதி, மதம், இனம், மொழி, நாடு ஆகிய அனைத்தும் கடந்து உருவாகக் கூடிய ஓர் உணர்வு ஆதலின், அந்தப் பரந்த உணர்வு நிலையிலேயே அதனைக் கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. அதனால்தான் தலைமகள் எந்தச் சாதியினள், எந்த மதத்தினள் போன்ற எந்த விவரத்தையும் அவர் குறிக்கவில்லை. யாரோ ஒரு ஆண், யாரோ ஒரு பெண் என்ற அளவில்தான் ஒரு ஆணையும் பெண்ணையும் காமத்துப்பாலில் சிந்திக்க வைக்கின்றார். இதைப் பார்க்கும்போது, சமுதாயத்தில் ஒரு கலப்பு மணப்போக்கு உருவாகவேண்டும் எனக் கருதி, அதற்காகவே இப்படித் திட்டமிட்டிருப்பது போல் தோன்றுகின்றது. அதனால்தான் அவர்களின் சந்திப்பில், ஒருவர் மற்றவரின் சாதி மதம் போன்றனவற்றையெல்லாம் பற்றி அவர் சிந்திக்க வைக்கவில்லை.

**ஒரு ஆண் ஒரு பெண்ணையும்**
**ஒரு பெண் ஒரு ஆணையும்**
**தனக்குரிய துணையாகத்**
**தானே தேர்வு செய்யும்**
**உரிமை வேண்டும் என**
**உரிமைச் சாசனம் எதிய**
**உரிமைக் கோட்பாட்டாளர்**
**திருவள்ளுவர்'**

என்பதால், அந்த உரிமைக்குத் தடையாக அமையும் சாதி மதம் போன்றவற்றைக் களவு வாழ்க்கையில் அவர் கருத்தில் கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.

## ஒப்புப் பார்வை

குல தர்மம், வருணாசிரம தர்மம், கலப்பு மணம் என்னும் அடிப்படையில் பார்ப்பின், வருணாசிரம தர்மத்தையோ, வருணாசிரமத்தின் அடிப்படையிலான குல தர்மத்தையோ திருவள்ளுவர் ஏற்கவில்லை என அறிகின்றோம்; அர்ச்சுனனின் கருத்துவழி வெளிப்படும் கலப்பு மண எதிர்ப்பு என்பது திருவள்ளுவருக்கு உடன்பாடு அன்று என்பதும் புலனாகின்றது.

போரினால், குல தர்மம் கெடும்; வருணாசிரம தர்மம் கெடும்; கலப்பு மணம் ஏற்பட்டுச் சமுதாயம் பாழ்படும் எனக் கீதையில் அர்ச்சுனன் வழி வெளிப்படுத்தப்படும் கருத்துகளுள் ஒன்றுகூடத் திருக்குறளில் இல்லை; அக்கருத்துகள் திருவள்ளுவருக்கு உடன்பாடும் அல்ல என்பது தெளிவு.

## அரசியல் திறனும் உத்தியும்

போர்க்களத்தில் இருக்கும் துரியோதனன், அந்த அவசர நிலையிலும், இரு பக்கங்களிலும் இருக்கும் போர் மறவர்களை – படைப் பிரிவுகளுக்குத் தலைமை ஏற்றிருப்போரை எடை போட்டுப் பார்ப்பவனாக இருப்பதைக் காண முடிகின்றது.

பாண்டவர்கள் படையில் இருக்கும் ஆற்றல்மிகு வீரர்களைப் பற்றித் தன் ஆசானான துரோணாச்சாரியாரிடம் பின்வருமாறு துரியோதனன் கூறுகிறான்:

> ‘ஆசிரியரே, துருபத குமாரனான உங்கள் சீடனால் மிக்க திறமையாக அணிவகுக்கப்பட்ட, பாண்டு புத்திரனின் சிறந்த சேனையைப் பாருங்கள்’ (கீதை, 1:3)

> ‘இதோ இந்தச் சேனையில் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் சமமான வில்லாளிகள் பலரும் இருக்கின்றனர். யுயுதானன், விராடன், துருபதன் போன்ற சிறந்த மகாரதர்களும் இருக்கின்றனர்’ (கீதை, 1:4)

> ‘திருஷ்டகேது, சேகிதானன், காசிராஜன், புருஜித்குந்தி போஜன், ஷைப்யன் போன்ற சிறந்த பலமிக்க போர் நாயகர்களும் இருக்கின்றனர்.’
> (கீதை, 1:5)

> ‘வீரனான யுதாமன்யு, பலமிக்க உத்தமௌஜன், மற்றும் சுபத்ரையின் புதல்வன், திரௌபதையின் குமாரர்கள் இவர்களும் இருக்கின்றனர். இவர்கள் எல்லோருமே சிறந்த ரதப் போர் வீரர்கள்’
> (கீதை, 1:6)

என எதிரிப் படையில் உள்ளோரைப் பற்றிய மதிப்பீட்டினை முன்வைக்கும் துரியோதனன், அந்தப் படையில் இருப்பவர்களைப் பற்றிய தெளிவான அறிவினைப் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

இவ்வாறு எதிர்ப்படையில் இருப்போரின் வலுமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் துரியோதனன், தன் படையின் ஆற்றலையும் தன் ஆசானிடமே வெளிப்படுத்துவதை,

> ‘எப்போதும் போரில் வெற்றி காண்பவரான தாங்களும், பீஷ்மர், கர்ணன், கிருபர், அஸ்வத்தாமன், விகர்ணன், பூரிசிரவஸ் என்ற சோமதத்தனின் குமாரன் போன்ற பெருவீரரும் இருக்கிறார்கள்’ (கீதை, 1:8)

> ‘எனக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய எண்ணற்ற வீரர்கள் பிறரும் உள்ளனர். அவர்கள் எல்லோருமே பலவிதமான ஆயுதங்கள் உடையவர்களாவும், போர்க் கலையில் மிகவும் தேர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.’
> (கீதை, 1:9)

என வரும் கூற்றுகளால் அறிய முடிகின்றது. மாற்றான் வலிமை, அவர்களின் துணைவர்களின் வலிமை, தன் வலிமை,

தனக்குரிய துணைகளின் வலிமை ஆகியனவற்றை எண்ணிப் பார்க்கும் துரியோதனன், பின்னர்,

> ‘பாட்டனார் பீஷ்மரால் பாதுகாக்கப்பட்ட நமது பலம் கணக்கிலடங்காதது; ஆனால், பீமனால் கவனமாகப் பாதுகாக்கப்பட்ட பாண்டவ சேனையோ அளவிடக் கூடியதாக இருக்கிறது’
> (கீதை, 1:10)

என ஒப்பிட்டு உரைப்பது, துரியோதனின் தன்னம்பிக்கையைச் சுட்டுவதாக அமைகிறது. இப்போக்கு, மேற்போக்காகப் பார்க்கும்போது,

> ***வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்***
> ***துணைவலியும் தூக்கிச் செயல்*** (குறள். 471)

என்னும் குறளுக்குத் தக ஓரளவு அமைவதைக் காணமுடிகின்றது. இந்த நம்பிக்கையைத் தன் ஆசானுக்கு நம்பிக்கையூட்டும் நோக்கில் சொல்லிய அரசியல் உத்தியாகவும் கொள்ளலாம்.

துரியோதனின் இக்கூற்றுகளில், மூன்றாவது சுலோகத்தில் வரும் உங்கள் சீடனால்’ என்னும் கூற்று பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. துரியோதனனின் இந்தக் கருத்து வெளிப்பாட்டிற்கு அடிப்படையான நிகழ்வு இங்குக் கருதத்தக்கதாகும்.

த்ருபதர் என்பவர் பாஞ்சால நாட்டு அரசர்; ப்ருஷத் என்பவரின் மகனார். ப்ருஷத்தும் பரத்வாஜ முனிவரும் நண்பர்கள்; இளமையில் த்ருபதனும் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் இருந்தார். பரத்வாஜருடைய குமாரர் துரோணர். த்ருபதனும் துரோணரும் நட்போடு பழகினார்கள்.

ப்ருஷத் இறந்தபின் த்ருபதன் அரசன் ஆனான். அப்போது ஒருநாள் துரோணர், த்ருபதனிடம் சென்று நட்புரிமை கொண்டாடினார். த்ருபதனுக்கு அது பிடிக்கவில்லை. துரோணர் வேதனையுடன் திரும்பினார்.

துரோணர், பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் வில்வித்தை கற்பித்த பிறகு, குரு காணிக்கை என்ற முறையில் அர்ச்சுனனைக் கொண்டு, த்ருபதனை வென்று, தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொண்டார். த்ருபதனின் பாதி நாட்டையும் எடுத்துக் கொண்டார்.

த்ருபதன், துரோணருடன் போலியான நட்பு பாராட்டினான்; ஆனால் உள்ளத்தில் கொந்தளிப்பு இருந்தது. உள்ளத்தில் இருந்த அந்தக் கொந்தளிப்பினால் உந்தப்பட்ட த்ருபதன், யாஜர், உபயாஜர் ஆகிய ரிஷிகளைக் கொண்டு துரோணரைக் கொல்லக்கூடிய மகனைப் பெறவேண்டும் என்று யாகம் செய்தார். அதன் காரணமாகத் திருடத்யும்னனும் திரௌபதியும் பிறந்தனர்.

த்ருடத்யும்னன் தன்னிடம் போர்க்கலை கற்க வந்தபோது, துரோணர் அதனை ஏற்று, எல்லோர்க்கும் போலவே எல்லா வகையான போர்க்கலைகளையும் கற்றுக் கொடுத்தார். சிறந்த வீரன் ஆக்கினார்.

இப்போது அவனோ, பாண்டவர் படையைத் தலைமை தாங்கி அணிவகுத்து நிற்கின்றான். அவனால், கொல்லப்படப் போவது துரோணர்.

இதனைக் கருத்தில் கொண்டுதான், துரியோதனன் 'தங்கள் சீடன்' என்று சுட்டிக்காட்டினான்.

> 'தங்கள் சீரன்' என்று துரியோதனன் சொல்வதன்வழி, அவன் தன் ஆசானான துரோணரையே எள்ளி நகையாடுவதாகச் சில மொழிபெயர்ப்பாளர்கள், தத்தம் மொழிபெயர்ப்புகளில் சுட்டியுள்ளதைக் காணமுடிகின்றது. சான்றுகளாக,

***துரோணரை இகழும் பொருட்டும் இவ்வரிகளைத் துரியோதனன் கூறுகிறான்***

என்கிறார் வேங்கடவன்;

'தேள் ஒன்று காப்பாற்றியவரையே பொருட்படுத்தாது கொட்டுகிறது. அது போன்று துரியோதனன் தன் குருவையே அவமதிக்கிறான். ''துருபதன் மகனுக்கும் பாண்டுவின் மக்களுக்கும் நீர் வில்வித்தை கற்பித்தது மடமைக்கு ஒப்பாகும். அதோ அவர்கள் உம்மைக் கொல்ல வருகிறார்கள் பாரும்.'' என்று அவன் ஆசாரியரை ஏசுகிறான்'

என்கிறார் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்;

'சிறந்த அந்தணத் தளபதியான துரோணாசாரியாரின் குறைகளை, சிறந்த ராஜதந்திரியான துரியோதனன் சுட்டிக் காட்ட விரும்பினான். ........ துரோணாசாரியர் எச்சரிக்கையாகவும் விட்டுக் கொடுக்காமலும் போர் புரியட்டுமென்று துரியோதனன் அவரது இந்தத் தவறைச் சுட்டிக் காட்டினான்'

என்கிறார் தெய்வத்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி புரபுபாதா (மொழிபெயர்ப்பு: ஆத்ம தத்வ தாஸ்);

'As a scorpion would sting even him whose protection is sought to be free from fear, so did the wicked Duryodhana insult his teacher. His meaning in plain words comes to this: thus think of your studpidity in teaching the sceince of fight to the son of Durupada and to those of Pandu. Tey are now arrayed to kill you'

என்கிறார் சிவாமி சுவருபனானந்தா அவர்கள்.

இவர்கள் கருதும் துரியோதனின் இந்த மன உணர்வு சரியானதாக இருக்குமானால், ஆற்றலும் அறிவும் படைத்த தன் ஆசானையே எள்ளலுக்கு உரியவனாக்கிய பழி

துரியோதனனைச் சாரும். அது துரியோதனின் அழிவுக்கம் அவன் குடியின் அழிவுக்கும் வழிவகுக்கும் இதனை,

***ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்***
***போற்றலுள் எல்லாம் தலை*** (குறள். 891)

**குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து** (குறள். 898)

என்னும் குறள்கள் உறுதி செய்யும். பாரதப் போரில் கவுரவர்களுக்கு ஏற்பட்ட அழிவும் இதனை நினைவூட்டுதல் கூடும்.

ஆனால், போர்க்களத்தில் இருக்கும் துரியோதனனின் மன உணர்வை இங்கு ஆழ்ந்து பார்த்தல் வேண்டும். துரோணர், ஆற்றல் மிகு போர்க்கலை வல்லுநர்; வெல்லுவதற்கான வியூகங்களை முறைப்படுத்தித் தரக்கூடியவர்; தன்னைப் போர்க்கலை வல்லவனவாக உருவாக்கியவர்; போரில் வெற்றி என்பது அவரையும் பொறுத்து உள்ளது.

துரியோதனன் அரசியல் தந்திரங்கள் தெரிந்தவன்; அதிலும் தீயவன்; தீயவர்களுக்கு நயவஞ்சக உணர்வுகள் மிகுதியாக இருக்கும். துரியோதனனும் நயவஞ்சகன். தமடிககு ஒருவரால் ஒரு செயல் ஆக வேண்டுமென்றால், பகைவர்களேயானாலும் மிக நயவஞ்சகமாகப் பேசி அந்தச் செயலை நிறைவேற்றிக் கொள்வதில் மிகவும் விழிப்புணர்வோடு இருப்பார்கள். இந்த நிலையில் அரசியல் தந்திரங்கள் நிறைந்த துரியோதனன் தன் ஆசானை எள்ளி நகையாடினான் என்பது பொருந்தாத கூற்றாக அமைய வாய்ப்புள்ளது.

மாறாக, தங்களைக் கொல்லப் பிறந்த ஒருவனுக்கு அதைப் பொருட்படுத்தாமல், படைப் பயிற்சி அளித்த தங்களிடம் சிறிதுகூட நன்றி இல்லாமல் தங்களையே கொல்ல படையை அணிவகுத்துத் தலைமை தாங்கி நிற்கும் திருடத்யும்னனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; தன் மாணவன் என ஏமாந்துவிடக் கூடாது என நினைவூட்டும் வகையில் 'தங்கள்

சீடன்' எனத் துரியோதனன் சொல்லியதாகக் கொள்ளலாம். இத்தகைய போக்கிலான உரை விளக்கத்தினை,

> 'பாருங்கள்; தங்களுடைய பிரிய சிஷ்யனை; எவனை உங்களுடைய சகல வித்தைக்கும் இருப்பிடமாக்கினீர்களோ அவன் இந்தச் சேனையாகிய சமுத்திரத்தை விரிவுபடுத்தி யிருக்கிறான்'

என ஞானேஸ்வரர் (தமிழாக்கம்:கோமதி ராஜாங்கள்) கூறும் உரை விளக்கத்தின்வழியும்,

> 'துரியோதனன் அரசியல் சூழ்ச்சியில் மிகவும் கெட்டிக்காரன். த்ருஷ்டத்யும்னன் மீது பழிவாங்கும் எண்ணத்தையும், பாண்டவர்களைப் பற்றிய கெட்ட எண்ணத்தையும் த்ரோணரிடம் ஏற்படுத்தி, அவரை மிகவும் வெறிகொள்ளச் செய்வதற்காக, த்ருஷ்டத்யும்னனை த்ருபத புத்ரன் என்றும், புத்திசாலியான உங்கள் சிஷ்யன் என்றும் குறிப்பிட்டான்'

என வரும் ஸ்ரீஜயதயால் கோயந்தகா அவர்களின் உரை விளக்கப் பகுதியாலும் அறிய முடிகின்றது. இத்தகைய போக்குகள் திருக்குறளில் இல்லை.

## நரகம் பற்றிய கருத்து உருவாக்கம்

மேலுலகம், நரகம் என்பன எல்லாம், பல நோக்கிலான கருத்து உருவாக்கங்கள் எனலாம். மனித இனத்தை – பிற இனத்தை ஏமாற்ற நினைத்தவர்களும் இந்த உத்தியைப் பயன்படுத்தி இருக்கலாம்; மனித இனத்தைச் செம்மை செய்ய வேண்டும் எனக் கருதியவர்களும் இந்த உத்தியைப் பயன்படுத்தி மக்களை நல்வழிப்படுத்த முனைந்திருக்கலாம்.

பகவத்கீதையிலும் திருக்குறளிலும் மேலும் பற்றிய கருத்து உருவாக்கங்கள் இடம் பெற்று இருப்பது போலவே, நரகம் பற்றிய கருத்து உருவாக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

பகவத்கீதையின் முதல் அத்தியாயத்தில் நரகம் பற்றி வரும் கருத்து உருவாக்கங்களைக் காண்போம்.

தன் சுற்றத்தாருடன் போராடப் போவதில்லை என உரைக்கும் அருச்சுனன், அதற்கான காரணங்களை முன்வைக்கும்போது குலதர்மத்தைப் பற்றி முதன்மைப்படுத்துவதை முன்னரே கண்டோம். அந்த உரையில் அருச்சுனன் முன்வைக்கும் நரகம் பற்றிய கருத்தாக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

> 'இனக் கலப்பினால், அந்த இனக் கலப்பால் உருவான குலத்தவர்கக்கும், குல தருமத்தை அழிப்போருக்கும் நரகம் வாய்க்கின்றது' (கீதை, 1:42)

> 'குல தருமத்தை இழந்தவர்/ கெடுப்பவர், நெடுங்காலம் நரகத்தில் கிடந்து உழல வேண்டும் என்று கேட்டிருக்கின்றோமே' (கீதை, 1:44)

என்பன அவனுடைய கூற்றுகள். இங்கு நரகம் என்பது குல தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தக் குலதர்மத்திற்குக் கேடு விளைவிப்பவர்கள் நரகத்தை அடைகின்றார்கள் என்னும் நோக்கில் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திருக்குறளில் நரகம் என்பதோடு தொடர்புபட்ட நிலையில் வரும் கருத்து உருவாக்கங்கள் பின்வருமாறு:

***அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை***
***ஆரிருள் உய்த்து விடும்*** (குறள்.121)

***அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த***
***இன்னா உலகம் புகல்*** (குறள்.243)

***உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண***
***அண்ணாத்தல் செய்யாது அளறு***
(குறள்.255)

***ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்***
***தான்புக்கு அழுந்தும் அளறு*** (குறள்.835)

***வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்***
***பூரியர்கள் ஆழும் அளறு*** (குறள்.919)

இக்குறள்களில் வரும், ஆரிருள், இருள்சேர்ந்த இன்னா உலகம், அளறு ஆகியனவற்றிற்கு நகரம் எனப் பொருள் கொண்டால்,

அடங்காமை

ஊன் உண்ணால்

அருளின்மை

பேதை செயல்

பரத்தையர் தோள்

ஆகியனதான் ஒருவனை நரகத்திற்குள் வீழ்த்தும் எனக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

திருக்குறளில் எந்த ஒரு குறளிலும், குலதருமம் பிழைத்தவர்க்கு நகரம் வாய்க்கும் என்னும் கருத்து இடம்பெறவில்லை என்பது உறுதி.

## கடவுளைச் சுட்டும் பெயர்கள்

பகவத்கீதையின் முதல் அத்தியாயத்தில், கண்ணனைச் சுட்டுவனவாகப் பின்வரும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன:

அச்யுத (கீதை, 1:21)

(அழிவில்லாதவன், தன் பெருநிலையிலிருந்து இறங்காதவன்)

கிருஷ்ண (கீதை, 1:28)

(கருநீல வண்ணன், அடியவர் துயர் துடைப்பவன்)

கேசவ (கீதை, 1:31, 32)

(கேசின் என்னும் அரக்கனைக் கொன்றவன், அழகான முடியை உடையவன்)

கோவிந்த (கீதை, 1:32)

(உயிர்களின் உள்ளத்தில் இருப்பதை நன்கு அறியக்கூடியவன்)

மாதவ: (கீதை, 1:14, 37)

(இலட்சுமியின் தலைவன்)

மதுசூதன (கீதை, 1:35)

(மது என்ற அரக்கனைக் கொன்றவன்)

வார்ஷ்ணேய (கீதை, 1:41)

(விருஷ்ணி குலத்தில் பிறந்தவர்)

ஜனார்த்தன (கீதை, 1:36, 39, 44)

(தீமைகளை அழிப்பவன், இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளைக் கொடுக்கும் பொருட்டு மக்களால் யாசிக்கப்படுபவன்)

(புலன்களுக்குத் தலைவன், அடியவர்களின் புலன்களை வழிநடத்துபவன்)

இப்பெயர்கள் அனைத்தும், இறைவனின் பிறப்பு, மெய், உடைமை, அருள் உணர்வு, அழிக்கும் ஆற்றல் போன்றனவற்றை மையமிட்டு அமைகின்றன. பெரிதும் புராணச் செய்திகளை உள்ளடக்கியனவாக அமைகின்றன.

இத்தகைய போக்குத் திருக்குறளில் இல்லை. திருவள்ளுவர் இறைவனை, உருவம் உடையவனாகக் காணாமல், பண்பின் அடிப்படையிலானவனாகக் காணுகின்றார்; படைக்கின்றார். அவர் இறைமைக்குரியனவாகக் கூறும் பெயர்களும் அந்தப் பெயர்வழிப் புலப்படும் பண்புகளும் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆதிபகவன் | – | உறவுப் பண்பு |
| வாலறிவன் | – | அறிவுப் பண்பு |
| மலர்மிசை ஏகினான் | – | மென்மைப் பண்பு |

| | | |
|---|---|---|
| வேண்டுதல் வேண்டாமை இலான் | – | சமன்மைப் பண்பு |
| இறைவன் | – | தலைமைப் பண்பு |
| பொறிவாயில் ஐந்தவித்தான் | – | புலனடக்கப் பண்பு |
| தனக்குவமை இல்லாதான் | – | உவமையில் பண்பு |
| அறவாழி அந்தணன் | – | அற அருட் பண்பு |

இந்த எட்டுப் பண்புகளின் நிறைநிலையினனாக இறைவன் விளங்குவதால் அவனை 'எண்குணத்தான்' என்றார் திருவள்ளுவர்.

முதல் அதிகாரத்தில் திருவள்ளுவர் இறைமையை இறைவன் என இரண்டு குறள்களில் வழங்குகின்றார். பரிமேலழகர் வைப்பு முறைப்படி ஒன்று, ஐந்தாவது குறளிலும் மற்றொன்று பத்தாவது குறளிலும் அமைகின்றது. முதலில் வரும் இறைவன் என்பது, இறைமைக்குரிய தலைமையான பண்புகளுள் ஒன்றான தலைமைப் பண்பைச் சுட்டுவதாக அமைகின்றது; பத்தாவது குறளில் வரும் இறைவன் என்னும் சொல், தலைமையான பண்புகளை உடையவன் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் இறைவனுக்கு வழங்கும் பண்பு அடிப்படையிலான பெயர்களும் அவற்றிற்கான பொருள்களும் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆதிபகவன் | – | முதற் கூறானவன் |
| வாலறிவன் | – | தூய அறிவன் |
| மலர்மிசை ஏகினான் | – | மலரின் மீது விரைந்து செல்லும் அளவிற்கு மென்மையானவன் |
| வேண்டுதல் வேண்டாமை இலான் | – | விருப்பு வெறுப்பு இல்லாதவன் |
| இறைவன் | – | தலைமைப் பண்பினன் |

| | | |
|---|---|---|
| பொறிவாயில் ஐந்தவித்தான் | – | ஐம்பொறிகளின் வாயில்களையும் பக்குவப்படுத்தியவன் |
| தனக்குவமை இல்லாதான் | – | தனக்கு உவமை இல்லாதவன் |
| அறவாழி அந்தணன் | – | அறப் பெருங்கடலாகவும் அருளாளனாகவும் விளங்குபவன் |
| எண்குணத்தான் | – | எட்டுவகைப் பண்பினன் |

கடவுள் பற்றிய பார்வையில், இரு நூல்களும் வெவ்வேறான கோணங்களைக் கொண்டனவாக அமைந்துள்ளன. மேற்சுட்டிய பெயர்களுள், பகவத்கீதையில் வரும் ஹ்ருஷிகேசன் என்னும் பெயரும் திருக்குறளில் வரும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் பெயரும் ஓரளவு ஒத்தமைவனவாக உள்ளன. ஆனாலும் வேறுபட்டனவாக அமைகின்றன.

ஹ்ருஷிகேசன் என்பது, இறைவனே பொறிகளின் தலைவன்; எல்லா உயிர்களும் அவனுக்குள் அடக்கம்; அவ்வகையில், எல்லா உயிர்களின் பொறிகளும் அவனுக்குள்ளேயே அமைகின்றன. அவன் அவற்றை எல்லாம் ஆள்கின்றான்; கட்டுப்படுத்துகின்றான் என்னும் பொருள் வெளிப்படுத்தப்படுகின்றது.

மனிதன் அடைய வேண்டிய அடிப்படைப் பண்புகளின் நிறைவடிவமாக இறைமையைக் காட்டும் திருவள்ளுவர், மனிதன் அடைய வேண்டிய பண்புகளுள் ஒன்றாகப் புலனடக்கப் பண்பைச் சுட்டி, அந்தப் புலனடக்கப் பண்பின் நிறைநிலையாக இறைமையைப் படைக்கின்றார். அதாவது, இறைவன் என்பவன், தன் ஐம்பொறிகளையும் அதன் தொடக்க நிலையிலேயே பக்குவப் படுத்தியவன் என்னும் நிலையில் திருவள்ளுவர் இறைமையைக் காட்டுகின்றார்.

இவ்வகையில், ஹ்ருஷிகேசன் என்னும் பெயரும் பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் பெயரும் வேறுபடுகின்றன.

கண்ணனோடு தொடர்புடைய புராணச் செய்திகள் குறிப்பளவில் இரண்டு திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

1. தாமரைக் கண்ணான் உலகு பற்றிய குறிப்பு;

2. அடியளந்தான் என்னும் குறிப்பு

இந்த இரண்டுமே புராணச் செய்திகளாக உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருத்து விளக்கத்திற்கான எளிமைக்கு இவை உவமைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை, திருவள்ளுவரின் கடவுள் கோட்பாட்டில் இடம் பெறுவன அல்ல.

திருக்குறளில் உணர்த்தப்படும் கடவுள் கோட்பாடு வேறு; தெய்வக் கோட்பாடு வேறு; புராணங்களில் இடம் பெறும் கடவுளர் தொடர்பான செய்திகள் திருவள்ளுவரின் தெய்வக் கோட்பாட்டில் வருவன; கடவுள் கோட்பாட்டில் அடங்குவன அல்ல.

இங்கு காட்டிய கருத்துகளைப் பார்ப்பின், பின்வரும் கருத்துகளை இரு நூல்களிலும் வரும் கடவுள் கோட்பாடு தொடர்பாக நாம் அறிய முடிகின்றது:

பகவத்கீதை – முதுல் அத்தியாயத்தில் வரும் கடவுள் தொடர்பான பெயர்கள் பெரிதும் புராணம் சார்ந்தனவாகவும், ஓரளவு பண்பு சார்ந்தனவாகவும் அமைகின்றன. தீயவர்களை அழித்தல் என்னும் செயலாக்கம் இறைவனுக்கு உரியதாகக் காட்டப்பட்டுள்ளது; குலப்பிறப்பு பற்றிய குறிப்பும் வருகின்றது.

திருக்குறளில் இத்தகைய போக்குகள் ஏதும் இடம் பெறவில்லை. திருக்குறளில் கடவுள் கோட்பாடு வேறாகவும் தெய்வக் கோட்பாடு வேறாகவும் அமைந்துள்ளது. திருக்குறளில் வரும் கண்ணன் தொடர்பான புராண குறிப்புகள், தெய்வக் கோட்பாட்டிற்கு உரியனவாக அமைந்துள்ளன.

அதாவது, திருக்குறளில் வரும் கண்ணன் கடவுள் அன்று, தெய்வம்.

திருவள்ளுவர் தம் கடவுள் கோட்பாட்டில் புராணக் கூறுகளையோ உருவ வழிக் கடவுளரையோ முன் வைக்கவில்லை. கடவுள் ஒன்று, இது உருவம் அற்றது; பண்புகளின் நிறைநிலையாக அமைவது என்னும் நோக்கில் தாமே ஒரு புதிய கடவுளைத் திருவள்ளுவர் படைத்து வழங்குவதைக் காணமுடிகின்றது.

## மகளிர் கற்பு

மகளிர் கற்பு தொடர்பான குறிப்பு, பகவத்கீதையில் முதல் அத்தியாத்திலும் இடம் பெற்றுள்ளது; திருக்குறளிலும் இடம் பெற்றுள்ளது.

> 'குலம் அழிந்தால் தொன்றுதொட்டு வரும் குலதர்மம் அழிந்து போகும்; குலதர்மம் அழிந்தால் குலம் முழுவதும் அதர்மம் சூழும்; அதர்மம் சூழ்ந்தால் நல்ல ஒழுக்கங்கள் கெடும்; குலப் பெண்கள் கெட்டுப் போவார்கள்; பெண்கள் கெட்டால், கேடுகள் தரும் இனக்கலப்பு உண்டாகிவிடும்.'
>
> (கீதை, 1:40–41)

என்று அர்ச்சுனன், கண்ணனிடம் கூறும் கூற்றில் பெண்களின் கற்புப் பற்றிய குறிப்பு வருகின்றது. அதாவது, குலதர்மம் அழிந்தால், பெண்கள் பிற கலத்து ஆடவர்களோடு தொடர்பு கொண்டு கற்பிழப்பர் என்பது இதனால் பெறப்படுகின்றது. இப்படிப் பெண்கள் நடந்து கொள்வதால், இனக்கலப்புடைய குழந்தைகள் பிறந்து, அதனால் பெருங்கேடு விளையும் என அர்ச்சுனன் அஞ்சுவதாக அமைகின்றது.

திருக்குறளில் மகளிர் கற்பு பற்றிய கருத்துகளை உள்ளடக்கிய குறள்கள் வருமாறு;

*தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்* (குறள்.56)

என்னும் குறளில், பெண்கள் கற்பு நெறி வழுவாது தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்னும் குறிப்பு வருகின்றது.

*சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை*

என்னும் குறளில், பெண்களின் கற்பினைக் காக்கும் நோக்கில் அவர்களை வீட்டில் சிறை வைத்துக் காப்பதால் பயன் இல்லை; அவர்கள் கற்பிற்குச் சமுதாயம் தக்க பாதுகாப்பாக அமைய வேண்டும் என்னும் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

*ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு*

என்னும் குறளில், பெண்களின் கற்பு உவமையாக்கப்பட்டு, ஆண்களும் கற்பு ஒழுக்கத்தோடு வாழ்ந்தால்தான் சமுதாய மதிப்பிற்கு உரியவர்கள் ஆக முடியும் என்னும் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆக, பெண்கள் தங்கள் கற்பைத் தாங்கள் காத்துக் கொள்ள வேண்டும்; ஆடவர்கள், பெண்களின் கற்பைக் காக்கின்றோம் என்னும் பெயரில் அவர்களை வீட்டில் அடைத்து வைக்கக்கூடாது; பெண்களின் கற்பிற்குச் சமுதாயம் தக்க பாதுகாப்பாக அமைய வேண்டும்; ஆண்களும் பெண்களைப் போல் கற்புடையவர்களாக வாழ வேண்டும் என்னும் கருத்துகள் திருக்குறள் வழி வெளிப்பட்டுள்ளன.

சமுதாயக் கயவர்களால், பெண்கள் கற்பிற்குப் பாதகமான சூழல்கள் எவ்வெவ்வாறெல்லாம் உருவாகின்றன என்பதை ‘பிறன்இல் விழையாமை’ என்னும் அதிகாரத்தில் தெளிவு செய்து மகளிரையும் சமுதாயத்தையும் விழிப்புணர்வோடு இருக்க ஆற்றுப்படுத்துகின்றார் திருவள்ளுவர்.

பெண்களின் கற்பு பற்றிய பார்வையில் இரு நூல்களும் வெவ்வேறு தடங்களில் செல்வதைக் காணமுடிகின்றது. குலதர்ம அழிவு– பெண்களின் கற்புக்குக் கேடு – இனக்கலப்பு உருவாக்கம் என்னும் போக்கிலான கருத்திற்குத் திருக்குறளில் இடம் இல்லை; திருவள்ளுவருக்கு அது உடன்பாடும் இல்லை.

## தொகுப்புப் பார்வை அடிப்படை ஒப்பும் உறழ்வும்

இந்திய அரங்கில் பெரிதும் மக்களால் அறியப்பட்ட இரண்டு இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தின் ஒரு பகுதி என்று கருதப்படுவது என்றாலும், தனிப் பெரும் சிறப்பிற்குரிய தனி ஒரு நூலாகக் கருதுதற்குரிய சிறப்பினையுடையது பகவத்கீதை; இதில், அறமும் உண்டு, பொருளும் உண்டு; இன்பமும் உண்டு. எனினும், பொருளின் ஒரு கூறாக அமையும் போரை அடித்தளமாகக் கொண்டது.

மக்கள் வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப்பொருள்கள் மூன்றினையும், அறம் பொருள் காமம் என மூன்று பாடுபொருள்களாகக் கொண்டு, அவற்றுள் அறத்தை ஊடுபொருளாகக் கொண்டு, தனியொரு பெருநூலாக விளங்கும் பேறு பெற்றது திருக்குறள்.

பகவத்கீதை இரண்டு அடிகளாலான 700 சுலோகங்களால் ஆகியது; அவற்றுள், ஒரு சுலோகம் மட்டும் மூன்று அடிகளாலும், இன்னொரு சுலோகம் ஓர் அடியாலும் அமைந்தது என்பர். திருக்குறள் இரண்டு அடிகளாலான 1330 குறள்வெண்பாக்களால் ஆகியது. சொல்லும் கருத்துகளைச் சுருங்கிய வடிவத்தில் – பாவில் – சொல்லல் என்ற நோக்கில் இரண்டு நூல்களும் ஒத்தமைவதைக் காணமுடிகின்றது.

பகவத்கீதையும் திருக்குறளும் உலக அரங்கில் பெரிதும் அறியப்பட்ட நூல்கள் என்றாலும், பகவத்கீதை அறியப்பட்ட அளவிற்குத் திருக்குறள் அறியப்படவில்லை என்பது உண்மை.

பகவத்கீதை ஒரு பக்தி நூல் என்பதால் அதற்குப் பற்றாளர்கள் மிகுதி; திருக்குறள் அறநூல் என்பதால் அதற்குப்

பற்றாளர்கள் மிகமிகக் குறைவு, ஆனால், பார்வையாளர்கள் மிகுதி.

பகவத்கீதை, கடவுள் என்னும் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு, கடவுள் ஆற்றலுக்கு முதன்மை தந்து உருவாக்கம் பெற்ற சமய நூல்; திருக்குறள் அறத்தை அடித்தளமாகக் கொண்டு, மனித ஆற்றலுக்கு முதன்மை தந்து உருவாக்கம் பெற்ற சமயம் கடந்த நூல்.

இரண்டு நூல்களுமே உலக அரங்கில் மிகுதியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல்கள். இரண்டிலும் மொழிபெயர்ப்புகள் மிகுதி. அவற்றில் பகவத்கீதை திருக்குறளை விஞ்சி நிற்கின்றது என அறிய முடிகின்றது.

## முதல் அத்தியாயமும் திருக்குறளும்

பகவத்கீதையின் முதல் அத்தியாயம் 'அர்ஜுன விஷாத யோகம்' என்பது; இது, அர்ஜுனனின் மனக் கலக்கம் என்னும் பொருளை உள்ளடக்கியது; 48 சுலோகங்களால் ஆகியது.

பகவத்கீதையின் இந்த முதல் அத்தியாயத்தோடு திருக்குறளை ஒப்பிட்டுக் காணும்போது, பின்வரும் ஒற்றுமைக் கூறுகளையும் வேற்றுமைக் கூறுகளையும் காணமுடிகின்றது;

பகவத்கீதையின் முதல் அத்தியாயம், கண்ணனின் உபதேசங்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவதால், இதனைப் பகவத்கீதையின் பாயிரம் என்று கொள்வர். அதாவது, முதல் அத்தியாயம் நூலின் தோற்றத்திற்கு முதற் காரணமாக அமைகின்றது.

திருக்குறளிலும் பாயிரம் உண்டு; ஆனால், இந்தப் பாயிர அமைப்பு பகவத்கீதையின் பாயிர அமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபாட்டதாகும். திருக்குறளில் வரும் பாயிரம், நூலின் ஊடுபொருளைப் பாடுபொருளாகக் கொண்டதாகும். திருக்குறளின் ஊடுபொருள் அறம்; அந்த அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகப் பாயிரம் அமைகின்றது.

திருக்குறள் பாயிரத்தின் முதல் அதிகாரம் இறைமை வழிபாடு என்னும் கடவுள் வழிபாடு; இது, அறத்தின் நிறைநிலையான இறைநிலையைச் சுட்டுகின்றது. இரண்டாவது அதிகாரம் வான்சிறப்பு; இது, அறத்திற்கு அடிப்படையான மழையின் சிறப்பைக் கூறுகிறது; மூன்றாவது அதிகாரம் நீத்தார் பெருமை; இது, அறத்தை அறிந்து, அறத்தின்படி நின்று, அறத்தைப் பரப்ப வந்த நீத்தார் பெருமையைச் சுட்டுவது; நான்காவது அதிகாரம் அறன் வலியுறுத்தல்; இது, நூலின் ஊடுபொருளான அறத்தின் வீறு சுட்டுவது.

## தொடக்கமும் பதிவுகளும்

இரண்டு நூல்களின் தொடக்கம் எனப் பார்க்கும்போது, பகவத்கீதை 'தர்மக்ஷேத்திரே' என்ற தொடரோடு தொடங்குகின்றது; போர் நடைபெறும் களமாக விளங்கும் குருக்ஷேத்திரம் அறவோர் பலர் வாழ்ந்த தர்மபூமி என்பதைச் சுட்டும் வகையிலும், அங்கு நடைபெறும் போர் தர்மத்தை நிலைநாட்ட நடைபெறும் போர் என்பதைச் சுட்டும் வகையிலும், தர்மத்தை நிலைநாட்டுபவனான கண்ணனே ஈடுபடும் போர் நடைபெறும் களம் என்ற காரணத்தாலும், பகவத்கீதை, தர்மத்தைப் போதிக்கும் நூல் என்பதைச் சுட்டும் வகையிலும் 'தர்மக்ஷேத்திரே' எனத் தொடங்குவதாகக் கொள்ளலாம்.

திருக்குறள் 'அகர' அல்லது 'அகர முதல' எனத் தொடங்குகிறது. இறைமை என்பது பலவன்று ஒன்றுதான் என்பதை உறுதி செய்யும் வகையிலும் அதுவே உயிரினங்களுக்கெல்லாம் முதல் என்பதைச் சுட்டும் உறுதி செய்யும் வகையிலும், உவமை சுட்டும் தொடரின் தொடக்கமாக இத்தொடர் அமைகின்றது.

பகவத்கீதை, மகாபாரதத்தின் ஒரு பகுதியாக – தொடர்ச்சியாக– அமைவதால், மகாபாரதத்தில் வரும் இடப் பெயர்கள், கதைமாந்தர்களின் பெயர்கள் போன்றன முதல் அத்தியாயத்திலும் இடம் பெற்றுள்ளன.

திருக்குறள், எல்லார்க்கும் பொதுவான நூலாகத் திட்டமிட்டு உருவாக்கம் பெற்ற காரணத்தால், அதில் குறிப்பிட்ட இடப்பெயர்கள், கதைமாந்தர்களின் பெயர்கள் போன்றன அமைவதற்கான வாய்ப்புகள் இல்லாத நிலைபேற்றைப் பெற்றதாக அமைந்துள்ளது. மக்கள் அறிந்தனவற்றை உவமைகளாக்கிக் கருத்துகளைச் சொல்லும்போது அந்தக் கருத்துகள் மக்கள் மனத்தில் எளிமையாகப் பதிய வாய்ப்புண்டு என்ற நோக்கில், உவமைகளில் மட்டுமே ஒருசில தெய்வங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

## போர் ஏற்பும் எதிர்ப்பும்

பகவத்கீதை, போர்க்களத்தில் பூத்த தத்துவ நூல்; போர் ஏற்பு நூல்; திருக்குறள், போர் எதிர்ப்பு நூல்; மனித இன அமைதி வாழ்க்கையை நாடிய நூல், இந்த அடிப்படை வேறுபாட்டால், பகவத்கீதையில் போர் பற்றிய செய்திகள் முதல் அத்தியாயத்தில் பரவலாக இடம் பெற்றுள்ளன; திருக்குறளில் அருகிய அளவில்தான் போர்க்களச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

ஆற்றல் மிக்க படைவீரர்களைப் பெற்றிருந்தாலும், அந்தப் படைக்குத் தகுதி வாய்ந்த படைத்தலைவன் அடிப்படை என்பதிலும், படை அதன் அணிவகுப்புத் திறத்தால் பொலிவு பெறுகின்றது என்பதிலும், படை வீரர்கள் தம் தலைவனுக்காக உயிர் விடுதல் என்பது எதிர்பார்ப்பாக இருந்துள்ளது என்பதிலும் இரு நூல்களும் பெரிதும் ஒத்த கருத்து உடையனவாக அமைகின்றன.

இரு நூல்களிலும் வில்லேர் உழவர்களுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. இகல் கருதுபவர்களை இன்னா அறிவினர் எனக் கருதும் கருத்தாக்கம் இரு நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.

பகவத்கீதை, நாட்டை இழந்தவர்கள், அதை மீட்பதற்காக மேற்கொள்ளும் போர் பற்றியும் அது சார்ந்த மன உணர்வுகளையும் தெளிவாக்குகின்றது; திருக்குறள், நாட்டை இழக்காதிருக்க, நாட்டைக் காக்கும் நிலையினரின் போர்

பற்றியும் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் சுட்டுகின்றது. அதனால், போர் பற்றிய கருத்தாக்கங்களில் இரு நூல்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

## எதிர்ப்பின் அடிப்படை நோக்கம்

அர்ச்சுனன்வழி, உறவு அளவிலான போர் எதிர்ப்புச் சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன; என்றாலும், அந்தச் சிந்தனைகள் பின்னர், குலதர்மம் காக்கும் பொருட்டான சிந்தனைகளாக வடிவாக்கம் பெறுகின்றன. அர்ச்சுனனிடம் தோன்றும் உறவு அளவிலான போர் எதிர்ப்புச் சிந்தனைகள், பகவத்கீதை தோன்றிய காலத்தில் பௌத்தம் சமணம் ஆகியவற்றில் நிலவிய போர் எதிர்ப்புச் சிந்தனைகளின் பதிவுகளாகக் கொள்ளலாம்.

திருக்குறள் உறவு அளவிலான போர் எதிர்ப்புக் கருத்துகளை மட்டும் அல்லாமல், உலக அளவிலான– மனித இன அளவிலான போர் எதிர்ப்புச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நூலாக அமைகின்றது.

***'கணை கொடிது'*** (குறள்.279)

***'வில்வணக்கம் தீங்கு'*** (குறள்.827)

***'வேலன்று வென்றி தருவது'*** (குறள்.546)

**'படைகொண்டார் நெஞ்சம் (போல்)**
**நன்றூக்காது'** (குறள்.253)

என்பன போன்று வரும் கருத்தாக்கங்கள், திருவள்ளுவரின் போர் எதிர்ப்பு உணர்வுகளைத் தெளிவாக்குகின்றன. எனினும், நாட்டைக் காப்பதற்காகச் சிறந்த வீரர்கள் வேண்டும் என்னும் நோக்கில் போர் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளதையும் காணமுடிகின்றது.

போர் மறுப்புச் சிந்தனைக்கக் குலதர்மத்தைக் காரணமாக்கம் போக்குப் பகவத்கீதையில் காணப்படுகின்றது; இத்தகைய போக்குத் திருக்குறளில் இல்லை. அர்ச்சுனனிடம்

தோன்றும் இரக்க உணர்வு என்பது குலதர்ம நோக்கிலானதாக – குலதர்மத்தைக் காக்கும் நோக்கினதாக அமைகின்றது. திருவள்ளுவர் காட்டும் இரக்க உணர்வு – கண்ணோட்டம் என்பது மனிதம் நோக்கிய இரக்க உணர்வாக அமைகின்றது.

ஒரு சத்திரியனின் மனப் போராட்டத்தையும் அதற்கிடையே உறவுகள் அளவிலான போர் மறுப்புச் சிந்தனைகளையும் பகவத்கீதை உளவியல் பாங்கோடு மிக நயமாக விவரிக்கின்றது. அத்தகைய போக்கிற்கான வாய்ப்பு திருக்குறளில் இல்லை.

## குல தர்மம்

பகவத்கீதை சுட்டும் குலம் என்பது, வருணங்களின் அடிப்படையிலானதாக அமைகின்றது; வருணத்திற்குள் ஒரு பகுதியாக அமைகின்றது. திருவள்ளுவர் சுட்டும் குலம் என்பது மனித இனம் முழுமையும் நோக்கிய நோக்கினதாக அமைகின்றது. திருக்குறளில் அது, ஒரு தலைமையின்கீழ் வழிவழியாக வரும் ஒரு குடும்பத்தின் தலைமுறைகள் எனக் கொள்ளும் அளவில் அமைந்துள்ளது.

திருவள்ளுவர் உயர்குடிப்பிறப்பிற்கு அரசியல் அளவிலும் சமுதாய அளவிலும் மதிப்பைத் தருகின்றார் என்றாலும், அவர் சுட்டும் உயர்குடி என்பது பண்பு, படிப்பு, பயன்பாடு போன்றவற்றால் உருவாக்கம் பெறுவதாக அமைகின்றது. ஒருவர் உயர்ந்த குடியில் பிறந்தவர் என்றால், அவரிடம் ஒழுக்கம், நாணம், நடுநிலைமை, வாய்மை, நகை, ஈகை, இன்சொல், இகழாமை போன்ற உயர்ந்த பண்புகள் இருக்க வேண்டும் என்றுதான் திருவள்ளுவர் வரையறுக்கின்றார். அயராத உழைப்பு, ஆளுமைப் பண்பு, பணிவு போன்ற பண்புகளால் ஒருவர் தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்த வேண்டும் என ஆற்றுப்படுத்துகின்றார். அந்த வகையில் உலகப் பொதுமை நோக்கினதாக அமைகின்றது எனக் கொள்ளலாம்.

திருவள்ளுவரின் குடி/ குலம் பற்றிய சிந்தனைகளில், பண்பு என்பதே அடிப்படையாக அமைந்தாலும், அந்தப் பண்பு என்பது, ஒரு குலத்திற்குரிய பண்பு என்னும் அடிப்படையில் அமையவில்லை; மனித குலத்திற்கே உரிய பண்பு என்ற அடிப்படையில்தான் அமைகின்றது.

திருவள்ளுவர் வருணாசிரம தர்மத்தை ஏற்பவில்லை; அதிலுள்ள குறைபாடுகளைப் பக்குவமாகச் சுட்டிக் காட்டும் போக்கில் மாற்றுக் கருத்துகளைப் பக்குவமாக வெளிப்படுத்திச் செல்கின்றார். அதற்குச் சான்றுகளாக,

***அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்***
***செந்தண்மை பூண்டொழுக லான்*** (குறள்.30)

***மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்***
***பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்*** (குறள்.134)

***மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்***
***கற்றார் அனைத்திலர் பாடு*** (குறள்.409)

***மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்***
***கீழல்லார் கீழல் லவர்*** (குறள்.973)

என்பன போன்று வரும் குறள்களைக் கொள்ளலாம்.

பகவத்கீதை கலப்பு மணத்தை ஏற்கவில்லை; கலப்பு மணத்தால் குல நாசம் ஏற்படும் என்றும், அவ்வாறு குல நாசம் ஏற்படுவதற்குக் காரணமாக அமைபவர்கள் நரகத்திற்குச் செல்வார்கள் என்றும் அச்சுறுத்துகின்றது. திருக்குறள் மனித இன ஒருப்பாட்டைக் கருதும் நூல் என்பதால், கலப்பு மணத்தை மறுக்கவில்லை; காமத்துப்பாலில் வரும் தலைமக்கள் வெவ்வேறு நிலத்தவர்களாகக் கொள்ள வாய்ப்புகள் உள.

போரினால், குலதர்மம் கெடும், வருணாசிரம தர்மம் கெடும், கலப்பு மணம் ஏற்பட்டுச் சமுதாயம் பாழ்படும் எனக் கீதையில் அர்ச்சுனன் வெளிப்படுத்தும் கருத்துகளில் ஒன்றுகூடத் திருக்குறளில் இடம் பெறவில்லை. அப்படிப் பார்க்கும் பார்வையில் அவருக்கு உடன்பாடும் இல்லை.

## ஆற்றல் அறிதல்

போர்க்களத்தில் துரியோதனன், பாண்டவர் படை ஆற்றல், தன் படை ஆற்றல் ஆகியனவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துத் தன் ஆசானிடம் கூறும் கூற்றுகள் இடம் பெற்றுள்ளன. இது, இவ்வாறு ஆராய்ந்து அறிவது தக்கதுதான் என்பதைத் திருக்குறள்,

***வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்***
***துணைவலியும் தூக்கிச் செயல்*** (குறள்.471)

என்னும் குறள் கருத்தோடு ஒத்து அமைவதைக் காண முடிகின்றது.

## பிற கருத்துகள்

இரு நூல்களிலும் நரகம் பற்றிய நம்பிக்கைகள் இடம் பெற்றுள்ளன. பகவத்கீதையில், நரகம் பற்றிய கருத்து உருவாக்கம் வருணாசிரமத்தின் அடிப்படையிலான கருத்து உருவாக்கமாக அமைகின்றது. குல தருமத்தைக் குலைப்பவன் நகரத்திற்குப் போவான் என முதல் அத்தியாயம் சுட்டுகின்றது. திருக்குறளில் வரும் நரகம் தொடர்பான கருத்துப் பதிவுகள் பொதுநிலையில் மனிதப் பண்புகளை மையமிட்டனவாக அமைகின்றன. மனிதப் பண்புகளின் தாழ்ந்தவர்கள் நரகத்திற்குப் போவார்கள் எனத் திருக்குறள் கருதுகின்றது.

பகவத்கீதையில் வரும் கடவுள் தொடர்பான பெயர்க்குறியீடுகள் பிறப்பு. மெய், உடைமை, அருள்உணர்வு, அழிக்கும் ஆற்றல் ஆகியனவற்றை அடிப்படைகளாகக் கொண்டு அமைவதை, வார்ஷ்ணேய (கீதை. 1:41), கிருஷ்ண (கீதை. 1:28), கேசவ (கீதை. 1:31,32), அச்யுத (கீதை. 1:21), கோவிந்த (கீதை. 1:32), மாதவ (கீதை. 1:14, 37), மதுசூதன (கீதை. 1:35), ஜனார்த்தன (கீதை. 1:36,39,44), ஹ்ருசிகேச (கீதை. 1:15,24) என்னும் இறைவனுக்குச் சுட்டப்படும் பெயர்கள் கொண்டு அறிய முடிகின்றது.

திருக்குறளில் வரும் கடவுள் தொடர்பான பெயர்க் குறியீடுகள், மனிதன் அடைய வேண்டிய பண்புகளின் நிறைநிலைகளை மையமிட்டனவாக அமைவதை ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன் என்னும் பெயர்களைக் கொண்டு அறிய முடிகின்றது.

பகவத்கீதையில் கண்ணன், எல்லாம் வல்ல ஆற்றல் படைத்த கடவுள்; திருக்குறளில், திருமால் ஒரு தெய்வம்.

பகவத்கீதையில் வரும் ஹ்ருஷிகேசன் (அடியவர்களின் புலன்களை வழிநடத்துபவன்) என்னும் கடவுளின் பெயரும் திருக்குறளில் வரும் பொறிவாயில் ஐந்தவித்தான் என்னும் பெயரும் மேனிலையில் ஒன்றுபோல் தோன்றினும், அடிப்படையில் வெவ்வேறானவை.

பெண்களின் கற்பு பற்றிய பார்வையில் இரு நூல்களும் வெவ்வேறு தடங்களில் செல்வதைக் காண முடிகின்றது. குலதர்ம அழிவு – பெண்களின் கற்புக்குக் கேடு – இனக்கலப்பு உருவாக்கம் என்னும் போக்கிலான கருத்து பகவத்கிதையின் முதல் அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளது. இத்தகைய கருத்து திருக்குறளில் இடம் இல்லை; திருவள்ளுவருக்கு அது உடன்பாடும் இல்லை.

பெண்கள் தங்கள் கற்பைத் தாங்கள் காத்துக் கொள்ள வேண்டும்; ஆடவர்கள், பெண்களின் கற்பைக் காக்கின்றோம் என்னும் பெயரில் அவர்களை வீட்டில் அடைத்து வைக்கக்கூடாது; பெண்களின் கற்பிற்குச் சமுதாயம் தக்க பாதுகாப்பாக அமைய வேண்டும்; ஆண்களும் பெண்களைப் போல் கற்புடையவர்களாக வாழ வேண்டும் என்னும் கருத்துகள் திருக்குறள் வழி வெளிப்பட்டுள்ளன.

மேலும், சமுதாயக் கயவர்களால், பெண்கள் கற்பிற்குப் பாதகமான சூழல்கள் எவ்வெவ்வாறெல்லாம் உருவாகின்றன என்பதை ‘பிறன்இல் விழையாமை’ என்னும் அதிகாரத்தில்

தெளிவு செய்து மகளிரையும் சமுதாயத்தையும் விழிப்புணர்வோடு இருக்க ஆற்றுப்படுத்துகின்றார் திருவள்ளுவர்.

## தொடர் ஒப்புமைகள்

இரண்டு நூல்களிலும் ஒரு சில தொடர்கள் பெரிதும் ஒத்தனவாகக் காணப்படுகின்றன. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்:

'சமூம் வியூடாம்' (கீதை. 1:3)

(மிகத் திறமையாக அணிவகுக்கப்பட்ட படை)

'படைத்தகை' (குறள். 768)

'எனக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய எண்ணற்ற வீரர்கள்' (கீதை. 1:9)

'புரந்தார்கண் நீர்மல்கச் சாகின்' (குறள். 780)

'தீய அறிவினனான (துரியோதனன்)' (கீதை. 1:23)

'இகல்மேவல் இன்னா அறிவினவர்' (குறள். 857)

## தொகுப்புரையின் தொகுப்புரை

பொதுவாக, பகவத்கீதையின் முதல் அத்தியாயத்தையும் திருக்குறளையும் ஒப்பிட்டுக் காணும்போது, இரண்டின் கருத்து உருவாக்கங்களும் ஓரளவு ஒத்து அமைந்தாலும், பேரளவு வேறுபடுகின்றனவாகவே உள்ளன.

பகவத்கீதை பெரிதும் குலதர்மத்தையும் வருணாசிரம தர்மத்தையும் மையமிட்டுச் செல்கின்றது; திருக்குறள், மனித அறத்தை மையமிட்டதாகச் செல்கின்றது.

போர் என்பதை மையமிட்டு அமையும் பகவத்கீதையில், அந்தக் காலத்தின் போர் எதிர்ப்புச் சிந்தனைகள் சில பதிவாகியுள்ளதையும் அர்ச்சுனனின் கூற்றின்வழி அறிய முடிகின்றது. அந்த எதிர்ப்பு உறவளவினதாகவும் குலதர்மத்தை மையமிட்டதாகவும் சுருக்கம் பெற்று அமைகின்றது. போர்

என்பது நாட்டின் காப்பிற்காக மட்டுமே என்னும் நோக்கில் போர் தொடர்பான சிந்தனைகளை முன்வைக்கும் திருக்குறள், பெரிதும் போர் எதிர்ப்பு நூலாகவே அமைந்துள்ளது.

பகவத்கீதை, இறைவின் ஆற்றலை முதன்மைப்படுத்தி, அதற்குக் கட்டுப்பட்டதுதான் மனித ஆற்றல் எனக் காட்டுகின்றது; இறைமையின் ஆக்கல் அழித்தல் செயல்களை இறைவனின் பெயர்களைச் சுட்டும் நிலையில் சுட்டுகின்றது.

திருக்குறள் மனித ஆற்றலை முதன்மைப்படுத்தும் நூலாக அமைந்து, மனித ஆற்றலால் தெய்வ ஆற்றலையும் வெல்லலாம் என வழிகாட்டுகின்றது.

# 4. திருக்குறளும் அர்த்த சாஸ்திரமும்

செவ்வியல் இலக்கியத்திற்கு முதல் பண்பாகக் கருதப்படுவது 'பழமை' தன்மையாகும். மிகச்சிறந்த செவ்வியல் இலக்கியங்களான, தமிழில் உலகப்பொதுமறையாகக் கருதப்படுகின்ற 'திருக்குறள்', வடமொழியில் அர்த்தசாஸ்திரம் இவ்விரண்டு நூல்களும் கூறும் அரசியல் நெறிமுறைகளை ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## திருக்குறளும் அர்த்தசாஸ்திரமும்

திருக்குறள் உலகப்பொதுமறையாகப் போற்றப் படுகின்றது. அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரிரியதெனக் கொண்டாடும் வகையில் அமையப்பெற்றது. திருக்குறளில் வரும் திரு என்பது அழகு, சிறப்பு, செல்வம், தெய்வத்தன்மை, மேன்மை எனப் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். குறள் என்பது குறுகிய அடிகளையுடையது. ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்த தனிப்பெரும்;புலவரான வள்ளுவர் வையகம் தழைத்து வாழ அறக்கருத்துகளைக் கொண்ட திருக்குறளைப் படைத்துள்ளார். வள்ளுவர் வாழ்வின் பல்வேறு கூறுகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து உலக உயிர்களின் செம்மையான வாழ்க்கைக்கு வேண்டிய அறக்கருத்துகளை செம்மையுடன் விளக்கியுள்ளார். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளில் வாழ்க்கைப் பொலிவடையும் வழிவகைகளை வகுத்துள்ளார். இவர் பொருட்பாலின் முதல் 25 அதிகாரங்களிலும், ஒலியியல், அஙகவியல் போன்ற அதிகாரஙகளிலும் அரசியல் கருத்துகளைக் கூறியுள்ளமை இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வடமொழியில் "அர்த்தசாஸ்திரம்" மிகவும் தொன்மை வாய்ந்த நூலாகக் கருதப்படுகின்றது. குடில குலத்தைச் சேர்ந்த கௌடில்யர் ஆத்தசாஸ்திரதைப் படைத்துள்ளார். சனகா என்பவர்க்கு மகனாகப் பிறந்ததால் சாணக்கியா (விஷ்ணுகுப்தன்) என்றும் அழைக்கப்படுகிறார். இவர் தட்சசீலம் பல்கலைக்கழகத்தில் நன்கு தெளிவுறச் சாஸ்திரஙகளைக் கற்றுத் தேர்ந்தவர். பேரரசனான தனதந்தனை பழி வாஙக எண்ணி, மாடு மேய்க்கும் சிறுவனான சந்திரகுப்தனை அரியணை ஏற்றி மௌரிய சாம்ராஜ்யத்தை மிளிரச் செய்தவர் என்று வரலாறும் கௌடில்யரைப் புகழ்கின்றது. இத்தகைய சிறப்புடைய கௌடில்யர் செல்வம் ,வளமான வாழ்க்கை இவ்விரண்டையும் பொருளாகக் கொண்டும் அவற்றை மக்களுக்கு வழஙகக்கூடிய அரசை முதன்மையாகக் கொண்டும் அரசியலை அடிப்படையாக வைத்து அர்த்த சாஸ்திரத்தை உருவாக்கியுள்ளார். இந்நூல் 15 ஆதிகரணஙகளைக் கொண்டு 150 பிரிவுகளையும் 180 பிராகர்ணாக்களையும் 6000 ஸ்லோகஙகளையும் கொண்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "அரசாட்சி முறை" நிலவியுள்ளமையை எடுத்துக்கூறும் அர்த்தசாஸ்திரத்தில் அரசு, மக்கள், தொழில், பொருளாதாரம், பகை, படையெப்பு, ஒப்பந்தம், இல்லறம், துறவறம், நீதி, பரிபாலனம், தண்டனைகள் போன்ற செய்திகளின் இலக்கணத்தையும் அவை பகுக்கப்பட்டுள்ள விதத்தினையும் தெளிவாக அறியமுடிகின்றது.

அரசியல் என்பதற்கு ஆஙகிலச் சொல்; 'பாலிடிக்ஸ்' (Politics).இது கிரேக்கச் சொல்லாகிய 'பொலிஸ்' (Phlis) என்ற சொல்லைத் தழுவியதாகும்.

## அரசியல்

'அரசு' என்றால் 'ஆட்சி'அமைப்பாகும். ஆதற்கு அமைச்சர், தூதுவர், பெரியோர், ஒற்றர், படைவீரர் ஆகியோரின் பணி இன்றியமையாத தேவையாகின்றன. நாட்டின் தன்மை, ஆட்சியின் இயல்பு ஆகியவற்றின் நிலையை எடுத்துக்கூறும் விதம் அரசியலாகும். இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வாழும்

மக்களின் செயல் நிலைகளை எடுத்தியம்புவனவாகும். உலகம் ஒரு குடும்பம். மக்கள் அதன் உறுப்பினராவர். ஆள்வோரும், ஆளப்படுவோரும் வேறல்லர். குடியரசு, முடியரசு, படையரசு என எதுவாக இருப்பினும் சிறப்பான முறையில் அரசு நடத்துவதை நோக்கமாய் கொள்ள வேண்டும். நாட்டிற்கு ஓர் அரசு வேண்டும். அரசுக்கோர் தலைவன் வேண்டும். தலைவன் வரும் வழி எச்சூழல் என்பது அவசியமில்லை. எவ்வழியாயினும் அரசேற்கும் தலைவனுக்கு இறைமாட்சி அதிகாரம் அமைய வேண்டும் என்பதே வள்ளுவம் கூறும் அரசியலாகும். ஒரு மன்னனும் அவனது ஆட்சியும் சட்டத்தையும் தர்மத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பது அர்த்தசாஸ்திர அரசியலாகவும் கருதப்படுகிறது.

## நாடாளும் அரசன்

மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குகின்றவனே சிறந்த அரசன். அவ்வரசனே இறைவனுக்குச் சமம் என்ற நிலை சங்ககாலத்தில் நிலவியிருந்தது. அரச தர்மத்தைக் காப்பது மட்டும் அரசனுடைய கடைமையில்லை. பொருளுதவி வேண்டி நிற்போருக்கு பொருளுதவி அளித்தலும், தன் பாதுகாப்பின் கீழ் இருப்போரை அன்புடன் நடத்துதலும், வேற்றுமையின்றி நல்ல நிலைமையுடன் நீதி வழங்குதலும், மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்தலும் அரசன் சிறந்த அரசாட்சி புரிகின்றமைக்குரிய பொறுப்பாகும் என்று திருக்குறள் கூறுகின்றது. இவ்வகையில் அரசாட்சி புரிகின்றவனே மிகச் சிறந்த அரசன் என்பதனை,

***முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறையென்று வைக்கப் படும்***

எனும் குறள் வரிகள் குறிப்பிடுகின்றன.

மனுதர்மத்தில் அரசனைப் பற்றிக் கூறும்போது நான்கு வருணத்தாரும், அவர்தம் ஒழுக்கமும் பேணிக்காக்கப் படுவதற்காகவே அரசன் படைக்கப்பட்டான். அவன் இல்லையேல் எளியோர் வலிபவருக்கு அஞ்சியே அழிந்திடுவர் என்று கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. நாடாளும்

அரசனின் குணங்களாக அஞ்சாமையும், ஈகையும், அறிவும், தளராஉறுதியும் அமைய வேண்டும் என்பதைனை திருக்குறள் வலியுறுத்துகின்றது. அரசன் அச்சமின்றி மனத்திட்பத்தோடு வினை முடிப்பதனை,

*அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தாற் செயின்*

என்று வள்ளுவம் கூறுகிறது. இது போன்றே அரசனுக்குரிய பிற குணங்களையும் திருக்குறள் வகைமைப்படுத்தியுள்ளது.

ஒரு அரசன் தன் குடிமக்களை நியாயமான முறையில் சட்டத்துக்கு உட்பட்டு அரசாளுபவனாக இருந்தால் அவன் சொர்க்த்திற்குச் செல்கிறான். தவறான முறையில் சட்டத்தின் துணையோடு மக்களைத் தண்டிப்பவன் அந்த உயர்பதவியை அடைவதில்லை. ஒரு அரசன் தர்மசாஸ்திரங்களைக் கடைபிடிக்காவிட்டால் அவன் தவறுகளே அவன் அரசாட்சி வீழக்காரணம் ஆகிவிடும். அரசியல் வழிமுறைகள், மூன்று வேதங்களின் (ரிக், சாம, யஜுர்) அறிவுரைகள், பொருளாதாரக் கோட்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிய நிறைந்த முழுமையான அறிவு அரசனுக்குரிய அடிப்படை அவசியம் என்று அர்த்தசாஸ்திரம் கூறுகின்றது. அரசன் சுயக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்வதற்காக எப்போதும் கற்றறிந்த பெரியோர்களிடம் தொடர்பு வைத்திருக்க வேண்டும். அவர்களிடம் மட்டும்தான் எப்போதும் சுயக்கட்டுப்பாடு குடிகொண்டிருக்கும். மேலும் ஆறு நுகர்புலன்களின் செயல்களுக்கும் கட்டுப்பாடு விதித்து ஆசை, தற்பெருமை, சுகபோக ஈடுபாடு, தேவையற்ற முரட்டுத்தனம், பொறுக்க முடியாத முட்டாள்தனம் ஆகியவற்றை வெல்பவனே அரசன் என்று கௌடில்யர் சித்திரித்துள்ளார்.

## அரசனின் கடமைகள்

நடுவு நிலைமையில் நீதி சொல்லுதல், வேதத்திற்கும் அறத்திற்கும் ஏற்றவாறு உண்மையுடன் உலகத்தைக் காத்தல்,

ஒற்றர்களையும் புகழ்பெற்ற நீதிநூல்களையும் அரசன் இருகண்களாகக் காத்தல், தனது புகழை நிலைநிறுத்தி ஒழுங்காட்சி நடத்துதல் போன்றவற்றை அரசனின் கடமைகளாக வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார். குடிமக்களுக்குப் பிறராலும் தன்னாலும் துன்பம் வராமல் காத்து, அதே சமயம் கொடிய செயல்களைச் செய்பவர்களைத் தண்டிப்பது ஆள்கின்றவனுக்குப் பழி ஏற்படாமல் பார்த்துக்கொள்வது போன்றவை அரசின் கடமையே என்பதனை, ‘குடிபுறம் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல்’ என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

ஒரு அரசன் வலிமையுடையவனாக இருந்தால் அவன்; நாடாளும்; மக்களும் அவனைப் போலவே வலிமைபொருந்தியவர்களாக இருப்பார்கள். அரசன் வலிமை இல்லாமல் சோம்பேறியாக ஏமாளியாக இருந்தால் அவன்; குடிப்படைகளு” அப்படியே இருந்து அவன் செல்வத்தை விழுங்கி அவனை அழித்து விடுவார்கள்;. அரசனின் அழிவுக்கு அவன் மக்களே அடிப்படையாகி விடுவார்கள். அரசனுக்கென்று கௌடில்;யர் அர்த்தசாஸ்திரத்தில் ஒரு அட்டவணை அமைத்துள்ளார். அதில் பாதுகாப்பு, வரிவசூல், பொதுமக்களின் குறைதீர்த்தல், அமைச்சர்களின் கருத்துக்களை அறிதல், ஓலைகள் எழுதுதல்;, ஒற்றர்களைச் சந்தித்தல், தூது அனுப்புதல், தன்; சொந்தச் செயல்களைச் செய்தல், படை பலம், படைவீரர்களைச் சந்தித்தல், ரகசிய ஒற்றர்களோடு ஆலோசனை புரிதல், இசை ஒலிக்க உறங்கும் அறைக்குச் செல்லுதல், விழித்தல், அரசியல் ஏற்பாடுகள், வெளிநாட்டு, உள்நாட்டு கொள்கைகள் பற்றி முடிவெடுத்தல், மதச் சடங்குகள்;, ஜோதிடர், பணியாளர்களைச் சந்தித்தல்; போன்ற செயல்களைச் செய்ய வேண்;டியது அரசனின் தலையாயக் கடமைகளாக கௌடில்;யர் குறிப்பிட்டிருக்கிறார்.

## மாது, மது, சூது

‘வரைவின் மகளிர் தொடர்பும்’, ‘கள்ளும்’, ‘சூதும்’ இவை மூன்றும் உயர்ந்ததொரு சமுதாயத்தில் இடம் பெறக்கூடாது என்று கருதிய வள்ளுவர்,

*இருமணப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு*

என்று சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றார்.

வடமொழியில் அர்த்த சாஸ்திரம் என்ற பெயரில் அரசியல் திட்டம் வகுத்த சாணக்கியர் தனது நூலில் வளளுவர் ஒதுக்கிய இம்மூன்றையும் முதன்மைப் படுத்தியுள்ளார். "வரைவின் மகளிர் தொடர்பும், கள், சூது ஆகியவை அரசனது வருமானத்தை மிகுதியாக்குகின்ற காரணத்தால் இம்மூன்றையும் அழியாது காத்தல் அரசனது கடன்" என்கின்றது அர்த்த சாஸ்திரம். அர்த்த சாஸ்திரத்தை அருகில் வைத்துக்கொண்டு அரசாண்ட விஜயநகர அரசர்கள் காலத்தில் பொது மகளிர் விடுதிகள், மதுக்கடைகள், சூது மன்றங்கள் ஆகியவற்றை அரசாங்கமே ஏற்று நடத்திப் பெரும்பொருள் திரட்டியதற்கு வரலாறு சான்று ஆதாரமாகின்றது.

*வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்*
*பூரியர்கள் ஆழும் அளறு*

என்று வரைவின் மகளிரையும்,

*உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்*

என்று கள்ளையும்,

*சிறுமை பல செய்து சீரழிக்கும்*
*வறுமை தருவது ஒன்றுஇல்*

என்று சூதையும் பொய்யில்புலவர் நிராகரித்துள்ளார்.

## அரண்மனை அமைப்பு

"ஒரு நாடு என்றால் எல்லை, மக்கள், ஆளுகின்ற உரிமை, அரசாங்கம் இவை வேண்டற்பாலது" என்று கிரேக்க நாட்டுப் பேரறிஞர் அரிஸ்டாட்டில் விளக்கியுள்ளார். நாட்டின் எல்லையினை,

*இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு*

என்று வள்ளுவர் முதற்கண் வலியுறுத்துகின்றார். ஒரு நாட்டிலே வல்லரண் என்று அவர் குறிப்பிடுவது வினைமாட்சி அமைந்த மக்களின் மனமாட்சியில் எழுந்து நிற்கும் எல்லையும், காவலும், கோட்டையும் ஆகும்.

காவல் அரண்களும், அகழியும், பாதுகாப்புடன் கூடிய வாயிலுடனும் அரண்மனை கட்டப்பட வேண்டும் என்று அரண்மனை அமைப்பு பற்றிய கருத்துகளோடு குடும்பத்தினரிடமும் மற்ற நெருஙகிய நண்பர்களிடமும் இருந்து வரக்கூடிய மரணாபத்தைப் பற்றி எச்சரிப்பதுடன் அதைக் களைவதற்குரிய சில வழிமுறைகளையும் கௌடில்யர் அறிவுறுத்துகிறார்.

## தூதுவர்கள்

மக்கள்மாட்டு அன்புடையவனாயிருத்தலும், நற்குடியில் பிறந்திருத்தலும், வேந்து விரும்பும் பண்புடையவராயிருத்தலும் தூது சொல்வானுக்கு உரிய இலக்கணமாகத் திருவள்ளுவர் வகுத்துள்ளார். அன்புடைமை, வினைக்கேற்ற அறிவுடைமை, வேற்றரசனிடம் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லும் செயல்திறம் இம்மூன்றும் இன்றியமையாத குணஙகளாகும். வேற்று வேந்தனிடம் சொல்ல வேண்டிய செய்திகளைத் தொகுத்துச் சொல்லியும், அவ்வேந்தனுக்கு வெறுப்பான செய்திகளைக் கூறும்போது, கடுஞ்சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம் மகிழச்சொல்லியும், தம் அரசனுக்கு நன்மை விளைவிப்பவனே உயர்ந்த தூதனாகக் கருதப்படுவான். தூதாகிய வினைக்கு செல்பவனிடத்தில் இயற்கை அறிவு,கண்டார் விரும்பும் தோற்றப்பொழிவு, தெளிந்த கல்வியறிவு இம்மூன்றும் இருக்க வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறுகிறார்.

அன்புடைமையும், அறிவுடைமையும், ஆராய்ந்து சொல்கின்ற சொல்திறமையும் ஆகிய மூன்றுமே தூது உரைப்பவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் என்பதனை,

*அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பவர்க்கு இன்றி அமையாத மூன்று*

என்ற குறள் மூலம் எடுத்துக்கூறி அழிவே வருவதாயினும் தூதுவன் அஞ்சாது தன்னுடைய அரசனுக்கு நன்மை உண்டாகக் கூடியவற்றைச் செய்ய வேண்;டும் என்ற பிற கருத்துக்களையும் தூது எனும் அதிகாரத்திலேயே வள்ளுவர் அமைத்துள்ளார்.

ஒரு அமைச்சராகும் அளவிற்குத் தகுதியுடையவரே சுயமாகப் பேசி முடிவெடுக்கும் உரிமையோடு தூதுவராக அனுப்பப்படலாம் என்பது கௌடில்யரின் கருத்தாகும். அரசனுக்குச் செய்தி அனுப்புதல், இருநாட்டு ஒப்பந்தம், தான் அனுப்பிய நாட்டில் சரிவர நடைபெறுகிறதா என்று பார்த்தல், மன்னனின் பெருமைகளைக் காத்தல், எதிரி நாட்டு மன்னனின் நட்புவட்டத்தைப் பிரித்துத் தன்னாட்டு மன்னனின் கூட்டாளியாக்குதல், பகைநாட்டின் விலைமதிப்பற்ற பொருள்களைக் கவர்தல், பகைநாட்டில் சிறைபட்டு இருக்கும் தன்னாட்டு வீரர்களை விடுவித்தல், முடிந்தால் ரகசியமாகத் தன்நாட்டுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதும் தூதுவனின் கடமை என்று அர்த்த சாஸ்திரம் கூறுகின்றது.

பகைநாட்டு அரசனிடம் செய்தியைத் தெரிவிக்கும்போது அவன் எப்படி அதை எதிர்கொள்வான் என்பதை முன்கூட்டியே அறியும் திறமை உடையவனாக தூதுவன் இருக்க வேண்டும். தான் சந்திக்க இருக்கும் அரசனின் நடவடிக்கைகள், பலம், பலவீனம் அனைத்தையும் தூதுவன் அறிந்திருக்க வேண்டும். பகை நாட்டின எல்லைகள், கோட்டைகள், காட்டு அரண்கள், நாட்டுப் பொருளாதாரம் இவற்றையும் அறிய வேண்டும். இவையனைத்தும் அர்த்தசாஸ்திரம் கூறும் தூதுவர்களின்; சிறப்பாகும்.

அரசாட்சிமுறை எம்முறையில் அமைந்தாலும், அதன் நோக்கம், பயன் கருதியே நாட்டின்நிலை கணக்கிடப்படும். அர்த்தசாஸ்திரம் வடமொழியில் முதன்மையுடன் புகழ்பெற்று விளங்குகின்றது. இதில் கௌடில்யர் கூறிய அரசியல் செய்திகள்

அக்கால ஆட்சியாளர்களுக்குப் பெரிதும் துணை புரிந்துள்ளன. வள்ளுவரும் அரசியல் துறையில் சிறந்த பணிபுரிந்த சான்றோராய் விளஙகியுள்ளமை திருக்குறள்வழிப் புலனாகின்றது. மேலும் தமிழ்க்குடியானது தன்னெழுச்சியினையும், சிறந்த மேம்பாட்டினையும் கொண்டு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது என்பதையும் திருக்குறள்வழி அறியமுடிகின்றது. வடமொழியில் கௌடில்யர் அரசியலுக்கு வகுத்த இலக்கணத்தைப் போன்று தமிழில் தமிழர்களுக்கென வள்ளுவரும் அரசியல் சார்ந்த அறநெறிகளைக் கூறியுள்ளார். இருப்பினும் அர்த்தசாஸ்திரம் கூறிய நெறிமுறைகளைக் காட்டிலும் திருக்குறள் கூறும் அரசியல் நெறிமுறைகளே சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

# 5. வள்ளுவரும் சாணக்கியரும்

ஒருவர் தன் கருத்தை மற்றொருவருக்குத் தொிவிக்கும் பொருட்டுத் தன் சார்பாக ஒரு நபரையோ அல்லது ஓர் அஃறிணைப் பொருளையோ தூதாக அனுப்புவது தூது எனப்படும். அஃறிணைப் பொருளைத் தூதாக விடுத்து இலக்கியம் படைப்பது இலக்கிய உத்திகளுள் ஒன்றாகும். (அஃறிணைப் பொருட்களைத் தூதாக விடுத்துப் பாடல் புனைந்துள்ளமையைப் பக்தி இலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் காணலாம். இது பெரும்பாலும் அகத்துறையைச் சார்ந்ததாகவே உள்ளது.)

இதனை ஏற்றுக் கொள்ளலாம் எனத் தொல்காப்பியமும் நன்னூலும் தனிப்பாடற்றிரட்டும் எடுத்தியம்புகின்றன. ஒரு மன்னனின் படை வெற்றிக்கு முக்கியக் காரணகர்த்தாவாகத் தூதுவர்கள் இருந்துள்ளனர். தூதுவர்களின் இயல்பையும், அவர்களின் மதி நுட்பத்தையும் இலக்கண இலக்கிய நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது. தூதுவர்களுள் தலைசிறந்தவராக ஔவையார் இருந்துள்ளமையைப் புறநானூறு பதிவு செய்துள்ளது. நீதிநூற்களுள் தலைச்சிறந்ததாகக் கருதப்படும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள தூதுவர்களின் இலக்கணத்தையும் வடமொழி நூலான கௌடில்யாின் அர்த்தசாஸ்திரத்தில் இடம்பெற்றுள்ள தூதுவர்களின் இலக்கணத்தையும் ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

## வள்ளுவாின் காலம்

வி.ஆர்.ஆர் தீட்சிதர் வள்ளுவர் கி.மு 1 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும், மறைமலை அடிகளார்; கிறிஸ்துவுக்கு 30 ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்றும், மா.இராசமாணிக்கனார் கி.மு 1 முதல் 3 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும்,

எஸ்.வையாபுரிப்பிள்ளை கி.பி 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றனர். திருக்குறள் அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் எல்லா நாட்டினருக்கும் அனைத்துக் காலத்திற்கும் பொருந்தும் உண்மைகளை எடுத்துக் கூறுகிறது. திருக்குறளின் சிறப்பு மிகுதியால் காலந்தோறும் புதுப்புது உரைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இது 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டுள்ளது. இப்பெருநூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பகுப்புக்களையும் கொண்டது. வள்ளுவரை சைவர் என்றும், வைணவர் என்றும் வேதவழக்கினர் என்றும் கூறும் கருத்துக்கள் உள்ளன.

இவர் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்று சிலர் சான்றுகளையும் காட்டுகின்றனர். இவர் பிறந்த இடம் மயிலாப்பு+ர் என்பது கர்ண பரம்பரைக் கதை. டாக்டர் பத்மநாபன் வள்ளுவர் கன்னியாகுமாரி மாவட்டத்துக்காரர் என்பதற்குப் பெரும் அளவிலான ஆதாரங்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

## வள்ளுவர் காட்டும் தூதுவனின் பண்பும் தகுதியும்

திருக்குறளில் பத்து இயல்களுள் ஒன்றான அமைச்சியலில் தூது என்னும் ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வகுத்துள்ளார். இதில் தூதுவனுடைய தகுதிகள், பண்புகள் போன்றவற்றைப் பட்டியலிட்டுள்ளார். அன்பு உடையவனாக இருத்தல், தகுதியான குடியில் பிறந்தவனாயிருத்தல், அரசன் விரும்பும் சிறந்த பண்புடையவனாக இருத்தல் ஆகிய மூன்றும் தூது உரைப்பவனுக்குரிய தகுதிகள் என்பதை வள்ளுவர்,

***அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்***
***பண்புடைமை தூதுஉரைப்பான் பண்பு*** (குறள் – 681)

என்ற குறள்வழி விளக்குகிறார்.

தூதுவன் தனது அரசனின் வெற்றியைப் பகையரசனிடம் சிறப்பித்துக் கூறுவதற்கு நூல்களைக்கற்றுத் தேர்ந்தவர்களுள் சிறந்தவனாக விளங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இயற்கை

அறிவு, விரும்பத்தக்கத் தோற்றம், ஆராய்ச்சியுடைய கல்வி ஆகிய இம்மூன்றிலும் சிறந்து விளங்குபவன் தூது உரைக்கும் தொழிலுக்குச் செல்லலாம் என்றும்,

பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், அவற்றுள் பயனற்றவையை நீக்கியும், பகையரசன் மகிழுமாறு சொல்லியும் தன் மன்னனுக்கு நன்மை உண்டாக்குபவனே தலைச்சிறந்த தூதன். அவன் தனது கடமை எதுவென்று தெளிவாக உணர்ந்து கொண்டு அதற்குரிய காலத்தையும் தக்க இடத்தையும் ஆராய்ந்து அறிந்தவனாகவும், தூய ஒழுக்கம் உடையவனாகவும், சிறந்த போர்வீரர்களைத் துணையாகக் கொண்டவனாகவும் இருக்கவேண்டும்.

இறுதியாக குற்றமான சொற்களை வாய் சோர்ந்தும் சொல்லாதவனாகவும், தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும் அதற்காக அஞ்சிவிட்டுவிடாமல் தன் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு செய்பவனே தூதன் என்று தூதனுக்குரிய தகுதிகளையும், பண்புகளையும் பட்டியலிட்டுக் கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. இதனை,

***இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு***
***உறுதி பயப்பதாம் தூது*** (குறள் – 690)

என்ற குறள்வழி எடுத்துரைக்கின்றார்,

## கௌடில்யாரின் வாழ்க்கை வரலாறு

குடில குலத்தைச் சேர்ந்தவராதலால் கௌடில்யர் என்றும் சனகா என்பவருக்கு மகனாகப் பிறந்ததால் சாணக்கியர் என்றும் வழங்கப்பட்ட இவாரின் இயற்பெயர் விஷ்ணுகுப்தன் இவரை கேரள பிராமணன் என்றும் வடநாட்டைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றனர். இதில் எது உண்மை என்று தொரியவில்லை. ஆனால் இவர் தட்சசீலம் என்ற பல்கலைக்கழகத்தில் சாஸ்திரங்களைப் பயின்றவர் என்றும் அக்காலத்தில் பேரரசனாக

இருந்த மகாநந்தனாகிய தனநந்தனைப் பழி வாங்க மாடுமேய்க்கும் சிறுவனான சந்திரகுப்தனை அரியணை ஏற்றி மௌரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் என்றும் வரலாறு கூறுகிறது.

'அர்த்த' என்ற வடமொழிச் சொல்லுக்குப் பலபொருட்கள் இருந்தாலும் செல்வம், வளமான வாழ்க்கை என்பதையே பொருளாகக் கொண்டும், அவற்றை மக்களுக்கு வழங்கக்கூடிய அரசை முதன்மையாகக் கொண்டும், அரசியலை அடிப்படையாக வைத்தும், அர்த்தசாஸ்திரத்தை இயற்றியுள்ளார். இவர் தன் நூலில் பல இடங்களில் தனக்கு முன்னால் இப்படிப்பட்ட நெறிமுறைகளைக் கூறியிருக்கும் பிற ஆசிரியர்களைப் பற்றியும் 112 இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவர்களுள் பிரகஸ்பதி, உஷானாஸ், பிராச்சதேசமனு, விசாலாக்ஷா, பரத்வாஜா போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்.

சந்திரகுப்த மௌரியர் அரியணை ஏறிய காலம் கி.மு 321 என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே கௌடில்லியாரின் காலமும் அதுவாகவே இருக்கலாம். அர்த்தசாஸ்திரம் 15 அத்ரிகாரங்களைக்; கொண்டு 150 பிரிவுகளையும் 180 பிராகர்ணாக்களையும் 6000 ஸ்லோகங்களையும் கொண்டது. இது 1909 ஆம் ஆண்டு மைசூரில் ஓலைச்சுவடியாகக் கிடைத்தது என்றும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டது என்றும் கூறுகின்றனர்.

## கௌடில்யர் கூறும் தூதுவர்களின் தகுதிகள்

ஓர் அமைச்சராகும் அளவிற்குத் தகுதி உடையவரை, சுயமாகப் பேசி முடிவெடுக்கும் ஆற்றல் உடையவரைத் தூதுவராக அனுப்பலாம் என்றும், அமைச்சராகும் தகுதியில் முக்காலளவு தகுதியுடையவர் முடிவெடுக்கும் உரிமையில்லாது பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை மட்டும் உடையவராகவும், பாதியளவு தகுதியுடையவர்கள் செய்திமட்டும் கொண்டு செல்லும் தூதராகவும் நியமிக்கப்படுவர் என்று தூதனின் தகுதியைக் கூறுகிறார் கௌடில்யர்.

மேலும் தன் அரசனுக்குத் தவறாமல் செய்தி அனுப்பும் இருநாட்டு ஒப்பந்தம் தான் அனுப்பிய நாட்டில் சாரிவர நடைபெறுகிறதா என்று பார்க்கவும், தன் மன்னனின் பெருமையைக் காப்பாற்றவும், தான் இருக்கும் நாட்டு மன்னனின் நண்பர்களைப் பிரித்து தன் அரசனின் கூட்டாளியாக்கவும், எதிரி நாட்டிலிருந்து விலை மதிப்பற்றப் பொருட்களைத் தன் அரசனுக்குக் கடத்தவும், அந்த நாட்டில் சிறைபட்டு இருக்கும் தன் நாட்டு வீரர்களை விடுவிக்கவும், முடிந்தால் இரகசியமாக அந்நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதும் ஓர் அரசுத் தூதுவனின் கடமையாகும் என்கிறார் கௌடிலியர்.

மேலும் தூதுவன் பகை நாட்டு அரசன் அல்லது அடுத்த நாட்டு அரசனிடம் செய்தியைத் தொரிவிக்கும் போது அவன் அதை எப்படி எதிர்கொள்வான் என்பதை முன்கூட்டியே அறியும் திறமையுடையவனாக இருக்கவேண்டும் என்றும், அதற்குத் தன் பதில் என்னவாக இருக்க வேண்டுமென்பதையும் அறிந்தவனாகத் தூதுவன் இருக்கவேண்டும் என்றும், தான் சந்திக்க இருக்கும் அரசனின் நடவடிக்கைகள் அவனது பலம், பலவீனம் அனைத்தும் அறிந்து இருக்கவேண்டும் என்றும், தன் பெருமையும் குறையாது மிடுக்கோடு வண்டி வாகனம், ஆள் படை அம்போடு செல்லவேண்டும் என்றும் கூறுகின்றாார்.

தூதுவன் தூது செல்ல தன் நாட்டிலிருந்து கிளம்பியதிலிருந்து அந்த நாட்டை அடைவது வரையுள்ள இடைப்பட்ட தூரத்தில் இருக்கக் கூடிய காட்டுவாசிகள், கோட்டைக் காவலர்கள், நகர் காவல் அலுவலர்கள் ஆகியோரை அறிமுகப்படுத்திக் கொண்டும், அனுசாரித்து நடந்தும், தன் நாட்டுப்படைகளை எப்படி நடத்திச் செல்லலாம் எங்கு தங்க வைக்கலாம் என்பதோடு தேவைப்பட்டால் பின்வாங்கி எங்கு சென்று ஒளியலாம் என்ற செய்தியையும், தான் சந்திக்கச் செல்லும் அரசனின் நாட்டு எல்லைகள், கோட்டைகள், காட்டு அரண்கள், நாட்டுப் பொருளாதாரம் போன்றவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் தான் தூதாக செல்லும் நாட்டு அரசன் தன்னை உள்ளே வர அனுமதி அளித்த பிறகே அரசனைத் தூதுவன் சந்திக்கவேண்டும் என்றும், தன் நாட்டு அரசன் சொன்ன செய்தியை அரசனுடைய வார்த்தைகளிலேயே சொல்லவேண்டும் என்றும், அதனால் அவனுக்கு உயிராபத்து நேரிடுமானாலும் தூதுவன் இலக்கணப்படி உண்மையே பேசவேண்டும் என்றும், செய்தி கேட்ட அரசன் முகம் மலர்ந்து தன்னை அருகே அமர்த்தி நலம் விசாரித்து அவனிடமே அவன் அரசனைப் பற்றி பெருமையாகப் பேசி அவனை மாரியாதையாக நடத்தினால் அவன் கொண்டு வந்த செய்தியை அரசன் ஏற்றுக் கொண்டுள்ளான் என்பதையும், அப்படி இல்லாவிட்டால் அவனுக்கு அது பிடிக்கவில்லை என்பதையும,; தூதுவன் புாரிந்து கொள்ள வேண்டும் என்றும், தூதுவன் தான் பேசியவை அனைத்தும்; தன் அரசனின் வார்த்தைகள்தான் என்பதையும் தன் எண்ணம் அல்லவென்பதையும் பகை மன்னனை உணரவைக்க வேண்டும் இதுவும் தூதுவனின் தலையாய கடமை என்கிறார்.

பொதுவாகத் தூதுவர்கள் பிராமணர்களாகவே இருப்பர் என்றும், ஒரு ஜாதி பிருஷ்டம் அல்லது நாடு கடத்தப்பட்டவன் தூதுவனாக வந்திருந்தாலும் தூதர்களுக்குத் துன்பம் இழைப்பது சாஸ்திரப்படி தவறு என்பதை எல்லோரும் அறிந்திருந்தனர் என்றும் அர்த்தசாஸ்திரம் கூறியுள்ளது.

அரசன் அனுமதி பெற்றுத்தான் தூதன் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்றாலும் அரசனுக்கு விருப்பம் இல்லாத செய்தியைக் கொண்டுவந்து தூதுவனுக்கு உயிரபாயம் ஏற்படுமானால் சிறைத் தண்டனைக்குப் பயந்து எதிாரி நாட்டை விட்டு இரகசியமாகத் தூதன் வெளியேறலாம் என்றும் அல்லது நல்ல விஷயமே சொல்லியிருந்து எதிாரி மன்னனால் நாட்டைவிட்டு வெளியேற அனுமதி அளிக்கப்படாதபோது, தூதன் மாற்று அரசனின் அன்புப் பாரிசுகளால் உண்மையான மகிழ்ச்சி அடைந்து விடுதலோ, பதட்டமான காாரியம் ஆற்றுதலோ, தன் நாட்டு

அரசனின் சக்தியில் நம்பிக்கை வைக்காமலோ, கொடிய அல்லது கூறத்தகாத வார்த்தைகளைப் பேசுவதோ, தவறான முறையில் யாராவது தன் பொறுமையையும் சோதிக்கும் விதத்தில் பேசினால் கோபமுறவோ, மது, மாது போன்ற இன்பங்களில் ஈடுபடவோ, பிறரோடு சேர்ந்து உறங்குவதோ கூடாது என்றும் கூறியுள்ளது..

ஒரு சமயம் விரும்பத்தகாத செய்தியைத் தூதுவன் கொண்டுவந்துவிட்டால் அரசன் அந்த தூதுவனைப் போகவிடாது தடுத்துநிறுத்திவிடலாம். அவ்வாறு தடுத்து நிறுத்தும் போது தன் மன்னனுக்குத் தேவையான செய்தியைச் சொல்வதில் தாமதம் ஏற்பட்டுவிடும்; என்பதையும் தூதன் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும், அல்லது அந்நாட்டு அரசன் தன்னைப் பலப்படுத்தி கொள்வதில் அல்லது தன் நண்பர்களின் உதவி கிடைப்பதில் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் புரிந்து கொள்ள வேண்டுமென்றும், அல்லது தன் நாட்டு மன்னனுக்கு நடவடிக்கை எடுப்பதில் பொருத்தமான காலம் கழிந்து அனுகூலமற்ற காலம் (மழை,வெள்ளம்,குளிர்) வரும்வரை காலதாமதம் செய்ய நினைத்திருப்பதாகவும் கொள்ளவேண்டும் என்கிறார் கௌடில்யர். மேலும் தூதுவன் தானே முன்சென்று படையெடுப்பதற்குத் தேவையான உணவு தானியங்கள், மற்ற பொருள்கள், காட்டு விளைபொருட்கள் சேகாரிக்கவும்; அல்லது கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்தவும் செய்யலாம் என்றும், பகை அரசன் தன் அரசன் மீது அலட்சியம் காட்ட இயலாததால் தன் மீது அலட்சியம் காட்டலாம் என்றும், எனவே, புத்திசாலித் தூதன் அரசனின் மனநிலையை அறிந்து முடிந்தால் அதைத் தன் நாட்டிற்குச் சாதகமாக்கிக் கொள்ளவேண்டும் என்றும், அல்லது தப்பிச்சென்று தன் அரசனை எச்சாரிக்கை செய்யவேண்டும் என்றும், தூதுவனின் பண்பையும் பணியையும் கௌடில்யர் எடுத்தியம்பியுள்ளார்.

## தொகுப்பு

- அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய மூன்றும் தூதுவனுக்குாிய உயர்ந்த பண்புகள் என்று இருவரும் கூறியுள்ளனர்.

- தூதுவன் பிராமணன் என்றும், நாடுகடத்துப்பட்டவன் தூதனாகச் செல்லலாம் என்றும் அர்த்தசாஸ்திரம் கூறியுள்ளது. இச்செய்தியைக் குறள் கூறவில்லை.
- தூதுவன் பகை நாட்டிற்குச் சென்று மன்னனது கூட்டாளிகளைத் தன்வயப்படுத்த வேண்டுமென்று கௌடில்லியர் கூறியுள்ளார். ஆனால் இச்செய்தியை வள்ளுவர் கூறவில்லை.
- தன்னுடைய உயிருக்கு ஆபத்து நேர்வதாக இருந்தாலும் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு தூதுவன் செயல்பட வேண்டுமென்று கூறுவதில் இருவரும் ஒன்றுபடுகின்றனர்.
- தூதுவன் பகை அரசனது நாட்டிற்குள் சென்றுவிட்டால் அவனது அனுமதி பெற்றுத்தான் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்றும், உயிராபத்து அல்லது சிறைத் தண்டனை நேர்வதாக இருந்தால் மன்னனது அனுமதி இல்லாமல் வெளியேறலாம் என்று கௌடில்யர் கூறியுள்ளார். ஆனால் வள்ளுவரோ இச்செய்தியைக் கூறவில்லை.
- தூதுவன் உண்மையை மட்டுமே பேசவேண்டும் என்று கூறியுள்ளதில் இருவரும் ஒன்றுபடுகின்றனர்.
- தூதன் பகை அரசன் கொடுத்த பாரிசுப்பொருட்களால் மகிழ்ச்சி அடைந்து விடுதலோ, யாராவது தன் பொறுமையைச் சோதிக்கும் விதத்தில் பேசினால் கோபமுறவோ, மது. மாது போன்ற இன்பங்களில் ஈடுபடவோ, பிறரோடு சேர்ந்து தூங்கவோ கூடாது என கௌடில்யர் கூறியுள்ளார். ஆனால் இதனைக் குறித்து வள்ளுவர் கூறவில்லை.

இவ்வாறு இரு மன்னர்களிடையே கருத்துக்களைப் பாரிமாறிக் கொள்வதற்காக அனுப்பப்படும் தூதுவனின் தகுதிகளையும், பண்புகளையும் இரு நூல்களும் எடுத்துக் கூறினாலும் சிறிதளவு வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகளுக்குக் காலச்சூழலும், இடச்சூழலும் காரணமாக இருந்திருக்கும் என எண்ணுவதற்கு இடமளிக்கிறது.

# 6. திருக்குறளும் திருவிவிலியமும்

## நேர்மையும் உள்ளத்தூய்மையும்

திருவவிலியத்தின் லேவியராகமம் பலவகைகளில் நேர்மையைப் போதிக்கின்றது.

*நீங்கள் களவு செய்யாமலும் வஞ்சனை பண்ணாமலும் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்.*

*என் நாமத்தைக் கொண்டு பொய்யாணை இடுகிறதனால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்.*

*பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி விடியற்காலமட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது*

(லேவி. 19. 11–13).

பின்வரும் குறள் வரிகள் இவற்றிற்கு ஒப்பாகக் காட்டலாம்.

*உள்ளத்தா லுள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வேம் எனல்* (குறள் 282)

*தன்னெஞ் சறிவது பொய்யற்க* (குறள் 293)

*மறந்தும் பிறன்கேடு சூழற்க* (குறள் 204)

‘பிறன் கேடு சூழற்க’ எனப் பொதுவகையால் கூறினார் வள்ளுவர். தனித்தனிச் சந்தர்ப்பத்தைக் குறித்துச் சிந்தித்து நீதி கூறும் பழைய ஏற்பாட்டு நீதியாளர்கள் பின்வருமாறும் ஓர் நீதியைக் கூறினர்:

**செவிடனை நித்தியாமலும் குருடனுக்கு முன்னே தடுக்கலை வையாமலும் உன் தேவனுக்குப் பயந்திருப்பாயாக** (லேவி. 19. 14).

யாருக்குக் கேடு சூழ்தல் எளிது? ஏதேனும் உடற்குறையுடையவர்களைப் பிறர் துன்புறுத்துதல் எளிது. அதையெண்ணியே இவ்விதியைக் கூறியுள்ளனர். செவிடன் காதால் கேட்காவிட்டாலும் குருடன் கண்ணால் பார்க்காவிட்டாலும் கடவுள் அறிகிறார் என அஞ்சி அவர்களுக்குத் துன்பம் செய்யாதிருக்குமாறு பணித்தனர்.

**உன் ஜனங்களுக்குள்ளே அங்கும் இங்கும் கோள் சொல்லித் திரியாயாக** (லேவி. 19. 16)

என்பதும் லேவியராகமத்தில் கூறப்படும் நீதிகளில் ஒன்றாகும்.

வள்ளுவரும், புறங்கூறலைப் பத்துக் குறள்களில் மறுத்தார்.

***மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற*** (குறள் 34)

அறம் உள்ளத்திலேயே உதிக்க வேண்டும். சொல்லும் செயலிலும் மட்டும் அறம் காணப்பட்டால் போதாது. உள்ளமும் அதனோடு பொருந்த வேண்டும்.

வயதில் மூத்தோர்க்கு இளையோர் உரிய மதிப்பளித்து நடத்தல் வேண்டுமெனவும் லேவியராகமம் கூறுகிறது.

**நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர் வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக** (லேவி 19. 32).

அமைச்சர்க்குரிய ஒழுக்கங்களைக் கூறுமிடத்து வள்ளுவர், தன்னைவிட வயதில் மூத்தோர் இருக்கும் அவையில் அவர்கள் பேசுமுன் தான் பேசாது அவர்கள் பேசி முடியும்வரை காத்திருக்கும் அடக்கமே நல்லியல்புகள் எனச் சிறப்பித்துக் கூறப்படும் இயல்புகள் பலவற்றுள்ளும் நன்றாம் என்றார்.

*நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்*
*முந்து கிளவாச் செறிவு* (குறள் 715)

பண்டைக் காலத்தில் மூத்தோர்க்கு மதிப்பளித்தல் எல்லா நாடுகளிலும் வழக்கமாக இருந்திருக்கிறது. அவையில் மட்டுமன்றி வீட்டில் உறவினர் சேர்ந்து உரையாடும் போதும் மூத்தோர் தம்கருத்தைக் கூறிய பின்பே இளையோர் தம்எண்ணத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்னும் வழக்கம் பண்டை யூதர்களிடையே இருந்ததென்பதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள 'யோபு' என்னும் கதைப் பாடலின் மூலமாகவும் அறியலாம்.

(நூல். திருக்குறளும் விவிலியமும், ப. 58–60)

## செல்வமும் வறுமையும்

*பொருளொருபால் தேங்குதல் மற்றொருபால தேய்தல்*
*அருளறுக்கும் வாளென் றறி* (இருளில் ஒளி 7.11.)

இவ்வாறு கூறினார் இந்நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை எழுத்தாளரும் கவிஞருமாகிய திரு.வி. கல்யாணசுந்தரனார். பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையில் பலநாடுகளிலும் இப்பிரச்சனை இருந்து கெண்டே இருக்கிறது. செல்வம் சிலரிடம் சேர்கிறது. பலர் வறுமையினால் வாடுகின்றனர். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் செல்வம் மிகுந்திருந்தது. வறுமையும் மிகுந்திருந்ததெனவே தோன்றுகிறது. பசியினால் வருந்திய வறியோர் பலர் நாட்டினில் இருந்தனர் எனவும் அன்னவர்க்கே மணிமேகலை உணவூட்டி மகிழ்வித்தாள் எனவும் அவளது பெயரைக் கொண்ட காவியம் கூறும். வள்ளுவர் காலத்தில் வறுமை பலரை வாட்டியது என்பதை நல்குரவு. இரவு, இரவச்சம் என்னும் அதிகாரங்கள் காட்டும். வறுமை நாட்டில் இருத்தலாகாதென வள்ளுவர் கருதினார்.

***இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து***
***கெடுக உலகியற்றி யான்*** (குறள் 1062)

எனக் கூறினார். 'உலகியற்றியான்' என்பதற்குச் சிலர் 'உலகைப் படைத்த இறைவன்' எனப் பொருள் கொள்வர். அவ்வாறாயின்

'சிலர் இரந்தும் உயிர் வாழவேண்டும் என்ற நோக்கத்தோடு இறைவன் உலகைப் படைத்தானேயாகில் தானும் அவர்களைப்போல் துன்புறுதற்குரியவனாவான்; ஆகவே மக்கள் முயன்று வாழவேண்டுமென இறைவன் உலகைப் படைத்தானேயன்றி இரந்து வாழ்வதற்காக யாரையும் படைத்தானல்லன்' என்பது வள்ளுவர் கருத்தாக இருக்கலாம். 'உலகியற்றியான்' என்பதற்கு உலக ஒழுங்கை நியமிப்போர் அதாவது ஆட்சியாளர் எனப் பொருள் கொண்டு, 'நாட்டில் சிலர் இரந்தும் உயிர்வாழத்தக்கதாக ஆள்வோர் சட்ட திட்டங்களை இயற்றி ஆட்சி புரிவார்களேயாகில் நாட்டில் இரப்பார்களும் இருக்கும் நிலை ஏற்பட அனுமதித்த குற்றத்தால் அவர்கள் கெடுவார்கள்' என்பதே வள்ளுவர் கருத்தெனவும் கொள்ளலாம்.

ஆயினும் பொதுவாகத் திருக்குறள் முழுவதையும் நோக்குமிடத்து வள்ளுவர் வறுமையை நீக்குதற்கு அரசையன்றித் தனிப்பட்ட செல்வரின் தாராளத்தையே அதிகமாக நம்பினார் எனத் தெரிகிறது. சிலரிடம் செல்வம் திரள்வதைச் சட்டங்களின் மூலமாகத் தடுக்க வேண்டும். சிலர் பெரும்செல்வராகவும் சிலர் மிகவறியவராகவும் இருக்கும் நிலையை மாற்ற வேண்டியது அரசின் பொறுப்பு என்பது போன்ற கருத்துகளை பண்டைத் தமிழ் நூல்களில் அதிகம் காணப்படுவதில்லை அதற்கு மாறாகச் செல்வமும் வறுமையும் அவரவர் வினைப்பயன் என்ற கருத்தைப் பல நூல்களில் காணலாம்.

*அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்*
*புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி*
*மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்*
*தவத்தால் தவம் செய்யாதார்* (நாலடியார் 31)

என நாலடியார் கூறுகிறது. நல்வினைப்பயன் இல்லாதவர்கள் செல்வர்களின் வீட்டுவாசரில் நின்று 'உள்ளே இருப்பவர்களே நல்வாழ்க்கை பெற்றோர்' எனக் கூறி அண்ணாந்து நோக்கி உள்ளே செல்லும் வாய்ப்பையும் பெறாராய் வெளி வாசலில நின்று மிக வருந்துவர் என்பது பாடலின் கருத்தாம். (ப. 63–65)

## நீதிக் கருத்துகள்

துதிப்பாடல்களில் இடையிடையே காணப்படும் நீதிக் கருத்துகளை திருக்குறள் கருத்துகளுடன் ஒப்பிடத் தக்கனவே.

வாண்மழையைப் பலபாடல்கள் போற்றுகின்றன. 'மனதாரச் சத்தியத்தைப் பேசுகின்றன' எனவும் 'ஆணையிட்டவன் தனக்கு நஷ்டம் வந்தாலும் அதில் தவறாதிருக்க வேண்டு'மெனவும் 15–ஆம் பாடல் கூறுகிறது. பிற துதிப்பாடல்களும் வாய்மையையே வற்புறுத்தும்.

பிறரைக் குறித்துக் குறை சொல்வதையும் பிறரை நிந்திப்பதையும் சில பாடல்கள் கண்டிக்கின்றன. "அவன் தன் நாவினால் புறங் கூறாமலும் தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும் தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்" (15.3). "நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்" (50.20). புறங்கூறுவதே தீது; அதிலும்,

*துன்னியார் குற்றமும் தூற்றமும் மரபினார்*
*என்னிகொல் ஏதிலார் மாட்டு* (குறள் 188)

என வள்ளுவர் வினவியதற்கொப்ப ஒருவன் தன் சகோதரனைக் குறித்தே புறங்கூறுவது எவ்வளவு தகுதியற்றது என்பதை மேற்காட்டப்பட்ட துதிப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

சினத்தை நீக்கும்படியும் உள்ளத்தில் சினம் ஏற்பட்டாலும் அதைச் செயலில் காண்பியாது தவிர்த்து அகற்றுமாறும் சில துதிப்பாடல்கள் கற்பிக்கின்றன.

"கோபத்திலிருந்து விலகு; கடுஞ்சினத்தை விட்டு விடு; செற்றத்தை யுளத்தில் கொள்ளாதே. அது தீமைக்கே இடங்கொடுக்கும்" (37.8) எனக் கூறப்படுகிறது. தீமையைச் செய்து செழிப்பவர்களைக் கண்டாலும் சினங்கொள்ளாதலாகாது. ஏனெனில் அவர் இறுதியில் அழிவர், பொறுத்தவர் பூமியாள்வார் என இக்கவிஞர் கூறினார். 'நீங்கள் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்' (4.4.) என்றார் மற்றொரு கவிஞர்.

*மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய*
*பிறத்தல் அதனான் வரும்* (குறள் 303)

**உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்** (குறள் 309)

என்னும் குறள்களை 37–ஆம் துதிப்பாடலில் வரும் வரிகளுடன் ஒப்பிடலாம்.

தவறான வழியில் பணம் சேர்ப்பதையும் பல பாடல்கள் கண்டிக்கின்றன.

**அவன் தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும்**
**குற்றமில்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம்**
**வாங்காமலும் இருக்கிறான்** (15.5).

***நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை***
***யன்றே யொழிய விடல்*** (குறள் 113)

என வள்ளுவரும் தவறான வழியில் பணம் தேடுவதைக் கண்டித்தார். தவறான வழியில் சிலர் பொருள் தேடுவதைக் கண்டு பொறாமை கொள்ள வேண்டாம். ஏனெனில் நேர்மையுடன் வாழ்ந்து சிறிது பொருளை வைத்திருப்பதே அதைவிட நல்லது என ஒருபாடல் கூறுகிறது.

**அநேக துன்பார்க்கருக்குள்ள**
**செல்வத்திரட்சியைப் பார்க்கிலும்**
**நீதிமானுக்குள்ள கொஞ்சமே நல்லது** (37. 16)

***பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்***
***கழிநல் குரவே தலை*** (குறள் 657)

என்னும் குறளும் அதே கருத்தைத் தரும்.

வறியார்க்கு உதவும் செயலைப் பல பாடல்கள் போற்றுகின்றன. 'வறியவரைக் குறித்து எண்ணுகிறவன் பாக்கியவான்' (Blessed is he who considers the poor 41. 1) என்றார் ஒரு கவிஞர். வறியார்க்கு ஈவதும் வட்டிடயன்றிக் கடன் கொடுத்து உதவுவதும் போற்றப்படுகின்றன. பண்டைக்கால யூத

அறிஞர்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கும் முறையை விரும்பவில்லை. ஆனால் வட்டியின்றி வறியோர்க்கு ஏற்ற நேரத்தில் கடன் கொடுப்பதை ஓர் அறமாகக் கருதினர்.

**துன் மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற்**
**போகிறான்; நீதிமானோ இரங்கிக்**
**கொடுக்கிறான்** (37. 21).

**அவன் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான்,**
**அவன் சந்ததி ஆசிர்வதிக்கப்படும்** (37. 26).

இவ்வாறு தயாளகுணம் போற்றப்படுகிறது.

**ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்;**
**அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.**

**செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம்**
**உதிக்கும்**

**அவன் இரக்கமும் மன உருக்கமும்**
**நீதியுமுள்ளவன்.**

**இரங்கிக் கடன் கொடுத்து, தன் காரியங்களை**
**நியாமானபடி நடப்பிக்கிற மனுஷன்**
**பாக்கியவான்.**

**அவன் என்றென்றைக்கும்**
**அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய**
**கீர்த்தியுள்ளவன்** (112. 3–6).

**வாரியிறைத்தான், ஏழைகளுக்குக்**
**கொடுத்தான், அவனுடைய நீதி**
**என்றென்றைக்கும் நிற்கும்** (112. 9).

இவ்வாறு சில துதிப்பாடல்கள் தயாள குணத்தைப் போற்றுவதுடன் அத்தகைய தயாள சிந்தனையுடையோர் வளமுள்ள வாழ்க்கையைப் பெறுவர், பகைவராலோ பிற தீங்கினாலோ அழிக்கப்படார், அவர் வழிவருவோரும் வறுமையினால் துன்புறாது நலமுற வாழ்வர் எனக் கூறுகின்றன. தாயாகுணம் உடையோரின்

வாழ்க்கை கெடாது. அவர் வழிவருவோரும் சிறப்படைவர் என்னும் கருத்தைப் பல குறள்களிலும் காணலாம்.

*பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்று இல்* (குறள் 44)

*வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
*பருவந்து பாழ்படுத லின்று* (குறள் 83)

*பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்*
*தீப்பிணி தீண்ட லரிது* (குறள் 227)

ஒவ்வொரு பெண்ணும் புனிதம் உடையவள், மாண்புடையவள் என்று திருவிவிலியம் கூறுகிறது. ஏனெனில் முதல் பெண்ணாகிய ஏவாள் முதல் ஆணாகிய ஆதாமின் எலும்பிலிருந்து படைக்கப்பட்டாள் என்று வேதவசனம் குறிப்பிடுகிறது. ஏவாள் என்பதற்கு 'உயிர் வாழ்வோர்க்கெல்லாம் அன்னை' என்று பொருள். எனவே பெண் என்பவள் இச்சிக்கப்படும் பொருள் அல்ல, அவள் ஒரு வாழ்க்கைத் துணைவி என விவிலியம் கூறுகிறது. விவிலிய நீதிமொழிகள் நல்ல மனையாளின் இலக்கணத்தை இன்சுவையுடன் கூறுகிறது. இராபோட் தோய் (Crawford Thy) என்னும் விவிலிய அறிஞர்சிறந்த மனைவியின் தங்க அரமுதலி (Gold ABC of the perfect wife) என அழைத்து மகிழ்கிறார்.

வள்ளுவப்பெருந்தகை பெண்ணின் பெருமையை வாழ்க்கைத் துணை நலத்தில் நனி சொட்டச் சொட்டக் கூறுகிறார். வள்ளுவரிரின் வாழ்க்கைத்துணை நலத்தை மணக்குடவர்வாழ்க்கைத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதல் என்கிறார் . இவ்வாறு திருக்குறளும், திருவிவிலியமும் காட்டும் வாழ்க்கைத் துணை நலத்தினை ஒப்புமை நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனையாளின் மாண்பு

நல்ல மனையாளின் மாண்பினை திருவள்ளுவர்கீழ்காணும் குறளின் மூலம் விளக்குகின்றார்.

***மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தற் கொண்டாள்***
***வளத்தக்காள் வாழ்க்கைத் துணை*** (குறள் 51)

மனையறத்துக்குத்தக்க மாண்பும், கொண்டவனது செல்வ அளவுக்கேற்ற வாழ்வை நடத்தும் தகுதியும் உடையவள் மனைவியாவாள்' எனத் திரு.வி.க தெளிவுபடுத்துகிறார் . மனை அறத்தை வளர் க்கத்தக்க மாண்பை அகத்தில் உடையவளாய் இருத்தல் வேண்டும் என்கிறார் .

மாண்பு என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும் என்கிறார்மணக்குடவர். வளத்தக்காள் கொண்டவனது வருவாய்க்குத்தக்க செலவினையுடையாள் என்று மணக்குடவரும், கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையாள் என்று பரிமேலழகரும் உரை கண்டுள்ளனர்.

இல்வாழ்க்கையை நன்முறையில் நடத்தப் பெண்களுக்குப் பல்துறை ஞானம் வேண்டும். அவைகளுள் இன்றியமையாதது பொருள் ஞானம். வாழ்க்கைக்கு உயிர்போன்றது பொருண்மை. பொருள் ஞானம் மனைவியிடம் இல்லையெனின் வாழ்க்கை வற்றிப்போகும். பொருளாதார அறிவு மனைவிக்கு அவசியம் தேவை என்பதால்தான் வள்ளுவர்'வளத்தக்காள்' என்றார் . நல்லொழுக்கமும், பொருள் அறிவும் நல்ல மனைவிக்குத் தேவையானவையாகும். எனவே விவிலிய நீதிமொழிகள்,

***மாண்புள்ள மனையாளைக் காண்பது மிகமிக அரிது***
***அவள் பவளத்தைவிடப் பெருமதிப்புள்ளவள்***
(நீதி.மொ.31:10)

என்று கூறுகிறது. பவளமும், முத்தும் விலைமதிக்க முடியாத செல்வங்களாகும். ஆழியில் மூழ்கி முத்துக்குளிப்பவர் களுக்குக் கூட முத்து எளிதில் கிடைப்பதில்லை. அதிலும் அரிய வகை

முத்தாகிய வலம்புரிமுத்து என்பது எவர்கையிலும் கிடைக்காததாகும். பவளமும் பணம் உள்ளவருக்கு கூட சிலவேளை கிடைப்பதில்லை. இவை இரண்டும் ஒருவருக்கு கிடைத்தால் அவர்பேருபெறுவார். எனவே தான் பவளத்தைவிட, முத்தைவிட உயர் ந்த பொருள் ஒரு மாண்புள்ள மனையாள் என்று திருவிவிலியம் குறிப்பிடுகிறது. மேலும்,

*நல்லொழுக்கம் உள்ள பெண் மாண்படைவாள்*
*தீயொழுக்கம் உள்ள பெண் வீட்டுக்குப் பழியாவாள்*

(நீதி.மொ.11:16)

என்றும் திருவிவிலியம் கருத்து தெரிவிக்கின்றது.

## மனையாளின் கற்பு

கற்புள்ள பெண் என்பவள் அழகுக்கு அழகு சேர்ப்பாள். அவளின் கற்பின் திண்மையை எந்தத் தராசு கொண்டும் நிறுத்து அறிய முடியாது. கற்புள்ள பெண் ஒருவன் அணியும் மணிமகுடமாகும். என்று விவிலிய நீதிமொழிகள் கூறுகிறது. பவளத்தைவிட, முத்தைவிட உயர்ந்த கற்புள்ள மனைவி கணவனின் வாழ்க்கையை மகிழ்விக்கிறாள்.

*நாணமுள்ள பெண்ணின் நற்குணம் அவள்*
*கணவனை மகிழ்விக்கும்*
*அவன் எலும்புகளுக்கு வலுக்கொடுக்கும்*
*அவனுடைய நன்னெறி கடவுளுடைய வரம்*
*புனிதமும் நாணமுமுள்ள பெண் செல்வத்தின் செல்வம்*
*எல்லாப் பொன்னும் ஒரு நல்ல மனைவிக்கு ஈடாகாது*

என்று கூறுவதோடல்லாமல்,

*நல்ல மனைவி என்பது நல்ல வாழ்க்கையாகும்.*
*அமைதியுடன் அவன் வாழ்க்கை அமையும்*
*கற்புள்ள மனைவி கணவனின் கிரிடம்*

(சீராக்கு.26: 1–316)

என்றெல்லாம் விவிலிய சீராக்கு ஆகமம் கற்புள்ள மனையாளைக் குறித்து கூறுகிறது. இதனையே திருவள்ளுவர்,

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்* (குறள். 54)

என்றக் குறளின் வாயிலாக விளக்குகிறார் . 'ஒருவன் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவுள அவன் மாட்டுக் கற்பென்னும் கலங்கா நிலைமையுண்டகப்பெறின்' என இக்குறளுக்கு விளக்கம் அளிக்கிறார்பரிமேலழகர், எனவே,

'கற்புடைப் பெண்மையிலுஞ் சிறந்த தொன்றில்லை' என்கிறார்தமிழ்த்தென்றல் திரு.வி.க. பெண்ணுக்கு முதலில் மாண்பைக் கொடுப்பது கற்பாகும்.

கற்பு என்பது தானே இயல்பாக ஒரு பெண்ணுக்கு அமைய வேண்டும் அஃது பிறர்தூண்டுதலினால் வருவதன்று அதனால் தான் வள்ளுவப் பெருந்தகை 'திண்மை உண்டாகப் பெறின்' என்றார் . கருவில் திருவுடையார்போல் கருவில் கற்புடையாளாய் இருத்தல் அவசியம் என்று வலியுறுத்துகிறார்.

## மனையாளின் இயல்பு

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற*
*சொற்காத்துச் சோர் விலாள் பெண்* (குறள். 56)

என்ற இக்குறளில் பெண்ணின் நான்கு இயல்புகள் ஒரு சேர கூறப்பட்டுள்ளன. அதாவது.

1. தற்காத்தல்
2. கொண்டவனைப் பேணல்
3. சொற்காத்தல்
4. சோர் வின்றி இருத்தல்

## தற்காத்தல்

மனைவியானவள் முதலில் தன் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் தன்னை முதலில் பண்படுத்தினால் தான் பிறரைப் பண்படுத்த முடியும்.

## கொண்டவனைப் பேணல்

தன்னைக் காதலால் கொண்டவனைப் பேணுதல், அவனது ஒழுக்கத்தினை காத்து, உணவு முதலியவற்றால் பேணல் வேண்டும்.

## சொற்காத்தல்

சொற்காத்தல் என்பது 'புகழ் காத்தல்' என்றும் தன்மாட்டுப் புகழாவது, வாழும் ஊர், கற்பால் தன்னைப் புகழ்வது என்றும் பரிமேலழகர் விளக்கமளிக்கிறார் . மேலும் இதனை காலிங்கர் "தன் குலத்தகுதியோடு அமைந்த அடக்கச் சொல்லினையும் நாவிற்பேண" என்று விளக்குகிறார். சொற்காத்தல் என்பதை 'வாய்மை காத்தல்' எனவும் வாய்மை வாழ்வுக்கு இன்றியமையாதது எனவும் மனம் போல சொல்லுறுதியும் இருத்தல் வேண்டுமென திரு.வி.க வலியுறுத்துகிறார் .

## சோர் வின்றி இருத்தல்

பொதுவாகப் பெண்களுக்கு சோர்வு இருத்தல் கூடாது. எனவே 'சோர் விலாள் பெண்' என்றார்வள்ளுவர் . "ஒரு ஞான்றும் சோர் வுபாடில்லாதாளே இற்கிழத்தி" என்கிறார்காலிங்கர். இந்நான்கு இயல்புகளால் பெண் சிறந்தவளாகப் போற்றப்படுகிறாள் இதனையே திருவிவிலியம்,

***தன் இல்லத்தின் அலுவல்களில் கண்ணும்***
***கருத்துமாய் இருப்பாள்***
***உணவுக்காகப் பிறர்கையை எதிர் பார் த்துச்***
***சோம்பியிருக்கமாட்டாள்***

(நீதி. மொ.31:27)

என்றும்,

***சுறுசுறுப்புடன் அவள் வேலை செய்வாள்***
***அயர் வின்றி நாள் முழுவதும் ஊக்கம் குன்றாது***
***உழைப்பாள்*** (நீதி. மொ.31:17)

என்றும் நீதிமொழிகள் குறிப்பிடுகிறது. மேலும் மனையாளின் இயல்புகளாக, நல்லொழுக்கம், வரவுக்கேற்ற செலவு செய்தல், தியாகம், அன்புடைமை, தனக்கென வாழாமை, பிறர் க்கென வாழ்தல், இன்சொல், ஒப்புரவு, விருந்தோம்பல் முதலானவை கூறப்படுகின்றன. இத்தகைய இயல்புகள் இல்லாத மனைவியின் வாழ்வானது எவ்வளவு பெருமையுடையதாயினும் அஃது பயன்படாததாகும். இக்கருத்தினையே,

*மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்* (குறள் 52)

என்ற குறளில் தெளிவுப்படுத்துகிறார் .

## மனையாளின் கடமை

கணவனுக்கும், தம் இல்லத்திற்கும் தம்மைச் சார் ந்தவர் க்கும் உரிய கடமைகளைச் செய்வதற்கு இல்லாள் என்பவள் அதிகாலையிலேயே துயில் எழவேண்டும். அதாவது 'பிறதெய்வந் தொழாது தன்தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும்' என்று தெளிவாக எடுத்துக்கூறுகிறார்பரிமேலழகர் . இக்கருத்தினை,

*தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை* (குறள். 55)

என்ற குறள் மெய்ப்பிக்கின்றது. கணவனைத் தெய்வமாகக் கொண்டவளால் எல்லாம் செய்தல் இயலும் என்கிறார் . திரு.வி.க கணவனை வணங்குதல் என்பது மிகவும் நன்று. கணவனை வணங்குவதால் அவளது மனத்தில் கணவனின் உருவம் குடிகொள்கிறது. அதனால் மனைவிக்கு மனவுறுதி உண்டாகிறது. மனவுறுதியால் எல்லாம் செய்தல் கூடும்.

நல்ல மனைவி திறமையுள்ள நிர் வாகி. இவளது சுறுசுறுப்பாலும், கடின உழைப்பாலும் வீட்டிற்குத் தேவையான கம்பளி, சணல் போன்ற பொருட்களைத் தயாரிப்பாள்.

அகவாழ்க்கையின் முழுப்பொறுப்பையும் இவள் ஏற்றுக்கொள்கிறாள். எனவே இவள் இல்லத்தின் பொருளாளர்எனப்படுகிறாள். இதனால் திருவிவிலியம் இவளை ஒரு வணிகக் கப்பலுக்கு ஒப்பிடுகிறது.

***அவள் உணவுப்பொருள்களைத் தொலைவிலிருந்து வாங்கி வருவாள்***
***கம்பளி சணல் போன்ற பொருட்களைத் தானே தேடிக்கொணர் வாள்***
***தன் வேலையனைத்தையும் மகிழ்ச்சியுடன் தானே செய்வாள்*** (நீ.மொ.31: 14,13)

என்று நீதிமொழிகள் கூறுகின்றன. மேலும் பெண் இல்லாத இடத்தில் மனிதன் வறுமையுறுவான். தகுந்த துணைவியை, நல்ல மனைவியைப் பெற்றவன் பொருள் சேர் க்கத்தொடங்குவான். எனவே அவள் அவனது வாழ்க்கையின் வளமாகக் காணப்படுவாள் என்றே கூறலாம்.

## மனையாளின் செயல்திறம்

மனைவியின் செல்வாக்காலும், திறமையாளும் நகரிலுள்ள மூதறிஞர்அவையில் கணவன் பேரோடும், புகழோடும், பெருமிதத்தோடும் இருக்க முடியும். இவனது மனைவியின் செயல்திறத்தால் கணவன் பொதுவாழ்வில் பேரும், புகழும், மதிப்பும் உண்டாகிறது. எனவே இவள் பெண்களுள் மாணிக்கம் என்பபடுவாள்.

***அவளை மணந்த கணவன் ஊர் ப்பெரியோருள் ஒருவனாய் இருப்பான்.***
***மக்கள் மன்றத்தில் புகழ்பெற்றவனாயிருப்பான்***

(நீ.மொ. 31:23)

என விவிலியம் திட்டவட்டமாகக் கூறுகிறது. இவ்வாறு 'நல்ல மனையாளைப் பெறாதார் க்கு வீறு கொண்ட நடை இராது.' என்கிறார்திரு.வி.க. ஒருவனின் புழுக்கு உயிர் நாடியாக இருப்பது

அவனுடைய மனைவியின் மாண்பாகும். நல்ல மனைவியால் கணவனின் புகழ் மணக்கும். நல்ல மனைவியைப் பெறாதவரால் 'தம்மை இகழ்ந்துரைப்பார்முன் ஏறுபோல நடக்கும் மேம்பட்ட நடை இருக்காது.

இச்செய்தியை வள்ளுவர் ,

***புகழ்புரிந் தில்லிவோர்க் கில்லை இகழ்வார் முன்***
***ஏறுபோல் பீடு நடை*** (குறள். 59)

என்றக் குறளில் எடுத்துக்கூறுகிறார் .

மேலும் அவனைப் பார் த்து பகைவர்"இன்னார்ரி'பம் போல திரிகிறான்' என்று பழித்துரைப்பர்என பரிதியார்கூறுகிறார் .

மேலும்,

***கனிதரும் கொடி முந்திரி போல் உன் மனைவி***
***உன் வீட்டின் உட்புறத்தில் இருப்பாள்***
***ஒலிவச் செடிகள்போல் உன் மக்கள் பந்தியில்***
***உன்னைச் சூழ்ந்திருப்பர்*** (திருப்பா. 127:3)

***வானில் ஞாயிறின் உதயம் அழகாய் இருப்பதுபோல***
***இல்லத்தில் நல்ல மனைவி அமைவாள்*** (சீராக்கு. 26:21)

இவ்வாறெல்லாம் மனைவியின் செயல்திறம் அமைந்திருக்கும். கொடி முந்திரிபோல மனைவி, ஒலிவச் செடிகள் போன்ற மக்கள் போன்றவை ஒரு இல்லத்தின் வளமையையும், செழுமையையும், மகிழ்ச்சியையும் குறிக்கும். இவ்வாறு ஒருவனது வாழ்க்கைக்கு அழகு சேர் ப்பது நல்ல வாழ்க்கைத்துணையாகும்.

இவ்வாறாக, நல்ல மனைவியைப் பெறாத வாழ்க்கை ஒளி இழந்த வாழ்க்கையாகும். தீய மனைவியைக் கொண்டவனது வீடு பாழடைந்த வீடாகும். மாண்புடைய மனையாள் கற்பகப்பூம்பொழில், மற்றவள் வற்றல் மரம். அவள் சீதேவி, மற்றவள் மூதேவி. அவள் ஒளி, மற்றவள் இருள். ஒளியில் தோற்றத் தாய்மையுண்டு, இருளில் அஃது இல்லை. அவள் உள்ள இடத்தில் மாண்பெல்லாம் சுரக்கும்,

இவள் உள்ள இடத்தில் உள்ளதும் பறிபோகும். நல்ல மனையாளைப் பெற்றவருக்குப் பல வழியிலும் மகிழ்ச்சி உண்டு. தீய மனையாளைப் பெற்றவருக்கோ பல வழியிலும் துன்பம் உண்டு என்று கூறுவதில் சிறிதும் ஐயமில்லை.

நல்ல மனைவி தன் கற்பால், மாண்பால், இயல்பால், செயல் திறத்தால், நிர் வாகத்தால், பொருள் சேர் க்கும் திறத்தால் கலையுள்ளத்தால், கொடைத்தன்மையால் இன்னும் பல பண்புகளால் வீட்டிலும், வெளியிலும் செல்வாக்குப்பெறுகிறாள். அவளின் செயல்திறமை கணவனின் பேருக்கும், புகழுக்கும், பொருள்வளத்துக்கும் பெரிதும் துணை செய்கின்றன எனலாம்.

செவ்விலக்கிய நீதி நூலான திருக்குறளும், கிறித்தவப் புனித நூலான திருவிவிலியமும் பெண்ணின் கற்பை வலியுறுத்துகின்றன. கற்பின் ஆற்றலை இருநூல்களும் போற்றுகின்றன. கற்புள்ள பெண் சோர் வின்றி இருத்தல் வேண்டும் என இரண்டுமே வற்புறுத்துகின்றன. நல்ல மனைவியின் கற்பால் ஏனைய சிறப்பால் கணவனின் பொதுவாழ்வு சிறப்படைகிறது. பகைவர்முன்னால் பெருமிதத்துடன் நடைபோட முடியும் என்கிறது. நல்ல மனைவி அமையாதவன் வாழ்க்கை இருண்ட வாழ்க்கை என்பதை இவ்விரண்டு நூல்களும் தெளிவுப்படுத்துகின்றன.

# 7. திருக்குறளும் திருக்குரானும்

***இறைவன் கொடுத்ததை தடுப்பவன் எவனுமில்லை***
***இறைவன் தடுத்ததை கொடுப்பவன் யாருமில்லை***
***இறைவனின் அனுமதியின்றி எதுவும் நடப்பதில்லை*** [1]

இதை திருக்குர்ஆன்(15 : 145) தெளிவு படக் கூறுகிறது.

மேலும் எந்த ஆன்மாவும் (முன்னரே) எழுதப்பட்டிருக்கும் தவணைக்கு இணங்க அல்லாஹ்வின் அனுமதியின்றி மரணிப்பதில்லை. எவரேனும் இந்த உலகத்தின் நற்பலனை (மட்டும்) விரும்பினால் நாம் அவருக்கு அதிலிருந்தே வழங்கிவிடுவோம். இன்னும் எவர் மறுமையினையும், நன்மையையும் விரும்புகிறானோ அவருக்கு அதிலிருந்து வழங்குவோம். நன்றியுடையோருக்கு அதி சீக்கிரமாய் நற்கூலி கொடுக்கிறோம்.

இதையே வள்ளுவர் தமது வான்மறையில் ஒரு கோடி பொருளை சேர்த்து ஒழுங்குப்படுத்தி வைத்திருந்தாலும் இறைவன் விதித்த வகையால் அல்லாமல் அவற்றை அனுபவிக்க முடியாது என்ற கருத்தை –

***வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி***
***கொடுத்தார்க்கும் துய்த்தல் அரிது*** (குறள் 377)

என்ற குறளால் விளக்கப்படுகிறது.

## கஞ்சத்தனமும் ஊதாரித்தனமும்

திருக்குர் ஆனில் ‘கஞ்சத்தனமுமாக உம்முடைய கையைக் கழுத்தில் மாட்டிக் கொள்ளாதீர். உம்முடைய வாயை முற்றிலும் விரித்து விடாதீர் (17 : 29) இதனை வள்ளுவர் கஞ்சத்தனமிக்கவன் இந்த பூமிக்கு பாரம் என்பதை,

---

*1. ismi.blogspot.com*

*ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்*
*தோற்றம் நிலக்குப் பொறை* (குறள் 1003)

என்ற குறளிலும் ஊதாரித்தனம் இல்லாமல் முறையாக செலவு செய்வது பற்றி

*ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்*
*போற்றி வழங்கும் நெறி* (குறள் 477)

என்ற குறளிலும் தெளிவாக விளக்குகிறார்.

## தீயசெயல் பற்றி திருக்குரானும் திருக்குறளும்

***மனிதர்களே : உங்களுடைய அடாத செயல்கள் (தீய செயல்கள்) உங்களுக்கே கேடாக முடியும் குரான்***
**(10 : 23)**

இதனை வள்ளுவர்

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்* (குறள் 202)

என்ற குறளில் தீயைக் காட்டிலும் தீயவை கொடுமையானது என்று கூறுகிறார்.

## புறங்கூறுதல் பற்றி குரானும் குறளும்

பிறர் குறைகளை நீங்கள் துருவித் துருவி கொண்டிராதீர். அன்றியும் சிலர் சிலரைப் பற்றியும் புறம் பேச வேண்டாம் 50 : 2(16) இது பற்றி திருக்குறள் கீழ்வரும் குறள்களில் தெளிவாக விளக்குகிறது. பிறர் குறைகளைக் காண்பதுபோல் தம் குறைகளைக் கண்டு உணர்ந்தால் இந்த மண்ணுலகில் தீதில்லை என்பதை,

*ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டா மன்னும் உயிர்க்கு ?* (குறள் 190)

என்ற குறளிலும், ஒருவன் தர்மம் என்னும் சொல்லைக்கூட சொல்லாமல் தீயவை செய்து ஒழுகினாலும் அவன் புறங்கூறமாட்டான் என்று நற்பெயர் எடுப்பதே நல்லது என்பதை,

*அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்*
*புறங்கூறான் என்றல் இனிது* (குறள் 0181)

இக்குறளிலும் விளக்குகிறார்.

## இன்னா செய்யாமை பற்றி இறைமறையும் இனிய குறளும்

இறைமறையில், நன்மையும், தீமையும் சம்மாகமாட்டா. நீங்கள் (தீமையை) தன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது யாருக்கும் உமக்கும் இடையே பகைமை இருந்ததோ அவர் நண்பரே போல் ஆகிவிடுவார். 41:5(34) இதை திருக்குறள் நமக்கு தீங்கு செய்பவரை தண்டிப்பது அவர் வெட்கம் அடையும்படி அவருக்கு நல்லதைச் செய்தலே ஆகும். இதனால் அவர் தாம் செய்த செயலுக்கு வருந்தி வெட்கப்பட்டு திருந்துவார் என்பதை,

*இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயம் செய்து விடல்* (குறள் 314)

என்ற குறளில் விளக்குகிறார்.

## 'சக்கராத்' பற்றி திருக்குறள்

எல்லா மனிதருக்கும், இறக்கும் தருவாயில் 'சக்கராத்' என்ற நிலை ஏற்படும். அந்த நிலை வருவதற்கு முன்பாக எல்லாம் வல்ல இறைவன்பால் ஈமான் கொண்டு நல்வினை ஆற்றிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது திருக்குரான். இதனையே திருவள்ளுவார் நாக்கு பேசமுடியாமல் செத்துவிக்கும் முன்பே நல்ல செயல்களை செய்திடல் வேண்டும் என்ற கருத்து மேலோங்கி கீழ்வரும் குறளில் சொல்லுகிறார்.

*நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்* (குறள் 335)

## எல்லாப்புகழும் இறைவனுக்கே

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று திருக்குர்ஆன் 'அல்ஹம்துலில்லாஹ்' என்ற வாக்கியத்தின் மூலம் இயம்புகிறது. இதனை திருவள்ளுவர் தலைமைக் குணங்களுடைய இறைவனின் மெய்யான புகழை இடைவிடாது அன்போடு சொல்லுபவர்பால் 'இருள்சேர் இருவினையும் சேரா'என்பதை சொல்லுவது மூலம் எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பதை வலியுறுத்துகிறது.

***இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்***
***பொருள்சேர் புகழ்பரிந்தோர் மாட்டு*** (குறள் 5)

என்ற குறளில் தெளிவுபடக் கூறுகிறார்.

இஸ்லாமியர் தம் திருமுறை (வேத) நூலை அருளியவர் முகம்மது நபி நாயகம் ஆவார். இந்துக்களுக்கு ருக், யஜுர் சாம வேதங்களைப் போன்றது. முகம்மதியர்க்குத் திருக்குரான் அது சூரா என்னும் அத்தியாயங்களால் ஆனது. நபிகள் ஒரு கவிஞர் எனப் போற்றப்பட்டவர். குரா 20 பாகம்) 30 காண்டங்கள் 114 அதிகாரங்களையுடையது. பாடல்கள் 6247 (அல்லது) 6360.

திருக்குறளில் 133 அதிகாரங்கள் குரானில் 114. இப்பாடல்களை மெக்காவில் அருளியவை; மதினாவில் அருளியவை என இரண்டாகப் பிரிப்பர். இவ்விரண்டும் அறத்துப்பால் பொருட்பால் போன்ற பிரிவுகளாகலாம்.

திருக்குறளில் 133 அதிகாரங்களைப் போன்று குரானில் 114 அதிகாரங்கள் கிட்டத்தட்ட ஒன்றாகவேயுள்ளன. 30 காண்டங்களிலும் திருக்குறள் போன்று இல்லறம், துறவரம், அரசியல், குடியியல் கருத்துக்கள் அடங்கியுள்ளன.

A Consciousness of the identify of one's own soul with the great all soul is the essence of a true spiritual life. (S.R.) life it self is a sacrifice. The true sacrifice is man.

சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார் என்பது குறள். ஒப்புரவினால் வரும் கேடெனின் விற்றக்கொள் தத்கதுடைத்து.

**Vedic knowledge much inferior, will not liberate un.**

உண்மை எது (what is true) வென அறிதலே உபநிடதங்களின் ஆராய்ச்சி.

குறளில் வேண்டுதல் தேண்டாமை யென்பதில் இந்தக் கடவுள் இந்தச் சமயம் வேண்டும் அந்தக் கடவுள் அந்தச் சமயம் வேண்டாம் என்பது இல்லை. அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு. உலகை யெல்லாம் அன்பினால் தழுவும் ஆர்வத்தைக் குறிக்கிறார் வள்ளுவர். ஆர்வம் அனைவரையும் நட்பாக்குவது ஒன்னார்விழையும் சிறப்பு என்பதில் பகைவரையும் நேசிக்கும் பண்பு குறிக்கப்படுகின்றது.

**There is no compulsion in religion.** (2.256)

In tolerance could not be ascribed to a book which excludes compulsion form the sphere of religion altogether

ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பாயிரத்தினோடும் பகர்ந்ததற்பின் போயொருத்தர் வாய் கேட்க நூலுளதோ (வா.மாலை)

சுருங்யி சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால் (வ.மா)

வேதப் பொருளாய் மிக விளங்கி நின்றதாம் குறள். (வ.மா) தெய்வத்திருவள்ளுவர் செப்பிய குறள். (வ.மா)

அகரமுதல எழுத்தெல்லாம் என்பதில் அகரம் என்று கடவுளும் (உலகுக்கு) என்று ஆதிபகவன் முதற்று என்பதில் (Brotherhood) சகோதரத்துவம் குறிக்கப்படும்.

All people are a single nation. When their human nationlising and human. Brotherhood is accepted.

Petty of national jealousy to income to an end and a newess of peace and progress worked down upon the world. M.A.

***அன்புற்ற மர்ந்த வழக்கென்ப வையகத்து***
***இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.***

இங்கு இன்றுதான் மேற்கூறிய Peace and progress

The mustion were alloned to fight indeed not to compel the unbelievers to accept Islam. It was to establish religious freedom to stop all religious persecution to protect is lonness worship of all religious.

And fight with them until there is no more Persection and all religious are for allah (8.39)

***பகையென்னும் பண்பி லதனை ஒருவன்***
***நகையேயும் வேண்டற்பாற் றன்று***

பகையெனில் அது சமயப் பகையுமாம். அதனை அடியோடு வெறுக்கிறார் வள்ளுவர்.

இஸ்லாம் மதம் ஓர் ஒப்பற்ற கடவுட்கொள்கையை உருவாக்கிக் கொண்டதெனலாம். ஒரு கடவுட் கொள்கையில் சென்று சேரகூடிய மதங்கள் பல உலகிலிப்பினும் இஸ்லாமியத்திற்கு ஒருதனியிடம் உண்டு. முதற்குறளில் (அகர முதல) வள்ளுவர் ஒரு கடவுட் கொள்கையையும் அதே சமயம் பல உருவக் கடவுட் கொள்கையையும் குறிப்பிட்டுள்ளார்.

கடவுளின் குணங்களாகப் பல சமயங்களும் கூறும் பெயர்களைக் குரான் கொண்டாடுகின்றதெனலாம்.

1. Allah is one (112.4) அகர முதல என்ற குறளில் ஆதிபகவன் என்று ஒருமையில்தான் வள்ளுவர் கூறுகின்றார்.

திருக்குரான் "is one" என ஒருவர் என்ற (one) பெயராலேயே குறிக்கின்றது. அடுத்து

None is like him/ (112.4) என அதே அத்தியாயம் (Chapter) கூறுகின்றது. கிறித்துவ ஜைன பௌத்த சமயங்களை

மனத்திடம் கொண்டே நபிகள் நாயகம் இப்பாடலைக் கூறியுள்ளார். ஒரு கடவுட் கொள்கையில் இது ஒப்பற்றது தான். இதனையே குறள் தனக்குவமையில்லாதான் என முதல் அதிகாரத்தில் கூறுகின்றது. திருக்குரானில் இப்பாடல் கடைசியதிகாரங்களில் வருதலால் முற்றுப்புள்ளி வைத்தாற் போல இதனை நாயகம் கூறியுள்ளார் எனலாம்.

கடவுள் வாழ்த்தினைக் கூறி எதனையும் தொடங்கும் கோட்பாட்டை பின்பற்றியும் தான் சொல்லப் போகும் நூற்கருத்துக்களைப் பாயிரமாகக் கூறித் தொடங்குதல் என்ற மரபாலும் வள்ளுவர் இக்கடவுட் பாடல்களைக் கூறியுள்ளார்.

தனக்குவமை யில்லாதான் என்ற அவ்வரியையே வேறு மொழியில் மாற்றியமைத்தாற்போல none like him என்பது திருக்குரான்.

"Celebrate the praise of the lord" (110–3) ஆதிபகவன் முதற்றே என்ற குறளில் இறைவன் டுடிசன தலைவன் என்பது குறிக்கப்படுகின்றது.

அவன் பொருள்சேர் புகழ் புரிதலைத்தான் கூாந யீசயளைந என்கின்றது திருக்குரான்.

Allah, beneficial the merciful இறைவனின் கொடைத் தன்மையையும் அருள் தன்மையையும் இத்தொடர்கள் குறிக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் இப்பாடல் வரி கூறப்படுகின்றது Mercy அருளையும் நெநேகஉையைட அவ்வருளை அவன் வாரிவழங்குதலையும் குறிப்பதாகும்.

இறைவன் அருட்ஜோதித் தெய்வம்; தனிப்பெருங்கருணை. எண்குணத்தான் என்பதில் அளப்பிலாத அருளும் அடங்கும். எவ்வுயிர்க்கும் செந்தண்மையில் இக்கருத்துள்ளது. இரக்கம் "கருணை யென்பது அனைத்து சமயங்களுக்கும் பொதுவானதோர் கடவுள் தன்மையாகும்.

When there comes the help Allah and the victory (110.1) பக்தர்களுக்கு (மனிதருக்கு) எவ்வளவோ தேவைகள் உள்ளன. எடுத்தக் காரியம் யாவினும் வெற்றி கிட்டவேண்டும். அன்பர் ஆண்டவனை அல்லும் பகலும் இதனை வேண்டி நிற்கின்றனர். நெஞ்சமெலாம் தேடி நினைத்தே அடியவர்கள் சஞ்சலமெல்லாம் தீர்ப்பவன் அவன்.

Ask his forgiveness (110.3) மன்னிக்கும் பிழைப்பொறுக்கும் தன்மையொன்பது அனைத்து சமயத்தும் இறைவனின் தலைமைக் குணங்களில் ஒன்றாகும். ஒறுத்தல் நன்னயஞ் செய்துவிடல் என்பதில் தன்னை பொறுத்தவர்க்கு நன்மை செய்வதுடன் அவர் செய்த தீமையை மன்னித்து விடல் மறந்து விடல் என்பதடங்கும். இறைவனது மன்னிக்கும் தன்மையென இதனைப் பலரும் பாராட்டுவர். குற்றம் புரிதல் என் கடனே குணமாக் கொள்ளர். நின்கடனே என்பது அடியார் பாடல், பிழை பொறுத்தாளுதல் இதனை நாயன்மார் பாடல்கள் பகரும்.

***பொறுத்தல் இறப்பினை யென்றும், இறப்பு அளவு மீறிய செயல்.***

இறைவன் உலகில் அனைத்தையும் தாங்குபவர், அனைத்தையும் காப்பவர் என்பதனைத் திருக்குரான் எடுத்து காட்டுகின்றது.

அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில் என்பது குறள்.

The Lord its sustained and in nourisher by all international gab the worlds The Lord by the heaven and the Earth. (31.5)

Allah is our Lord and your Lord. (2.931)

மூவுலகினும் இன்னார் இனியாரென்னாது வேறுபாடின்றி அனைவர்க்கும் அல்லாவே கடவுள். முஸ்லீம், முஸ்லீம் அல்லாதார்க்கும் அவர் கடவுள். (42.15)

மனித இனத்தின் சகோதர நேயத்தில், பழங்குடிகள் (Familiar tribes) புதுக்குடிகள் என்ற வேறுபாடில்லை.

இதுவும் வேண்டுதல் வேண்டாமையிலான் என்ற குறளில் (கடவுள் வாழ்த்தில்) அடங்கும்.

இறைநெறியில் நிற்பது பற்றி அண்ணல் நபிகள் கூறுகிறார். நல்வழி காட்டினோம் அதனைப் பின்பற்றினோர். நன்மையடைவர், பின்பற்றாது தவறான நெறியில் சென்றவர் தீமையேயடைவர்.

அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில, குறள்.

Trust in Allsh. be is their hearing and cei knowing (861.62) Allah loves sures the does by justice.

நடுவு நிலைமை, நீதியில் நிற்போரை அல்லா நேசிப்பர். இந்த துரளவஉைந என்பதே பொய்தீரொழுக்க நெறி சமயத்தொண்டர், பக்தர் அடியார்களைத் திருக்குரான் க்ஷநடநைளநசள என்கின்றது. வாலறிவன் நற்றாருள் தொழுபவரைத் தீர்க்க தரிசிகள் என்கின்றது.

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்போர் தீர்க்க தரிசிகள் (Prophets) அறவோர்.

The king by men The God by men (113-2.3) The whisper into the hearty men.

அடியார் மன மலர்மிசை ஏகினான் அவன். இறையென்ற தமிழ்ச் சொல்லில் கடவுளும் அரசனும் என்ற பொருள்கள் உள்ளன.

And you seest men entering the religion by Allah in companles (110.2) இவர்களே சமயத்தவர் சமயத்தொண்டர் அடியார். அடியார் கூட்டம் (சங்கம்) (கூட்டமாகச் செல்பவர். அவர்களைக் Server எனவும் திருக்குரான் அழைக்கின்றது.

Who has provided them with food and security. அவர்க்கு 'யாண்டும் இடுப்பையில என்பது குறள்.

Those who believe and do good நம்பிகையும் அறவழிச் செயல்களும் உடையவர். சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறம் அதுவே குறள் வர்புறத்துவது. வினை, தர்மம் எனச் சமயத்துவங்கள் பேசுவது இந்நல்வினைகளையே ஆகும்.

Extort to one anther to truth and patience. தத்துவங்கள் பேசும் மெய்ப் பொருள் கூசரவா, பொறுமை (பொறை) அதுவேயாகும். Patience சகிப்புத்தன்மை.

**God the mighty the wise.**

என்பது திருக்குரான், வாலறிவன் என்று குறள் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றது. A Revelation from the Lord. It was revealed to the Prophet (47–21) அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யென்பதில் (ஒலி) எழுத்துக்களையும் (மறைகளையும்) இறைவனே அருளினான் என்பதில் பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும் அண்ட முதல்வன் அரன் சொன்னவாறே என்ற திருமூலர் மந்திரம் ஒலிக்கின்றது: Omni present Omni potent, எங்கும் நிறைந்த இறைர்த தன்மை எல்லாம் (வல்ல(மை). அகர முதல் என்பதிலும் எல்லா எழுத்துக்களிலும் கலந்த அகரம் எங்கும் நிறைந்த தன்மையைக் குறிக்கும்.

The Quran found the Arabs worshippers by idols stones trees heaps by sand and within quarter of a country to worship by one god ruled the whole country. அகர முதல என்பதில் ஒரு கடவுள் கொள்கையுள்ளதை காணலாம்.

நபி நாயகம் தீர்க்கதரிசியாகப் பாராட்டப் பெறுபவர் தீர்க்கதரிசிகளைப் பற்றிக் குரான் பல அத்தியாங்களைக் கூறுகின்றது. நபிகளுக்கும் முன்பும் தீர்க்கதரிசிகள் இருந்தமை பற்றிக் குரான் கூறுகின்றது.

So Let him bring us a sign as the former (Prophets) were sent with (21.5)

வள்ளுவர் நீத்தார் பெருமையில் கூறும் நீத்தார் தீர்க்க தரிசிகள் (வேதமுனிவர்கள்) போல்பவராகலாம். அவர்கள்

உரனென்னும் தொட்டியால் ஓரைந்தும் காப்பவர்; குணமென்னும் குன்றேறி நின்றவர். நிறை மொழி மாந்தர் நிறைமொழி. திருக்குரான், குறள்போன்ற மறைநூல்கள், கடவுள் அடியார்கள் பற்றிப் பேசும் பொழுது திருக்குரான் faithful, gratefulness என்ற குணங்களை அவர்கட்கேற்றியுரைக்கின்றது. கடவுள் வாழ்த்தில் அடி சேர்தல் தாள் சேர்தல் என்பதே நம்பிக்கையாகும். செய்ந்நன்றியறிதலில் குறள் நன்றி (Gratefulness) பற்றிக் கூறுகின்றது.

He is hearer, the knowers எனக் கடவுட் குணங்களைப் பற்றித் திருக்குரான் பேசுகின்றது. எங்கும் நிறைந்தவன் (Omni presente) அவனாதலால் அவன் உயிர்களின் நிகழ்ச்சியனைத்தையும் பார்க்கிறான், கேட்கிறான். ஆதி மூலமேயென்ற யானையின் குரலைக் கேட்பவனாகிறான். ஏழை எளியவர்க்குதவுவது பற்றித் திருக்குரான் அடிக்கடிப்பேசுகின்றது. ஈகை ஒப்புரவு ஆகிய அதிகாரங்களில் வறியார்க்கொன்றீவதே ஈகை என வற்புறுத்துகின்றது. துவ்வாதவர்க்கும் என்பது குறள். நாட்டில் (தம் சமயம் பரவிய) உலகில் பசி பட்டினி யென்ற ஏழ்மையை இல்லாமலாக்குவதே உலகில் இறைத் தொண்டர்கள் செய்த முதன்மையான சமயப் பணியாகும்.

பெண்களைப் பற்றி இஸ்லாம் உயர்வாகவே கருதுகின்றது. அவர்களை உயர்வாகவே நடத்துகின்றது. குறள் பெண்ணிற் பெருந்தக்க யாவுளர் என்கின்றது. தெய்வமாகக் கருதுகின்றது. பெண்களையென முன்பும் உரைக்கப்பெற்றது. தெய்வம் தொழா அள் என்ற குறள் அதற்கிடம் தருகின்றது.

பாடலில் சொற்களை முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப் பொருள் செய்கையில் அவள் பெய்யெனப் பெய்யும் மழைத் தெய்வம் என்ற கருத்து கிடைக்கின்றது. அவள் தெய்வம் தொழாள் தெய்வம் (வானவர்) அவளைத் தொழும் என்ற கருத்தும் கிடைக்கின்றது.

**In the Quran good and righteous women are given the same position as good and righteous men. We find**

**women to whom divine revelation came spoken of aiong with men O! Mary allad has chosen set the above the women of the world (3/41) The Quran makes no difference betweet men and women.**

அறம் செய்க, அஃது பொன்றுங்கால் பொன்றாத்துணை **Who ever does good whether male or female they will enter the garden. Garden** என்பது சொர்க்கம். அறத்தையே செய்பவர். சொர்க்கவின்பம் பெறுவர் என்பது. ஆணாயினும் பெண்ணாயினும் **Morally and spiritually they (Women) will rise to the same eminence.** பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு புத்தேளிர் வாழும் உலகு.

**A woman can earn inherit, and own property and dispose of it just as a man can (4.32)**

நபிகளுக்கு முற்பட்ட காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமையில்லை,

**They also joined their hasband with the labour of the field they even went to the field of battle and looked after the wounded. They could do any work they choose.**

தற்காத்துத் தற் கொண்டாற் பேணி தகை சான்ற சொற்காத்து (குறள்) இக்குறளில் பெண் போர் செய்தல் முதலிய எத் தொழிலையும் பெண்கள் செய்வர் என்ற கருத்து மறைந்துள்ளது. **They went to mosques with their faces uncovered.** போர்க்களம் சென்றொரு வீரத்தாய் இறந்த மைந்தன் புண்பட்ட உடலை புரட்டி. புண் மார்பில் பட்டுள்ளதா எனப்பார்த்து மகிழ்வது பற்றிப் புறநானூறு பேசுகின்றது.

**Morality and chastity of women.** அரபுக்களிடம் மிகவாக வற்புறுத்தப் பெற்றது. கற்பென்னும் திண்மை யென்பது குறள். மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை யென்பது வாழ்க்கைத் துணைநலம்.

அடக்கமுடைமை பணிவுடைமை மறை நூல்கள் அடிக்கடி வற்புறுத்துகின்றன.

அடக்கம் அமரருள் உய்க்கும், எல்லார்க்கும் நன்றாம் பணிதல், அடக்கமுடைமை அதிகாரம். **Any they were humble before us** (21–90)

**We breathed into her of our inspiration and made her and her son a sign for the nation (21-91)**

மக்கள் பேற்றில் குறள் 'மக்கள்' பற்றிப் பாராட்டியுரைக்கின்றது. ஞுபைபே சான்றோன் எனக் கேட்டதாய் என்பதில் உள்ள சான்றோனே மக்கள் தன்மை யென்பது.

# 8. திருக்குறளும் ஜைனமும் பௌத்தமும்

இச்சமயங்கள் 'கடவுள்' கொள்கைக் கெதிரானவை. இச்சமயங்களை நிறுவிய ஞானிகளையே கடவுளைப்போலக் கொண்டனர்

அஹிம்சை கொல்லாமை கொள்கையுடையராகலின் வேள்விகளுக்கெதிராகத் தம் சமயங்களை வளர்த்தனர்.

அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று, என்பது குறள்.

ஜைன தேவன் என்பதில் ஜீனன் ஜெயித்தவன் என்பது பொருளாம் புலன்களை ஜெயித்தவன் வென்றவன் என்பது, புலன்களை வெல்வதென்பது பெரிய பெரிய வெற்றியாகும். பொறிவாயிலைந்தவித்தல், ஐந்தடக்கல் என்பதே இவ்வெற்றி யென்க.

அறிவு (ஞானம்) என்பதனடியாகவே ஜைனரது 'உலகு' என்பது பற்றிய கொள்கை அமைந்துள்ளது.

**Perception, Inference, Testimony** என மூன்றின் **(Knowledge)** அறிவுக்கடிப்படை யென்பத இவற்றைக் கொண்டே உலகு பற்றிய கொள்கைகளை ஜைனர் உருவாக்குகின்றனர்.

உலகினை ஜைனர் ஜீவர் அஜீவர் எனப் பிரிக்கின்றனர். ஜீவரைச் சுதந்திர ஜீவர் கட்டுப்பட்ட ஜீவர் எனப் பிரிப்பர். அவற்றை அசையும் ஜீவர் அசையாச் ஜீவர் எனப் பிரிப்பர். அசையும் ஜீவர் ஒன்று முதல் ஆறறிவு வரைப்பட்டன. அசையாதன நிலம் நீர் வளி தீ யென்ற நால்வகைப் பூதங்கள். அஜீவன்களில் (matter) ஆகாயம் (வானம்) தர்மம் அதர்மம் காலம் உறங்கும் ஜீவன்கள் என்பன

அடங்கும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தன் வகையென்ற குறளில் இவற்றுள் ஒரு பகுதியடங்கும்.

**தூசு அணுக்களில் உயிர் உண்டு என்பது ஜைனம்.**

ஒன்றறிவதே இரண்டறிவதுவே என இவற்றைத் தொல்காப்பியர் வகுக்கிறார் ஆறறிவதுவே அவற்றொடு மனனே என்பார் இவற்றுள் மனம் என்பதில் ஞநசஉநயீவடிடே ஐகேநசநஉே கூநளவைஅடிலேகள் அடங்கலாம்.

***மனம் தானாம் மாந்தர்க் குணாச்சி***
***மனநலம் மன்னுயிர்க் காக்கம்***

என்ற குறள்களில் இப்பிரிவுகள் அடங்கக் கூடும்.

உணர்தல் என்பதே உயிரின் முதன்மையான இயல்பு என்பது ஜைனம்.

1. அளப்பிலா உணர்வு **Infinite Consciousness**

2. அளப்பிலா ஆற்றல் **Infinite Power**

3. அளப்பிலா இன்பம் **Infinite happiness** உயிருக்குரிய இயல்பான தன்மைகளாக இவை கூறப்படுகின்றன.

இவற்றை, அவா முதலியவற்றாலாகும் செயல்கள் மறைத்துத் தடுத்துவிடுகின்றன. சூரியனை மேகம் மூடுவது போல (மறைப்பது போல)

இவை உயிரை கட்டுக்குள்ளாக்கி விடுகின்றன. எனவே அவாச் செயல்களை நீக்கிவிடுதலால் ஆன்மா விடுதலை பெறுகின்றது. தீர்த்தங்கரர் போன்ற அறவோர் அறவோரின் அறவுரைகளால் குற்றமற்ற விடுதலை குற்றமற்ற முழுமையான நெறி உண்டாகின்றன.

**அவா வில்லார்க் கில்லாகும் துன்பம்**

பற்றுக பற்றற்றான் பற்றினை யென்பது அறவோரின் அறவுரைகள். முழுமையான நம்பிக்கை, தூய அறிவு, நற்செயல்கள், கட்டிலிருந்து

விடுதலைபெற இம்மூன்றும் இன்றியமையாதனவாகும் இன்னா செய்யாமை, வாய்மை, கள்ளாமை (குறள்) முதலியவற்றால் நற்செயல்கள் உண்டாகும்.

அனந்த ஞானம் அனந்த வீரியம் அனந்த குணம் அனந்த தரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியரி.

அளப்பிலா நம்பிக்கை அளப்பிலா ஞானம், அளப்பிலா ஆற்றல், அளப்பிலா இன்பம், இதுவே விடுதலை என்பர். அஹிம்சை பிறர் கொள்கைகளுக்கு மதிப்பளித்தல் என இரண்டும் ஜைனம்.

பிற உயிர்களைக் கொல்லாமை துன்புறுத்தாமை மட்டுமல்ல வாழ்க்கை. எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையான ஒரு மனத்தகுதியுமென்பர். இந்தியாவில் காந்தியடிகள் இவ் அஹிம்மைக்கு உயிர் கொடுத்தவர் என்னலாம்.

***எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானா***
***மாணா செய்யாமை தலை***

எவ்வுயிர்க்கும் செந் தண்மை – என்பது குறள்.

ஜைனர் எளிய நோன்புகளையும் கடுமையான நோன்புகளையும் கடைப்பிடிப்பர். ஐந்தடக்கல், ஐந்தவித்தல என்பன அவையாகலாம். புலன்களை அளவாக அடக்குவது; அவற்றை முற்றிலும் அழித்தொழுகுதல் என அவை பற்றிக் கூறலாம். துறந்த முனிவர் துறவிகள் பெண்–காமம் பற்றிய எண்ணமேயின்றிப் பழகுவர். இல்லறத்தார் பிற பெண்கள் பிறன்மனையாளிடத்தில் பழகுவதை விட்டுவிடுவர்.

ஜைனத்தின் தலையாய கொள்கைகளில் (பொழுது போக்கு) இன்பத்தை விழையாமை இது பாவங்களுக்கெல்லாம் அடிப்படை.

***இன்பத்துள் இன்பம் விழையாதான்***
***துன்பத்துள் துன்பமுறுதல் இலன்.*** – குறள்

கொல்லாமையை மிகவும் வற்புறுத்துவது ஜைனம். பிற மனித உயிரைக் கொல்வதை ஜைனம் பாவம் என்கின்றது. ஆனால் தன் உயிர் நலனுக்காக தவம் துறவு முதலியவற்றின் நெறியில் தற்கொலை (Suicide) பாவமில்லையென்பர் ஜைனர்.

தீவிரமான கொல்லா நோன்புடையவர் ஜைனர் காலில் (நடக்கையில்) காலணி யணிவதில்லை. வாய் மூக்குகளைத் துண்டுத் துணியால் மூடிக்கொள்வர். இது சிறு பூச்சிகள் அணுக்கள் கொல்லப்படும் என்பது கருத்து. இராமலிங்கசுவாமிகள் நடக்கையில் பாதம் பட்டு ஒரு மண்ணாங்கட்டி உருக்குலைவதையும் பொறுக்கவில்லை. எவ்வுயிர்க்கும் செந்தண்மை; எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானா மாணா செய்யாமை யாகிய பேரறம் அது.

**According to Dr. Radhakrishnan the moral philosophy of Jains is more vigorous and rigorous. Than the moral philosophy of Buddhists. Ahimsa is first principle as well as practical morality of Jainism.**

நன்னம்பிக்கை நல்லறிவு என்பன நன்னடத்தைக்குரியனவாகும்.

**Anger, Abuse of others Hypocracy, Lack of self control, slander unchastity, unfaith fullness Pride, Jelousy using intosicating drinks. Using ill so than** போன்ற தீச்செயல்கள் வள்ளுவரால் அதிகாரங்களாகவே அழுக்காறாமை, புறங்கூறாமை, கள்ளுண்ணாமை, சான்றுண்மை, பெருமை, கற்பென்னும் திண்மை, இன்னாச்சொல் கூடாவொழுக்கம் முதலியனவற்றைக் குறள் அழுத்தமாகக் கூறுகின்றது.

மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொட்டொழுகுதலை **(Self Control)** குறளும் வாழ்த்துகின்றது. தன்னுயிர்த்தியாகமும் மிகுதியான மன, உடல் துன்பங்களைப் பொறுத்தலும் (இன்னாமை இன்பம் எனக் கொளஎல் குறள்)

குறள்கூறும் ஜைன அறம், சமயவொழுக்கம் எளிமையாக இருக்க வேண்டுமென்பது. அடக்கம் அமரருள் உய்க்கும் எல்லார்க்கும் நன்றாம் பணிதல் என்பதில் இவ் எளிமை குறிக்கப்படுகின்றது.

கர்மம் அல்லது வினை (செயல்) பற்றிய கோட்பாடு இந்து சமயமுட்பட ஜைன பௌத்தத்திற்குரியது. மக்களுயிர்க்கு இக்கொள்கை மிகவும் வேண்டப்படுவது இப்பிறப்பில் செய்யும் வினைகளுக்கேற்ப அடுத்த பிறவிகள் ஏற்படுகின்றன. எனவே நல்வினைகளைச் செய்ய வேண்டும்.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும். சொர்க்க நரகங்களை நல்வினை தீ வினைகளை தீர்மானிக்கும்.

சாதிக் கொள்கை பிராம்மணரால் இந்து மதத்தில் புகுத்தப்பெற்றது. அந்தணர் என்போர் அறவோர் என்பது குறள் அறவோர் என்பது சமயத்துறவிகள் ஆகலாம் அறத்தினூஉங்கு ஆக்கமில்லை என்ற குறளில் உயிர்க்கு, ஆக்கம் என்ற சொற்களில் இக்கருத்து குறிக்கப் பெறுகின்றது. அறத்தின் முற்றிய நிலை உயிர்க்குரிய நிர்வாணம் உயிரின் முடிந்த குறிக்கோள் அதுவாகும். உயிர் உரிய அமைதியில் நிலைப்பது அமைதியுறுவது. உயிரின் பிறப்பு இறப்புக்களைக் கடந்தநிலை.

பெண்களுக்கு நல்ல உயர்வு கொடுப்பது ஜைனம். சமயச் சடங்குகளில் அவர்கள் கலந்து கொள்ளலாம். மோட்சத்திற்குரிய நிர்வாண நிலைக்கு முயற்சி செய்யலாம்.

தெய்வம் தொழாஅள் என்ற வாழ்க்கைத் துணைநலக் குறளை நன்கு விளக்கும் செய்தால் இக்கருத்து கிடைக்கும். இக்குறளின் அடிகளை முன் பின் மாற்றிப் பொருத்திப் பொருள் கொள்ள வேண்டும். அவள் தெய்வம் பெய்யெனப் பெய்யும் மழை போலும் தெய்வம் கடைசிச் சீர்களை முதற்சீருடன் கூட்டிப் பொருள் கொண்டால் அவள் பெய்யும் மழைத் தெய்வம் என்ற கருத்து வெளிப்படும்.

திருவள்ளுவர் சமயம் ஒரு பொதுமைத்தன்மையையுடையதாகக் காண்கிறோம். அவரது சமயம் இந்திய சமயம் ஒவ்வொன்றின் தன்மையினின்றும் சிறந்த பகுதியினையெடுத்து தொகுத்ததாகலாம். நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம்தலை யென்பதில் நுலோர் சமயத்தலைவர், சமய ஞானிகள் என்பதாம். ஒவ்வொரு சமயக் கொள்கையும் அவர் குறள்களில் அடங்கியிருக்க காணலாம். எண்குணத்தான் என்பதற்குச் சைவ சித்தாந்த கொள்கைகளை யெடுத்துக் காட்டுவர்.

மலர்மிசை யேகினான், அறவாழியந்தண்ன் என்ற குறள்களில் ஜைன பௌத்த கொள்கைகள் குறிக்கப்பட்டிருப்பது காணப்படும்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் என்பன துறந்த ஞானி, இல்லற ஞானி ஆகியோரைக் குறிப்பனவாம். இல்லறவியல் துறவறவியல்களில் காணும் ஒழுக்கங்கள் குணங்கள் பொறை புலாலுண்ணாமை, வாய்மை, கொல்லாமை முதலியன பொதுவாக இருதரத்தார்க்கும் உரியவாகலாம். அகர முதல என்ற கடவுள் வாழ்த்துப் பாடல் உருவமற்ற கடவுள் கொள்கையை எடுத்துக் குறிப்பதாகும். மற்ற பல அதிகாரங்கள் குறள்களில் ஜைன பௌத்த கோட்பாடுகளை எடுத்துணர்த்துவனவாகும்.

# 9. திருக்குறளும் பிளேட்டோவும்

பிளேடாவின் மனோதத்துவம் **(Psychology)** மிகவும் பேர்போனது. மனநிகழ்ச்சியில் மூன்று பிரிவுகளை இவர் கண்டார். அது அம்சம் எனப்பட்டது. வேட்கையம்சம் செயல் அம்சம் அறிவம்சம் வேட்கையை அடக்கி மிதமாக அனுபவித்தல்; செயலில் மனோ தைரியம் வேண்டும். அறிவாகிய மெய்ஞ்ஞானம் இவையனைத்தும் நீதியுள் அடங்கும். இது மிகச் சிறந்த நிலையெனப்பட்டது. திருக்குறள் அறநூல் என்பது உலகறிந்த உண்மையாகும். இல்லறம் துறவறம் அரசியல் அமைச்சியல் குடியியல் இன்ப (காம) இயல் பற்றித் தெளிவுபடக்கூறியது. அந்நூல் அளவறிந்துண்க என்பதில் மிதமாக மனத்தை அடக்கியனுபவித்தல் வினைத்திட்பம் என்பது மனத்திட்பம் இது செயல் (கர்மா) அறிவு ஞானமென்பது மெய்யுணர்வு குறள் மெய்ப்பொருள் காண்பதறிவு. (குறள்).

பிளேடாவின் பெயரை உலகறியச் செய்தது அவரது அரசியல் தத்துவம் சாத்திரமாகும். குடியரசுத் தத்துவம் **(Rebublic)** என்பது அதன் பெயர். ஆட்சியில் மக்கள் தனித் தனியே பொறுப்பேற்காமல் ஒன்று கூடிப் பொறுப்பாக நடத்த வேண்டுமென்பது பிளேடோ தத்துவம். குடிதழீஇக் கோலோச்சுதல் (குறள்) முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை

அந்நாட்டிற்றான் பரலோக சாம்ராஜ்யம் இறங்கி வரும். அரசர்கள் ஞானிகளாக அமைய வேண்டுமாம். தமிழ் அரசர் பாண்டியன் தலையாலங்கானம் வென்றவன் உக்கிரப்பெருவழுதி அறிவுடை நம்பியனையோர் சிறந்த தமிழறிவுடையோர் பாடுந்திறத்தினர். அவர்கள் இருந்த சங்கத்திற்றான் வள்ளுவர் நூலரங்கேற்றினார். மக்கள் பெரியோக் கடங்கி வாழவேண்டும்

வீரர்கள் மனோ தைரியமும் வீரமும் உடையராக வேண்டும். உறினுயிரஞ்சா இறைவன் செறினும் மறவர் சீர்குன்றரிலர் (குறள்) ஆள்பவர் உடலினை யோம்பி அறிவு இசை இலக்கிய ஞானமுடையராக வேண்டும். அசைமை ஈகை அறிவூக்கம், வேந்தர்க்கு இயல்பு. (குறள்)

## திருக்குறளும் சாக்ரடீஸூம்

சாக்ரடீஸ் நாத்திகம் பேசும் பரப்பியும் மக்களைக் கெடுத்து விட்டாரென அக்கால அரசினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். தனக்குக் கொடுத்த நச்சுக்கிண்ணத்தை மகிழ்வுடன் வாங்கித் தாமே குடித்துவிட்டார் என்ப. இவரைப் பற்றிய நூல்கள் ஐரோப்பாவில் புகழ்பெற்றிருந்தன. பிளேட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டிலின் நூலில் இவரைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

மனிதத் தோற்றம் கடவுள் அறநெறி பற்றிய இவர் கருத்துகள் அக்காலத்துப் பெரிதாக விவாதிக்கப் பெற்றன. உன்னைப் பற்றியறிக என்பது இவர்தம் தத்துவ அடிப்படை எல்லா அறமும் நடுவு நிலையில் முடியுமென்பார். வள்ளுவர் நடுவுநிலை அதிகாரமே கூறியுள்ளார். அறத்தான் வருவதே இன்பம் (குறள்) அதனையறிதலே அழியா இன்பம் அறிவு. கோயில் அசரீரி ஒன்று இவன் எல்லா அறிவாளிகளிலும் பேரறிவாளி என்றது. அறிவிலார், தம் அறியாமையை அறியார் யான்அறிவாளி என் அறியாமையை யான் அறிவேன் என அடிக்கடிக் கூறுவார்.

தூய அறிவே உலகையியக்குமென்பது இவர் கொள்கை. அது நன்மையான நோக்குடன் உலகை இயக்கும் இவர்தம் ஜனநயடளைஅ பற்றிய கருத்து ஐரோப்பிய தத்துவ சாத்திரத்திற்கு இவரை ஆதிகர்த்தாவாக்கியது.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| சாஸ்திரக் கோவை | 130.00 |
| திருப்பவனசைப் புராணம் | 150.00 |
| யாப்பருங்கலக்காரிகை | 150.00 |
| பொதிகை நிகண்டு | 200.00 |
| தண்டியலங்காரம் | 160.00 |
| திருக்கடம்பநாத புராணம் | 140.00 |
| அகம் புற ஆராய்ச்சி விளக்கம் | 250.00 |
| திராவிடப் பிரகாசிகை | 150.00 |
| தைலவருக்கச் சுருக்கம் | 100.00 |
| ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் | 100.00 |
| திருவாட்போக்கிப் புராணம் | 150.00 |
| சிதம்பர சபாநாத புராணம் | 80.00 |
| திருவருட்பா இங்கித மாலை | 70.00 |
| ஓங்கார விளக்கம் | 150.00 |
| நன்னெறி பதவுரை | 40.00 |
| எல்லிசாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் | 210.00 |
| சரசோதிமாலை – பாகம் 1 | 80.00 |
| சரசோதிமாலை – பாகம் 2 | 140.00 |
| தமிழர் வரலாறு – பாகம் 1 | 260.00 |
| தமிழர் வரலாறு – பாகம் 2 | 270.00 |
| தமிழ் வரலாறு | 240.00 |
| குறுந்தொகை மூலமும் தி.சௌரிப்பெருமாள் அரங்கனார் புத்துரையும் | 200.00 |
| தமிழ் தமிழ் – அகராதி | 1,250.00 |
| Tamil Literature | 300.00 |
| Tamil Culture *1 to 12 Volumes* | 3,200.00 |

வெ.எண். 928

ISBN 978-93-85165-40-5

திருக்குறளும் நீதி இலக்கியங்களும்

விலை ரூ. 110.00

9 789385 165405